மகா மகத்துவம் பொருந்திய

காகபுசண்டர்

பெருநூல் காவியம்

1000.



இந்நூல் கிடைக்குமிடம்:-

ஜி. இராமசாமிக்கோன்

இ. ராம. குருசாமிக் கோனர் சன்

புத்தகசாலை புதுமண்டபம் மதுரை.

1958.

Δ28
N57



ஓ

பரமபதி துணை.

மகா மகுத்துவம் பொருந்திய

காகபுசண்டர்

திருவாய்மலர்ந்தருளிய

பெருநூல் காவியம் 1000.

திருமங்கலம் தாலூகா பண்ணிக்குண்டு கிராமம்
சித்தயோகி சுவாமி சுந்தரமகாலிங்கம் அவர்கள்
முயற்சியின் பேரில்

மதுரை வித்துவான்,
த. குப்புசாமி நாயுடு அவர்கள்
பரிசோதித்த பிரதிக்கிணங்க

மதுரை, புதுமண்டபம் புத்தகசாலை,

இ. ராம.

குருசாமிக்கோனர் சன்

ஜி. இராமசாமிக்கோன்

அவர்களாற்றமது

மதுரை, வடக்குமாசிவீதி, குருசாமிக்கோனர்சந்து,

ஸ்ரீராமச்சந்திர விலாசம் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

காபி ரைட்] 1957 [விலை ரூ 5—0—0

இரண்டாம் பதிப்பு. காப்பி 750.

உ

பரமபதி துணை.

ரிஜிஸ்தர் அறிவிப்பு.


இதனால் சகலமான அச்சுக்கூடத் ததிபர்களுக்கும், புத்தக வியாபாரிகளுக்கும், இன்னுமற்றுமுள்ள மகான்களுக்குந் தெரிவிப்பது யாதெனில்:—

இந்த காகபுசண்டர் பெருநூல் காவியம் 1000 என்ற சாஸ்திரம் ஓலையேட்டுச் சுவடியாயிருந்ததை பிரயாசையுடன் சம்பாதித்து இந் நூலுக்குப் போதுமான பொருட் செலவுசெய்து என்னுல் கவர்ன் மெண்டில் "ரிஜிஸ்தர்" செய்திருப்பதால் இப்புஸ்தகத்தை என் அனு மதியின்றி எவ்விதத்திலும் அச்சிடக்கூடாதென்பதை இதன்மூல மாய்த் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு

ஜி. இராமசாமிக் கோன்

புத்தகசாலை, புதுமண்டபம், மதுரை.



சித்தர் நூல் ஆராய்ச்சிப் புலவர்

இ. ரா. ம. குருசாமிக் கோனார்

புக்ஷாப் புதுமண்டபம் மதுரை.

முருகன் துணை.

முகவுரை.

அகண்ட பரிபூரணமாயும், சத்து சித்தானந்தமாயு மிருக்கக் கூடிய சர்வேஸ்வரனால் ஆக்கப்பட்ட நால்வகையோனி எழுவகைத் தோற்றம் எண்பத்து நான்குலக்ஷம் ஜீவகோடிகளுள் மக்கள் தலைமை வாய்ந்தவர்களாம். ஏனெனில் (மக்கள் தாமே ஆறறி வுயிரேயென்று) தொல்காப்பியம் முதலிய வேதார்த்தமாகிய நூல்களும், உபநிஷத்துகளும் முறையிடுகின்றன. ஆகையால் ஆதி ஆண்மீகம், ஆதிதெய்வம் ஆதிபௌதீகம், முதலிய தாபத்திரைய துக்கங்களை நிவர்த்தித்து ஞானம் பெறுவதற்கு இம்மானுட ஆக்கையே உத்தம தலைமை வாய்ந்த பிறவியாம். இதுவிஷயத்தை வேதாகமபுராண இதிகாசங்களில் நம்முன்னோர்களாகிய வேதவியாசர், சுகர், பராசர், வசிஷ்டர், கணீசர், ஆதி சங்கராச்சாரிகள், இன்னு மனேக மாகிய ரிஷிகளினாலும், ஆங்காங்கு சொல்லிய வாக்கியம் விரிவாகக் கிடக்கின்றன. அவர்களுள் சிறப்பு வாய்ந்தவரும் அனேக பிரமாயுளைக்கண்டவரும் திரிகால வர்த்தமானங்களைத் தெரிய உணர்ந்த வல்லவரும் பிரபல தவசிரேஷ்டருமாகிய காகபுசண்டர் சரிகை, கிரிகை, யோகம், ஞானம், வைத்தியம், கற்பமுறைகளும் இன்னும் மக்கள் அவரவர்கள் மனோபரிபாவ பக்குவத்திற்குத் தகுந்தபடி கர்மபத்தியோக ஞானங்களையும் அதற்குரிய சாதனங்களையும் தெளிவாக எளிதான நடையிற் கூறியவற்றுள் இந்தக் காகபுசண்டர் பெருநூல் காவியம் 1000 என்ற நூல் ஒன்றேயாகும். இந்த நூல் இதுகாலம்வரை அச்சுக்கு வராமல் ஏட்டுப்பிரதியா யிருந்து வந்ததை நம்பாரத நாட்டின்கண் சிறப்புற்றோங்கிய இப்பாண்டி நாட்டில் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வரர்ள் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும், கைலைமேல் துவாச

முகவுரை.

மெனும் மதுரையம்பதியிலுள்ள அன்பர் குழாங்களில் ஒருவரும் தமிழ்ச் சித்தவைத்திய சங்கத்தில் சித்தர்நூல் ஆராய்ச்சிப் புலவர் என்ற பட்டத்தைப் பெற்றவருமான நமது நண்பர் மகா-ள்-ள-ஸ்ரீ இ. ராம. குருசாமிக் கோனார் அவர்கள் தன் சரீர சிரமத்தையும் பொருட் செலவையும் கொஞ்சமும் எதிர்பாராமல் உலக நன்மையைக் கருதி அநேக காலமாக பலஇடங்களில் தேடியும் கிடையாது புதை பொருளாயிருந்த இவ்வரிய பெரிய சாஸ்திரத்தைத் தன்னுடைய பெருமுயற்சியின் வலுமையால் தேடிக் கண்டெடுக்கப் பெற்றிருந் ததை இப்பொழுது ஷெயார் குமாரரவர்களால் அச்சுவாகன மேற்றி புத்தகரூபமாய் வெளிவந்திருப்பதால் இந்நூலை உலகில் யாவர்களும் வாங்கி வாசித்து அதிலுள்ளசாரங்களைப் புசிப்பவர்களுக்கு சர்வதுக்க நிவர்த்தி பரமானந்தப் பிராப்தியெனும் சுகத்தைக் கரதலா மலகம் போல் சுகித்து ஆனந்தமடைவார்க ளென்பது நிண்ணம்.

இப்படிக்கு

ஸ்ரீதேஜோ மயானந்த சுந்தரேஜ பரம அம்ஸ வேதாந்த

திருமடாலயத்து அங்கத்தினருள் ஒருவனாகிய

சிதம்பரம்.

வடக்கு ரதவீதி, ஸ்ரீவில்லிபுத்தூர்.



ஓ குருவே துணை.

காகபுசண்டர்

திருவாய் மலர்ந்தருளிய

பெருநூல் காவியம் 1000

காப்பு.

ஆதியென்ற மூலமந்திர மைந்தெழுத்தை
அன்புடனே மனதில்வைத்து ஓங்காரத்தை
நீதியுடன் முன்பணிந்து பெருநூல்தன்னை
நிகழ்த்துதற்கு ஐங்கரன்றன் பாதங்காப்பு
சோதியென்ற சுழிமுனையைத் தியானஞ்செய்து
சுத்தமாய்ப் பிராணயம விரித்துரைக்கப்
பாதிமதி யணியீச னுமையாள்காப்பு
பக்தியுள்ள வாலியின்றன் பாதங்காப்பே. (1)

புசண்டர் தன்வரலாறு.

பாதமதைச் சிரசில்வைத்து யுகங்கள்தோறும்
பண்பாகத் தானிருந்து கோடிகாலம்
சாதகமாய்ப் பிரளயங்கள் மூடியும்போது
தனியாகக் கல்லாலின் மேலிருந்து
சேதமொன்று மில்லாமல் மவுனமுற்று
சிறப்பாக எத்தனையோ யுகங்கள்கண்டு
வேதமென்ற பிரமத்தி லடங்கிக்கொண்டு
வெகுகோடி யுகங்கள்வரை யிருந்திட்டேனே. (2)

இருந்திட்டேன் காகத்தின் சொரூபமாக
இன்பமுடன் வசிஷ்டருந்தான் யென்னிடத்தில்
வருந்தியே வந்தியென்றன் முன்னேநின்று
வாய்திறந்து கோடியுகம் கல்லால்தன்னில்
பொருந்தியே யிருந்ததான் வந்தீரையா
புகழாக யிருந்தவந்த விதங்கடன்னே
திருந்தியே சொலவேணு மென்றுகேட்கச்
செப்பினே னுண்மைதனைத் திறந்துதானே. (3)

நூலடக்கம்.

தானென்ற ஞானமதை வெளியதாகத்
தான்சொல்ல வேணுமென்று வசிஷ்டர்கேட்க
ஞானென்ற சித்தர்களும் வசிஷ்டரோடே
நாட்டமுடன் ருன்சேர்ந்து ஞானத்தன்னை
தேனென்ற அமுர்தம்போல் சொல்லவேண்டும்
திருவருளால் கடத்தேறச் செய்யவேண்டும்
கோனென்றே வேண்டினதால் வசிஷ்டருக்குக்
குறிப்பாக ஞானமதைச் செப்பினேனே. (4)

செப்புகிறேன் சுழிமூனையின் பாகத்தன்னை
திறமாக யிருகலையுந் தெரியவேதான்
மூப்புமுறை வகையோடு ஆராதாரம்
மூப்பாழும் அப்பாழாய் முடியுகின்ற
அப்புவுடன் ஞானதிருஷ்டி தூரதிஷ்டி
அடைவான ரவிமதிமுச் சுடரின்கோர்மை
இப்புவியில் அண்டபிண்டம் காயசித்தி
இன்னதென்றும் திரிகால மியம்புவேனே. (5)

திரிகால வர்த்தமுடன் ஆராதாரம்
செவிதூரம் கேட்பதுடன் கெவுனம்பாய்தல்
மரிகால மறிவதுடன் சடலத்தாலே
மருவுடலைப் பகுத்தறியும் வர்த்தமானம்
செரிகால மித்தனையு மறிதல்கொண்டு
சேர்ந்தோம்நா மிருவருமே யின்றுகாலம்
குறிகால மறிந்துணர்ந்த காலத்தன்னிற்
கொண்டுணர்ந்து கூறியே நோக்கினேனே. (6)

நோக்கினே னிதையறிந்து வசிஷ்டர்தானும்
நவவுமென்று சொல்லவுமே அடியேனுக்தான்
தாக்கியே யெதைவெளியாய்ப் பேசவேண்டும்
சாற்றுமெனக் கேட்கவுமே வசிஷ்டரப்போ
பாக்கியில்லா தெல்லாமுஞ் சொல்லவேண்டும்
பண்பாய்மா னிடர்பிறக்கு மார்க்கமுஞ்சி
தூக்கியே சொலவேண்டு மென்றுகேட்க
சுந்தரமாய் வசிஷ்டருக்குச் சொல்லினேனே. (7)

பெண்கள் கேற்பப்பூச்சி.

சொல்லுகிறேன் பெண்களுக்குக் கெற்பப்பூச்சி
தொன்றுதொட்டு காமான வாருதன்னை
யில்லுகிறேன் பெண்மரங்கள் காய்ப்பதேபோல்
கெற்பமங்கை முன்னுடிக் கன்னிகாலம்
தொல்லுலகில் சதைக்குஞ்சு வுள்ளிருக்கும்
துடர்மனதை வென்றவர்கள் கண்டகாட்சி
யில்லுகிறேன் புருஷரன்றிப் பிள்ளையுண்டோ
நீர்வினவுஞ் சொல்லுகிறேன் மார்க்கத்தானே. (8)

மார்க்கமித்தப் புல்லூண்டு செடிமரங்கள்
மண்ணிருந்த நீருண்டு காய்த்தாலுந்தான்
ஆர்க்கிந்த வகைதெரியு மரத்திற்பெண்ணும்
ஆண்மலடு யென்றுசொல்லக் கேட்பதுண்டு
பார்க்குளிதை நீறிவீர் மண்ணினுள்ளே
பலபேரும் பார்த்தறிவார் யீசல்புத்தை
நோக்குமிதை யுள்ளறிந்து வெடித்தகாலம்
நாட்பமே வாய்திறக்கும் பூமிதானே. (9)

பூமிபோற் பெண்ணணங்கும் புருஷராலே
பூத்திறக்கக் கூடியதால் வாய்திறந்தே
காமியாய் காமிணங்க நீரைவாங்கிக்
கருவுருவாய் காமாலேும் சிசுவின்பூச்சி
கேமியோ தந்தையுட நீரையுண்டு
நீண்டுடலும் பெரிதாகிச் சிலதாளிற்
சாமியே யாயிடவே சாப்பாடுண்டு
தற்கித்தேன் நீபோரு ஆண்பெண்ணென்றே. (10)

ஆண்பெண்ணின் கூர்விதங்கள் மார்க்கந்தன்னை
யறைகிறேன் பின்னுடி யதன்முன்னேதான்
காணிந்தச் சூரியனுர் மடிந்தபோது
கங்குலது வந்துவிடும் மறைவார்சிவர்
பூணிந்தச் சூரியனுர் வருவார்வந்தால்
பூமிதனிற் புற்றீசல் வந்தாப்போலத்
தோணிந்தச் சிவர்களும் புற்பூண்டோடு
தோன்றிடுவார் மண்ணிலிருந் தேறுவாரே. (11)

ஏறுவார் மண்ணுடையநிறமேபோல
யெப்படியென் றெண்ணுநீர் நிறமண்மாறும்
பாருபார் குழக்கைகள்போல் வருவாரப்பா
பக்தடிக்கும் பாவனைபோ லோடுவார்கள்
நீருபா ரெனவினவக் கூறுவார்போல்
நிமிஷமூற வாடியவர் பிரிந்தார்பின்னே
வாருவா ரவர்களுமே வந்தபோது
வாசிமூச்சாடினதோ ருயரத்தானே. (12)

தானிந்த மூச்சிருந்து வருமேவாசல்
தாழ்மூக்கு முதல்வாசல் அகலந்தானே
தேனிருந்த மண்ணதனிற் கண்டகாட்சி
செப்பினேன் பெண்ணுணும் பிறக்குமார்க்கம்
வானிந்த வாகாய மண்ணில்மாந்தர்
மங்கையரின் கெற்பமதி லாண்பெண்ணன
வானிந்தக் கெற்பக்கூர் சொல்லிவந்தேன்
உத்தமனே ஆண்கெற்பம் கேளும்நீரே. (13)

ஆண்கெற்ப லக்ஷணம்.

நீரிப்போ யாபகமாய்க் கேட்கவேணும்
நிகழ்காலந் தெரியாதோ ரறியாரய்யா
கூறிப்போ விந்துவினி லிரண்டுமாதங்
கொண்டகெற்பக் கருக்குழியில் பிள்ளையாச்சு
மாறிப்போந் தலைகீழாய்ப் பிறக்குமுன்னே
மார்பிருக்கு மேசுவின் தலைதானப்பா
பாரிப்போம் பாவையரின் பள்ளகெஞ்சில்
பய்யலென வேபிறக்குங் கெற்பமானே. (14)

ஆணென்றுற் தாய்மார்பு பள்ளம்கெஞ்சு
அடிவயற்றின் மேற்தொப்புள் மேலேதானும்
ஆணென்றுற் தாய்விலாவில் யிருகையுந்தான்
அமைந்திருக்கும் பாதம்சென்டுந் தொப்புள்மத்தி
ஆணென்றுற் கீழ்மேலும் யேறும்பாரு
ஆண்புழுவு மிப்படியே அங்கசேட்டை
ஆணென்றுற் தாய்மூலம் கெஞ்சின்தீயும்
அமைதிகொண்டு வேகுங்காண் கலின்தீயே. (15)

கனலென்ற மூலகனல் அனல்மேலேறி
கால்வீசி மேல்நோக்கி மண்டையேறும்
அனலென்ற ததுவேறித் தீய்க்தபாண்டம்
ஆணை முகமீசை யமர்ந்துதய்யா
புனலென்ற யித்தியாற் பிழைக்கச்செய்து
புருவகடு வாசிவரக் கண்ணதாச்சு
கனலென்ற அத்தியு மடியிற்சேர
காயென்ற பீசவிரை திரண்டுபோச்சே. (16)

திரண்டுருண்ட பையதனிற் கனலும்நின்று
தீயேறி நின்றவிடம் நெஞ்சமையா
பிரண்டுருண்டு மேலேறி நெத்திநின்றால்
பெருமூக்கு மத்திகடு கோபமாகும்
மருண்டுருண்டு மேலேறி உச்சிநின்றால்
வாசிவலு காயசித்தி யோகசித்தி
உருண்டுருண்டு யிப்படியே கீழ்மேலுக்தான்
உடல்கடுவில் மூலம்வக்தால் சாக்தகுணமாமே. (17)

பெண்கேற்ப லக்ஷணம்.

சாக்தமே சொல்லுகிறேன் பெண்ணணங்கு
தாய்வயற்றி லேயுதிக்கு மார்க்கக்தன்னை
சாக்தமே முன்சொன்ன கெற்பப்பூச்சி
சாய்க்குதலே விலாவொட்டி விலாக்கால்மீட்டி
சாய்க்குமே மூன்புரத்தை நோக்கித்தானே
தலைகாலும் விலாவயிற்றில் சார்ந்தகூரு
சாய்க்குமே பெண்புழுவும் தக்தைதாரைத்
தானுண்டு வழார்த்தது கனற்றியாலே. (18)

தியான மூலகனல் சேர்க்கையாலே
சேர்வித்து வுண்டுணர்வு வளர்ச்சியாலே
தாயான அவ்வயிற்றின் அச்சினாலே
தான்ரெண்டு விதமாச்சு யித்தினாலே
பேயான பிச்சையினற் காமத்தியால்
பெருவிரோவு வுண்டாச்சு கொக்கோகத்தால்
வாயான ததுதிறக்கும் நவத்துவாரம்
வாசிவெளி யேறினது வாசல்தானே. (19)

தாபர சங்க உற்பத்தி-மூச்சுப்பேச்சு விபரம்.

வாசலித்த மண்ணதனில் வந்தாற்பூண்டு
மங்கையரின் வாசல்வந்தாற் புதல்வராச்சு
பாசையென்ரு லிதுதானும் சமமதாகும்
பரையுயிரும் நாசிவர மூச்சதாகும்
கூசலென்ன நாக்குயிரும் வந்தேயாடில்
கூக்குறலாஞ் சாஸ்திரமும் பேச்சதாகும்
வாசலென்ன கீழ்நோக்கில் அபானனாகும்
மண்டைசெலி நீட்டிடவே ஓசையாமே. (20)

ஓசையென்ன யிவ்வுயிருங் கோஷம்வந்தால்
வருமுதண்டு உச்சிவந்தால் யோகமாகும்
ஆசையென்ன பீஷம்நின்ரூல் அண்டமாகும்
அவ்வுயிருங் காலில்வந்தால் நடையதாகும்
பூசையென்ன நெஞ்சில்நின்ரூல் நினைவுமாகும்
புலாவெலும்பைச் சுத்திநின்ரூற் கருவியாகும்
மாசையென்ன வுயிர்கலங்கில் கலக்கமாகும்
மனதென்ன வினையாடல் உயிருங்கூட்டே. (21)

கூட்டிலுயிர் உலாவுதலே கருவியாகும்
குடலெலும்பு தசைநரம்பு தோலும்ரோமம்
காட்டிலிந்த ரத்தநீர் வாசிகூடிற்
கருத்தறிவு தெளிவுண்டா மனதேபுத்தி
வீட்டிலிந்த ஓர்மூலி பிசகித்தாலல்
மேற்பிசகு முயிர்கலங்குங் சந்திற்பொக்கிற்
பாட்டிலிதை நாபநிருத்தி யொன்ரூய்ச்சோ
பழகிவரச் சொன்னர்சாஸ் திரத்தைத்தானே. (22)

தத்துவ நூல் ஆதி.

சாஸ்திரத்திற் தத்துவமே ஆதிநூலாம்
தனையறியச் சொன்னரே பிறவிநீங்க
பாத்திரத்தி லிதையறிந்தால் யோகமென்பார்
பழகினவர் ஞானியென்ற பெரியோரென்பார்
கோத்திரத்தி லிதின்பெயரே குருகுலத்தான்
குருவானுற் தன்கண்ணில் உடலுட்தோன்றும்
சேத்திரத்தில் ஞானக்கண் பிடறிதோன்றும்
சென்மாந்திரங் காண்முதுவர் தோற்றும்பாரே. (23)

தோற்றுமே கண்ணைதிரிற் தோற்றிஞப்போற்
தோற்றிவிடும் பார்பூதம் அஞ்சுக்தானே
ஏற்றிவிடு மதின்மேலே ஆகாயத்தும்
இறங்கிவிடில் ஞானக்கண் பாதாளத்தும்
சாற்றிவிடுங் திரிகால மதனைக்கொண்டு
தன்னுடலைப் பகுத்தறிந்த செல்வந்தானும்
கூற்றிலிடுங் கூற்றனவ னெதிரேநிற்பான்
கொன்றவனுஞ் சண்டையிடான் சிநேகன்றானே. (24)

சினேகமென்ன ராமகுரு வசிஷ்டரேகேள்
செப்புகிறேன் கருவிகர ணுதிதன்னை
சினேகமதாய்ச் சொல்லுகிறேன் கருவிக்கூட்டம்
திருவருளைக் கண்டார்க்கு மெட்டாயெட்டா
சினேகமது யான்கண்ட கருவிசொல்வேன்
சித்தித்தாற் கருவிற்வகை சொல்லிற்கோடி
சினேகமென்ன கோடான கோடிவித்தை
தேசத்திற் கண்டிடலாங் கருவியாமே. (25)

உடற்கருவி உயிர்க்கருவி விபரம்.

ஆமிந்த உடற்கருவி சொல்லிவாரேன்
அங்கசேஷ்டை யெத்தனையோ கோடாகோடி
காமிந்த உயிர்க்கருவி சொல்லவில்லை
கலமான உயிர்க்கருவி கோடாகோடி
தாம்கண்ட மனக்கருவி கோடாகோடி
தன்னறிவி லேவிளையுங் கோடாகோடி
ஆம்கண்ட கருத்தறுவுங் கோடாகோடி
அத்தனையும் ஞாபகமாய்ச் சொல்வாருண்டோ. (26)

உண்டோதான் புத்தியுடன் யூகங்கோடி
உற்றதனை யறிந்தாக்காற் கருவியாமே
பண்டறிந்த பேர்களுமே சொல்லவில்லை
பழவினையைப் போக்காதார் பாக்கியுண்டோ
விண்டோதான் சொல்லவில்லை காணுதாலே
மெய்மினுக்கும் வேசியர்போற் பாடினூர்கள்
தொண்டுதான் செய்யாமற் குருவானூரோ
சூன்யகுரு சொல்மொழியு மாகாதாமே (27)

ஆகாத பிராணனுடன் பித்தங்கூடில்
அதுகணக்கு யெத்தனையென் றெண்ணிப்பாரீர்
சாகாத பிராணனது தடையாற்சேத்மம்
தான்மரைக்க யெத்தனையென் றெண்ணிப்பாரீர்
வாகாத மாதமது பிடுப்பின்கீழே
வலரீரா மொழியறியார் கருவிதோணூர்
வேகாதார் கண்டுகொள்வார் சேத்மங்கோழை
விரைந்திருகிக் கட்டிவிடத் தடையதாச்சே. (28)

ஆச்சப்பா பித்தரீ ரேதென்றுக்கால்
அரைகிறே ணுண்டநீர் தலைமேலேறும்
பூச்சப்பா முன்னோர்கள் மனதிற்கண்டார்
பொய்யில்லை தெரிக்தமட்டுஞ் சொன்னர்கல்லோர்
ஏச்சப்பா சொல்லாதே அறிவில்லாத
பிடுமடையர் வேறுசொல்வா ரறிவில்லாமல்
பேச்சப்பா யிதையறிந்தா லுனக்கேகிட்டும்
பெரும்பிழையைத் தள்ளிவிட்டு உற்றுநோக்கே. (29)

கனவு விபரம்.

நோக்கியே சொல்லுகிறேன் கனவின்செய்கை
நுண்ணறிவாற் கண்டகனு சொல்வேன்கேளு
தாக்கியே பிராணனது பிடவிலாவில்
தானிறங்கி மலசலத்தைத் தொடும்போதெல்லாம்
ஆக்கியதோர் பித்தநீர் கீழிறங்கும்
அதுவாயில் வந்தவுடன் நினைவுதப்பும்
ஏக்கியே நடுநினைவ மாற்றிக்கண்ணை
யிருக்கிவிடு மேயறிவு மாறுஞ்சொல்லே. (30)

சொல்லுமே வலதுபுற விலாவின்கீழே
சொன்னஅறி வதுவிறங்கில் மலமேகூடும்
வெல்லுமே தன்னறிவை விழுங்கிக்கொள்ளும்
மேலெழுந்த நினைவெல்லாங் கனவுமாகும்
புல்லுமே நினைவிலுள்ள மற்றதெல்லாம்
புகலுமே சடமறந்து காதுங்கேளா
மல்லுமே போர்புரிந்த விதமேகாண
வாதபித்த சிலேத்துமத்தைப் போக்குவீரே. (31)

சேத்துமத்தைப் போக்கி தமர்திறக்க யோகம்.

போக்குவீ ரென்றுசொல்லிப் போக்கத்தானே
பொருளதனைச் சொல்லிவைத்தே னிடங்கள்தோறும்
காக்குமே லண்ணுக்கு உண்ணுக்குள்ளே
கடுத்தமரைத் தான்திறந்தா லுச்சிவாசல்
மூக்குமேற் தண்டினிலே முனைமூக்குக்குள்
முனைத்தெழுந்த வாசிவரப் பார்த்தபேர்கள்
தாக்குவார் புருவகடு மேலேபாய்ப்பார்
தமர்வாச லடைத்திருக்கும் பூட்டுத்தானே (32)

அமுர்தம்.

பூட்டுடைத்துக் கண்டவர்கள் மெத்தவுண்டு
புத்தியுள்ளோ ரவர்களே சித்தர்சித்தர்
ஆட்டமிதிற் காண்பார்கள் அனேகங்காட்சி
அம்மம்மா வென்றூர்கள் சுத்தவீரர்
காட்டம்விற கெய்தாமற் தீயிடாமல்
கதிர்மதிக்கு மத்தியது புருவமத்தி
காட்டமிடக் கோபுரத்தின் வாசற்பூட்டு
காசிமுனை புருவமத்தி திறந்துகொள்ளே. (33)

தினமோர் காலம் சாதனை.

திறந்துகொண்டு மேலேற நெற்றிமார்க்கம்
தீயவழி நடவாதே மூக்கின்மார்க்கம்
மறந்துவிட லாகாது தினமோர்காலம்
வாய்பிதற்ற லாகாது அடக்கமாகில்
சுறந்துவிழும் பாலமுர்தம் மனதிற்றானே
தூங்கினவர் பேசலிருக்கு மேங்கிடாதே
கறந்துகொள்ளச் சொன்னரே மற்றோர்வீட்டிற்
கால்வைக்கச் சொல்லவில்லை யுள்ளேதானே. (34)

உள்ளேதான் பாலமுர்தம் வடியுமென்பார்
உண்டஅன்னம் பசியடக்கும் வாதாகும்
தெள்ளினே னிதுவிபரம் தெரிந்துகொள்ளு
தெளியாட்டால் யான்சொன்ன சூட்சம்பாரு
கள்ளேதான் வடியுமென்பார் உச்சிவாசல்
கட்டறுத்தா லேகோழை வடியுமல்லோ
பிள்ளைகா விதுவறியார் மட்டியாகும்
பேசினர் யானறுத்து மேற்சென்றேனே. (35)

அமுர்த விபரம்

சென்றேனே உச்சிநீர் தாயேயாகும்
சிரசிலுள்ள நீரெல்லாம் வாலையாகும்
சென்றேனே உச்சிமேற் கபாலஓட்டில்
சென்றதினு லுச்சியின்கீழ் கோழைகண்டேன்
சென்றேனே அதுயிறக்க முட்டிதானே
சிக்கிரத்தி லேயுடைத்தேன் கதவைத்தானே
சென்றேனே அக்கதவின் தாளேகோழை
தீயிட்டு நானெரித்தேன் மேலேதீயே. (36)

யோகம்.

தீயென்றால் மூலகனல் உச்சிவாசல்
தீண்டிவிட்டு மேலேரிற் தீபசோதி
நீயென்றால் நான்தெரியச் சோதிசொல்லும்
நிமிஷமுத லெக்காலும் நிகழ்த்தும்சோதி
சீயென்றால் வாய்திறக்கும் ஞாயஞ்சொல்லும்
இப்படியே உச்சிவெளி கபாலமேடை
ஊவென்றால் உள்மூலக் திறக்காட்டும்
உச்சரிக்கு மந்திரமுஞ் சொல்லுத்தானே. (37)

எமன் கோழை.

சொல்லுமே கபாலமதிற் சேர்ந்தவாசி
சோதியொளி கண்டிடுமே கனலாற்காலால்
நில்லுமே மூலதலம் வாசிகொண்டு
நிமிர்ந்திருந்து பார்க்கவுமே பிடரியேறும்
கொல்லுமே பிடரியெமன் கோழைதன்னை
கொட்டிவிடுங் கக்கிவிழச் சள்ளோடைத்த
வெல்லுமே யவ்விடத்திற் பின்னல்நின்று
வேதாந்த உச்சிவர மூலம்பாரே. (38)

இராக்கால சாதனை.

மூலம்பார் பின்னிடுப்பில் முடிச்செலும்பில்
முதுகுதண்டுத் தாரைவழி விலாவோடாமல்
காலம்பா ரிராக்காலங் கதவடைத்து
கண்மணியே பார்ப்பவர்கள் தேறுவார்கள்
சிலம்பார் முன்னோர்கள் தெளிவாய்ச்சொல்ல
சிலம்பொலியைக் கண்டதன்றி முடிவைக்காணர்
கோலம்பா ரதனுலே சாஸ்திரத்தைக்
கொட்டினர் கண்டவரை நீட்டினரே. (39)

ஆரென்ன யெத்தனையென் றெண்ணிச்சொல்வேன்
அய்யய்யோ சொன்னாரே முகங்காணுதார்
வாரென்ன சுழிமூனையுஞ் சிலம்புங்கண்டு
வாய்கொண்டு பிதற்றினரே கண்டத்தாலே
தூரென்ன கொண்டைக்கால் மூலந்தொட்டு
தும்பிமுகன் கடுமூலம் உச்சிமூலம்
கோரென்ன சொன்னாரோ யிடுப்பின்மேலே
குண்டலியைச் சொன்னாரே உச்சிமட்டே. (40)

குண்டலி யோகம்.

உச்சிதலே நெற்றிவிழி புருவமத்தி
உரச்சங்கு மார்புநெஞ்சு உந்திமூலம்
பிச்சிகலே யிடுப்பின்கீழ் முழங்கால்பாதம்
பெரும்பாடு விரல்சிக்கண் வாசிபாய
கச்சிகலே சொன்னாரோ மூத்தர்சித்தர்
கால்வாசி கால்யோகம் காணுப்பித்தர்
கொச்சிரை சொல்லவில்லே வெழுத்தமார்க்கம்
குண்டலியைக் கண்டாக்காற் கருக்கும்பாரே. (41)

குண்டலியைக் கண்டாக்காற் கருக்குமென்பார்
குண்டலியி னிருப்பிடமும் மூலமென்றூர்
குண்டலிதா னென்றுக்கால் நாம்போதோலோ
குருத்தண்டோ முள்ளெலும்போ பிடரிமார்போ
குண்டலியே யென்றவர்கள் பெயரார்சொன்னூர்
கொத்தளத்தின் பெருமைதனைச் சொல்லினூர்கள்
குண்டலியே வாய்திறக்கப் பேசுமென்றூர்
குருவென்றூர் வாலியென்றூர் சுமரென்றூரே. (42)

என்றவர்கள் பஞ்சபூத அந்தக்காணூர்
இறைக்குறேன் நீரூற்றுக் கிணறுபோல
குன்றதனின் மேலிருந்து வீழ்வார்போல
குதித்தாலுந் தரையதனில் நிற்பார்போல
நின்றவர்கள் கைமல்லுக் கட்டுவார்போல்
நிகழ்த்துகிறேன் யோகமல்லு குண்டலித்தாய்
வென்றவர்கள் தன்னுக்குள் காணுமார்க்கம்
விரிக்கிறேன் உச்சிதொட்டுப் பாதமட்டே. (43)

தன்னுக்குள் காணுமார்க்கம்

மட்டேதான் மனமிருந்த உயிரேகோடி.
மறைவேதங் குடியிருந்த தண்டுகோடி.
எட்டேநீ நாக்கினடி மூலபீஷம்
யிதமத்தி கயரொன்று திருகுகம்பி
முட்டேநீ வாசிகொண்டு கனலெழுப்பி
முகம்மேலே கோணிமிர்ந்து கயரெழும்பும்
விட்டேநீ தூண்டிவரச் சாண்கிழம்பும்
வில்லங்கத் தொப்புளின்மேல் வில்லங்கத்தானே. (44)

குண்டலி விபரம்.

வில்லங்க மதுகடக்க முடியாதய்யா
விதிவிலக்கு அன்னசுவை கொடியபட்டினி
சொல்பங்க மாகாது தூக்கமாகா
திருபும்போ லேபிருக்குஞ் சதையேமாறும்
நெல்லங்கம் போல்வெழுக்கும் கண்ணேகூசும்
நிமிஷத்திற் பித்தநீர் படியிறங்கும்
மல்லங்க மானதுபோல் விதவைகற்பம்
மரணத்துக் கொப்பான தன்பத்தானே. (45)

தன்பத்தான் குண்டலிதான் நாலுங்காலம்
தயரென்ன வயற்வலிக்கும் பிரண்டுருண்டு
இன்பத்தான் தொப்புள்நீ ரிறங்கிற்றூஞல்
இதுபெரிதோ மார்பில்வரும் குண்டலித்தாய்
அன்பத்தான் நமதழுக்கே நெஞ்சிலேறி
அதுஞ்சு தாண்டிவிடுக் தொண்டையேறி
தன்பத்தான் போய்த்தலையும் வாருபோல
தம்பிக்கை நீட்டிவிடும் உச்சிமேலே. (46)

உச்சிமேல் கைகாட்டும் பொங்கிச்சாயும்
உறமுகிடாய் திருகுகொம்பு போலத்தானே
எச்சியே தான்விசுறும் உச்சிமூக்கால்
யிடதுகையைப் பத்தியவள் எதிர்நிற்பாள்காண்
குச்சியே குண்டலித்தா யதனில்நிற்பாள்
கொடுங்குமரி வர்னமந்த யென்னசொல்வேன்
பச்சியே கேட்டதெல்லா மித்தாவென்பாள்
பார்க்கவே கண்ணிசிறு ரூபமாமே. (47)

வாலை.

ரூபமே காமமே ரூபாரூபம்
நவலுகிறேன் வாலையென்றும் வெளியேயென்றும்
காமமே கன்னியென்றும் மந்திரமென்றும்
கவிலுஞ்சொல் மொழியென்றும் கற்பமென்றும்
காமமே யிச்சையென்று மனதேயென்றும்
கண்டவர்கள் சத்திசிவ மாய்கையென்றும்
காமமே வாசிபர தேசிபிர்மம்
காடியுதித் தொடுங்குமிட மறிந்துபாரே. (48)

இடமறிந்தோ ரித்தனையுங் காணவேணும்
இல்லறத்தி லிருந்தாலும் பூணவேணும்
சடமென்ன குடிசையென்ன மடந்தானென்ன
தாதுநிலை கண்டாலாச் சிரமமென்ன
குடமென்ன நீர்நிறைந்தாப் போலேவாசி
குண்டலியைக் காணுர்க்கு மாயமாகும்
தடமென்ன யிதையறிந்தால் வழியதாகும்
சத்திசிவ மால்காமி யறியலாமே. (49)

அமூர்த விபரம்.

அறியலாம் லட்சுமியான் புத்திரனோடு
அவர்மனவி யச்சரமுங் கூறலாகும்
புரியலா மண்ணுக்கி லமூர்தவாசல்
புண்திறந்து வாசல்கண்டு ஒளியலாகும்
தெரியலா மச்சரத்தி னுதியந்தம்
தேறலாம் அண்டமதில் அஷ்டலாபம்
புரியலா மஷ்டாவ தானங்கோஷ்டி
பூரிக்கு மூள்ளமூர்தம் பொங்கும்கெஞ்சில். (50)

கெஞ்சிலெழு தோற்றமதை யென்னசொல்வேன்
நிகழ்காலம் வருங்காலம் செல்காலத்தே
தஞ்சிலேன் தானிருந்து பார்த்துமஞ்சேன்
தையருற்றோர் பாலிருக்குந் தயரேசேர்வான்
மிஞ்சிலேன் பரமின்றிப் பிரியேன்சேரேன்
மெய்மெலித்த என்தையரே சகமேமிச்சம்
அஞ்சிலே யானிருந்து பார்த்தபார்வை
அப்படியே யூரிட்ட சரபந்தானே. (51)

ஆனேர்கள் சொல்லெல்லாம் வீண்போகாது
அண்டயிடி தடுப்பதற்கும் அவர்தானுகும்
மானுக்க ளில்இவரே யெமனேவென்றோர்
வாய்ப்பிதற்றூர் வாய்பிதற்றில் குற்றமாகும்
வானேர்கள் நோக்கிடிலோ யெதிரேசெல்வார்
வானேர்க்குத் தானவரும் யிதன்மேலாகார்
மீனேர்கள் கூட்டமதில் பெரிதாம்ஞாயிற்
வெண்மதியும் பொன்மதியு மெட்டாதபாரே. (52)

எட்டாது கொட்டாவி யிட்டாற்போல
யேங்கிமனம் புண்ணுகி நைக்தாற்போல
பட்டரர்கள் தங்களுக்கு எறும்புஈயை
பருத்தெடுத்த கோழிக்குஞ் சவரேயாகும்
விட்டார்கள் தங்களுக்கு மேருபோல
மேலேறுந் தன்மனது மேருவைப்போல்
குட்டான தையறிந்த விஷயத்தாலே
குருமுனிபே ரானரே குருவாவாரே. (53)

குருவாழ்வு வானேர்கள் குலத்துக்கெட்டா
கோடான கோடிவித்தை குலத்துக்கெட்டும்
பெருவாழ்வு கிழ்மேலு மில்லையில்லை
பேரின்ப மல்லயிது தூருமின்பம்
திருவாழ்வு கம்மளுக்குள் தேனீப்போல
தேடிவைப்பாய் தேனதனைக் கூட்டிற்சோர
மருவாழ்வு காமானை யிதுபாராதால்
மாய்கையெனச் சொன்னதென்ன மறத்தல்தானே. (54)

உட்கருவு

தானேதா னுடலுயிரும் ரெண்டிருக்க
தங்குமுடல் நின்றுவிடு முயிர்தான்சிவன்
வீனேதா னுடலெடுக்கப் பிறவியாச்சு
மெய்யெடுக்கக் காரணமே யிதுதானுகும்
ஆனேநீ யானுற்குண் டலியைப்பாரு
அம்மியுடல் தேய்க்கதுபார் குழவியாலே
காணேநீ யவ்விரண்டுந் தேய்க்ததல்லால்
கல்மனமுந் தன்னினைவாற் தேய்ந்துபோமே. (55)

போகுமது யெப்படியென் றெண்ணிடாதீர்
பொரிபுலனுஞ் சண்டையிடல் குழவிஅம்மி
ஆகுமது காமரைக்கத் தேய்ந்தாற்போல
ஆசனங்க னிட்டுவர அரைக்கும்வாசி
வேகுமது உள்க்கருவி காய்ந்ததாலே
வெள்ளாமை நீர்பாய்ந்து விளைவுபோலே
சாகுமது நீரில்லாக் காய்ந்தாற்சாவி
சந்ததிகள் உள்க்கருவி கொல்லுவாயே. (56)

வாவென்றுல் வருவாரோ கொடுக்கார்பக்கம்
வருபவர்போல் வருவார்கள் கண்ணிற்றோணூர்
தாவென்றுற் தருபவர்க ளஞ்சிலேர்கள்
தருவார்கள் காலமறிந் துணர்ந்தபேர்கள்
தோவென்று லோடிவரும் நாயைப்போலத்
தொல்புலித்தோல் நல்லாடை சாற்றிக்கொள்வார்
காவென்றுற் கூடுகிற கூட்டம்போலக்
கல்லெறிந்தா லோடுவரே காகம்போலே. (57)

காகம்போற் கூடியவர் வாசிபார்த்தேர்
கல்லெரிந்த சொல்லறியார் கலையைக்காணூர்
வேகமாய்ச் சொல்வார்கள் சாஸ்திரமார்க்கம்
விரைந்தேரச் சொல்லுவது குருவின்மார்க்கம்
காகம்போல் நாக்கிரண்டு வைத்தக்கொண்டு
நடுமார்பி லுகிப்பதனைக் கண்டுவிட்டார்
தேகம்போல் நாமிருக்க அருளிருக்க
திருவருளால் வாலையவள் பதத்தைக்காணே. (58)

மனதே தெய்வம்.

காணுவது மனதென்ன கள்ளமென்ன
கள்ளமெது மாய்கையெது மனதேதெய்வம்
பூணுவது மனதருமை மனதேசாட்சி
புழுக்கூட்டி லேயிருக்கும் ஞாயஞ்சாட்சி
தோணுவது தன்மனதிற் காட்சிரூபம்
தொன்தோமென் றுடிடுமே கள்ளமின்றி
பேணுவது சலனமது அன்னத்தாலே
பேருரையா ரூபமதின் தெய்வமாமே (59)

தெய்வமன தேவிரித்து ஒளிவாஞ்சோதி
திருவருளின் ரூபமது அருளேசாட்சி
சைவமெனச் சொன்னலே கய்யச்செய்யும்
கலியுமென்ன செய்வமெனில் நெஞ்சைநண்ணி
செய்வதென்ன நெஞ்சதனில் ஓடைபோல
திடல்திடலாய்க் கூட்டுநெஞ்சு பள்ளங்காணும்
பொய்யதுவும் செல்லாது யெல்லாம்போகும்
புலனெலும்பு தோல்கூடு மீதம்நீரே. (60)

மீதம்நீ ருடலுயிரும் நினைவும்போகும்
வேதாந்த மாகருவும் உள்ளேநிற்கும்
காதம்நீர் அண்ணுக்கு வாசல்மார்க்கம்
காம்கினையா தேயிருத்தும் பேசும்வாசல்
போதம்பார் பரிபாசை யாகப்பாடும்
பொய்யதுவுந் தான்தெரியும் மெய்யுங்காணும்
நீதம்பா ரதீனியும் தானேகாணும்
நில்லும்நில்லும் ஞானிவேன் நினைத்தமார்க்கம். (61)

குருக்கு மார்க்கம்.

மார்க்கம்போல் கோவழியே குருக்குமார்க்கம்
வாய்வழியே தான்வந்து வாசியேறும்
தீர்க்கம்போற் செப்பிவிடும் வாசிவாசி
செயவாசி கூறிவிடும் வாசிபாசை
கார்ப்பதுபோற் சொல்லிவைக்குந் தனக்குமுன்னல்
கண்டுகொள்ளும் பின்னலே தடர்ந்துசெல்லும்
சேர்ப்பதுபோற் சொல்லிவைக்கும் பொருந்திடாதே
நீண்டாதே நீயிருந்து வாங்கில்லே. (62)

கில்லாதே போனக்கா லிருள்விழுங்கும்
நிமிஷத்திற் சொக்கிவிடுஞ் சடலந்தோணு
செல்லாதே அவ்விடத்தில் வெகுவாம்பள்ளம்
கிக்கினவர் மெத்தவுண்டு கரையேறுமல்
கொல்லாதே காம்பிழைக்கச் செய்தவித்தை
கொல்லுமெம னிருக்குமிடஞ் சொக்கதாகும்
கல்லாதார் சாஸ்திரத்தைப் பாராமற்றான்,
கரையேற நினைப்பவர்கள் கிருக்காவாரே. (63)

இருக்காவார் பித்தலெறி வந்துசேரும்
இருகிரெனச் சுழலுமனம் அறிவைவிட்டார்
இருக்காவார் சொல்லெல்லாம் வேதமாகா
கிட்டினதை யறியாதார் மூற்றுமாகார்
இருக்காவார் தவசுமுறை காணுமாந்தர்
கேட்டதற்குப் பதிற்சொல்லார் செவிகொடார்கள்
இருக்காவார் பரிபாஷை சொல்லென்பார்கள்
கேள்வியற்றூர் பார்வையற்றூர் காவற்றூரே. (64)

அற்றூர்க ளிப்மூன்று மில்லாஞானி
அறிவில்லார் தங்களுக்கு யோகிதானே
உற்றூர்கள் சாஸ்திரத்தைத் தொட்டபேர்க்கு
உருகிவருஞ் சொர்க்கள்து ஆதியந்தம்
பெற்றூர்கள் சொல்லதுதான் முறையாய்ச்சொல்வார்
பிசகாது ஒருகாளும் கேரேசொல்வார்
முற்றூர்கள் கேட்பவர்க்குக் கவிழ்த்துசொல்வார்
மூன்னின்று கேட்டாலுந் திரும்பிடாரே. (65)

திரும்பிக்கொள் வாரவர்கள் சித்தர்தானே
செப்பினதைக் கேளாதார் பெரியோர்தானே
திரும்பிக்கொள் மனமிருக்கச் சந்தேகத்தால்
தேசத்தில் சுகிக்கறியா விருதாஞானி
திரும்பிக்கொள் உலகருமே ஓடிப்போவார்
தேசத்தில் ஞானிபரி பாஷையென்பார்
திரும்பிக்கொள் ளுலகத்தோர் கேட்டதற்குச்
சிவபூசை செய்ததுபோற் புலம்புவாரே. (66)

புலம்புவா ரதுபிரித்துத் தெரியவேணும்
புகன்றவர்கள் நிமிஷமொடு வருஷங்காணர்
அலம்புவார் மார்பழுக்குத் தெரியாதாலே
அய்யய்யோ வென்றவர்கள் கலங்கினர்கள்
சிலம்பொலிக்கு மென்தாயார் சொல்லின்வித்தை
சிறுநிமிஷம் பெருவருஷம் கணக்காய்ச்சொல்லும்
தலம்புபோல் வேணதெல்லாஞ் சரியாய்ச்சொல்லும்
சமத்தர்களோக் கண்டறிந்து ஏறுவதே. (67)

ஞானம்

ஏறுங்காண் மூற்றறிவு தெளிக்துள்ளோர்கள்
இதயமதில் நடமாடும் உதயங்காணும்
கூறுங்கா ணுகியக்த மிருக்தெல்லாம்
குமிரியிரு மேகநீ ரிரைச்சல்போலச்
சேருங்காண் மழைத்துளிபோற் சேருஞ்சேரும்
சென்றேறக் காற்றிழுக்கும் வாசியோகம்
மீறுங்காண் மூற்றிவிடக் கெர்ச்சிக்குக்தான்
முடிவான மூட்டுதல்போ லொளியுங்காணே. (68)

தெய்வரூபம்

காணுவது ஏதென்றுல் தெய்வரூபம்
கணக்கெழுகி முடியாது சொல்லிவாரேன்
பூணுங்காண் நம்மனதில் அறிவுதன்னில்
புகழ்கருத்தில் யூகமிகும புலன்களோடுங்
காணுங்காண் யோகநெறி வாசியோடும்
புலனற்றேர் தன்னெஞ்சு சமமாம்பார்வை
தோணுங்கா னித்தாதி முறைகளோடு
தூண்டிலகப் பட்டமீன தொங்கும்போலே. (69)

தொங்கினது போலல்லோ உளத்தில்தொங்கும்
தொடுகுறிகள் காண்பிக்கும் உடலிக்காட்டும்
மங்கினுப் போலல்ல சோதிபோலே
மறைவேதம் போலல்ல சித்துப்போலே
தங்கினு லிதற்குள்ளே சிக்குமல்லால்
தவஞ்செய்தோ ராலுலும் விட்டார்கெட்டார்
பொங்கினுற் கண்டுகொள்ள மாட்டார்க்கென்ன
பூதவுடல் தினைச்சுமத்து போலுர்வீனே. (70)

பெண் ஆண் இருவருக்கும் யோகம்.

வீனேதான் போவரென்று சொல்லிவைத்தேதல்
விருதாவாய்ப் புலம்பவில்லை ஞானமெய்தும்
கூனேதா னுனக்கால் யோகங்கிட்டா
குமரிகட்குங் குமார்கட்கும் யோகமுண்டாம்
ஆனேதான் சாண்முழமும் மூலகாடி
அமைத்திருக்கி லப்படியே யெய்தும்பாரு
காணேநீ முன்சொன்ன குறியைக்கொண்டு
கண்டவர்க ளுடன்கூடிக் கலந்தகொள்ளே. (71)

கொள்ளாத பேர்களென்ன குரங்கின்குட்டி
குறியறிந்துக் கேளாதார் உயிரில்லாதார்
விள்ளாத பேர்களில்லை.கேட்போரில்லை
விழலுக்கே நீரைத்த வாறேயாகும்
தெள்ளாத மாந்தருக்குத் தவிடுமில்லை
தீனிகுறை யாதவர்க்கு வாசியில்லை
மொள்ளாத பேர்க்கென்ன தாகமுண்டோ
மோகமுண்டோ தாகம்விண்டு மொழிகுவீரே. (72)

கூறினது இத்தனையும் உமக்கெமக்கோ
கோபுரத்தின் மேல்வாசற் சாமிக்கோதான்
பாரினுட கூச்சல்வந்த தாலேசொன்னோம்
பகருவர்க ளென்றவருக் கிச்சைவேணும்
தேரிலுள்ள பொம்மையுட விழியைப்போலே
சித்திரம்போ லேயிருந்து வாசிபாரு
மாறினது காலையந்தி மறந்ததாலே
மனிதருயி ரேமறந்து உடல்கண்டாரே. (73)

கண்டவர்கள் சொன்னார்கள் முன்பின்னுக்
கருணையொடு வைத்துவிட்டேன் கருத்தறோய்
பண்டவர்கள் சொல்லதனில் நழைந்துபார்த்துப்
பழகிவர காட்சிலுற பலமாய்நிற்கும்
விண்டவர்கள் சொல்லதுவும் கொஞ்சம்விள்வார்
வேதவடி வுரைகொஞ்சஞ் சமமாய்ச்சேர்த்து
தொண்டர்களா யிருந்தேதான் பார்க்கவேணும்
துயரென்று நீயிருந்து தூங்கிடாதே. (74)

கூனல் வரும் விதம்.

தூங்கிடா தேயிருக்க எமனைவெல்லத்
தூண்டுறே னின்னமொரு சூட்சங்கேளு
ஏங்கிடா தேயிருப்பீர் போகுங்காலம்
இறைவயிறு கீழ்ப்பாக மேல்பாகத்தே
வாங்கிடா தேயிருப்பீ ரிந்திரியங்கள்
வயிற்றளவு பின்பாகங் கறைத்ததானால்
தேங்கிவிடு மிந்திரியக் கட்டில்லாமல்
தியங்கிநடு நேர்வழியுல் கூனல்தானே. (75)

யோகத்துக்கு சூட்சம்.

தானுனர் கோடியென்ற லெக்கம்போலே
தமர்வாசல் தான்திறத்து புக்கினர்கள்
மானுன தண்டுலர்ந்தால் வருகார்தோஷி
மாதண்டு பலமிருந்தால் வருவார்நேசி
கூனர்கள் குறுகார்கள் உடலுப்பார்கள்
கோடிவித்தை கண்டவரைத் தொடர்ந்துகூடும்
வீனுட்கள் சொற்கேளாப் பிள்ளையைப்போல்
வினையோடு திரியாமல் வேலைபாரே. (76)

வேலையில்லா தெதனாலே முடிந்ததாலே
விரும்பிச்செய் நிலக்காய்தல் நீரில்லாமல்
சேலையில்லா அம்மணத்தி லிருப்பாள்போல
சிறுபிள்ளை வேலையில்லா திருந்தாற்போல
வாலைவய தேமிகுத்தா லிச்சைபோல
வயர்நிறைந்த சோம்பியர்கள் தூக்கம்போல
காலையிலு மாலையிலும் கடந்துதூரம்
கனத்தவழி தூலையாதெப் போதுஞ்சென்றே. (77)

சென்றேறி கடந்தநினு லக்தமாடி
திருகுசுழி கேணியடி அமிர்தவாசல்
குன்றேறித் தானுண்டு நிறைத்ததாலே
குமரிகோர்ப்பம் சக்கையைப்போ லிருப்பார்சும்மா
அன்றேறி யிருந்ததுபோற் குறையாமற்றூன்
அளவுநிறை மேலதிகம் ஆயுள்மட்டும்
மன்றேறி உள்விழைந்த காட்சிகண்டு
மகிழாதே உள்வேலி வெளிதோணுதே. (78)

அறியாதார்.

தோணுத ஜனங்களுக்கு எலும்பின் ஆணி
சொல்லறியாத் தோஷியற்குச் சுழிவுதோணு
வீணுக காமலிக்கு கெட்டோமென்பார்
மெய்நிறைந்த வாசியதைக் காணுமாந்தர்
வாணுளைப் போக்கடித்துச் சடமுங்கெட்டு
வயற்பிழைக்குஞ் சோம்பியை யோகியென்றே
தூணுளைக் கூட்டியுண்டு கனித்தாற்போல
தன்பமுற்றுப் பட்டினியே டெப்பான்வீணே. (79)

கிடப்பானே மண்மேலே பிணத்தைப்போல
கிருகிருத்த பித்தநீர் பெலத்ததாலே
மூட்டப்பான கால்மடித்த இருப்புங்கெட்டு
மூதுகுதண்டு மேகொருங்கி மெலிந்துநோயால்
கடப்பானே மரணகா ளறியாயோகி
காவில்வருஞ் சொற்பலித மில்லாத்தேகி
குடப்பானே நீருண்டு மூச்சைத்தள்ளி
கும்பிடுவார் பூட்டுக்குச் சாவியாமே. (80)

போய்யோகி.

சாவியதில் யோகபதர் காவிகட்டி
தன்காலிற் குறடிட்டுத் தாடிகட்டி
கூவியே சொல்லறியாப் பூசைபண்ணி
குங்குமமும் வெண்ணீறும் பொட்டுமெட்டும்
மேவியதில் மொட்டையிட்டுக் கொறடுமொன்று
விறகுதலே சும்மாடு குடுமியிட்டு
தாவியதி லேஙடங்து வுலகம்பூராய்த்
தான்மறந்த பாவனைபோற் கூவுவாறே. (81)

கூவுவா ரோபெரியோர் உலகந்தன்னைக்
கொள்ளுவரோ தள்ளுவரோ சிறியோர்போல
தாவுவரோ தெரிந்ததனை விள்ளுவாரோ
தாரித்திர மேயதனைச் சொல்லுவாரோ
சாவுவருங் காரணத்தை நினைத்துகொண்டு
தனைக்கொல்லுங் கூற்றனைடு சண்டைசெய்வார்
மேவுவரோ கூற்றனைடு கூடார்வாடார்
மெய்வீசுங் காற்றுலவு கொண்டார்பாரே. (82)

கொண்டார்க மூடலுயிரைப் பகுத்தகொண்டு
கோடிவித்தை கண்டார்கள் முத்திசித்தி
தண்டார்க ளொவ்வொன்றைக் கண்டுகொண்டு
சாதித்துப் பெற்றேமே யென்றுளண்ணி
உண்டோர்கள் பேச்சுரையுங் கைபாகங்கள்
உப்போடு கைப்பறித்து தெளியுமுன்னம்
திண்டோர்கள் பொய்கொண்டு சாவாரானூர்
சிறுபிள்ளை லூக்கியிட்ட சமையலாச்சே. (83)

சமையலாய்ச் செய்வதற்குச் சாமானக்கேள்
தவசுமுறை யுடற்கூறு நன்றுய்ப்பாரு
அமையலாய்க் காயடுப்பு மூலம்பாரு
அனலிலிட நெஞ்சாடு மனச்சாமான்கள்
சமையலா வேயிருக்க மேட்டுநெஞ்சில்
துண்டிவிக்கும் நல்லறிவு கூடக்கூட்டிக்
கமையலாய்க் காயாமல் ஒன்றுசேர்த்து
கார்பசிக்கி யிட்டகதை கருத்திற்பாரே. (84)

சயப்பா கோடிதனங் கேட்டாலுந்தான்
இல்லறத்தி லிருக்கவைப்பார் துறவுக்கியார்
பேயப்பா உன்பொருளும் பெரிதோசொல்லு
பித்தர்களென் றெண்ணுதே பொருளைக்கேட்டால்
காயப்பா பொருள்கொடுக்காத் தோஷியீயும்
கஞ்சிக்கி யெனையலைய வைக்கவோர்தான்
நீயப்பா கொடுத்தலுடன் நான்கொடுப்பேன்
நிச்சயமாய் யிதுகொடுத்தாற் பின்னீவேனே. (85)

சவனே திரிகால வர்த்தக்தன்னே
என்னெதிரில் மண்தின்று போவாருக்கு
காவனே காணிருந்து முழிப்பதேனே
கஞ்சிகுடி யொன்றுசொன்ன பையனுக்கோ
மேவனே நீயிருவே கீழேதானே
மேலிருந்தோன் கீழிருந்தாற் பாவந்தானே
ஆவனே நானுனையுஞ் சேர்த்தால்தோஷம்
அய்யய்யோ குருவென்பான் உள்நின்றுனே. (86)

பரதேசி.

நின்றவனும் வெளியில்வர வெட்கமாவான்
கெடுங்காலஞ் செலுமோவென் றெண்ணிக்கேட்பான்
குன்றேற வேணும்நா மென்றேசொல்வான்
குருவென்பான் திருவறியான் குதர்க்கச்சொல்லான்
சென்றேற நாமிருவர் போதுமென்பான்
சிவனந்தல் செய்வதற்கே எதுக்கோதான்
என்றுடங் தொழில்மறந்த கருதியில்லான்
அவன்வயிற்றை நிறப்பிடகம் மாலாகாதே. (87)

நம்மாலே யாகாதா மனங்குளிர்ந்தால்
கல்லறிவு கண்டுவிடோம் தள்ளமாட்டோம்
தம்மாலே யாகுமென்று நினைத்தாற்போல
சரிசொல்வாய் கிட்டிருந்தால் வாபோவென்பாய்
எம்மாலே கண்டுகொண்ட சிரமந்தன்னை
யெவரறிவா ரதவறியு மென்றுற்போல
உம்மாலே கண்டுகொண்டா லெமக்குச்சொல்வீர்
உலகமென்றல் வயிற்பிழைக்குங் கள்ளர்தானே. (88)

கள்ளாரீ கட்குடிக்கும் வெறியுந்தள்ள
கர்மமென்ற மனதறிய வள்ளேநிற்க
பிள்ளாய்நீ சம்பந்தி யாளாய்நில்லு
பேச்சறிந்து என்னுடனே கலந்துநில்லு
வில்லேபோல் நீவளையா நிமிர்ந்துநின்றால்
விறகில்லாத் தீயிடுவோம் வாக்கால்நாவால்
கொல்லவே நின்றதொரு நமனைக்கொல்வோம்
குமரியர்கள் சித்திரத்தைப் பேசுவோமே. (89)

பெண்கள் விசித்திரம்.

பேசுவோம் யாம்கொண்ட பொருள்களெல்லாம்
பெண்கள்விர லிரைகைக்கே பெண்கள்கொண்ட
காசுபோல் வட்டமிட்ட பொட்டுப்பார்த்தால்
காதிலெண்ணி முடியாதே மூக்கிலேதான்
தூசுபோ லிட்டாலும் பொன்னுலொட்டு
தொங்கிநின்ற கல்லொட்டு எண்ணிப்பார்த்தால்
வீசயாக் கல்லெறிந்தாற் செம்பொன்மேரு
மேனிகைக யாகுமல்லால் மீதமுண்டோ. (90)

உண்டோதான் பெண்களைத்தப் பரமேசெய்ய
உண்டுடுத்திப் பாராமல் மீதம்வைக்க
கொண்டவர்க ளாயுசுள்ள மட்டுந்தானே
கோடான கோடிமனு உழைத்துவைத்தார்
மிண்டோர்கள் தேடுபொரு ளெம்மட்டோதான்
மேனியதைக் குலுக்குவரே யம்மட்டேதான்
கொண்டோர்கள் வருமைவந்தா லதனைப்போக்கி
குருஞ்சிரிப்பு மீயாரே பின்காய்வாரே. (91)

காய்வார்கள் முன்னூலே கம்மைத்தேய்த்துக்
கதைபேசி நடிப்பாரே சித்திரத்தார்
மாய்வாரே யிடுகாடு கம்மைப்போக்கி
மண்பூத்த சுசலிப்போ லாசைபொங்கி
தேய்வாரே புத்திரர்கள் களத்திராதி
தேரிலொரு பொம்மையைப்போற் பௌத்திராதி
செய்வாரே மக்கள்வழி கிளைஞ்கூட்டம்
தேர்வருநாள் திருகாட்போற் கூடுவாரே. (92)

கூடுவார் காம்தேடி லெண்ணவாகும்
கொடுமையுள்ள மங்கையற்கா பரணம்பூண
தேடுவா ரிக்கூட்டக் தேடலொன்றே
தேடினவ ரிருத்துண்ண கோம்வாய்க்கா
போடுவார் சப்ததளம் பாதசங்கை
பொய்யல்ல மெய்யிதுவே சுகமதாகும்
காடுவார் காடாட்டால் சுகமிதாகும்
கங்கைசுக மில்லறத்திற் பெரியதாமே. (93)

பெரியதாம் பெரியதல்ல நம்மளுக்கே
பேர்பெற்ற சித்தர்களு மறைத்தார்குட்டு
சிறியதாம் பெண்வாலே காமரூபி
சிறுபெண்னை வாய்பேசாப் பெண்ணைக்கண்டார்
உரியதாய்ச் சொன்னர்கள் கன்னிகண்டோர்
உத்தமியின் வாலிபத்தைக் கண்டோராலுல்
விரிவதாய்ச் சொல்லார்கள் மேலேகண்டோர்
மேன்மூச்சு அறிவாலே வாலிதானே. (94)

கண்டாரே வாலிகன்னி குமரியோடு
கடுங்நிழவி முக்காலம் சேரிற்கண்டோர்
உண்டாரே மண்மலிகள் கடலாம்வாரி
உண்டுமிழ்வார் சிருட்டிதிதி சம்மாரங்கள்
கொண்டாரே யவர்புருஷன் கூத்தியாகி
கொடுங்காலன் வேறெனவுஞ் செப்குவார்காண்
தண்டார்கள் வாங்கறியா ரிதனைக்கொண்டு
சாஸ்திரங்கள் பிறந்தனவே பலவார்தானே. (95)

வாராக அவர்கள்கண்ட பதங்கள்போல
வாயுரையோ நின்றவளுஞ் சொன்னாளையா
கூராகச் சொல்லவில்லை அவளாற்பாக்கி
கொண்டவர்க்குக் கண்டமட்டுஞ் சொல்லிவைத்தாள்
தேராத பேர்களுக்குப் பாக்கிவைத்தாள்
செல்பாக்கி கண்டவர்கள் மீதம்பாக்கி
கூறுதே மிச்சம்வையாள் கொட்டிவைப்பாள்
குமரியர்கள் சந்தோஷம் பாக்கிதானே. (96)

பாக்கிதான் முப்பதினில் முற்றும்போல
பரைவாலை முப்பதின்மேல் முழுதுஞ்சொல்வாள்
காக்கிதான் சொன்னாரே வசிஷ்டருக்கு
கண்டனென்று சொன்னாரே ராமர்குருவுக்கு
நோக்கியே விழித்தாரே புசுண்டர்தாகா
நுவலுமெனச் சொன்னாரே வசிஷ்டமூர்த்தி
தாக்கியே யேதினிமேல் சிரிப்புவக்தே
சந்தேக மதைக்கெடுக்க நீர்சொல்வீரே. (97)

சொல்வதே வாலைகரை கண்டோன்சொல்லே
தூய்யபர வெளிநீளம் கண்டோன்கல்லே
சொல்வதே பரைவேதம் பரத்தின்வேதம்
தூண்டாது நின்றபர வெளியின்வேதம்
சொல்வதே பிரசண்ட வாய்வின்வேதம்
சொல்லடங்கா மேகக்கரு நீரின்வேதம்
சொல்வதே யுடுக்கன்மதி ஞாயிர்வேதம்
சொல்மேலே சொல்தோணாக் கருவேதமாமே. (98)

வேதமே மேலதிட்டு ஆகியக்கம்
விரைந்தேறிக் கண்டவர்கள் அதற்குமேலே
வேதமே சொல்லுமல்லால் மற்றோர்சொல்லார்
மேலடியிற் காலடியே தெரிந்தோர்சொன்னார்
வேதமே யிப்படியே தெரிந்தமட்டும்
மெய்யறிந்தோர் சொன்னாரே பார்த்திருந்தேன்
வேதமே சொற்பிழையைத் திருத்தப்பார்த்தேன்
வேதனம்பி அஞ்சுமெனப் பிழைபாரேனே. (99)

பாரேனே கானிருக்க வென்னலாபம்
பாதேசி வேடமிட்டு வென்னசேமம்
கூறேனே யின்னமொரு சொல்லுமானே
குடுகுடுக்கைக் கஞ்சாவைத் தொட்டோன்வீணே
சாணேறத் தெரியாதோன் முழத்தைத்தாண்டத்
தாவுகின்ற மீசலடி காயேபோல
வானேறத் தெரியாதோன் பிரமரக்கிரம்
வாய்கொண்டு மூக்கசைப்பான் வாசிபாரான். (100)

வாசிபார்க்கும் நெறி.

வாசியே மூக்குதண்டு நடுவில்வந்தால்
வல்லபமே யோகதண்டு நிமிரலாகும்
கூசியே பாராதே நெற்றிமார்க்கம்
குமரிவீணை யாடுதல்லோ காமமார்க்கம்
தோசியாய்ப் போகாதே நடுகாமத்தே
தொட்டேறி உச்சிவழி பிரமரக்கிரம்
பேசியே பாராதே சித்திரம்போல்
பெருஞமை போலிருக்க யிமையைநோக்கே. (101)

இமைநோக்க உமைத்தூக்கும் மனமும்வாசி
பிடதபுர மோடாமல் வலமாயோடும்
சமைநோக்கும் பிராணவுயிர் வாசிநோக்கும்
காசியடி புருவமத்தி நடுவேயாகும்
தமைநோக்கும் வல்லபர்க்கு யெல்லைசொல்வேன்
தாதுஉயிர் நின்றலிடம் மனிதருக்கே
உமைநோக்க நெற்றியடி புருவமத்தி
வாசிமூன மூக்கிலடி மத்தியாமே. (102)

மூத்திக்குப் பாதை.

மத்தியிலே நின்றருளு மணியாய்த்தானே
மனிதரே யானுக்கால் ஆண்டுபோரும்
சித்தியிலே யிதுசித்தி வருடமொன்றில்
சித்திக்க யிதுமேலே நெற்றியேறும்
பத்திக்கி யிதுதானே முறைகாண்யோகம்
பார்நெற்றி நடுகாம வழியேமார்க்கம்
முத்திக்கு யிதுதானே கோரம்பாதை
முனிவர்களு மாடிடலாம் உச்சியேதே. (103)

உச்சியே யேறிநின்று வட்டமிட்டு
உருமுமடா பெண்வாலே வயதோபத்து
மெச்சியே பார்த்திருந்தால் வயதேபோகும்
வெடிவாலே வாலிபமே யாகிவாழ்வாள்
குச்சியே பெலத்தவிடும் குமரிதானும்
குடிசையிதைக் கட்டிடுவாள் பெலத்துநிற்பாள்
அச்சிலே குமரியவள் கிழவிபோலே
அனேகநாள் வாழ்ந்திடுவாள் உடலினூடே. (104)

சத்திக்கு வீடு உடல்.

உடலினூடு வாழ்வதற்குப் பிரியம்வாலே
உத்தமிக்கு நம்மையன்றி வீடேயில்லே
கடலினூடு வாழாளே மலைமண்மீதும்
காரிருக்கும் வானவெளி யாகாயத்தும்
நிடலினூடு மேலேதான் கீழினூடு
தேவரூபி யாவாளே சித்தரூபி
மடலினூடு பூவேறக் கொண்டையேறும்
மங்கையுட னிருந்தால்இல் லறமதாமே. (105)

இல்லறம்போல் நம்மோடு கூடிவாழ
இல்லறத்திற் சோதியொளி யிதனிலிச்சை
நல்லறம்போற் சொல்லிவைப்பாள் நாவால்வேதம்
நாமிருந்து பாடிடலாம் கூடியாடி
சொல்லறமே யதுதானே முடிவேயாகும்
துயருற்று நாமிருந்தா லதுவேமாளும்
அல்லறமே யிதனையே வருவேசெய்ய
அங்கவுடல் உயிர்மனதை அறிவாய்ச்செய்தே. (106)

பத்திய விபரம்.

செய்தார்கள் பத்தியங்க ளேதுமில்லே
சிறுவர்கட்கு பத்தியங்கள் முப்பதுக்குள்
வைதார்கள் பத்தியங்கள் சொல்லித்தானே
வாலிபத்தைப் போக்கியுடல் சத்திசெய்ய
நைதார்க ளவர்மனது நொந்துசொன்னார்
நரைதிரையும் வர்தாக்கால் பத்தியமுண்டோ
பொய்தார்க்குச் சொல்லவில்லே பத்தியங்கள்
நன்னறிவாற் கண்டுகொண்டு தொங்குவீரே. (107)

தொங்குவீர் அறுசுவையுந் தள்ளவேண்டாம்
தயர்மனதை அல்லலென்று தள்ளவேண்டாம்
யெங்குநீ ராஞக்கால் மனதோவேணும்
யேதென்றுற் சொல்லுகிறேன் மனதுபுத்தி
மங்குமன மானுக்காற் கொல்லவேணும்
மனதறிவே மனத்தெளிவே கருத்தேயூகம்
தங்குவீ ராஞக்கால் மனமேஆதி
தன்மனது மாண்டாக்கால் மாழுமாமே. (108)

மனதே சத்தி தெய்வம்.

மாளுகின்ற துன்பமது மனதேகாட்டும்
மனதையன்றி வேறுமூண்டோ சத்திதெய்வம்
பாழில்கின்ற சத்தியல்லோ மனதேயாகும்
பரதெய்வ மானுக்கால் சத்திசேரும்
வாழுகின்ற மனதைவெல்லத் தம்மாலாகா
மந்திரத்தி னாலாகா குருவாலாகா
வீழுகின்ற மனதல்ல வேதத்தாலே
மெய்மனது மாளாது நிற்கும்பாரே. (109)

நிற்குமந்த மனத்தினையே வென்றேரென்றூர்
நீழ்மனது குறுகினதால் நினைவுபோமோ
சுற்குமே பல்லாது தர்க்கம்நேரும்
கல்மனதும் நெஞ்சினிலே ஒன்றைப்பற்றி
வர்க்கமே தேடாமல்;சிறத்துநின்று
வாயுரையை யொழித்தநினல் நினைவுமாரு
தாக்குமே யிதனுலே பாவதேது
சடமான மானுலே,நினைவுபோமே. (110)

யோகம்.

நினைவுமே போயொழிந்தா லிருளேயாகும்
நெற்றிக்கண் ஞானக்கண் ணுகுமோசொல்
நினைவுமே மாறிவிடில்;சுவரேயாகும்
நீகிலத்திற் குட்டிச்சுவ ரென்றுபேரு
நினைவுமே தப்பிவிடில்?தினைமறக்தார்
நீசர்களுக் தினைமறக்கத் தவஞ்செய்தாரோ
நினைவுமே போகாமற் தவமேசெய்தார்
நெற்றிக்கண் முனியானுர் சித்தர்தானே. (111)

சித்தரிஷி முனியாகாப் பதத்தினோர்கள்
செத்தசவம் போலிருக்கச் சிரித்தார்மேலோர்
சித்தரிஷி முனிகள்பதம் உடலைத்தொட்டே
தேகமதை மறந்திடிலோ உயிர்தோணாது
முத்தருயி ருடல்மன தவிர்த்தாரானால்
மோகதெய்வ மெங்கிருக்கும் சடத்திற்தானே
கர்த்தருமே யானாலுஞ் சாஸ்திரமீவார்
கரைமனது கூடினம்விட்டுச் சுகமாய்ச்செல்லே. (112)

செல்லுமந்த மனந்தானே தூக்கம்விட்டு
சேர்ந்தசுக மதிலுலே மனமாளாது
கொல்லுமந்த மனமென்றுற் தூக்கம்விட்டு
கொடியமனம் பரமசுக மடைந்திடாதோ
நில்லுமன மென்றுக்கால் நின்றிடாது
சோசுகத்தைக் கண்டாக்கால் மனமேநிற்கும்
வில்லெனவும் பாயுமது அடங்கிநிற்கும்
வேதாந்த மாமிந்த விபரந்தானே. (113)

பத்தியங் காணேனேனல்.

ஆமிந்த மார்க்கத்தை நாமேகாண
அங்கமூடல் மார்க்கத்திற் பத்தியமேனே
காமிந்தப் பத்தியத்தைக் கண்டிலோமே
காட்டினர் பத்தியங்கள் விரதமார்க்கம்
தாமிந்த தெறிசொல்லக் கூடாதய்யோ
தர்மமோ சொல்லிவைத்தார் துறவுக்காக
காமிந்த யில்லறத்தார் தவத்தார்க்கன்னம்
கைவாயும் வயர்நிறையச் செய்தார்பாரே. (114)

வாய்வயருக் கைநிறையச் செய்தார்க்கிந்த
வுயற்றெரிச்சல் சொல்லிவைத்தார் பத்தியம்போல்
செய்வயரைப் பட்டினியே போட்டுண்பார்போல்
சித்தர்களும் அமிர்தமிட்டு விஷமேயிட்டார்
தாய்போலும் வந்ததொரு சேய்மேற்குற்றம்
தான்காட்டி உலகுரென் றெண்ணமற்றான்
மாய்வாரு முண்டோதா னதுபோற்தானே
மக்களுக்காப் நானிறங்கி பிதைச்சொன்னேனே, (115)

வியாசன்.

சொன்னதினு லுன்சுவஞ் சத்திரியன்றான்
தொடர்சத்தி யன்குழந்தை பராசனேடு
இன்னிலத்திற் பராசனவன் குழந்தைதானும்
இவன்பெயரோ வியாசனெனச் சொல்லலாகும்
அன்னவன்றன் பாலனவன் சுகனுந்தானும்
ஆச்சரிய மென்றுசொன்னர் பெண்ணில்லாதால்
மன்னவனுஞ் சனகனிடங் கேட்டதென்ன
மலடிபிள்ளைப் போரான வாறதாச்சே. (116)

தேவாரக் கோஷ்டியாகாதேனல்.

ஆச்சப்பா யிப்படியே சாஸ்திரஞ்சொன்னர்
ஆச்சிரம மிருந்தவர்க ளதுபோலாக
மூச்சப்பா சொன்னர்கள் யோகமுள்ளோர்
முனியாதோர் சொன்னர்கள் சமமாம்பார்வை
பேச்சப்பா சொன்னர்கள் சுவடிபார்த்தோர்
பித்தரைப்போ லாக்கிவிட்ட பித்தம்போல
கூச்சப்பா வேதாந்தக் கோஷ்டிதானே
கூசாமற் கத்தினதால் கோட்டியாமே. (117)

கோட்டிதான் கத்தினவன் கிருக்கனுவான்
குருசொல்லைக் கேழாதான் தர்க்கனுவான்
பாட்டியார் சொற்கேழாச் சிசுவைப்போல
பறத்தைமனம் பலவாறுய்ச் சிதறல்போல
கூட்டித்தான் பறத்தமனம் பாராமுத்தர்
கொட்டினது கொட்டுத்தேள் கொன்கைபோரு
நீட்டித்தான் சொன்னலும் தன்னலாகா
நிமிஷமதிற் பிரண்டுவிடு மனிதர்வாக்கே. (118)

உலகில் வாக்கின் பெருமை.

மனிதரவர்க் கெதிர்வாக்குப் படித்தோன்வாக்கு
மாபடித்தோன் வாக்குயெதிர் அஷ்டாவதானம்
மனிதர்வாக் கதுதவி யிதுவுஞ்சேர்த்து
மாவருளிற் பத்திமுத்தி யிதுவுங்கூடில்
மனிதர்வாக் காகாது முத்தர்வாக்கு
மகாமுத்த ரதிலுண்டு சீவன்முத்தர்
மனிதர்வாக் கானதிலு முத்தர்மேலோர்
மாசித்தர் மேலதிலு முனிமேலோரே. (119)

மேலானோர் தரைதனிலே முனிமேலானோர்
மேவுகின்ற முழுப்பதமுங் கண்டாலன்றி
கீழானோர் சொன்னமுறை குறையேயாகும்
கிழிருக்கு மதுபோலே சரிதைபோலே
சூலானோர் பிரசோப துன்பத்தன்னை
தூண்டியவள் சொல்லியழுங் கதைபோலாகும்
தாழாவோர் மேலிருந்து சொன்னசொல்லே
தற்திமுகன் தம்பியொடு தான்தட்டாரே. (120)

தட்டார்கள் பிரமரிஷி யானலுக்தான்
தவசிகட்கு மெட்டாது பின்னுற்தோணும்
கொட்டார்கள் தவசுநெறி பெரியோரானல்
குருவென்று சொல்லார்கள் சினேகர்போல
விட்டார்க ளன்புதனைச் சினேகமானர்
விரதமென்ன நெறியில்லாச் சுகியானர்கள்
கட்டார்க ளன்புகொண்டு குருவுந்தெய்வம்
கூலசுவடி சாஸ்திரங்கள் பீடமாச்சே. (121)

பொய்வேடம்.

ஆச்சித்த வரிசைவிட்டு உலகத்தாசான்
அங்கங்கள் தனிமினுக்கி வேடமிட்டு
பூச்சித்தக் காவிநீர் புலித்தோலிட்டு
புரிமுறுக்குங் கயர்போலே சடையுல்கட்டி
பேச்சித்த மூச்சறியான் குறடுமிட்டு
பேய்மனதை யறியாதான் விச்சேயிட்டு
மூச்சித்த மனத்தெளியப் பாரார்வாசி
முன்னிருந்தோர் புலன்பற்றிப் பேசுவாரே. (122)

பேசுவார் புலனறிந்தோ பேசுவாரோ
பேய்ப்பிள்ளை போலிருந்து பேசுவார்கள்
கேசுவார் தனையறிந்து மாசுபாரார்
கிட்டிருந்துத் தான்விலகி ஓடிப்போவார்
பூசுவார் வெகுகாலாய்க் கார்த்தேனென்பார்
பொன்குருவு கேட்டதெல்லா மீய்த்தேனென்பார்
ஏசுவார் சொற்பலித மில்லாத்தோசி
இவர்பேச்சைப் பேசினதால் வருவதேதோ. (123)

முத்தி மோக்ஷம்.

வருவதெது மனந்தெளிதல் தவசுதானே
மாகலக்க மில்லாது முத்திதானே
பெருவதெது பின்பிறவி யில்லாச்சாவே
பெருஞ்சித்தி கேட்டதெல்லாம் வருதல்தானே
உருவதெது சாவறிதல் மரணகாலம்
உள்ளிச்சை மாறுவதே மோட்சலாபம்
கருவதெது யிப்பிறவி பின்னேமுன்னே
கண்டுகொண்டு உடல்பிரிதல் மோச்சம்பாரே. (124)

மோச்சபதம் வேண்டியல்லோ யிச்சைதள்ளல்
முனிவதனை நீக்குதலும் முனியரம்பார்வை
நீச்சபதம் நீக்குதலு மதற்குத்தானே
நீராடிச் சுத்திடுவார் குளமுங்கோவில்
மாச்சபதம் மாச்சலது மோச்சலாபம்
வாய்பேசார் பேசினருங் கண்டாருண்டு
ஏச்சபதம் சாஸ்திரங்கள் தொட்டுக்கொள்ளார்
எத்தமிலே போவமென்பார் குருவென்பாரே. (125)

குருவென்பார் யிருவென்பார் நாம்தாமென்பார்
கோரக்கர் மூலிகமக் கிச்சையென்பார்
பொருவென்பார் நாமிருவர் போதுமென்பார்
பொய்க்கூட்டம் தள்ளென்பார் மலியேயென்பார்
திருவென்பார் கண்காட்சி தெய்வமென்பார்
தேடியதைக் கண்டாரைத் தினியீயார்
மருவென்பா ரிவர்சொல்லைக் கேட்டோர்வாழ்தல்
மாலிகையி லகப்பட்ட வழமொப்பாமே. (126)

ஒப்பாகுங் கண்தெரியா மாடுதானே
ஊர்நிலத்தை உழுததுபோ லுவமையுண்டோ
கப்பாகு மவர்மனது பலவாராக
காசினியிற் காண்பதவு மெத்தவுண்டு
செப்பாகச் சொல்லுதலே சிரித்தலாகும்
தேரில்லாரு பொம்மையது சிரித்தலொப்பாம்
அப்பாகும் நாமறித்த ததுவும்யீதும்
அடர்க்ளு மெய்யர்களும் பொதுவென்றாரே. (127)

வெண்ணூர்கள் பாவனைபச் சமத்தைக்கண்டோர்
மெய்ஞானிந்தோர் ஒளசதத்தைப் பாவித்தாற்போல்
குன்னூர்கள் அனேகநூல் தெளிக்தோரானால்
குருமுறையைத் தெரிவார்கள் அறிவுதன்னால்
நின்னூர்கள் தங்களுக்கு யெம்மாலுக்தான்
நிகழ்ந்தநூல் தம்மாலும் கேரில்நிற்கா
பொன்னூர்கள் புலித்தோலைப் பசுக்கிட்டாப்போல்
புலியல்ல வேடமிட்டுப் பொய்யாய்ப்போச்சே. (128)

போச்சப்பா காயக் குருச்சந்தேகம்
பொய்யல்ல நிசம்போலப் பொய்யாய்ப்போகும்
கீச்சப்பா அவர்மனது காச்சல்மெத்த
நிலையற்ற நீரின்மேற் பாசிபோல
ஆச்சப்பா அந்தரங்கம் வெளியில்லில்லா
ஆனாலுஞ் சுத்தமனம் பாழ்வீணுகா
வீச்சப்பா பாழ்மனது சொன்னவாக்கு
வெளியில்நின்ற ஒளிவதுபோல் மேனியாமே. (129)

சாதனை கைபாகம்.

மேனியது ரூபமது மெய்யிற்காணும்
மெய்வெழுக்கும் நிறக்கருக்கும் வீண்சொல்லில்லை
கூனியது கடப்பனபோல் பிலமேயாவார்
கொண்டதொரு உடல்சொரூபம் பலவாராகும்
தீனியது வாய்நிரையத் தொழிலுமுண்டு
செய்கையது வேறில்லை ஒன்றுமாகா
கோணியே யாகிவிடுங் தெரிந்துகூடில்
கோலக்கள் பலரூபங் கொடுக்குங்கூடே. (130)

வாலை.

கூடுவது நிமைக்குமுன்னே குளிகைகூட்டும்
கூப்பிட்டாற் பூரணமுங் கூடப்பேசும்
ஆடுவது உச்சிவெளி தன்னிலாடும்
அமர்ந்திருக்கும் கெஞ்சடியிற் பள்ளமேடை
ஏடுவது மூலதலங் கீழேதானே
இருகாலின் பாதமதைச் சுத்திநிற்கும்
தேடுவது உச்சியிடை பாதமட்டே
செய்தறிந் கைபாகஞ் செப்பினேனே. (131)

செப்பிவைத்தே னின்னூலில் ஆதியந்தம்
திரட்டிவிட்டேன் வயித்தியசோ திடமுரைக்கி
ஒப்பிவைத்தேன் உள்ளங்கால் பரப்புவெல்லாம்
உயிர்மூச்சு அசைத்தாடும் வாய்வுபோலாம்
கப்பியது உலையேறல் அரிசியோடு
கண்டதுபோ லிடுப்பின்கீழ் வாசியோடும்
தப்பியது வாய்மூக்கி லோடுமாப்போல்
தண்டுதண்டா யோடாது நிற்குந்தானே. (132)

யோகம்.

நிற்குமந்த வாசியது உச்சிக்கேரா
நின்றயிடை நின்றஉயிர் மூலம்நிற்கும்
கார்க்குமந்தச் சென்னியுச்சி மூலம்நிற்கும்
கலிவாசி பிராணனுயி ரிதன்போராகும்
வர்க்கமிக்த வகையுள்ளே நிரண்டுநிற்கும்
வால்நீழுஞ் சமயத்தில் வாசிவாலை
தர்க்கமிக்த மும்மலமே வெளியேதள்ளும்
சாதிப்பேன் மும்மலமே சொல்லுவேனே. (133)

மும்மலம் போக்க.

சொல்லுவேன் தொண்டைநீ ரிடுப்பின்நீரும்
தொங்குகின்ற சலநீரு மலநீர்மூன்று
கெல்லுவேன் கெல்லிடுங்கள் உடலேசுத்தி
கேசரத்திற் தொங்கிடலாம் உச்சிமேடை
நல்லவனே உச்சிமுதல் பாதமட்டும்
நடுகாடி மூலம்வரை மலத்தைப்போக்கும்
வல்லவனே மும்மலத்தான் தடையேசத்துரு
வாசிவலு வாகினவன் போக்குவானே. (134)

பிறவிநீக்க அமுர்தம்.

போக்குவான் அண்ணாக்கில் உச்சிவாசல்
பொங்குநீ ரமுர்தமென்று யெண்ணவேண்டாம்
நாக்குமேல் நாக்கிருக்கும் நாக்குரை
நமதுவர்க்கஞ் சொல்லவில்லை தேனிரென்றே
மூக்குமேல் மூக்குமத்தி தண்டிலுள்ளே
முனைவழியே யேறுமத்தப் புருவமத்தி
தாக்குமே உச்சிதொட்டுக் கீழேபாயும்
தலையேறிப் பிடரிவழி போடுந்தானே. (135)

ஓடுமந்த உச்சிவழி வட்டமிட்டு
உட்பிடரி வழியிறக்கும் கயரேபோல
கூடுமந்த மூள்ளெலும்பு மூலகாடி
கொண்டந்தப் பாதைவழி யிடுப்பின்மத்தி
தேடுமந்தப் பின்புறத்தில் மூதுகின்மத்தி
நிரைஅலேபோ லலேவிசி வாசிபாயும்
நாடுமந்த வாசல்வழி குடத்துரீரை
நாம்கொட்டும் வாறதுபோல் கொட்டுத்தானே. (136)

கொட்டுமந்த வாசிஉயிர் பிலத்ததாலே
கோறுவார் பிராணலயத் தருகில்மேவி
நட்டுவர்கள் கொட்டலேப்போல் யோகமார்க்கம்
நாமுழுது பயிர்கண்டு வேலிபோட்டு
மூட்டுவர்காண் கெற்றிவழி தினமுந்தொட்டு
மூன்பிறவி தோற்றமட்டும் பூசைசெய்வார்
கட்டுவர்காண் தன்மனதை பிறவிநீக்க
காயநிலே கண்டதனல் நீத்தார்பாரே. (137)

முன்பிறவி தோற்ற.

நீத்தார்கள் சமாதிநிலே கண்டோர்ஞாயம்
நிகழ்த்தினேன் வாலேபதம் பூசிப்பாய்நீ
காத்தார்கள் பிராணயக் தெரியவேணும்
கழருவேன் யான்கண்ட அதிசயத்தை
பூத்தார்கள் நிஷ்டைமுத்தி சமாதிகண்டு
பொங்கிவிடுஞ் சமாதியினிற் சேதியெல்லாம்
ஏத்தார்கள் தன்னுடைய விபகாரத்தை
எதிர்நின்று சொல்வதுபோல் சொல்லினேனே. (138)

சொல்லுமித்தக் காயவுட லழியுமட்டும்
தூண்டிவிக்கு முன்பிறவி முற்றுந்தோற்றும்
செல்லுமத்தக் காலமித்த ஆதியந்தம்
செப்பினது திரிகால வர்த்தம்பாரு
கெல்லுமிந்த வகையதனேச் சொன்னீர்கல்லோய்
கேட்டறிவுக் குத்தரத்தான் விள்ளுமேலோய்
கொல்லுமித்த மனமாளும் யோகத்தாட்டில்
கொடியமனு யோகியென்றுல் யோகமுற்றே. (139)

யோகமுத்தி ஞானபதம் விரும்பாமற்றுன்
உள்ளுணர்வில் காட்டிவிக்கும் சமாதியென்பார்
யோகமுடி வேசமாதி பிரமநிஷ்டை
யூகித்தார்க் கருத்துதிக்கும் மேலேசொல்லும்
யோகமது திரிகால யோகமாச்சு
உற்றுணர்ந்து காண்பதுவுஞ் சம்பிரதாயம்
யோகமது பென்னசொல்வேன் கருத்தர்வந்த
யோகத்தி னுச்சரியங் கோடியாமே. (140)

சித்தர்கள் நூல்சொன்ன விபரம்.

கோடியென்றுற் கோடியல்ல கோடாகோடி
கொங்கணவன் சொல்லிவைத்தா னதுபோதாது
வாடியென்றுல் மனஞ்சருங்கும் பெண்டீர்போல
மனஞ்சருங்கும் வாசிவலு கோடிசித்து
பேடியென்று லாணுக்கு வீரம்போல
பெருஞ்சித்தி மென்மேலும் விழைவிக்குந்தான்
கூடியுந்தான் ஒட்டாம லிருக்கவேணும்
குமாகுரு வர்க்கத்தி லகஸ்தியர்தானே. (141)

அகஸ்தியரே பெரும்பேற்றை யடைந்தோராவர்
அம்மம்மா வெகுதெளிவு அவர்வாக்குத்தான்
அகத்திலுறை பொருளெல்லாம் வெளியாய்ச்சொல்வர்
அவர்வாக்குச் செவிகேட்க அருமையாகும்
அகஸ்தியரின் பொதிகையே மேருவாகும்
அம்மலையும் அகஸ்தியரின் மலையுமாகும்
அகத்தியரி னடையாளம் பொதிகைமேரு
அவர்மன தமரைப்போற் பெரியோருண்டோ. (142)

துவாபரத்தில் போகநாதன்.

உண்டோதான் துவாபரத்தில் போகநாதன்
உதித்தகுலாத் துடனேதா னிங்குவந்தார்
கண்டோதான் கருவூரான் போகநாதன்
கர்மமில்லாக் கன்னிசித்தன் கொங்கணன்றன்
விண்டேதான் தன்வசித்தி ஞானஞ்சொன்னர்
விபரமறிந் தகஸ்தியர்குலாம் அங்கெழுந்து
கண்டேதான் ஞானங்கள் மிகவுஞ்சொன்னர்
காதிலே கேட்டேதல் வாக்கென்றேனே. (143)

வாக்கியென்றுல் வாக்கியன் போகநாதன்
மானிலத்திற் சொல்லியநூ லெல்லாங்கேட்டேன்
ஆக்கியநூல் யாவுமே அமுதமாகும்
அம்மம்மா வாயாலே சொல்லப்போமோ
பாக்கியமாய்ச் சொல்லிவிட்டா ரமுதமாகும்
பண்பான நூல்களையு மறைத்துக்கொண்டார்
நோக்கியே வேடமிட்ட குருக்கள்தன்னை
நம்பியாதே ஊர்வழிபோ வென்றேன்பாரே. (144)

பாரப்பா பொய்குருக்க ளெல்லோருந்தான்
பரதேசி வேடமிட்டுப் புறப்பட்டார்கள்
ஏரப்பா உழுதாக்கால் உலகங்காணும்
இல்லறத்தின் கற்புநிலை தெரியாமாந்தர்
கூரப்பா சொன்னலுங் குலவழக்கம்
கும்பிடுதல் கோவில்குளம் யில்லாப்பாவி
வீரப்பா ஆத்திசத்தி அனுஷ்டானங்கள்
விரதவகை தொட்டறியா நீசன்றனே. (145)

நீசரென்ன கூட்டமாய்க் கூடிக்கொண்டு
நீனிலத்திற் தற்கித்தார் குலமாமாந்தர்
ஈசரென்ல நீரான தச்சுவேலை
எங்கள்குலம் வேறுன வாருமேது
பாசமென்ன நீரறிந்தீர் பாசம்விட்டாற்
பரத்துடனே யாம்கலந்தோம் போவெண்ணுர்கள்
தாசரென்ன நீரிருந்தீ ரிதற்குமுன்னே
சமயத்தைத் தள்ளிவிட்டோம் யேற்கோமென்றுரே. ()

ஏர்க்கோமென் றிகழ்ந்தினுற் குளமுங்கோவில்
இவர்களுக்கு ஆகாம லிருந்ததாலே
பார்க்கோமே கோவிலுக்குள் மூலஸ்தானம்
பரவாசி கண்டிருந்தக் தள்ளிவைத்தார்
ஆர்க்கோதான் நம்மளுக்கோ ஆகாக்கோவில்
யார்போயென் ஞரிருந்தென் னிகழ்ந்துசொன்னர்
நார்க்கோ னுகாது வாக்கியன்தான்
நாட்டினுன் கற்சிலையொன் றீட்டினனே. (147)

ஈட்டினுன் ஓடோடி யெழுதிக்கீறி
இதயமதின் சூடதனை யெழுத்தரைத்தான்
மூட்டினுன் மறைத்தவர்கள் குலமாம்வர்க்கம்
மோசம்வரு மென்றுசொல்லிப் பதனஞ்செய்தார்
கீட்டினு னிதுபோல வள்ளுவசாம்பான்
நீணிலத்திற் தன்னரசு நாடாங்காலம்
கூட்டினுன் செபதபங்கள் தெரியாதாலே
குலவர்க்கம் படிப்பிலிரா குலத்திலெய்திடுமே. (148)

எய்தாது படித்தாலு மெய்தாபாரு
எங்கள்குல சம்பிதாயம் யார்க்குத்தோணு
வைதாலும் பறைச்சிமகன் வைதுபோடா
மானிலத்திற் பெண்டுவிற்குங் குறவன்போடா
செய்தாலு மிதுவறியாத் தோஷிபோடா
சீசீசி கோவில்குளத் தோஷிபோடா
எய்தாலு மூங்கள்குல மண்ணுள்மட்டும்
யெக்காலங் கும்பிடுவீர் வுட்போவாயோ. (149)

தெய்வ மிகழ்தல்.

உள்ளேதான் போகாத தோஷிநீதான்
உயர்தெய்வக் கல்லென்று செப்பிவிட்டாய்
கள்ளேதான் குடித்தாயோ அடியுண்டாயோ
கருமிகையில் சிக்கிநீ யிடியுண்டாயோ
வல்லேகா னென்றுநீ போகாமற்தான்
வாய்மதத்தாற் பட்டசளம் மெத்தவுண்டு
செல்வோகா னென்றுநீ போகுங்காலம்
செம்புச்சிலை யென்றுநீ சிறுவனுவாயே. (150)

சிறுவனுய்ப் போனதென்ன உடற்கர்மத்தான்
திருமூர்த்தி யானுலும் பொருமைவேணும்
கருவிலே செனிக்கையிலே தாயார்தக்தை
கன்மவினை பிள்ளைசுற்றத் தமரினோடு
தருவனுய் மலைகடலு மாற்றினோரம்
தான்பிறந்த மன்றினிலும் வினையம்புத்தி
பெருவனுய்ப் பேரிழமை பிணிமூப்பின்பம்
பிறக்கவுட லழியுகின்ற சாவுக்தமாமே. (151)

அந்தமே ஆதிதொட்டுக் கருவமைத்தால்
ஆகாத தொன்றுமில்லை அனர்த்தமில்லை
பந்தமே வந்தாலு மூன்றுபத்தில்
பலிக்காது நின்றுவிடும் பழகினுக்கால்
சொந்தமே யாகிவிடுஞ் சமையதீச்சை
சொற்பேதந் தானறிவார் தீச்சைமேலோர்
கந்தமே நீண்டுவது பிறர்க்குங்கூட
காதுகண்ணு மூக்குவா யுடற்சுகம்போல். (152)

சித்தர் வர்க்கம்.

சுகம்போலே சொல்லிவைத்தான் காசிநாதன்
சொன்னவிதிற் காசிபரும் அதிதியோடு
மகம்போலே திதியோடு வாழ்ந்தான்மேலோன்
மக்களிலே வல்லவர்கள் விதமிரண்டு
அகம்போலே சொல்லிவைத்தான் கர்தியிஷன்
அவன்மகனுங் காலாங்கிச் சித்தன்தானும்
நகத்திலே விரல்நுனியில் அழகுண்டாப்போல்
காட்டினான் திருமூலன் விபரத்தானே. (153)

விபரமாய்த் திருமூலர் பிள்ளைபோகன்
மேலான பிள்ளைகளா மூவருண்டு
அபரமே கொங்கணவன் கருவூராரும்
அய்யாகேள் புலிப்பாணி மூலர்பிள்ளை
விபரமே யிதுபோலே பிள்ளைபெற்றார்
மெய்சிலிர்க்குஞ் சொன்னாலும் பிள்ளைசேர்மை
அபரமே யிதுபோலே அகஸ்தியர்க்கு
ஆனந்த சுந்தாரு மிடைக்காட்டாரே. (154)

சித்தர்.

ஆட்டாருஞ் சட்டையரும் புலத்தியர்மச்சர்
ஆச்சரிய மானதொரு பிள்ளையாகும்
பாட்டாரே கோரக்கர் ராமதேவர்
பரிபாஷை யாகவே நூல்கள்சொன்னார்
மீட்டாரே ஒருவருந்தான் காணமாட்டார்
மேலான பெரியோரும் தெரியமாட்டார்
கூட்டான கோரக்கர் சொன்னநூலோ
குமரிமார் கைத்ததுபோல் மனம்புண்ணுமே. (155)

புண்ணுகும் குழியழற் பட்டமாக்தர்
புழுவிருக்கு தென்றறியார் கசிந்துநீரால்
மண்ணுகு மவர்மன துவடலிருக்க
வாய்நீரும் வேர்வையழி வந்தபோது
எண்ணுத கணக்கில்லை அதிகமாஞல்
யேதண்டு புண்குழியி லிறைச்சியுண்டு
தன்னுகுந் தண்ணீரே யொழுகுங்காற்றம்
தாரைவழி நீர்விடவு மிரண்டும்பாரே. (156)

இரண்டின்மேற் சியொழுகல் பத்தின்மேலே
யிதுபோலே புருஷருக்கி ரைந்தின்மேலே
தண்டின்மேல் ரோமமது வலுக்குங்காலம்
தந்தையுடன் தாயாருந் தள்ளிவைப்பார்
வண்டின்மேற் குப்பிருக்கும் வாரேபோல
மனதிருக்கு மங்கையர்கள் வாசலோரம்
மொண்டுமே தேன்குடிக்க வண்டுபாயும்
மோகவலை தடுப்பதற்கு யாராலாமே. (157)

ஞானம்.

ஆகாது ஆண்டொன்று அடுப்பாராஞல்
அய்யய்யோ வதின்பிறகு மாதம்மூன்று
வேகாது மற்றநா ளென்னசெய்வார்
வெரும்பேச்சாய்ப் போய்விடும் யேவல்செய்வார்
போகாது நித்திரையின் நினைவின்தக்கம்
புருஷருக்கு மாகாத பாவியாஞள்
நோகாது அவளைவைத்துப் பார்ப்பதற்கு
தண்மணலைத் திரித்திடலா மிதுவாகாதே. (158)

குடும்ப மார்க்கம்.

இதுவாகா முப்பதின்மே லிருவருக்கும்
இழஞ்சிசுக்கள வத்தவிடில் ரெண்டுமூன்று
மதுவாகத் தான்வளப்பார் படுக்கைவிட்டில்
மைத்தொடு பெண்களொடு தாயார்பக்கம்
பொதுவாகப் படுக்கையதி லெல்லாங்கூடும்
பொழுதுவிழப் புருஷருக்குப் படுக்கைவாய்க்கா
தெதுவாகத் தாய்தந்தை யிருப்போர்மூன்னேர்
பிதுவிலகி யிருப்பதற்கு நேரமாமோ. (159)

மலடி மார்க்கம்.

நேரமது வீடிந்தபின்பு நேரேநிற்க
நிமிஷமது கவலையில்லா நேரமில்லை
தூரமது போவமென்றுற் தூத்துவானே
தும்பிமுகன் பெருச்சாளி சுரண்டினுப்போல்
காரமது மேலிடுமே மலடிமார்க்கம்
காட்டுகிறேன் பெண்ணணங்கு சரீரங்கள்லு
வீரமது யென்னசெய்யுஞ் சும்மாதூங்கும்
விதைவையுடன் கூடினுப்போல் வேலையீதே. (160)

வேலையித வென்றுசொல்வாள் அழுதாப்போலே
வேறுமுக மேகிடுவாள் யெனக்கேனென்பாள்
காலையிலு மாலையிலும் ராக்காலத்தும்
கடிதடத்தின் தெரிசனமே தடையில்லாதே
சேலையிலு மினுக்கியிடுஞ் சடமேகல்லு
சிலையதனைப் போயனைத்த சுகம்போலய்யா
பாலதனில் மட்டிப்பா லுண்டாப்போலும்
பசிக்கிஅன்ன முண்ணவும் பழையதாச்சே. (161)

பழையதாய்ப் போனபின்பு தள்ளிவைப்பார்
பக்குவங்கள் தப்பினதால் நரைத்தபின்பு
இழையதாய்க் கூடிருந்த சேர்க்கையாலே
கிழவியென்று யெண்ணுமற் கிழவரோடு
மழையதாய்ப் பேச்சிழுத்து உலகமார்க்கம்
வாயுறவு கொண்டாடிக் கூடுவார்கள்
இழையதாய்ச் சம்பந்த மானபின்பு
கிழவிமக்கள் பிள்ளைகளைத் தூக்குவாளே. (162)

பிள்ளைகளைத் தூக்குதற்கு மகள்வீடேகி
பெருந்தூர மேகிடுவாள் தனியேவைப்பாள்
பிள்ளைகளின் சம்பந்த மானபின்பு
பெருங்குடும்ப மெனக்கென்ன வென்றுசொல்வாள்
பிள்ளைகளைப் பெருமுன்னே தனதேபாவாள்
பெற்றபிள்ளை அன்னமுண்டாற் சரியேயாவாள்
பிள்ளைகளை யேவளர்க்கத் தூக்கநேரம்
பிசகாமல் நின்றிடுவா ளேசுவாளே. (163)

ஏசுவாள் சுகதுக்கம் நமக்கேயென்றுள்
இச்சுகமே போதுமக்கு யெனக்கேனென்பாள்
வீசுவாள் சாஸ்திரத்தி னுண்மைபோல
வீணிலே நானிருக்கேன் போம்பீரென்பாள்
பேசுவா ளவள்புருடன் மட்டிமட்டி
பெருமூச்சு தானும்விட்டு எழுந்திருந்து
கூசியே அருகில்நின்று வார்த்தைசொல்வான்
கொடுமையுள்ள பெண்ணணங்கு மிஞ்சுவாளே. (164)

மிஞ்சினே னுமைமணந்த விசேஷத்தாலே
மேலான சுகரியங்க ளெல்லாங்கண்டேன்
தஞ்சினேன் கூலியன்றிப் படுக்கைகொண்டேன்
சுடுகாடு போலானேன் சுகமதானேன்
அஞ்சினேன் சூக்ஷுமது காணுதாலே
அங்கமதில் நெஞ்சுருப்பள்ளமேடை
கெஞ்சினனதையறிந்து பிளந்தவென்றேன்
கேடில்லா திருந்ததுதான் ஞானமென்னே. (165)

என்னவென்று நாமிருந்தால் பின்னேவந்து
ஏங்கவைக்கு தோர்நிலவு யென்னசொல்லும்
முன்னேதான் சொன்னபெண்ணைத் தள்ளிவைத்தால்
மோசம்வருங் காயப்பெண் ணிரவில்வந்தே
என்னேடீ யெண்ணிக்கை நிலவுமேலே
எழுந்தோடி வந்துவிடும் கம்மூக்குள்ளே
அன்னேதா னென்னுலுந் திரும்பிவந்து
அழுதவளு மடிபிடித்துத் தொங்குவாளே. (166)

தொங்குவாள் வையகத்துப் பெண்ணில்மாந்தர்
சொக்குவார் பொருளில்லார் பெண்ணின்மேலே
தங்குவார் பொருளிருந்தா லடிமைசெய்வார்
தனகணவன் கோபமெல்லாந் தாங்கியேங்கி
பொங்குவார் பொருளில்லாப் புருஷராலே
புலிவேடந் தானெடுத்தா லழுதகிற்பார்
மங்குவா ரிப்படியே புருஷன்பெண்டீர்
மாமலேயி லிருந்தாலுங் கூடித்தானே. (167)

கூடினர் பெண்களுமே பெண்ணின்கூத்து
குமரகுரு பரன்விட்டி லிதுதானப்பா
பார்டினு ரிப்படியே யதனைக்கண்டு
பாதேசி வேடமிட்டார் மலைமேல்நின்றார்
தேடினர் சிவனுமையு மூத்தார்தானும்
திருமாலும் நான்முகனுந் தேடிக்கண்டார்
வாடினர் சரஸ்பதியு மாலின்தேவி
மாதீப லெட்சுமியும் காடினாளே. (168)

காடினர் மலைமீதி லீருக்கக்கண்டார்
கங்கைவள்ளி தெய்வானை வெட்கின்றாள்
ஓடினர் யானைவள்ளி புருஷன்தானே
ஓடிதே யென்றுசொன்னர் உலகவாழ்வே
சாடினர் யெங்களைப்போல் நீயுஞ்செய்தாய்
தட்வாணி நீயல்ல யெம்மைப்போல
வாடினாய் நீயிருவே ருங்கள்போறும்
மதிவிட்டோம் பிள்ளைகளை வித்தாற்போலே. (169)

போலவே வேலையிட்டார் விற்றையிட்டார்
புழுக்கூடு சாவதற்கே சனனந்தொட்டார்
ஏலவே நாமள்வந்தோ மித்தமார்க்கம்
எப்போதும் நாமழியச் செய்துவைத்தோம்
சாலவே சங்கடமே லேசாய்ச்செய்தோம்
தம்மையுமே நாமறிந்து சிசுவைச்செய்தோம்
காலமே வந்ததறிர் மறைத்தஞாயம்
கதிரில்லாச் சூரியனை மறைத்ததேனே. (170)

ஏனைதான் கம்முடலும் நாமழிந்து
பிருதயத்தைப் புண்ணாக்கி விற்றைவிட்டு
கூனைதா னுகியுள்ள ரத்தக்கெட்டு
குடிசையுள்ளே நாம்படுத்துத் தூங்குப்போல்
நானைநா மெல்லோரும் பிரண்டுருண்டு
நாயகியாள் தன்னிடுப்பில் விழுந்தசூரு
தேனைதா னெடுத்துண்ணக் குழவிகொட்டத்
தெய்வமே யென்றழுத துன்பத்தானே. (171

துன்பமே மனத்துன்பம் மேலேஏறும்
தொக்குடற் காய்ச்சடலம் புண்ணுப்வேகும்
இன்பமே யித்தனைக்குந் தீயிட்டாப்போல்
யிவள்போலே தானிருந்து புண்ணும்மோகம்
கம்பமோ வதுநில்லா நம்மைக்கொல்லும்
காயவுட லுண்டுவிட வந்தாள்மாரி
தம்பமோ மோகசுக மெந்தமட்டோ
தாரித்திரம் வந்தபின்பு சினேகமுண்டோ. (172)

உண்டுஉண்டு பொருளிருந்தா லெல்லாமுண்டு
ஊருண்டு காடுண்டு மலைதானுண்டு
தொண்டுண்டு தீபவொளி மேடையுண்டு
சுடுகாடு போமளவு மேன்மையுண்டு
தண்டுண்டு பொருளில்லாற் கென்னவுண்டு
சமத்தென்ன வாயென்ன சவுடாலென்ன
கண்டுண்டு கேட்பதென்ன தோணுதென்ன
கர்மமென்று சொல்லிடுதல் யெதனலென்னே. (173)

வாலை.

என்னவென்றால் நம்காஷ பீஷமத்தி
யிருக்கின்ற கொடியொன்று கயறைப்போல
சொன்னதிதில் முடிச்சொன்று முடிச்சின்காமம்
தயர்வினுக்கு மனதலைக்குந் தோணிபோல
அன்னசத்து அங்கிருக்கு முடிச்செலும்பே
அவ்வெலும்பு மேடாகும் வுண்னிடுப்பே
பின்னசத்து பெண்ணிடுப்பிற் மூன்பாகத்தில்
பெருவரையே காள்நடுவிற் கேணிதானே. (174)

கேணியதி லாண்முடிச்சு விழுகுத்தள்ளும்
இருகிரென வேமயங்குஞ் சுழலுங்கண்கள்
பாணியது நாவாளும் முடிச்சுநோகும்
பாதமது யேகாது படுக்கச்செய்யும்
காணியது வேவிலகும் மல்லாக்தோர்கள்
கடுங்காம லேயெழுந்து நடந்துபோவார்
சாணியது விட்டாக்கால் நீரேசிக்தி
தண்டுரம் பேகாது சாய்கைதானே. (175)

சாய்கைதான் காமிரண்டு பேருஞ்செய்த
சங்கர்ப்பம் பிள்ளையென உருவேயாகி
மாய்கைதான் பிறக்தவளின் மடியிருக்க
மனையாட்டி தான்படுத்த வண்மையாகா
காய்கைதான் விரற்பொக்கிற் சர்ப்பக்தீண்ட
காயழுத வாரேபோல் மனையாள்ஞாயம்
கூகூவென் றழுதபிள்ளை தொட்டிலாட்டிக்
குமரிசத்தம் போட்டசைத்து ஆட்டும்போதே. (176)

ஆட்டுவாள் காம்விலகித் தூரநிற்போம்
அசைக்தாடுக் தொட்டியதி லழும்போதெல்லாம்
தீட்டுவாள் கண்ணீரைப் பாட்டேசொல்லி
செத்தார்போல் தூங்கும்வரை ஆட்டிக்கொள்வாள்
காட்டுவாள் காசம்நினைக்கக் குழக்தைசத்தூரு
காம்நினைக்க நடுநிற்கும் தூரநிற்பாள்
மூட்டுவாள் குழக்தைதனைப் பாராமற்றான்
மூடமா யானுயே தூரநில்லே. (177)

நில்லென்று சொன்னதுவும் ஞாயக்தானே
நிமிஷமுற வாடுவரே பின்னுற்தானே
மல்லென்று வாதைவருங் குழக்தைபின்பு
மலடியே யானுலுக் தன்பமுண்டு
வில்லென்று காம்வளையா திருந்தோமானுல்
விதவைபோ லேயிருந்து விருதாவாழ்வு
சொல்லென்றும் கேக்காதே காமநோயே
துணையாகப் பிறந்ததுவும் காமேதானே. (178)

காமென்ன பாடுபட்டுக் தன்பக்தானே
சம்மனவி தன்சுகமுஞ் சுகமோவீணே
ஆமென்ன சொன்னலுங் கூடிவாழ்வ
தரிதாகும் நிற்காதுயின்பக்தாமும்
காமென்ன சிசுக்கள்வந்து சம்மேல்வீழ்க்தால்
கலக்துவிடும் காமென்ன செய்யலாகும்
சாமென்ன காம்நினவு கொள்ளல்தானும்
சங்கர்ப்ப மித்தனைக்கு முலக்தானே. (179)

மூலம்நாம் வழக்கிடவு மூடியுமோபார்
மோகமந்தப் பெண்டீரும் பொருள்போல்ரூபம்
காலமந்தக் காலமெதிர் வந்துதானால்
கண்செவியுந் தூங்காது கருத்துஞ்சொக்கும்
பாலமந்தப் பாதைவழி போகாதார்க்கு
பரதேசி யென்றிடலா மில்லங்கூட
ஞாலமதி லிப்படியே வெகுபேர்நின்ரூர்
நம்குருவுஞ் சீஷனுமாய் வெகுபேர்தானே. (180)

வெகுபேர்க ளிச்சையுண்டு யில்லாருண்டு
மேதினியிற் கபடமாய் விட்டோருண்டு
லெகுவிதே யென்றுசொல்வார் லெகுவேயாகர
வெகுவாகுங் காசில்லார் தாரமில்லார்
கெகுவிதா மண்ணிற்கல் நீக்கலாமா
நீழ்விசும்பில் ராப்பகலும் ஒன்றதாமா
லெகுவிலாப் பசியடங்க மனிதர்நீங்க
நீர்கண்ட எருமைபன்றி நின்றிடாதே. (181)

நிற்குமோ சொல்லிடுவீர் நின்றபேரே
நின்றவரார் மதிகதிரை தேரிற்பாரீர்
நிற்குமோ சோடியன்றி ஒன்றேயுண்டோ
தேர்மலையு மண்ணன்றி வாரியன்றி
நிற்குமோ பெண்ணையன்றிப் புருஷன்றி
நிகழ்காலம் விழைவிக்கும் பிள்ளையிச்சை
நிற்குமோ காம்தனியே நின்றுற்காயம்
நில்லாது ஆனதினு லிச்சையாச்சே. (182)

இச்சையென்ன மனத்துன்பஞ் சரீரதுன்பம்
யிதுவென்ன மலசலங்க ளிடையிற்துன்பம்
கச்சையென்ன உடையினெடு உணவுதுன்பம்
காதென்ன பார்வையொடு தன்பமாச்சு
பச்சையென்ன கொடிநரம்பு ரத்தக்கூற்றைப்
பார்த்தல்லோ யானிருந்தேன் பலகாள்வீணில்
கச்சையென்ன மங்கையின்னர் உலகம்வீடு
கடல்மலைக ளேறியுந்தா னிறைபோதாதே. (183)

போதாது யென்னுடனே புத்திரரோடு
புத்திரர்கள் சம்பிரதாயம் யிரைபோதாது
வாதாது மாபலியுஞ் சூரபத்மன்
வர்த்தமே ஆகாரம் போதாதென்றுன்
ஏதேது யிப்படியே யிருந்தார்மேலோர்
யிமைவிழியாத் தூக்கத்தி லிருந்தபோதும்
சாகாது வாழ்வமென்ற மூனிவரோடு
தன்னுடலைப் போட்டிருளள் தெரிந்திலாரே. (184)

தெரிந்திடுவார் காயவுயிர் அறியாமட்டி
சீரழியச் செய்தவர்கள் மெண்ணமங்கை
மரிந்திலா மங்கையரா கம்மைக்கார்ப்பார்
மறைவேதப் பிரமனவன் சிருஷ்டிபோலே
அறிந்திலா மங்கையரும் வளர்த்தார்சிருஷ்டி
ஆனதினுற் பெண்பிரமன் சரியேயாகும்
எறிந்திலாச் சந்திரன்போ லுதவிசெய்து
இருள்நீக்கிப் பெண்ணுடனே தள்ளல்போலே. (185)

போலவே நம்துணையாய் உதவிபோலும்
பொங்குதிரை யலைபோலே வழத்தார்மின்னுர்
ஏலவே புற்பூண்டு கொடிமரங்கள்
ஏதவஷ்தை குடும்பமுண்டோ பழம்சரயுண்டு
சாலவே நாய்நரிகள் குஞ்சுக்காக
தாபத்தம் உண்டிடுமோ யேதுங்காணும்
மாளவே வைப்பதர்க்கா யிச்சீவர்க்கு
மற்றுள்ள சீவர்கட்கு யெதுங்காணுமே. (186)

காணுமே மேல்மதியு முடுக்களுமும்
கதிரவனுக் தேடவில்லை யிரையைத்தானே
ஊணுமே யெங்களன்றிக் கதவுபூட்டு
ஒருசீவர் வைக்கவில்லை துன்பமில்லை
நாணுமே வைக்காட்டா லெங்களுக்கே
நாயகமே கைலையதிற் பூட்டுண்டோசொல்
வீணுவே யாகாத பூட்டுண்டாகில்
விதலைபிள்ளை போன வீர்தையாமே. (187)

ஆமிக்த விதத்தாலே சலனமெல்லாம்
ஆகிடிலோ திரிகால ஞர்த்தம்போக
காமிக்த வகைதானே உலகத்தானே
கல்லவர்க ளாவதெப்போ சலனந்தீர்த்து
காமிக்த மனதாலே பட்டோரெல்லாம்
கடினமென்று போனாரே ஆகாதல்ல
தாமிக்தப் படிசொன்ன லென்னவாகும்
தம்பியர்க ளாவதெப்போ சாஸ்திரம்பாரே. (188)

தெய்வந்தோணல்.

பாரப்பா பேய்போலே கதறிக்கொண்டு
பசப்பியே திரிவதனு லென்னவுண்டு
காரப்பா சொல்வதினுல் வருவதேது
நமன்வருவான் திரிகாலம் வருமோசொல்லு
கூஷ்திரங்க ளற்றநமன் கோழையற்று
குருவாக நாமறிய வேலிசொன்னேம்
வாஷ்திரங்கள் பேசாதீர் லேசாய்வரும்
வர்தாக்கால் நாம்வருவோம் மறந்துவாரீர். (189)

மறந்துவா வென்றீரே புசுண்டகாதா
மனக்கண்ணைக் காட்டுமது ஞானக்கண்ணை
திறந்துவா வெனவிளக்கு மூக்காலந்தான்
தெரிந்துவிடி லக்கண்ணைத் தெய்வந்தோணும்
சார்ந்துமே மேற்பொழியுந் தொன்றுதொட்டு
தொல்பவங்கள் தோற்றிவிடும் மறந்ததெல்லாம்
இறந்துமே போனவுடல் யெல்லாஞ்சொல்லும்
எல்லியில்லை சொல்லுதற்கு யெல்லியேதே (190)

எல்லிபில்லாப் பேரொளியே யெதிரில்லாதே
ஏகமன மானதிது யெவரும்பார்க்க
தொல்லியதி லகப்பட்டுப் போனபேரை
சூரியனே ராகதுவுஞ் சூழ்ந்தார்போல
வல்லியென்றுல் நாம்காணக் கொடுப்பதாரு
மக்களென்றுற் தந்தையிடம் வலுத்திருக்கும்
இல்லியென்றுல் வாய்மூட உதடுக்கூடில்
இழுக்குமடா பேசாமை மவுனங்கேளே. (191)

பேசா மோனம்.

தேளென்ரூர் வசிட்டருடன் புசண்டர்தானே
கிருபைகொண்டு சொல்லுகிறு நிருவருக்தான்
பாழென்ரூர் வாய்மூடல் பேசாமோனம்
பரதேசி வேடமென்ன தவசிக்கேதான்
ஊழென்ரூர் புத்திதனே யறியாமாந்தர்
உறமில்லாச் சண்டாளர் ஞாயமில்லார்
மாளென்ரூர் கருவிகளைக் கொன்ரூர்சும்மா
மவுனமா ஈக்கசைத்தால் மரணமாகாதே. (192)

ஆமப்பா சுட்டிளட்டி பத்தியமிட்டார்
அலிவார்கள் கமண்டலமும் அரைஞாலோடு
காமப்பா ரீத்தார்கள் ஒட்டியாணம்
கப்பல்கட்டுங் கயரதுபோல் யோகப்பட்டை
தாமப்பா கொண்டுயிந்த யோகஞ்செய்தால்
சாதிக்கு மோமனது வாதிக்குக்தான்
ஊமப்பா மனம்மட்டி அறிவுமட்டி
உலுத்தர்களு மிப்படிமூக் கைப்பார்த்தாரே. (193)

பிரண நாட்டம் பார்வை விபரம்.

மூக்கைப்பார்த் தவர்கோடி மரணமானூர்
மூனிராக்கை யேற்றினவர் கோடிபேராம்
நோக்கைப்பார்த் தேறினவர் கோடியாகும்
நுனியேறு மானிடர்கள் கோடாகோடி
தாக்கிப்பா ராமனுக்கள் யேறுவாரோ
சமுத்திரத்திற் சென்றவர்கள் ஆழம்பாரீர்
ஆக்கைபா ருடலுள்ளே பிரானநாட்டம்
ஆகையினற் சொல்லிவிட்டேன் அறிவுள்ளோர்க்கே ()

அறிவுள்ளோர் சிவநில்லை பிரானநாட்டம்
அய்யய்யோ உயிர்மூச்சு சிவன்தானே
தெறியுள்ளார் வாசியென்றுக் தேசியென்றும்
தேர்கடத்தும் பொம்மைகட்டக் குதிரையென்றும்
மறிவுள்ளார் கலியென்றும் பரிதானென்றும்
மரணமதை உண்டவர்கள் ஆன்மாவென்றும்
செறிவுள்ளார் கண்டுகொழல் மனந்தானென்றும்
சிவனதைப் பார்த்திருப்பார் மனதுள்ளோரே. (195)

மனமில்லா ரறிவில்லார் மரணமான்பர்
மனதையே கொண்டாடுஞ் சனனரூபி
சினமுள்ளார் மனதன்றித் தேகமில்லை
சிறுபிள்ளை போலிருக்கு! மனப்புலன்தான்
கனமுள்ளோர் மனதாலே மனந்தான்மாய்கை
கண்டூர மெவ்வளவோ மனந்தான்ரூபம்
இனமுள்ளோ ருள்ளறிவு வெகுதூரத்தான்
இதம்ஞான யோகமது மிதற்கொவ்வாதே. (196)

ஒவ்வாது ஞானமென்ன யோகமென்ன
உறவான கிரிகையொடு சரிதையென்ன
தவ்வாத முத்தியென்ன மோச்சமென்ன
சாஸ்திரங்க ளாவதென்ன வருவதென்ன
இவ்வாறு சொல்லிவைத்தார் பரிபாஷைக்கே
இத்தனையுஞ் சித்தர்கள்தான் செய்தகூத்து
ஒவ்வாது வேதவியா சன்றன்வாக்கு
உயர்வேதங் கோப்பிறட்டிச் செய்தான்பாரே. (197)

பிராமணர் சேய்கை.

ஆமிந்தச் சரிதையொடு மூத்திமோக்ஷம்
அறைந்தார்கள் பாப்பாரன்றி மற்றுமெல்லாம்
நாமிந்த அய்யமா ரேட்டைப்பார்த்து
நடுங்காமல் நம்மள்வர்க்க மேட்டைப்பாரு
ஓமிந்த அச்சாங்கள் பொதுவேயாகும்
உலகத்தில் மூத்திமோச்சம் நமக்கேயல்லால்
தாமிந்தப் பொய்க்குருவும் பூநூலிட்டு
தாரித்திரம் போக்குதற்காசா னல்லபாரே. (198)

நாலு ஜாதி.

அல்லவே அய்யமாரைப் பிராமணனென்றும்
அடித்தமுழுகுஞ் சத்திரியன் ராசனென்றும்
மெல்லவே பேச்சிடுதல் வியாபாரங்கள்
விரித்தவரை வைசியரென் றிகழ்ந்தாரய்யா
கெல்லவே மற்றுமுரைச் சூத்திராக்கி
கெம்பீரஞ் செய்தாரே அய்யமாரும்
இல்லவே அய்யமார் அய்யராகும்
இருநெஞ்சி லடுவேதா னய்யங்கார்சொல்லே. (199)

பலவகை ஜாதி.

சொல்லவே முன்குடிமிச் சோழியாகும்
கர்வீசை யுள்ளதொரு ராயமாரும்
கொல்லவே பிணஞ்சுமக்குஞ் சவண்டியய்யர்
குலவர்க்கஞ் சொல்லுகிறேன் மற்றேரெல்லாம்
அல்லவே நாயக்கர் சேர்வைகாரர்
அம்பட்ட நாவிதனே காலிவண்ணன்
மெல்லவே சக்கிலியன் தோட்டிதானும்
வேடிக்கைத் தேவடியாள் தாசிமாரே. (200)

மாரென்ன ரெட்டிதொட்டி நாயுடுகார்
மரவரென்ன தேவமார் துலுக்கர்சாய்பு
கூரென்ன பட்டுநூல் செட்டியார்கள்
குலதர்மம் யிவ்வகையிவ் வாரேயாகும்
நாரென்ன கைக்கோளன் மூதலிமாராம்
நடுவிருந்த சாணரும் நாடாரென்பார்
ஊரென்ன வடுகதமி ழாசாரிக்கே
உலகமடை யிப்படியே அய்யமாரே. (201)

பிராமணர் பாப்பாரல்ல.

அய்யர்களைப் பிராமணரென் றுரைக்கலாமோ
அறுத்தபெண்விட் டில்லாட்டா லவனேபாப்பான்
பய்யத்தான் சொன்னாரோ விதவையாகில்
பாரிலுள்ள மனிதரைப்போ லாகினீர்கள்
மெய்யாகப் பிரமனவன் நிட்டித்தாக்கால்
விதமென்ன முதற்சாதி ஞாயத்தோரே
அய்யாகூ வென்றழுகல் நீசன்தானே
அரைகட்டி நின்றிருந்தார் சூத்திரன்தானே. (202)

சூத்திரனுர் வைசியனுர் சத்திரியனுகும்
தயரில்லாப் பாப்பாராம் அய்யமாரும்
காத்திரனுர் நாமுழுக நீரேதிங்க
கலப்பைதொட மாட்டாத சாதியாரே
பாத்திரத்தி லுபாதான மெடுக்கத்தானே
பரிபாஷை சொல்லிவைத்தீர் பிச்சைக்காக
சேத்திரனுர் தங்களிடம் பூமிவிட்டு
தினமிடை யாமலுண்தான் தெருவந்தீரே. (203)

வந்தீரே பிச்சைதனைப் பூரியென்றீர்
வாய்ப்பேச்சை வேதமென்றி ழிப்பந்தானே
தந்தீரே கும்பிடுமுன் ஆசீர்வாதம்
தானர்த்த மென்னவென்றுல் வந்தேனென்னல்
முந்தீரே சண்டிமுகற் கலப்பைமார்க்கம்
முறைதெரியா மானிடரே நில்லுநில்லும்
பந்தீரே ஈமிருக்க யிழவுக்காகா
பாணிமுதற் தாகத்துக் கிடஞ்சலாச்சே. (204)

ஆகவே யுங்கள்குல வழக்கஞாயம்
அரைகிறேன் முத்தோரை அடேயென்பீர்
சாகவே மனைப்புருஷன் றனைவெளியிற்றள்ளி
தங்கச்சி பெண்சாதி யுள்ளேநிற்பார்
ஏகவே போனலும் மவன்தன்வீட்டை
யிருக்கையிலே அவனைவெளி யேற்றிவிட்டீர்
மாகவே அச்சாம்பல் புருஷனல்லோ
மனையாட்டி யெச்சாம்பல் புருஷசாம்பலாமே. (205)

சாம்பலாய்ப் போகுமுன்னே சடத்தைத்தள்ளி
தர்மமோ புரோகிதர்கள் அருசியுண்ண
சாம்பலே யாகுமட்டுங் கருமாதிச்சோர்
தன்னினைகள் சந்ததிகள் முழுதுந்தானே
சாம்பலே யுங்கள்தவம் பிச்சையுண்டோ
தர்மமோ தர்மமிட்டால் வந்துண்பீர்கள்
சாம்பலிலே தர்மச்சோர் தின்றுவிட்டு
சாதியுட னேகூடி வாழலாமோ. (206)

யோகம் வாழ்வு.

வாழலா மூக்குமூனி விணுத்தண்டு
வகையாகப் பார்த்தாக்கா லெல்லாமுண்டு
பாழேதான் போகாமற் சமாதிகூடும்
பரிபாஷை யிதுவல்ல புருவமத்தி
ஆழலா மேல்வாச லறிந்துகொண்டால்
அய்யமொன்று மெண்ணீர் சொல்லிவந்தேன்
தாழலா மிதுவிட்டா லெல்லாம்போச்சு
சாதித்துத் தேறிவாக் கூறினேனே. (207)

டோம்க்குரு.

கூறினே மென்றுசொல்லிப் பரியாசங்கள்
கொள்ளுபவ ரன்னமின்றி யிரக்தண்பார்கள்
தேறினே மென்றுசொல்லி வெளியேவந்தோர்
தேறினவ ரல்லவர் தேறுர்தேறுர்
மாறினே மாணுக்கர் பின்னேகின்று
வசனிக்கும் பெண்மாய்கை மடியில்கின்று
வாறினே மார்கொண்டு சாணமிட்டு
வையகத்து யிருளகல வொழியிற்சிக்கே. (208)

சிக்கினேம் ஒழியதனிற் நீபசோதி
திருவேடங் காணவென்ருல் மனதைக்காரும்
புக்கினேம் புருவமய்யம் வாசிகொண்டு
பூரகமுஞ் செய்யாமல் ரோக்சத்தாலே
மூக்கினேம் மூக்குமுனை யிருத்தவாசி
மூக்கினடி புருவமத்தி யுருவிப்பாய்ந்து
வெக்கினே மனமசக்து ரோசங்கெட்டு
வேரற்ற மாம்போலே வெளிதானேமே. (209)

வெளியாகும் பஞ்சபுலன் கருவியெல்லாம்
விடாதீர்க ளத்தரங்க மேலோர்போல
தெளிவாகும் கருவிகளின் கருவிதிற்கும்
சீரணிக்கும் அக்கருவி தெளிக்தகூறை
பொழிவாகும் அபூர்தமெனத் தேருவிர்கள்
பொல்லாக்கு போயொளியுர் தானுப்தானே
அழிவாகு மிம்மார்க்கம் மனதிலுலே
ஆகாது அறிவான கண்ணுற்பாரே. (210)

10 வாசல் ஞானம் அறிவானகண்.

அறிவான கண்ணைதன்ருல் புருவவாசி
அங்கத்திற் பம்பரம்போ லாடினுக்கால்
முறிவான பூட்டுடைத்துப் புருவமத்தி
மூக்கோடும் வாசியது தெற்றியேறில்
தெறிவான யிவ்வாசில் பத்தாம்வாசல்
சிறுவாசல் அறிவாசல் யோகவாசல்
சுறிபான மணிவாசல் குருவின்வாசல்
கோபுரவா சல்தெரிவா யானுற்பாரே. (211)

ஆனலே யொழிகாணும் புலன்கள்தோணும்
ஆகாத கருவிகளு மடங்கிப்போகும்
போனலே கற்பூர வாசம்வீசும்
பொங்குதிரை மேலெழும்பு மாய்கைபோகும்
வானலே யேற்றிவிடும் புருவமத்தி
வாசிகொண்டு மீட்டிவிடும் காசிமத்தி
தானலே யாகிடலாந் திறக்கப்பூட்டத்
தந்திரங்கள் வேணுமப்போ சரங்கள்பாரே. (212)

வேணுமே மயிர்ப்பாலம் நெருப்பாறேக
மெய்வதுவில் ஊசிமுனை வாசியேறத்
தோணுமே காமிருந்த யிடங்கள்தானும்
தொந்தோமென் றுடிடுமே சுலபமாகக்
காணுமே தீபவொழி கருத்துங்கண்ணும்
கள்களுசாக் கொண்டதுபோல் மயக்கங்காணும்
வீணுமே யாகாது மயக்கம்வேண்டாம்
வேதாந்தங் கண்டிடலாம் வாசிபாரே. (213)

கண்டிடலாம் புருவமத்தி வாசலோரம்
கண்ணிரண்டுங் கூடிவிடும் ஞானக்கண்ணும்
உண்டிடலாம் ஞானரசங் கண்ணிற்தானே
உட்புகுந்து மேலேறும் வாசல்தாண்டும்
தெண்டுடலே கமண்டலமுங் குகையும்வேண்டாம்
சிறுகற்பம் அறுசுவையுந் தள்ளவேண்டாம்
மண்டுடனே கூடிடுவீர் ரசமேஉண்பீர்
வாருங்கள் தேனமூர்த்தம் உச்சிநீரே. (214)

ஞானரச விபரம்.

நீரேதான் வருமென்றார் முன்னேரெல்லாம்
நிகழ்காலம் உச்சிரச மிறங்குமையா
காரான மேகமது யிறங்குமாப்போல்
கண்மூக்கு மத்தியிலே யிறங்கும்பாரு
சீரேதான் அண்ணாக்கு வழியிறங்கும்
தினந்தினந்தா னுண்டொன்று ஒழுகிப்பாயும்
பாரேநீ காவில்விழுக் காரித்தள்ளும்
பங்குனியில் வெயிலடித்த வாறுபோலே. (215)

போலவே தப்பிடவே யெல்லாம்வீழும்
பொங்கியது பொங்கியது வழியும்பாரு
சாலவே யிறங்கிவிடுங் கபாலமெல்லாம்
தானிருந்த மூழையின்றன் கசடுபோகும்
ஞாலமே லிப்படியே யோகதுன்பம்
கம்கோழை உச்சிநீ ரிறங்கிவிட்டால்
பாலமே தாண்டிடலாம் சோதிகாணும்
பக்குவத்திற் சூரியனுர் கோடிதானே. (216)

குருகிருபை யோகம்.

காணுங்காண் ஞானவொழி கோடிசூரியன்
கதிர்விட்டுத் தானெறியுந் தூரந்தோற்றும்
பூணுங்காண் உச்சியொழி புருவப்பூட்டு
பூட்டுடைக்க வல்லவரே வாருங்காணும்
தோணுங்கா னுங்களுக்குத் தூரதிஷ்டி
சொற்பலிக்கும் திரிகால வர்த்தந்தோற்றும்
ஈணுங்காண் கர்மவினை தர்மமாகும்
ஈசைமூப்பு சாக்காடுங் காணலாமே. (217)

காணலா மெத்தனையோ கோடாகோடி
கண்ணுக்குள் ளேதெரியுங் கிருஷ்ணனைப்போல்
தோணலா மெதிர்நிற்கும் பாவனைபோல்
தயரெல்லா மாற்றிவிடுஞ் சுழினைவாசல்
வீணல்லால் மற்றென்றிற் காண்பதுண்டோ
மிஞ்சினவர் சொற்கேட்ட வித்தைபோல
ஈணில்லா வில்லெறிந்த வீரன்போல
ஈமறியத் தன்மைவிட்டு ஈடிஞலே. (218)

ஆணுக்கா லின்னமுமே ஈக்கிங்கிழே
அடிகாக்கு மூலவரை பிஷமட்டும்
ஈனுக்கா லாதியந்தம் பிஷம்காக்கு
ஈடுகாடி யிதுவழியே வாசியோடும்
மானுக்கால் சொல்லுகிறேன் மூச்சையோடும்
வரும்வாசி யாடிஞல்மூச் சாடிநிற்கும்
தானுகக் கொட்டாதீர் மேலேயேற்றும்
தம்பியரே புருவமத்தி வாசிபோரே. (219)

பாரீரோ ஆறுமுகமாய் நின்றமத்தி
பார்கெற்றி மூக்குமத்தி முகத்தின்மத்தி
வாரீரோ புருவமத்தி கண்ணின்மத்தி
மக்கரே நிமைமத்தி செவியின்மத்தி
கோரீயே மூச்சுமூட்டி யிறங்குமத்தி
குழுறியது யிருவாசல் பிரியுமத்தி
தாரீரோ உம்மனதும் நீருங்கூடத்
தாக்கினார் புருவமத்தி யேறிப்பாரே. (220)

வறுவது லெகுமுறைகள் கோடாகோடி
இவ்விதத்தான் பத்தியமு மில்லையில்லை
கேறுவது கடினமல்ல மனதேசார்த்தால்
நீர்கூடத் தொடர்ந்திடலாம் கடினமில்லை
தேறுவது லெகுவல்ல சூச்சத்தாலே
செங்கனலைத் தூண்டிவிடச் செங்கண்ணுதும்
மாறுவது வக்காக்கால் சாஸ்திரத்தூண்டும்
மக்களே பழுக்குமுன்னே வாசிபாரே. (221)

பழுத்தபின்பு எமகாலன் கருதுவான்பார்
பரிவாகி யேற்றிவிக்கத் தூண்டிவிக்க
இழுத்தபோ தேவருவோ மேலேதானே
ஏற்றிவிக்கத் தள்ளிவிடும் கர்மைக்கூடக்
கொழுத்தபோ கழுத்திலைக்கும் உற்றார்போலக்
குருகுலமும் வேலிபிதே கூவவேண்டாம்
அழுத்தபோ தல்லலோ தனையுற்வேணும்
ஆர்வேணு நீர்போது மறிவாற்பாரே. (222)

அறிவாற்பா ரதைவிட்டு விடாதேகர்மம்
அதுதானே கர்மமென்பார் அறிவைவிட்டால்
தெரிவாற்பார் தெளிவுகொண்டு அறிவாற்சித்தை
தேகநில போகமுறை சிதறவேண்டாம்
குறிபால்பார் அண்ணாக்கின் மேலேஉச்சி
கூர்தலைபே காக்குவழி சித்திவாசல்
தெரிபாற்பார் புருவமத்தி வாசலுண்டு
நீட்டிவிடு உள்ளத்தவார் நிற்குமுட்டே. (223)

பூட்டுத்திறக்க

பூட்டதனைத் திறக்கவென்ரு ல் விழிமேல்நீத்தாய்
பொய்யல்ல கண்ணிமையம் புருவத்தாக்கு
ஓட்டதனில் வாசியென்ற மூச்சதன்னை
ஊடுருவப் பாயுமடா மேலேகோக்கில்
வீட்டதனைத் திறப்பதற்கு வாசிபாரு
மெய்யதனைச் சமமணமே சேருகோரய்
கூட்டதனைக் குத்தவைத்து உடலாடாமல்
குவிந்தமனம் நிமிர்ந்திருந்து உடலிப்பாரே. (224)

யோக சாதனம்

உடல்கோரய் கெஞ்சுகண்டந் தலைகண்மூக்கு
உயர்க்திருந்து நேர்நிமிர்ந்து உட்கார்ந்தேதான்
கடல்கொண்டு சொரிவதுபோல் வாசியேற்றம்
கருகாடி உயிர்நாடி சீவநாடி
அடல்கொண்டு யேறிவிடு மூலநாடி
அரைமூலத் தானிருந்து யெழும்புமூச்சு
முடல்கொண்டு பாராதே காலிமாலே
கொண்டுபசி யாறுமுன்னே பாருபாரே. (225)

பாருபார் மூன்னெலும்பு முதலின்மூலம்
பரிந்தோடி வாசிவரும் பையப்பைய
ஆருபார் வாரதவும் காமேதானே
அரையிடுப்பு முதுகுகூடி மத்தியேறும்
தேருவார் பார்த்துவர முழுத்தானேறும்
தேகமுது நடுநாடி தேனியேறும்
காருபா ரதைநிதமுங் காலிமாலே
கண்டுகொண்டு ஏறிவரக் கலலாம்பாரே. (226)

நாறுமே மூலகனல் மேலேவாசி
இரண்டொன்ருய்க் கூடியது நடுவேகின்று
மீறுமே முடிச்செலும்பைப் பத்திகின்று
மேனியெல்லா மோடாது நடுவேயோடும்
வாறுமே மேலெழுப்பி நினைவுமேலே
வாய்பொத்தி அச்சமயம் பிடரியேறும்
சீறுமே மேலேறக் கள்ளும்பின்னல்
திரும்பாமல் நாக்கின்வழி சாருந்தானே. (227)

சாருமூன்றி நாக்கின்வழி தாண்டியப்பால்
சங்கின்வழி தொண்டையதைத் தாண்டுந்தாண்டும்.
நீறுமிந்த வழிவாவுங் கண்டந்தாண்டி
நேர்வழியே அண்ணாக்குப் பாதைபோகும்
சேருமிந்த அண்ணாக்கு உச்சிவாசல்
தீபவொழி கண்டிடலாங் கம்பந்தோணும்
கூருமிந்தச் சாஸ்திரத்திற் பாடுபட்டால்
கொங்கணவன் போலாக வாழுவீரே. (228)

வாழுவா ரெங்கோப்போ லெல்லோருந்தான்
மண்வெட்டி கோடாலி யிதற்குவேண்டாம்
கேளுநீ சொல்லறிந்து குண்டுக்கல்லி
கிழிஞ்சிலெனப் பொடியாக்கும் உழியைப்போல
ஆழுநீர் பூட்டுடைக்க மேலவாசல்
அங்கத்திற் கண்திறக்க ஞானக்கண்ணும்
தாழுவீ ராகாமல் மூட்டிப்பாரும்
சத்தியே யென்கிளியே சாற்றினேனே. (229)

சாற்றினே னென்குருவின் கடாச்சத்தாலே
தள்ளினேன் பாவகர்மம் தவசினாலே
போற்றினே னதுவறிந்து யென்குருவும்
பூரித்துச் சொன்னாரே அருளாற்றானும்
ஊற்றினேன் முன்னுளுங் களுக்குச்சொன்னேன்
உத்தமர்கள் தங்களுக்குத் தோணச்சொன்னேன்
ஏற்றினேன் கர்மதர்மம் யாருங்காண
யெப்போதும் பார்த்தறியச் சொன்னேன்னானே. (230)

சொன்னதினு லாவதென்ன பார்க்கவேணும்
தொன்றுதொட்டுச் சிகவினிலே காணவேணும்
பின்னதனற் கண்டுகொள்வார் குருவில்லாமல்
பெருங்காடாய்த் தோணுமது யாருக்குத்தான்
அன்னசலவ காணுதல்போற் குருவாம்சாய்கை
ஊடுத்துவரு மேலேதான் குருவாம்வாலி
சொன்னமொழி கேட்டிருநீ உபதேசிப்பாள்
சோம்பலியே போக்கிடுவாள் வாலிபாமே. (231)

ஆகுமித்த வாலைமுடி வதனைச்சொல்வாள்
ஆச்சரியங் குருசொல்லார் அருளேசொல்லும்
போகுமித்த மாய்கையது நினைவின்துக்கம்
போகுமல்லாற் சாதனையால் குருவில்லாமல்
ஏகுமந்த அருள்சொல்லப் பிரமஞானி
யில்லாட்டால் யோகியென்றுஞ் செப்பலாகும்
ஓகுமித்த யோகிபலன் வீணேயாகும்
உண்மையன்றி மற்றொன்றுங் காணுதய்யே. (232)

வாலையுபதேசம்.

அய்யய்யா அருள்வாலை தனையறிந்து
ஆகூகூ வென்றழுது அவள்மேற்பாய்ந்தேன்
பய்யவய்யா வென்றுயென்ன மடியில்வைத்தாள்
பய்யாநீ சித்தனெனப் பேருமிட்டாள்
பொய்யாய்நீ யாவாயோ நானிருக்க
புழுக்கூடு மாகிடுமோ யென்னைத்தொட்டு
மெய்யாய்நீ யாகினதால் மடியில்வந்தாய்
மேலென்ன கேளுமினிச் சொல்லுவேனே. (233)

சொல்லிவா யென்னுடைய பதத்தையென்றேன்
சொன்னளே பாவிபழி காரிநீலி
முன்னுலே நீயிருந்த வயதைத்தள்ளி
மோகமிட்டே னின்றதின மினிமேற்றானே
என்னுலே யானமிட்டு மிருப்பேன்கூட்டில்
எழுந்தோடிப் போகும்நா ளுனக்குத்தோற்று
அன்னுளே நானெடுப்பேன் மலையில்வைப்பேன்
ஆர்க்கையிலு நான்கொடேன் சுடவொட்டேனே. (234)

ஒட்டேனே சுட்டிடவும் பிறர்கள்கையில்
ஒப்பிவித்துப் பிறர்சமக்க உற்றுர்கூட
விட்டேது போகேனிவி யென்னுற்கூடா
மேதினியி லீதுகடக்க யென்னலன்றி
கொட்டாவி யிட்டாப்போற் கூத்தன்யாரு
குறையுயிரே நீர்போல வத்தல்தானே
கட்டாவி கட்டுதற்கு உருவேசெப்தோர்
காலினியி லென்னுடலே விடமாட்டேனே. (235)

விடமாட்டே னென்னுயிரை யூபித்தின்
வேணுமென்று சற்பமதைத் திறத்துசொன்னேன்
படமாட்டே னப்பாலுக் தூரதிஷ்டி
பார்வைகொண்டு காணிருப்பேன் மரணமாகேன்
தொடமாட்டே னலதிவல்ல ஞானக்கண்ணின்
சொல்லறித்து தாண்டிடுவேன் தப்புவிப்பேன்
கடமாட்டேன் சடலமதை விடவுமாட்டேன்
கர்த்தனைப்போல் காணிருந்து வாழுவேனே. (236)

வாழுவேன் திரிகாலக் தெரிந்தகொண்டேன்
மாழாமல் நின்றிடுவேன் திரிலோகத்தும்
மீழுவே னினியென்ன பயமெனக்கு
வேதமுதல் காணுனேன் என்னுள்ளானேன்
கோழுவாய்ச் சாவதுவும் பொய்யதாகும்
குரிசையைப் பற்றுதார் மரணமாவார்
தாழுவே யாகாது எக்காலத்தும்
சாவதுவும் பிறப்பதுவு மம்மாற்றுனே. (237)

சாகாம லிருப்பதற்குக் கல்வியுண்டு
சாக்காடு கொள்வதற்கு விபரமுண்டு
லேகமாய் கடப்பதற்குக் காலுமுண்டு
லேழாண்மை செய்வதற்கு மாடுமுண்டு
பாகமா யேறுதற்கு கீச்சுமுண்டு
பரிபாஷை தப்பாது பிழைபோது
காகமாய் மாத்தின்மே லிருப்பேனப்பர
கவலையுட னீபிருகா னுள்நிற்பேனே. (238)

நிற்பேனே யெத்தேத்த காளும்நிற்பேன்
நீபிசகில் கான்பிசகேன் நிலையில்நிற்பேன்
கற்பேனே வேருடனில் வாழமாட்டேன்
காகமதாய் காணிருப்பேன் உலகமாய்த்தும்
சொற்பொருளா மென்னுலுக் தூண்டாச்சோதி
சுகம்பெற்ற நிதைவிட்டு வேறேபோகேன்
அற்பனே கான்போகேன் வேரோர்கூட்டில்
ஆரிருந்து மென்னதுனை நீர்வாழ்வீரே. (239)

வாழ்வீரென் றென்றனையே சொல்லுள்வாலே
வசனித்த சொற்கேட்டு விசனித்தேதான்
கோழ்போலே கானினந்தேன் பொய்போலேதான்
குமரிகன்னத் தட்டிடித்து உச்சிகொட்டி
சேய்போலே யானினைக்க வழர்க்கயென்னைத்
திருடியென்று சொன்னையே யென்னுவென்றுள்
பாய்மேலே படுத்திருக்க வைத்திருக்கப்
பாவியென்ன சொன்னியடா பரமன்பார்த்தே. (240)

பரமன்பார்த் ததிசயித்து யிவளாரென்னப்
பரிந்தோடிப் போனபழி காரிநீலி
பிரமன்பார்க் காமலென்பின் னலேகின்றுள்
பின்னிருத்து மூன்பார்த்துப் பேசினுள்பார்
சிரமம்பார்த் தேயெனது பிள்ளைமுன்னே
சிக்கிக்க வந்தாயோ வென்றுசொல்லி
வர்மம்பார்த் தவள்தன்னைப் பார்த்துவெட்கி
வாயில்மண்ணைப் போட்டதுபோல் மல்லாத்தாரே. (241)

மல்லாத்தா ரேபடுத்தார் வலக்கால்நீட்டி
மருமண்டி போட்டொருகால் வளைத்துநின்றுர்
சொல்லார்த்த யென்தாயே சுடடாவென்றுள்
சுடுகாடில் லாவிடத்தே சுட்டுப்போட்டேன்
அல்லார்த்த பிணச்சாம்பல் நீர்விடாமல்
அங்கமொரு பிடிச்சாம்ப லழக்கக்கண்டேன்
வில்லேக்தும் வேல்மதனுங் கூடநின்றுர்
வெருங்கையே கானெறிந்தேன் சாம்பலாச்சே. (242)

சாம்பலே யில்லாமற் சடமுங்கண்டேன்
சணத்திலே வந்தவனுக் திரும்பிப்பார்த்தான்
ஆம்பலே பூத்தாப்போல் ரூபமாறி
அடிக்கடியே வேறுநிற மாகிவந்தான்
வீம்பலே யென்றுசொன்னு லென்தாய்தானும்
மெய்சிலிர்க்க யென்கூட்டி துள்நுழைத்தான்
தூம்பலே யென்றவனைப் பிடுங்கிவீழ்த்தாள்
தூத்தூ தூ வென்றவனைத் துப்பினுளே. (243)

தப்பிளை உயிர்மாய்த்து உடல்கிடந்த
தம்பிமுகன் பெருஞ்சாளி ஆழலேம்
செப்பிளு லுடல்தெளித்து வாவேயில்லை
சித்திரத்தைப் போலிருந்த நிமையைக்காட்டி.
கப்பிளு னிருகையு மொட்டிக்கொண்டு
காதோரங் கன்னத்தி லறைந்துதட்டி
தப்பிளு னென்குழந்தை முகத்திற்தானே
தடிப்பயலே யிவளைவிடு நான்போகேனே. (244)

நான்போயென் னிருந்தென்ன யினிமேலம்மா
நாய்போலே நானலைவேன் மதியார்முத்தர்
தேன்போலே உன்சிசுவு மிருக்கட்டம்மா
சிறுபிள்ளைப் புத்தியல்ல பெரியோனம்மா
கூன்போலே வளைந்திருந்துஞ் சிறியோனம்மா
குமரிக்கி யேத்தமகன் வாலிபன்தான்
தான்போனு லோயினிமேற் பிறக்கும்பிள்ளை
தரும்பல னதுவேதோசும் மாபோறேனே. (245)

போறனென்று போனவனுஞ் சாகாமற்றான்
போயொளிந்தா லெத்தனையோ நவமிதானே
வாரனென்று வாயிடுக்கிற் பல்சொன்னற்போல்
வருவானுக் தசமிதினம் யிட்டான்கெட்டான்
போறனென்று சொன்னவனும் பேர்க்குபோவான்
பிழையில்லான் சொல்லில்லான் பிழைக்கமாட்டான்
கூறனே அவனேழை தெய்வமில்லான்
கும்பிடவும் ரூபமில்லான் கோழைதானே. (246)

கோழையற்றான் வேலையற்றான் கொடுங்கையில்லான்
குருபோலத் துணையில்லான் சமாதியில்லான்
வாழைநீர் போல்வடியுக் தீர்த்தமில்லான்
வசனிக்கத் தெரியாதான் மூட்போலுள்ளான்
கேழையிலுக் தீப்பூடு மனிதருள்ளில்
கிள்ளாக்குப் போலிருப்பான் முறட்டுரூபி
பாழையிலு மிவன்பாழே தெய்வவீட்டில்
பாதேசி தான்டுவா னருமையாரே. (247)

அருமையுடன் செய்தவனே சித்தன்சித்தன்
அம்பரமாய் விட்டுவிட்டா லொன்றுமில்லை
வெருமையது வந்தாலும் விடக்கூடாது
வேணுமென்று பார்த்தறிந்து செய்துவந்தால்
பெருமையென்ன ஞானியென்ன கெருவங்கொள்வான்
பிடியரிசி பொங்கியுண்பான் உப்பில்லாமல்
உருமையென்ன கொடுத்ததெல்லாம் வாங்கிக்கொள்வான்
ஓகோகோ குடிசைகட்டிக் கொள்ளுவானே. (248)

வானென்ன இவ்விதமா யார்க்குந்தானே
மனமென்ன அறிவுகொண்டு செல்லுவாரே
நானென்ன பட்டசளந் தீனிதீனந்தால்
யார்க்குறைப்பேன் பேரின்பம் யானேகாணேன்
நானென்ன சொல்வதற்குத் தேடிக்காணேன்
நம்குருவே யென்றுசொல்லி யடிபணிந்தான்
தேனென்ற மொழிபேசிக் கரையலாகா
சிறுகல்லோ யென்மனது மலையதாமே. (249)

மலைகளிலும் பெரியது மேருவோசொல்
மாமகத்தோர் தங்கள்மனம் சிறியதோபார்
சிலையதிற் கோவில்குளம் பெரியதோசொல்
தேறினவர் தங்களுடல் கயிலாசம்பார்
கலையதுக்குச் சிங்குணம் வருமோசொல்லு
கலையறிந்தோர் தங்கள்குணஞ் சாபமாமோ
விலையதுபோற் சொல்லிடலாம் யேதுக்குத்தான்
மேன்மைவர மீபவர்க்கு விலையேதாமே. (250)

ஏதாகுஞ் சொல்லறிந்தாற் சொல்லுவீரோ
யெங்களுட லாவிமனம் விலையைத்தானே
போதாகுஞ் சொல்வீரோ தெரிந்ததானுற்
பொருள்கேட்டா லோடிடுவீர் கஞ்சிதாரார்
மாதாகும் பிணத்துக்குப்பொருளையெல்லாம்
வாய்கேட்டா லதைக்கொடுப்பீர் நீனைத்ததெல்லாம்
தாதாவென் றேஅடித்தார்க் கஞ்சியெல்லாக்
தானீவார் போங்களெனத் தள்ளுவோமே. (251)

தள்ளுவோம் சேர்த்தாலும் அணையமாட்டான்
தள்ளினுமே போகானே நல்லோன்தானும்
விள்ளுவோ மவன்தனக்குப் பாஷையெல்லாம்
வெரும்பாஷை தானல்ல சித்தபாஷை
மொள்ளுவா னெனச்சொல்லீர் கனவின்மேலும்
மோகமிடான் தாகமுளான் யென்சொல்லாலே
கிள்ளுவான் மற்றவர்கள் சொல்லுமுன்னே
கிள்ளாக்கை வைத்திருப்பான் வாயிற்தானே. (252)

பிறவிநீக்க யோகநெறி.

வாயினும் கேட்பவனுக் தள்ளுவோனே
வாயினுற் கேளாமற் தொண்டுசெய்வான்
பாயினல் விட்டெரிந்து கிட்டநிற்பான்
பதமுத்தி காண்பவனுஞ் சித்திகாண
நோயதிலே சிக்கானே முன்னுற்தானே
நோயிருந்துஞ் சொல்லானே யெனதுமுன்பு
பேயினுற் பட்டசளந் தன்னைச்சொல்வான்
பெரும்பிறவி நீக்குதற்குப் பிசகில்லானே. (253)

இல்லானே ஒன்றுளது முத்திமோட்சம்
யெப்போவென் றுங்கேளான் வேலையுள்ளான்
கல்லான நெஞ்சிருக்கும் சித்தசுத்தி
கலிவாசி சீலன்முத்தி தேகசுத்தி
நில்லானே யென்குழந்தை வேறுபாரான்
நீலத்திற் சமுசாரி போலிருப்பான்
மல்லான தையெடுக்கான் சாஸ்திரங்கள்
வாய்கொண்டு பேசானே யேசான்கேளே. (254)

கேளுங்க ளிவ்விதங்க ளன்றிமற்ற
கேடுதொழிற் செய்பான்பார் தினமுந்தானே
கோளுங்கள் களவுமுதற் பொய்சொல்லாதான்
கும்பிடவுத் தெரியானே கையைக்கூப்பி
மீழுங்க ளென்றுமிகச் சொல்லுவான்பார்
விரதங்கள் நோம்புவகை மெய்யுளானே
தாழுங்கள் போறேனான் விடுவிரென்பான்
சம்பிரதா யங்கள்மெத்தச் சாடுவானே. (255)

வானேறச் சாடுவனே மெத்தயோகி
மலிவளப்பஞ் சொல்லுவனே கடலுப்பாதி
கோனேறிப் பேசானே கமதுகூட்டம்
குருவென்றுஞ் சொல்லானே திருவென்பானே
மானுரி லிவன்மனிதன் திரிகாலங்கள்
வாய்க்குமிந்த யோகனுக்குச் சாதகனும்
தானேறி மீள்பவனே திரும்பமாட்டான்
தலியுச்சி காணுமட்டுந் திரும்பிடானே. (256)

திரும்பிடா னிவனுக்குச் செப்பலாமே
சீஷனென்று சொல்லாமற் சினேகன்போல
கரும்பிலோ யிருக்குங் கசடுமுண்டு
கனிந்தமன மவனுக்குச் சேய்போலப்பா
அரும்பிலோ காரிருக்கும் வாசமாறும்
அவனறிவு மாறாது யெந்தாளும்
விரும்பிலோ யெட்டாது விரும்பாதார்க்கு
மெய்நிறையச் சொல்லவில்லை வேழேஆண்மே. (257)

ஆண்மைகொண்ட தறிலே யார்தான்பூண்டார்
அகம்விட்டுச் சமம்வந்தால் வருத்தங்கண்டார்
ஆண்மைகொண்ட வீரர்களு மெங்கேயெங்கே
அமைதிகுண சாந்தருக்கே காலவர்த்தம்
ஆண்மையது திரிகால வர்த்தஞ்சொல்லும்
அவருக்கா காதுத்தா னிருத்துமென்ன
ஆண்மையது வானதிரி காலமூன்றும்
அதுநிற்குந் திரிலோக வரைக்குஞ்செப்பும். (258)

செப்புறிற சிஷரைக்கை யணைக்கவேணும்
திருவேடந் தணைப்பரித்த யெறியவேணும்
ஒப்புறிற மாந்தருக்கு உண்மைபூணும்
உவர்நிலத்தில் விரையிட்ட வாறதாகும்
தப்புறிற மாந்தருக்கு யிதுதோணாது
சவுக்கடிக்கி மிஞ்சுறிற சவங்களேனே
உப்புறிற மண்வீழ யில்லஞ்சாய
ஒத்திருந்த அவர்தனக்குச் செய்வதென்னே. (259)

செய்வதென்ன குருவென்றுற் சீஷர்கூட்டம்
தெருவீதி நிறைந்திருப்பார் ஒன்றுண்டாசொல்
கைவதென்னுயெங்கள்மேற் குற்றமில்லை
நடுங்குமன முடையாரே நடுக்காதீர்கள்
பொய்யிதெனச் சொல்லாதீர் யெண்ணப்பாரீர்
பொய்யென்றுற் திரிகாலக் தன்னைப்பாரீர்
கையதனில் வைத்திருக்கும் மறைத்துவிட்டீர்
கருத்துமன தறியுகள் தெளிந்துபாரே. (260)

திரிகாலம்.

தெளிவதனிற் தெளிவுதரும் அருளுங்காணும்
சென்மாந் திரங்காணும் பின்னுள்தோணும்
ஒழியதனில் நின்றுவிளை யாடுவாய்நீ
ஊணுறக்க மின்பதுன்பம் பார்ப்பதேபோல்
வெளியதனில் மெய்காணும் அறிவிற்சோதி
வெளிச்சமல்லோ யோகிக்குத் திரிகாலத்தான்
குழியதனி லேவிழுந்து வீழ்ந்தார்போல
குண்டுடையோன் தண்டுடையோன் கோழையோனே. ()

கோழையோன் கம்மெதிரி பகடுஉள்ளோன்
கொடும்பகடு யென்னவென்றுற் கோழைதானே
பாழையோன் பகடுவது யெருமைதானே
பகர்பெரியோ ரெருமைதனைக் கோழையென்றுர்
காழைவர்ழ் காள்தடுத்தல் கிடாவுமேறி
கம்மெதிரி கோழையின்மேல் வருமுன்னுலே
மாழோஈ னென்றுசொல்லிக் குருமுன்னுலே
வாய்கொண்டு சொல்லாதே மனதால்நில்லே. (262)

நில்லடா காயத்திரி யிதுதானே
நிலையடா கைதொழுகை யிதுதானே
அல்லடா கும்பிடுதல் யிதுதானுகும்
அல்லாவு மகிமாவு மிதுதானே
செல்லடா சாஷ்டாங்கம் யிதுதானே
திருவென்ன குருவென்ன அருள்தானென்ன
வல்லடா வாய்ப்பகட்டை விட்டுப்போட்டு
மனப்பகட்டை யென்னுடனே கலந்துகூட்டே. (263)

ஐம்புலனையடக்கு முறை.

கூட்டடா ஐம்புலனை யொன்றுக்கூட்டு
குருவோடு சாஸ்திரத்தை யொட்டிக்கூட்டு
பூட்டடா மனந்துறக்கச் சாவிசொல்வேன்
பொரிபுலனுங் கண்டதுவே நினவிலூறும்
தீட்டடா யித்தொழிலிற் கண்டுங்கேட்டும்
தீங்குவரு மெண்ணாதே உழத்திற்காணும்
பாட்டடா நீயிருக்கச் செவிகண்போகா
பார்த்ததையுங் கேட்டதையு மறக்காகாதே. (264)

ஆகாது மறப்பதற்கு வெகுகாள்சிந்தை
அதுகடக்கும் வாரேது அருளேமிஞ்சில்
நோகாதுஎகிவிடும் போகுங்காலம்
துணுக்கமாய்ச் சொல்லிவிட்டே னிதனைப்பாரு
சாகாது மார்க்கம்விட்டால் நோகாதப்பா
தன்னுடனே பிறந்தகுலம் யெவ்வார்மாழும்
போகாது ஆனதினுற் பொல்லாப்பேகும்
பூரணமாஞ் சாஸ்திரத்தை முழுகும்பாரே. (265)

பாருநீ ஆதிகடு அந்தமட்டும்
பரிசித்தி யோகசித்தி முத்திசித்தி
பேருநீ தானறிந்தபயனைப்பாரு
பேர்பெற்ற சித்தருடன் கூடிவாழு
கூறுநீ யெங்களுடன் வாதில்லாமல்
குருதோசமாகாது கேள்நிற்காதே
தேறுநீ ஆனமட்டும் தெரியும்பட்டால்
செய்திசொல்ல லாகாது பின்னேவாவே. (266)

வாவென்றால் நீயிருப்பாய் நானிழுப்பேன்
மல்லகசெட்டிகதை வார்த்தைவேண்டாம்
போவென்ற லென்மனது கூசுங்காணும்
பொதுவிருக்கும் உழவறிந்தோர் பூரணந்தான்
காவென்றுங் கூவென்பார் தங்களோடு
கள்ளமனக் கள்வரொடு பாசமேடு
ஆவென்றால் கெஞ்சிறக்க மில்லாமேடு
அம்மனது தானிறந்தால் பொருள்சொல்வாரே. (267)

சொல்லார்கள் பொருளிழப்பார் குறையுரைதேயும்
சொல்லடங்கா யோகபலன் நிருத்தக்கூடா
வல்லார்கள் சொல்லிடுவார் பலவாறாக
மாமனதை யுண்டிடுவார் வெகுசீராக
நில்லார்கள் தங்களுக்கும் வல்லபத்தால்
நிமிஷத்தில் சேர்த்துவிடுங் கடாக்ஷத்தாலே
அல்லார்கள் தங்களுக்கா உண்மையோர்க்கோ
அவர்மனது சீரணிக்கும் அருள்தாங்காதே. (268)

தாங்காது வர்த்தமானம் பொய்யாவிட்டால்
தரைதனிலே தெய்வமில்லை பிதுபோற்தெய்வம்
வாங்காமற் பெய்யமழை சொரிந்தாற்போல
வாலசித்தர் சொன்னாரே தாங்காமற்தான்
ஏங்காது யெத்தனையோ சுவடிசொன்னார்
எத்தனையோ சாஸ்திரங்கள் மீதப்பாக்கி
தேங்காது வாரியிட்டார் வெளியில்நின்று
தெய்வத்தைக் காண்பதற்கு யிந்தயோகமதே. (269)

யோகந்தான் முடிந்தபின்னே வீணதாகும்
ஊடுருவி உச்சிகண்டால் லேசதாகும்
தாகந்தான் போக்குதற்கு வெண்ணையாமா
தரியுருவைக் காண்பதற்குக் கண்ணுலாமா
மோகந்தான் போக்குதற்குப் பெண்ணுலாமா
மூரிபொருளா லாகுமன்றி வேறேகாணீர்
யாகந்தான் செய்தாலும் வானனுமா
அதிபிறங்கில் மழைபொழியு மடவுபோலே. (270)

போலவே உச்சிவிழி நெற்றிபார்வை
பூண்டவனும் நின்றவிடில் இருதயத்தில்
ஞாலமே லென்னயினி மகிமேலென்ன
நாடுடலைக் காப்பதற்கு யிம்மட்டோதான்
தாலமே கோடியிலோ சந்திரன்போல்
தங்கும்வெள்ளிக் கூட்டமதில் அதிசயந்தான்
சிலமே தானொருவர் புசுண்டாதா
செப்பினதி லவர்க்கினியர் வசிஷ்டராதாவே. (271)

காதாவென் றவர்சொல்ல யிவரும்போற்ற
காமிருவர் பேசுமொழி அண்டத்தப்பால்
சூதாவென் றவர்அரியு மிருவர்மோகச்
தன்பவலி யெவ்வளவோ அழவுயின்பம்
பூதாது அறியவெனக் கிச்சைசொன்னுய்
புகழ்வளர்த்த வெளியுள்ள மட்டுமானுய்
வேதாது வென்றவரே மனுவில்லின்ரோர்
வேதய்க்த உடலானுய் அதிகாமத்தாலே. (272)

காமத்தாற் பசிவலியா லுடற்துன்பத்தால்
கடந்தினியே வெகுகாளே யுகாகிகாளே
சாமத்தா லென்னசெய்தாய் கூட்டுக்குள்ளே
தன்கயிலே காட்டாரே கருப்புக்கெல்லாம்
ஆமத்தால் காவிடுக்கி மேலேதள்ளி
அண்ணுக்கைத் தள்ளியதி னருகில்வாசல்
சேமத்தா லேயொழுகும் பாலையுண்டு
செத்தணலைத் தாண்டினனே பசியோயாதே. (278)

ஓயாம லுண்டதினைக் கொண்டீர்கண்டீர்
ஊர்முழுதும் பசிக்கென்ன செய்தார்பார்த்தீர்
மாயாம லிருந்ததுவே கிழ்க்கண்டத்தான்
மற்றகண்டம் மறுபடியு முலைக்கக்கண்டேன்
சேயாக மண்ணுதிக்கப் பெற்றுள்மண்ணும்
திருவுடனே கான்முகனும் வந்தாரின்றுள்
வாயாக யின்றகதை விதமேசொல்ல
வசனிக்க யெத்தனியோ விதமென்றேனே. (274)

போகர் தர்க்கம்.

இரவிக்த சடலத்தார் என்பில்லாதார்
யெம்மைப்போல் நிறக்கருப்பு ஓர்காலந்தான்
வரம்பிலாக் காயவுடல் மண்ணேர்கண்டம்
வரம்புண்டு யிக்கண்டம் பகக்காலந்தான்
புறம்புண்டு யென்றனக்கு யெப்போதுந்தான்
போகனவன் காலத்து மேலேதானே
நிறம்பூண்டு கான்வரவே மாட்டேனென்றன்
தேவடியாள் பிள்ளையென்றன் போகனென்றனியே. ()

போகனவன் போனபின்பு மலைமேல்நின்றேன்
பொய்யுறையான் சத்தியங்கள் மெத்தவுண்டு
மாகனவன் வெகுகிடாரி மலைமேற்பாய்வான்
மாதர்க்க கேள்வியுள்ளான் சிறுவர்போல
ஆகனவன் திண்டுடலான் குச்சிக்காலான்
ஆகையினு லேகெவுனம் ஆகாயத்தே
தாகனவன் சீரில்லான் உலகபாரைத்
தாண்டியடி சப்பாணி தாண்டுவாரே. (276)

தாண்டுவா ரில்லாட்டால் உச்சிதேரே
தானேறிப் போவதற்கு வேலைசெய்தார்
கூண்டுபார் காயுடல் பிலத்ததாலே
குமரிவீரா யாடுங்கார் தொட்டுநின்றூர்
ஆண்டுபா ரப்படியே சஞ்சரித்தார்
அம்மேகர் தாங்காமற் பாரையொட்டி
மாண்டுபார் போனதவு மண்ணேயாச்சு
மலைக்கல்லும் பொன்னுச்சு மண்மேலாச்சே. (277)

சட்டைமுனி நூல்கிழித்த விபரம்.

ஆச்சப்பா யிவ்விதங்கள் பார்த்தேன்யானே
ஆசட்டை முனிசொன்ன நூல்கிழித்தார்
மூச்சப்பா வகைமுறையாய்ச் சொன்னூல்லோர்
மூதண்டக் கிசாயமுதல் சொன்னூன்னுள்
பேச்சப்பா கண்டமே சேணியன்றூன்
பிறளாமற் சொல்லறியான் தமிழ்ப்பாஷைக்கே
கூச்சப்பா தமிழ்வழக்க மில்லாதாலே
கொட்டினூன் வெள்ளைக்கவி கட்டினூனே. (278)

நானென்ற தமிழதனிற் சொன்னமுன்னோர்
நன்குணர்ந்தார் பிழையென்று நகைத்தார்சிறி
வானென்ற திருமூலர் கண்ணுற்றூனே
வாய்விளங்கச் சொன்னூரே பலபாஷைக்கும்
ஏனென்று கேட்பதுபோ லிருக்கவேணும்
யில்லாட்டாற் சும்மாதா னிருக்கவேணும்
கோனென்று சொன்னூரே குருவில்வாவா
குமரிவாலே கண்டவனு யிருவென்றூரே. (279)

இருவென்று நூல்படித்தார் சபையிற்சித்தர்
இருந்தவரிற் கொங்கணவன் யெடுத்துப்பார்த்தான்
பொருவென்றூர் மூலகுரு நிற்கச்சொன்னர்
புலவனே நீபோடா நில்லுவாடா
திருவென்றுற் சொற்பிழைகள் யெழுத்துக்குற்றம்
செந்தமிழு முந்தனுக்கு வருகுமோதான்
கருவென்றுற் தான்வருமே யெதிர்பாஷைக்கோ
காலன்கை கொடுத்துவிடு முரியென்றாரே. (280)

முரியென்ற சொற்கேட்டுப் போகநாதன்
மோகமகன் கொங்கணவன் யெடுத்தெறிந்தான்
கரியென்றுன் பிடிசாம்ப லாகவென்றுன்
கண்டவர்கள் கண்ணெதிரிற் சவாகுயென்றுன்
புரியென்றுன் செந்தமிழைக் கயரோயாக்கி
பூரணத்தைச் சொல்லுதற்கு யிவனுரென்றுன்
விரியென்றுன் சொன்னதெல்லாஞ் சரியேயான
மேலெழுந்த அன்பத்துக் கிழித்தார்பாரே. (281)

பாருபார் குருநூலே அதன்பேராகும்
பரிபாஷை யில்லாதாற் கிழித்தாரய்யா
நாறுபார் பிழைத்திடவே யின்னும்பாரீர்
நூலிரண்டு இருநூறு செய்துவைத்தார்
போருபா ரில்லாமற் சொன்னர்அன்னர்
போகருக்குப் பாட்டனவன் வாத்தியாரே
தேருபோற் தானிருப்பான் உயர்ந்ததாழி
செயவீரன் கூட்டமது மெச்சுவேனே. (282)

மெச்சுவேன் யாகோபு தேரையாரை
வேணபொருள் வைத்திருக்கும் அகஸ்தியனுதன்
குச்சுப்போற் தானிருக்கும் கோரக்கன்தன்னை
குடுகுடுக்கைக் கஞ்சாவைக் கொட்டிமேய்த்தான்
அச்சுப்போல் யாவர்களும் சமித்தாரத்தை
அதைச்செபிக்க மாட்டாமல் மயங்கினுர்கள்
வச்சுமே போய்மறந்த போனுப்போல
வையகத்தோர் தான்நினைக்கச் செப்பினாரே. (283)

செப்பிஞ ரலிச்சலாய்ப் பாடிப்போட்டார்
திருமூல ரேபார்த்துச் சிரித்தார்பின்னே
ஒப்பினர் யாவர்களும் உள்ளடக்கி
உத்தமிக்குச் சம்மதமா வெனச்சொன்னர்கள்
தப்பினர் கோரக்கர் நூழைப்பார்ப்போம்
சங்கித்துப் போய்வரவும் ஞாயமில்லை
துப்பினர் மூலகுரு கிழவர்தான்
சொன்னதென்ன வினிச்சொல்லா தேயென்றுரே. (284)

யோகம் ஞானம் எளிதிலாக

என்றுர்க ளிப்படியே யோகமார்க்கம்
யெடுத்தவர்கள் சொல்வார்கள் சித்தர்முன்னே
குன்றுர்கள் ஆண்பிள்ளை முழுதுங்கண்டார்
குமரகுரு வானலும் பிசகிப்போகும்
நின்றுர்கள் மற்றவர்கள் கோடாகோடி
நேர்வழியே சொல்லறியா நின்றாய்யா
சென்றேறி யறிந்தாலு மியற்கைக்கல்வி
சீரணிக்கா தேயிருந்தார் செப்புவாரே. (285)

செப்புவா ரியற்கைதனிற் தெரிந்ததேபோல்
செப்பிவிடும் அருள்வக்து தெளிவாய்த்தானே
இப்புவியோர் யாவர்களுஞ் சொல்லார்யோகம்
இதுபெரிது ஞானமது யெளிதுமாகும்
அப்புவார் யேதாகுஞ் சுழிணைகாணுர்
ஆறிவார் மூச்சுழியை மூச்சின்பேச்சை
பிச்சுவார் காணுதார் மூலங்காணுர்
பெருவாக்கை மீட்டிடுவார் தலங்காணுரே. (286)

காணுர்கள் மூலஉயிர்ப் பிச்சைதன்னை
கண்டெடுக்க மாட்டார்கள் சல்லிவேரை
நாணுர்கள் சொல்லுதற்கு அஞ்சுவாரோ
நமன்கயற்றை நாடார்க்கு யிதுவேவேலை
தோணுட்டாற் சுமாவிருகார் வாணுக்காலை
சொல்காவென் றடிப்பார்கள் தடியிற்பெண்டீர்
ஆனுக்கா லிடுக்கிற்பலி யேத்தல்போல
அக்கமசை வள்ளமுவும் பலவாய்த்தானே. (287)

தானென்ற சடங்கொண்ட வாயதாலே
தானேறிப் போகுமட்டும் லெகுவாய்ச்சொல்வார்
வானென்ற கருவிருந்த யிடத்தைக்காணுர்
மகன்மகழும் பிறக்தவிடம் அச்சைச்காணுர்
நானென்ற உயிரொடுங்கு மிடத்தைக்காணுர்
நம்பினதை விட்டுவிடுஞ் சடலங்காணுர்
ஊனென்ற காயமதிற் தூக்கங்காணுர்
உள்மலத்தைப் போக்குதற்கு விசைகாணுரே. (288)

பூணுர்கள் பிரமத்தைக் காணுமார்க்கம்
பூணுவார் லச்சயத்தைப் பூட்டிப்பார்ப்பார்
ஆணுபா ரவர்களுட விபரமெல்லாம்
அதிசயங்க ளாயிருக்கு மனேகதூலால்
தோணுவார் மூத்தரவர்க் கிரமமெல்லாம்
சொன்னதுக ளெத்தனேயோ ஆராய்ந்தேபார்
காணுரீ சொற்சோரம் விடாமலேதான்
கண்டுகொள்ள மெய்மனதாய் அறிவாற்பாரே. (289)

பாரப்பா கடைப்பிள்ளே யாகாமற்தான்
பக்குவத்தில் முதல்நடுவும் விட்டிடாதே
சேரப்பா நம்மோடு தாதிஷ்டி.
தெரிவதற்கு அனுகூலக் தெரிந்துகொள்ளு
மேரப்பா யேறுதற்கு வெளியேறுதே
மெய்யறிந்து வெகுதூரஞ் செல்லுவாய்நீ
கூரப்பா வென்றுநம்மைக் கேட்டதாலே
கொட்டினேன் வெகுதூரம் தட்டினேனே. (290)

இந்நூலின் பெயர்.

ஏனென்று கேட்டுபதிற் சொல்லுமித்த
ஏகவெளி சூரியன்றன் ஞானபாகம்
தானென்று யிதற்குப்பேர் ஞானசூரியன்
தாபரம்போ லேயிருக்கு மசையாதப்பா
நானென்று சொல்லுகிற நூல்களெல்லாம்
நம்மையன்றிச் சொன்னரே உடலுள்ளேதான்
ஊனென்று சொன்னரே யிதற்குள்ளேதான்
ஒளிவிசு மென்றுசொன்னர் குருவாமென்றே. (291)

குருவென்றுல் ஞானமொழி திரிகாலந்தான்
கொட்டுமந்த வார்த்தையது ஞானவார்த்தை
திருவென்றுற் திரிகால மிருக்குந்தானம்
தேவர்களு மெச்சுவர்கள் முக்காலத்தை
பொருவென்று லிப்பொருளி லிச்சைவைத்தாற்
போய்வருவார் போகாரே நிற்பார்தம்முள்
ளருவென்றுல் தீயன்றிச் சாம்பலாகா
யெப்போது மக்கினியே மூலமக்கினியே. (292)

யோகம்பார்க்க நேரம்.

அக்கினியே மூலதழல் கொருப்பைக்கண்டு
அசைவாசி மேலெழும்ப யோகநித்திரை
மக்கினியே வயர்நிறைய அன்னமுண்டு
மாந்தத்தால் மூலஅனல் அபானமாச்சு
தக்கினியே யபானவாய் வாடாமற்றுன்
தாதுகஷ்டி பிலப்படவும் உச்சிநோக்கு
சொக்கினிய ராக்காலம் மல்லாந்தேதான்
துடர்வாசி பார்த்திடவும் நடுவேபாரே. (293)

பாரப்பா மூக்குமூனை புருவமத்தி
பரிவாசி ஓடும்விதங் கூர்ந்துபாரு
வீரப்பா மேலேறச் சம்மணத்தால்
விரிமடித்து உட்கார்ந்து தானுய்ப்பாரு
சீரப்பா உண்ணுதே மூக்கின்மேலே
தினந்தினந்தான் பார்த்துவரத் தானேசொல்லும்
தேரப்பா யிப்படியே வர்த்தமானம்
திரிகால வர்த்தம்வரும் வெளியிடாதே. (294)

வெளியிடா தேயிருந்து வேலைபாரு
வேணதெலாஞ் சொல்லிவைக்கும் முற்றும்போதில்
ஒளியிடா வாசியனல் பலன்பெற்றோர்கள்
உத்தமர்கள் பெற்றபலன் உவமையில்லை
தெளிவிடே யோகபலன் தெழித்தபின்பு
தேர்வடம் பற்றிநின்ற கதைபோலாகும்
அளிவிடே யாகிவிடும் பிறப்பின்மார்க்கம்
ஆர்கண்டு சொல்வார்கள் யோகதானே. (295)

யோகியின் நிலை.

யோகிதான் ஞானபதம் பெற்றுமேலே
உறவினர்போ லேயிருப்பார் விருந்துண்பார்போல்
யோகிதான் வருங்கால மெடுத்தறைப்பார்
ஊணுறக்க மின்பதன்ப மொத்திருப்பார்
யோகிதான் ஞானபதம் மேலேயோகம்
உற்றமனம் பட்டதனல் யோகவானும்
யோகிதான் யோகவான் சித்தஞானி
உறமான ரிஷியிவனும் முனியாவானே. (296)

ஆவானே யெப்பதமுங் கிட்டுக்கிட்டும்
ஆகாதோ ஒத்திருத்தாற் பிரமசாய்கை
வேகாதோ காமமது சாம்பலாய்த்தான்
மிஞ்சினது வெளிபோலே ஒழியாகாதா
சாகாதா கம்கினவு அழிக்தாற்பின்னே
சம்சாரி யாகாதா அருளின்வீடு
போகாதா வீட்டருளின் கூட்டுக்குள்ளே
புலியிருந்தால் நரியோன புடவதாமே. (297)

ஆமிந்தப் புடவதனில் சிம்மம்வாரா
ஆகுமோ அருளிருந்தால் மனமும்வாரா
போமிந்தக் கருத்தறிந்தால் யூகம்போகா
பொல்லாங்கு தானிருந்தால் கலகம்போகா
சாமிந்த கோயிருந்தால் மரணம்போகா
தந்திமுகன் தானிருந்தால் யாழிபோகா
காமிந்தப் பற்றிருந்தால் மனமும்போகா
கணக்கிருந்தால் சங்கற்பங் கணக்கில்லைதானே. (298)

இல்லையே சங்கற்பம் கணக்குமில்லை
இத்தனையும்,கெஞ்சுபள்ளம் கையகலமாகும்
தொல்லையே அப்பள்ளம் மேடதாகச்
சொன்னவர்கள் கோடியொரு கோடியல்ல
வல்லையே யப்பள்ளம் நிறைவதற்கு
வாலிபப் பெண்களுமோ பொருளோதானே
கல்லையே மண்ணையும் வாரியோடு
கண்டபள்ளம் நிறைத்தாலும் நிறைந்திடாதே. (299)

நிறையுமே திரிகால வர்த்தமானம்
நெஞ்சுருப் பள்ளமெல்லாக் திரேகமெங்கும்
உறையுமே யிதையன்றிக் காயசித்தி
ஊண்டஞ் சுத்திவரு மனவேகந்தான்
பறையுமே யேசிடுவாள் புருஷாவென்று
பார்த்தவர்க்கு யிதுவென்ன லெகுவுதானே
முறையென்றுற் தெய்வபொருள் முத்தியல்ல
முன்சொன்ன பொருளெல்லா முத்திரூபமதே. (300)

முத்தி.

மூத்தியென்றுல் அகத்தியு மூலத்தியும்
முன்னின்ற தூர்வாசர் கோபத்தியும்
சித்தியென்ன யிதுமூன்றும் ஒன்றுய்ச்சேர்த்து
திரிகயரு திரிகால மீண்டுகார்க்கும்
தத்தியென்ற தாகாது தாழமாகா
தம்பட்டை கேட்டுவிடில் ஓடிப்போகும்
கத்தியென்று லிம்மார்க்கம் செவிடர்போல
காதுக்கு மெட்டாது வெளிபோலாமே. (301)

வெளிபோலா மென்றுசொன்னுர் வெளியிற்பொங்கும்
மெய்ப்பொருளே காய்க்குமிந்தப் பழத்தைத்தானே
ஒளிபோலே சிருஷ்டிதிதி சம்மாரந்தான்
ஒப்புவிக்கும் வேதமது யேவல்கேட்கும்
வளிபோல நின்றுகொண்டு தாகதீர்போல்
மாமுத்தர் தங்களுக்கு மழையேபெய்யும்
தெளிநீரே முகிலோடு யென்றுலோடும்
தேவர்களும் வெந்திடுவார் நமதவாக்கே. (302)

வாக்கினுற் சொன்னுனை சிரித்தானேதான்
வாய்கொண்டு சொல்லாமல் கைத்தான்பாரு
நோக்கினுற் போதாதோ பிரமாந்திரம்
நன்னறிவோர் தங்களிடம் பிரமாந்திரந்தானே
சாக்கினுற் சொல்வோங்காண் காரணத்தால்
தன்கூடு அழிவதற்கு ஏமனில்லை
போக்கினுற் போவதில்லை பிரமன்செத்தான்
புதுப்பிரமன் காமாலும் புதிதாய்த்தானே. (303)

கலியுகம் முதற்கு மேல் நடக்கும் செய்கை.

புதிதாய்த்தா னிப்படியே மூனியானுக்கால்
புரமூன்று மெரித்தாற்போற் ஸ்திரீகள்சாகும்
மதியேதான் குறைவளரும் புதிதேமேகம்
மானிடரு மப்படியே யினிமேல்நூறே
கெதியேதான் பிரண்டுருண்டு சாய்ந்ததாலே
இளருகிறேன் புதுமேகங் கலியுகத்தில்
விதியேதான் அய்யாயிரம் பத்தொட்டொன்று
மேல்நடக்கும் மாசிமுதற் பிறக்கும்பாரே. (304)

பிறக்கும்பா ரதுமேலே நாற்பத்தொன்று
பெருஞ்சித்தே மதிவளரும் பெரிதேயாகும்
சிறக்கும்பார் பூரணமா மதிவளர்ந்து
தேய்பிறையு மில்லாமல் முழுஅமாகும்
உறக்கும்பார் இதுதேய்ந்த காலஞ்சொல்வேன்
ஓகோகோ சூரியனு ருதித்தகாலம்
இறக்கும்பா ரிதுதேய்ந்து வழர்ந்துவட்டம்
இப்படியே அமாவாசி பூரணந்தானே. (305)

பூரணமாம் பௌரணியே ஆதிகாலம்
பூமிவ்வ ருந்தினந்தான் வட்டமாய்த்தான்
காரணமாய் வியானனென்ற வெள்ளிதானே
கதிர்பெருகி அண்டகவர்க் கப்பால்நின்றார்
ரானமே அவ்விடத்தி லிருந்தசூரியர்
எதிற்பார்வை தாங்காம லிவடம்வந்தார்
ஆணமே சொல்லாது பெரியோர்சொல்வார்
ஆச்சரியஞ் சொல்வதெது ஞானசூரியனே. (306)

யுக அதிசயம்.

சூரியனுர் தானெதிர்க்க அண்டத்திப்பால்
சூரியனும் வியாழம்வெள்ளி யிவடம்வந்தார்
கூரியனு ரிவ்வண்டம் வந்தபோது
குமிருமொழி சூரியனு மானூர்வானில்
வீரியனுர் வந்தாள் சொல்வேன்கேளும்
விபாமிது மெத்தமெத்த மேலோர்கேட்டார்
சீரியனுர் தன்வரத்து வருஷமாசம்
செப்புவது யேதென்றுற் சொல்லுவேனே. (307)

சொல்லுகிறேன் கேட்டதையு மும்மக்குத்தானே
சொல்லுதற்கே நான்கேட்டேன் வாலிசொன்னுள்
புல்லுகிறேன் தன்வந்திரி வசிஷ்டநாதா
புகலுமே முன்சொல்லாப் பின்சொல்லில்லை
இல்லுமே யென்னலுமே கயிலைசுண்டார்
கிட்டிருந்து பார்த்திருந்தே னந்தநாளில்
அல்லுமே நாவில்லை சந்திரன்தான்
அடிந்துவரும் நிலாவதனிற் பிறந்தேனானே. (308)

பிறந்தநாள் சதுர்யுகமே அறுபதேதான்
போன சந்திரனும் வட்டமாய்த்தான்
சுறந்தநாள் அழுதுண்டு யாங்கள்வாழ்ந்தோம்
தயரில்லை யக்காலம் பிறப்புமில்லை
இறந்தநாள் யான்காணேன் வானஉச்சி
ஏறியந்த உச்சிதனில் நின்றுபோகும்
மறந்தநாள் நானில்லை யிதவுங்கண்டேன்
மாமலைமேல் மதியிருக்க வதுங்கண்டேனே. (309)

கண்டேனே யின்னமொன்று தினமுங்காலை
கதிரவனும் வெயிலெறியான் ஒளிசெஞ்சோதி
பண்டோனே யீதென்ன பாகமாக
பலவிதமாய்த் தானிருக்கும் விபரஞ்சொல்ல
திண்டோனே மலைபோலே நரையாமூப்பு
சிறுவருக்கு ஆனதுபோல் அவருக்காகும்
உண்டோனே சொல்லிவிடு உளதையெல்லாம்
ஒழியாமற் சொல்லுகிறே னுமக்காய்த்தானே. (310)

உமக்காக ஆதிதனிற் கண்டஞாயம்
ஒன்றதவு மறவாமல் தினவாலவர்தம்
தமக்காய்த்தான் வைத்திருக்கேன் யெனக்குவேண்டாம்
சந்ததிகள் கேட்பதென்ன தானேயியும்
நமக்காய்த்தான் வாலியவள் பிரமாந்திரம்
நாயகனைக் கோரும்மற் தனியேநின்றுள்
நிமக்கேதா நானிருக்கேன் வாடேகூடு
நெடுநாளோ பித்தலிது வசைசொற்கூண்டே. (311)

கோரக்கர் சித்தி.

கூண்டதனி லென்னைப்போற் பலபேருண்டு
கோரக்கர் யென்போல வெகுகாள்மானி
பாண்டதனில் வருடலுங் கஞ்சாமாய்கை
பதறியவ ருண்டதிறற் சொக்கிப்போனர்
ஈண்டதனி லென்காலஞ் சிலநாள்தன்னில்
ஏரிமலீ மீதினிலே யிருந்துவாழ்ந்தார்
மாண்டதனிற் பின்பொருக்கால் பூமிமண்ணும்
வளமாகி நின்றிடவு மிறங்கிவாழ்ந்தாரே. (312)

வாழ்ந்தார்கள் மண்ணுவரை யாகிப்போன
மனிதரெல்லா மலீயேறக் கண்டேன்பார்த்தேன்
தாழ்ந்தாரே மண்ணெல்லாங் கல்லேயாக
தானந்தப் படிசென்றார் மலீமேலேகி
ஆழ்ந்தாரே யிப்படியே மலீமண்மாரி
அடிக்கடியே கடல்பொங்கா மலீமண்பொங்கும்
மீழ்ந்தாரே யிதுகடந்து கெடுகாள்தோறும்
மெய்மண்ணு மிப்படியே மலீயுந்தானே. (313)

மலீமண்ணு மாறிவிடுங் கடலோர்காலம்
மாறுது நின்றிடுமோ மாறுமாறும்
சிலீமண்ணு மலீவாரி போலத்தானே
தேர்வாசுச் சந்திரருஞ் சூரியன்முன்
கலீயென்ற மூச்சுபிரி வானுற்போல
கண்டகண்டந் தானுடுஞ் சுவரைத்தாண்டி
வலீயென்ற பொத்தலெண்ணிக் கண்டாப்போல
மலீமண்ணும் வாரிகண்டம் அண்டம்ஒன்றே. (314)

ஒன்றென்று கண்டஅண்ட மிதுதானுகும்
ஊடுருவிப் பார்ப்பதற்குச் சுவரேயுண்டு
குன்றென்ற இருளிருக்குஞ் சுவரேபோல
கோடியல்ல வட்டம்போற் சுழலேஅண்டம்
நன்றென்ற யிருட்சுவராம் தூரக்கேளு
நாம்கண்ட பலபேத மிதற்குட்பாரு
மன்றென்ற ஞாலமதில் ஞாயபேதம்
வசனிக்க யெட்டாது யென்னுலாமோ. (315)

நன்வந்திரி சித்தி.

ஆமேதா னமாவாசி சூரியர்க்கும்
அரைத்துவிட்டே னிதற்குள்ளே யுற்றுப்பாரு
நாமேதான் கண்டதிந்தப் பலன்தானென்ன
நாயகனே யேபிரிந்த நினைவைப்போல
ஊமேதான் நீர்வினவ யெழுந்துளத்தில்
ஒத்துவரும் வாலிப்பெண் ணுகந்துசொன்னாள்
தாமேதா னுச்சரியங் கொண்டீரப்பா
தன்வந்திரி யித்தனைபார்த் தலுத்துச்செத்தாரே. (316)

செத்தார்கள் சிவனுயிர் விட்டுமாண்டார்
திருவுடனு மூச்சுவுயிர் பிரிந்ததாலே
வத்தார்கள் நாளிருந்து யோகச்சார்பால்
வாசிவலுச் செய்தவரு மரணங்கண்டேன்
மூத்தார்கள் பிஞ்சினிலே கர்ப்பங்கண்டார்
மோகமிட்டா ரானதினுல் உடலேகெட்டார்
இத்தார்கள் சிவருடல் பிரிந்ததாலே
இருந்தென்ன போயென்ன யிவர்கள்தானே. (317)

இவர்களுட ஞாயமது அனேகங்கண்டேன்
யெப்போது மெத்துணையு மில்லாரானுர்
அவர்களுட பார்சுவம்நினைக் தருகியானே
அன்றுமுத லின்றளவும் கைத்துன்பம்
எவர்களுடன் சொல்வமென்று யிருந்தேன்யானும்
என்பிறவி யெக்கிருந்தாயிங்குவந்தாய்
உவருடலைப் போட்டிடுமுன் உன்னைக்கண்ட
உவகையெனுஞ் சந்தோஷம் யார்க்குரைப்பேனே. (318)

ஆர்க்குரைப்பேன் சூரியனர் அண்டந்தானே
அத்தனையென் றெண்ணவுமென் கணக்கிடாதே
பார்க்குரைப்பேன் சீறிவீர் புலப்படாதே
பரிதேசி வாசிமூச் சாடல்கண்டார்
தார்க்குரைப்பா ரிதுபெரிதோ வயதோகொஞ்சம்
தாண்டாரிது உடல்கெவனம் யார்க்குந்தொல்லை
சேர்க்கரிது உயிருடலும் பின்னலிட்டு
தெரிசம்போ லாக்கிவிட்டார் போகர்தானே. (319)

போகர் சித்தி

போகரிஷி பெற்றசித்தி யென்னசொல்வேன்
போர்புரிவார் ஆகாச கெவுனத்தன்னில்
ஏகராதன் வெட்டவெளி தனில்கடப்பார்
எல்லார்க்கு மாகாது கெவுனசாய்கை
மோகரா தன்கெவுன சித்திபெற்றார்
மொய்குழலாள் சித்திபெற்றார் வாக்கப்பெற்றார்
காகாரத னுத்தனுக்குக் கெவுனமார்க்கம்
காலடக்க மில்லாதோ லேசாகாதே. (320)

லேசாகா நான்பெருத்தே னுடல்கனத்தேன்
நேராகத் தூரதிஷ்டி பாய்க்தாற்போல
தூசாக நானிருத்தேன் நான்சொல்தூரம்
துகையுண்டு கணக்கில்லை போகருக்கே
நாசாகக் கண்டுவிட்டார் சுவரைத்தாண்டி
நான்செல்வே னப்படியே தான்செல்லொண்ணு
ஆசாகச் செய்தாரே சம்பிரதாயம்
அவர்பிள்ளை யப்படியே முக்கால்தானே. (321)

மூக்காலர் தாண்டாமற் பெண்ணைச்சிக்கி
மோகமூனி போகர்குலம் மண்ணுய்ப்போனார்
எக்கால மப்படியே முனியாஞ்சித்தி
யெவராலு மாகாது பெண்ணில்மாமூம்
அக்கால மானலும் பெண்ணல்விட்டார்
ஆகெவுனம் போனலும் பெண்ணைத்தொட்டார்
இக்காலம் பெண்ணைவிடார் கெவுனம்வாயா
எச்சித்தி வாய்த்தாலும் கெவுனம்வாய்க்காதே. (322)

வாய்க்காது பெண்ணினத்தாற் சித்திதானே
வாய்க்குமோ பெண்ணினத்தாற் முத்திதானும்
ஏய்க்குமே பெண்களுட மூலஸ்தானம்
எவர்வெருத்தார் நீர்வெருத்தீர் நான்வெருக்கேன்
தாய்க்குமே பிள்ளையென்றும் கசப்பேயாகும்
தாபத்தம் வேண்டாங்காண் சும்மாநில்லும்
நாய்க்குமே வெள்ளெலும்பு ருசியானற்போல்
நாயகியாள் தன்சுகமும் சுத்தம்வடிந்தாலே. (323)

ரத்தநீர் கண்ணுலே வடியச்செய்யும்
நாரியரின் சந்தோஷம் ரத்தக்கண்ணீர்
அத்தநீர் ஒட்டுகின்ற தன்மைபோல
அம்மனது மிம்மனதும் நாயகாரே
செத்தநீ ராகுமட்டும் பெண்ணின்சோம்பல்
தேறுதலே விபகாரம் சிறிதேமுத்தி
கத்தநீ ராஞங்கால் வாலிசாகும்
கதவடைத்து வெளியில்விடாள் அவள்போதாதே. (324)

போதாது யிவளைவிட்டு அவளைச்சேர்வார்
புழுக்கூடு விபகாரம் நீசபாஷை
வாதாது கொடுப்பதற்கு ஒன்றுவேணும்
மனமாழ ஓர்வகையு மெட்டுதில்லை
வேதாது கலிவாணி விடாளேவிட்டால்
விதியிலையோ தலிவிதியோ லேறையாதோ
நாதாது யென்னசெய்யுந் துணையில்லாட்டால்
நாடிகரம் பாடாது வாக்கில்லாதே. (325)

இல்லாதே யானபடி அருந்தநிக்கே
யேற்றீரே குற்றமில்லை யினிமேல்ஞாயம்
சொல்லாதே யானிருக்கேன் குலத்துக்கெல்லாம்
சுக்கிலத்தை வெல்லுவதே யெனக்குயிச்சை
கல்லாதே யேன்படித்தேன் விதியேசார்பா
கட்டைமண்ணுய்ப் போமளவும் என்னைவேண்டேன்
நில்லாதே யான்விரும்பில் மனதைக்கண்டு
நீள்விசும்பிற் கேத்திடுவேன் சாவேண்டேனே. (326)

வேண்டேனே மரணமொடு பெண்ணுகத்தும்
மேனியுத்த மனரூபங் கருத்தாற்தொட்டு
தூண்டேனே யெக்காலம் வசியாக
சுகித்திருப்பே னிக்காலம் வாழ்காள்மட்டும்
மாண்டேனே யென்னினைவிற் தூக்கம்போல
மரணத்தை யார்கடப்பார் பெண்ணுமாழும்
வீண்டேனே நத்துவது தன்பத்திற்கு
விரும்பாமல் வந்திடுமே தன்பந்தானே. (327)

அன்பந்தான் வேண்டுமென்றுற் பெண்ணுள்வேணும்
அணைவேணு மென்றுலோ பெண்ணுகாது
இன்பந்தா னென்றுலோ பிறவியுண்டு
யிறைத்தூறு மணற்கேணி யேற்றம்போல
அன்பந்தான் சொற்கேளான் நாமுங்கேளோம்
அனைவருமா நம்மவரில் நீருமாமா
நன்பந்தான் நீருக்கப் புசிப்பையெண்ணி
நாடினேங் காசிபரும் நாமுந்தானே. (328)

காசிபர் வசிஷ்டர் சித்தி.

நானுந்தான் காசிபரும் வசிஷ்டயோகி
நற்பிரம பதப்பெற்றேம் நன்குணர்ந்தோம்
வேணுங்காண் நீங்கள்செய்த தவத்தினுலே
விதிவிலக்கை யேதுறந்தீர் யிருவருந்தான்
பூணுங்காண் ரோமரிஷி பதத்தைச்சொல்லும்
புகலுவேண்ணூறாலு முடியாதப்பா
வாணுங்காண் பென்னுலே சொல்லலாகா
வல்லபமே வாய்வார்த்தை வித்தைதானே. (329)

ரோமரிஷி நூல்மகிமை.

வித்தைதா னவர்சொற்போல் சாஸ்திரங்கள்
விரித்துரைக்கச் சூச்சமதாய் மெய்யேவாயாய்
முத்தேதான் வாய்திறந்தா லொழியைப்போல
முனியோகி சொல்லிவைத்தார் விஸ்தாரங்கள்
சித்தேதா னவர்சொல்லு யினியேதானும்
தேவரொடு மனிதர்களும் விள்ளார்விள்ளார்
எத்தேதான் போலிருக்கும் ரோமர்வாக்கு
ஏதென்று சொல்வதய்யா அவர்வாக்குக்கே. (330)

அவர்வாக்குச் சொல்லெல்லாஞ் சுலோபமாகும்
அணிமாதி சொல்லாமல் மறைத்துவைத்தார்
இவர்வாக்குக் கற்பவகை நூறிற்சொன்னர்
யிதன்பின்னே அண்பதினிற் குருக்கிச்சொன்னர்
உவர்வாக்கு வேண்டாமே யவர்வாக்குக்கு
உற்பனங்கள் மெத்தவுண்டு பாஷைநன்று
கவர்வாக்கு அல்லல்ல யோகிவாக்கு
கண்மூக்கு மத்தினடு வெளியாய்ச்சொன்னரே. (331)

சொன்னரே சித்தரெல்லா மெதிர்த்தார்வந்து
சொற்பிழைகள் காணுமல் விழித்தார்பின்னே
பின்னலே பிழைசொல்வார் நம்மைப்போலொற்றர்
பேசரிது சாஸ்திரத்தைப் போற்றினேன்யான்
கண்ணுலே பார்த்தவர்கள் விழலேயாகார்
கண்டுகொள்வார் சூட்சத்திற் சூட்சமாகப்
பின்னரே சங்கற்பம் பூரணர்காணர்
பேச்சறிந்தபேசவரே ரோமராலே. (332)

ரோமராற் சொன்னதுவுஞ் சம்பிரதாயம்
துனிராக்கை மடிக்காமலறுக்காமற்றான்
பாமரான் மடித்திடுவா ரறுப்பாரென்று
பல்லுதட்டை மூடாம லுபிரைநோக்க
காமரான் பார்ப்பதற்கும் லேசதாக
காட்டினர் வேடிக்கை சிரிப்பதாக
ஊமரான் சிரிப்பதுவுங் காண்பதேபோல்
ஊமைகண்ட கனப்போலு மற்றோர்சொன்னரே. (333)

சொன்னர்கள் மற்றவரும் பின்னலாகத்
தொன்றுதொட்டுச் சொல்லாமல் விரிவாய்ச்சொன்னர்
கன்னர்க ளுடற்பருதி முழுதுங்கண்டார்
காயசித்தி கெவுனம்வரை முத்திமட்டும்
உன்னர்கள் சொற்பிழையே குறைவேயாகும்
உருண்டவர்கள் சொன்னக்கால் மாணசாஸ்திரம்
அன்னர்கள் சொன்னதுபோல் ரோமர்சொல்லார்
ஆதிகண்ட காசிபர்போல் யாருஞ்சொல்லாரே. (334)

காசிபர் ரோமர் வசிஷ்டர் தன்மை.

காசிபரும் ரோமருமே வசிஷ்டர்நேரே
கரையேறிப் போய்வந்து மீண்டோர்நேரே
வாசிபரி தேசிமூச்ச கூச்சஆன்மா
மனஞ்சிவ னறிவோடு தெளிவுயூகம்
பேசவரிக் கருத்ததனை முழுதுங்கண்டோர்
பெரியோர்கள் சொல்லுவரே முழுதுமுத்தி
தேசிபரி பூரணமே குறையக்கண்டோர்
தேடுவரோ சொல்லெல்லாந் தேரச்சொல்லே. (335)

தேரும மிவ்வகையே மூழுதக்தானே
தேர்வடம்போல் நீட்டிவிட்டார் சாஸ்திரங்கள்
ஆரும மனச்சாந்தி யில்லாதார்கள்
ஆகாய சந்திரனின் குறைகாணுதார்
கோரும சந்திரனைக் குறைதீராமல்
குருகுலமோ மதிகுலமோ குலமோசந்திரன்
ஏரும மிறங்கினதே யிதனைத்தீரார்
யென்னசொன்னார் சாஸ்திரங்கள் யென்னயோகமதே. (1)

விஸ்வாமித்திரர் முதலியோர் தன்மை.

யோகமதாற் சொன்னரே விசவாமித்திரர்
ஓடுவெள்ளி பிச்செறிந்தார் கட்சேத்திரத்தை
மோகமாய்ச் சொன்னரே மாண்டவீயர்
மொய்குழலாள் சொன்னளே ளாகினிக்கே
வேகமாய்ச் செல்லானே தடையாய்நின்றான்
வேதவுரை கேட்பவனே சூரியன்றான்
போகமாய்ச் சொன்னனே தவத்தினலே
பாரித்த மதிவளர சாபம்போக்கே. (337)

சாபம்போய் வளர்மதியே யென்றுதானே
தான்கொடுக்க மாட்டாத முத்தர்தானும்
கூபம்பா லுள்ளிருக்கும் ஆமைபோல
குறைவயறுற் கத்துகின்ற தவளைபோலும்
தீபம்பால் விழுகின்ற காமப்பூச்சி
தெருவழியே நடக்குமவர் குலுக்குமாபோல்
தாபம்போற் சொன்னரே சோடசங்கள்
தொன்றுதொட்டுச் சொன்னவர்க ளிருக்கத்தானே. (338)

இருக்கவே பயமின்றி அச்சமின்றி
எப்போதும் காணமில்லா தியாக்கைமோனர்
குருக்கவே சொல்லிவைத்தார் தினீர்காணு
குருயோகி சிருஷ்டிதிதி சித்தியாதோர்
பெருக்கவே சம்மாஞ் சாபங்கோபம்
பெருத்திட்டாற் சாபம்வரும் மறைவென்றார்கள்
தருக்கவே கற்றாரே ஓட்டக்கற்றார்
தவின்றாலே பலனெதவோ திஷ்டிதானே. (339)

திஷ்டிதான் சித்திக்க வளருஞ்சந்திரன்
தேய்பிறையே யாகாமற் பூரணந்தான்
திஷ்டிதான் காசிபரும் விசுவாமித்திரன்
சிவந்தகலே நாராகினியும் நீரும்நாமும்
திஷ்டிதான் மதிவளரக் கலேதேயாமல்
செழுமதியாய் உருமதியாய்ச் செங்கண்ணுலே
திஷ்டிதா னிதுசொல்ல நாமுங்கூடி.
தீண்டிகரு நீங்கிடவே செப்பினேனே. (340)

செப்பினர் வசிஷ்டரொடு புசுண்டர்தானே
திரிலோகந் தேடியவர் தம்மைக்கண்டு
வைப்பினரே கயிலாச புசுண்டநாதர்
வாய்கொண்டு சொன்னரே வரவைத்தானே
ஓப்பினரே அப்படியே தொடர்ந்துவந்தார்
ஓகோகோ யிங்குவந்தீர் கிழவன்கூட்டில்
மெய்ப்பினரே கடைசியுகம் அறுபதேதான்
மேல்விளையுங் கலியுகமே அதிலேதானே. (341)

கலியுகத்தில் சந்திரசாபக் கணக்கு.

கலியுகமோ முன்பாகம் அய்யாயிரத்தே
கலியோடு பதினெட்டும் அதனிற்சேரும்
வலியதிலே அய்யாயிரப் பதினெட்டின்மேல்
வளர்பிறையுந் தேறுமடா நாற்பத்தொன்றில்
மெலிவெய்துஞ் சந்திரனுந் தேறுவாரே
மேலய்யா யிரத்தெட்டு அன்பத்தொன்று
பொலிவெய்தும் அய்யாயிரத் தன்பதின்மேல்
பூரணமே ஒன்பதுடன் பூரணமாமே. (342)

பூரணந்தான் தினந்தினமும் பூரணந்தான்
பொய்யடா அமாவாசி பொய்யாய்ப்போகும்
பூரணந்தான் குறைந்ததிலு லம்மாவாசி
பூர்ணமதி யானுக்கால் அமாவாசையேது
தோரணம்போற் தொங்கிடுமோ நிலைநிற்காதே
தொன்றுதொட்டு வந்ததல்ல குறைந்ததாலே
காரணமே ஓர்முனிவன் சாபமாகும்
கங்குலதை நீக்கிடுமே மதிவந்தாலே. (343)

மதிவந்தா லிருள்நீங்கும் பிரபையாலே
மாமாயை யிருளழியும் ராவேயில்லை
கதிர்வந்தாப் பகலுண்டு மதிவந்தாக்கால்
காரிருளும் நீங்கிவிடும் பகல்ராவில்லை
விதிவந்தா லேயொழியும் விதிதானுண்டு
மேகமுதல் யாவுக்குங் கதிர்மதிக்கும்
துதியென்ன யிதமுறையே வெகுளாளல்லோ
சொர்க்கமுதல் யாவற்று மாழுந்தானே. (344)

மாறுவது காலனெடு காலம்பாரும்
மறைநான்கு ஐந்தாறு ஏழெட்டாகும்
நீறுமது மாறிவிடும் ஓர்காலத்தே
நீண்டமறை செறிந்தஉடன் செறிவோர்காலம்
தூருவது காய்வெடிக்கு மரமோர்காலம்
சொல்பாஷை யென்னளவும் ஒன்றுக்காலம்
மேருவது சிறிதாகும் பள்ளமாகும்
மேன்மையோர் தாழ்வதில்லை ஆத்மங்கண்டோரே. (345)

ஆத்மங்கண்டோர் பெருமை.

கண்டோர்கள் மெத்தவுண்டு யெமைப்போலொற்றோர்
கல்லரையில் நுழையவில்லை மனிதர்போலே
விண்டவர்கள் காண்பரிது மேன்மையோரை
மேலானோர் கண்டுகொளல் அரிதுஅம்மா
மொண்டவர்கள் தன்னோடு கூடியாடி
முயலாமற் கிட்டிருந்து உறவுகாடி
பண்டவர்கள் கண்டுகொள்ள முறையிதாகும்
பழகினவர் போலிருப்பார் அறியார்தானே. (346)

அறியாதான் போலிருப்பா ரறிந்தோருள்ளில்
அறிந்தவர்க ளுடன்கூடில் தெரிவார்தானே
மூறிந்தோர்கள் தன்மனத்து தன்னைவிட்டு
முழுமோசத் தால்மறந்து தனைக்காணுதார்
விரிந்தோர்கள் திரிகால மதனைக்கொண்டு
மெய்யுலகி லேயிருந்தார் நினைவைவிட்டு
திரிந்தோர்கள் தன்காரிய மறதியாகும்
திரிகாலம் புதுமனிதன் தேவரூபே. (347)

தேவரூபி தேவரொடு கூடார்நாடார்
சேர்ந்திருவ ருங்கலந்தார் மனிதர்போல
ஊவரூபி காலனெடு காலமார்க்கம்
ஊடுருவிப் பேசுவரோ உளதையெல்லாம்
ஆவரூபி வார்த்தையென்ன யுகங்கள்பேதம்
அண்டகண்டங் கடந்தப்பால் சுவரைத்தாண்டி
ஏவரூபி யிருக்குமந்த வெளியொளியாம்
இயற்கையென்ன வென்றுஅவர் பேசுவாரே. (348)

பேசுவார் திரிகாலந் தூரதிஷ்டி
பேச்சரிதல் அண்டசெவி கண்டேகூடும்
வீசும்பார் திரிகாலந் தூரதிஷ்டி
விரதங்க ளில்லாத பெரியோர்காணார்
மாசுபார் கண்ணுலுங் காதினுலும்
மனதாலுங் காண்பரிது பெரியோர்செய்கை
தூசுவார் களத்தடியிற் சாவிபோல்
துர்க்கருவி மாந்தருமே சாவிதானே. (349)

சாவிதான் போகாமல் விஞ்வேயோகி
தன்கதிரைத் தானடிக்கும் பொலிதூத்தாமல்
ஆவிதான் பொலியெனவுந் தூத்திடாமல்
அரகரா ரூரண வென்றிடாமல்
கூவியே அள்ளாமல் உள்ளேதள்ளி
குமரிகாணுக் கைமுதலே வைப்பார்உச்சி
தாவியே யோராரே மலியினுச்சி
சமுசாரி போலிருந்தார் முத்திதானே. (350)

மூத்தர்தான் வெகுவிதமே யோகிபோலும்
முனிபோலும் ராசரிஷி தொழிலிப்போலும்
வித்தர்தான் மேல்வரே தொழிலனேகம்
வேடிக்கை வாய்வார்த்தை சித்திதானே
சித்தர்தான் செய்தொழிலோ முறையோகோடி
தயர்செய்யா வெகுலெகுவே சொல்லாலாகும்
அத்தர்போ லேயிருக்கும் வல்லபங்கள்
ஆருக்குந் தெரியாது சொல்லுஞ் சாஸ்திரமே. (351)

சொல்லுமே வல்லபங்க ளனுபவத்தை
தூண்டிவிக்கக் குருகொடுக்க வாங்கிநில்லு
நில்லுமே யென்றுசொன்னால் நிற்பார்யாரோ
நீயென்னை விட்டுவிடு மென்பாரோதான்
கொல்லுமோ யென்றுகும்மைக் கேட்பாரோதான்
குமரிகையை வாங்கிவிடு மென்றிட்டாலோ
சல்லுமோ யென்றதட்ட வருமோபாரீர்
தாபத்த மில்லாத சினேகத்தாலே. (352)

ஆலோஅல் லோவல்வோ துஷ்டரைக்கண்
டடங்கினர் பெருமையுள்ளோ ராதலாலே
காலையன்றித் தலைகீழாய் நடப்பாராரேர்
காரிருளை நீக்குவரோ வென்பார்துஷ்டர்
வாலோ தலையோகாண் மாந்தர்தானும்
வசனித்தார்க் கென்சொலுவீர் வாழைவித்தை
போலேயல் லோயிருந்தீர் ரூபங்கொண்டும்
போயிருந்த பொய்க்கூடு மெய்யென்றீரே. (353)

எமன் கோழை.

மெய்யென்று நாமறிந்தால் பொய்காணுது
வெருஞ்சொல்லோ வுவர்நெல்லோ மேனிபாரீர்
தையென்ற மாதம்பனி யெங்கேபாரீர்
சாரித்திரம் தாலியல்லோ பெண்ணென்பீரே
அய்யமென்ற கோழைதனை யெச்சிலென்றீர்
அதுவிபரங் காணீரோ யேமன்கோளுழு
மெய்யென்ற கூட்டினுள்ளே விளைந்தயேமன்
மெய்க்குள்ளே தொண்டைகெஞ்சி லிருந்தகட்டே. (354)

கட்டுதனை நீக்கிவிட்டார் யெமனைப்போற்றூர்
காசினியி லிதுவென்ன உடன்பிறந்தான்
குட்டுதனைக் காணுமல் யோகமென்றூர்
கோரக்கர் மூலிகொண்டோர் செருமினுப்போல்
விட்டுயிரை மட்டாக்கி அடைப்பார்கண்டாய்
மெய்விலகத் தானிருந்தீர் உடலைப்போற்றீர்
சிட்டதனைப் பாய்ச்சுவிடுங் கோழைநீரே
தெருவாழை யின்றபழம் வித்தைபோல. (355)

வித்தைபோ லேஉடித்து விபகாரத்தை
மெய்விடு மப்படியில் விபகாரத்தை
தத்தைபோ லேஉடித்தீர் தத்தைகிள்ளை
தான்பேசும் வார்த்தையைப்போல் படித்தாசொன்னீர்
இத்தையே மூன்படித்தீர் கண்டீர்கேட்டீர்
இதுமேலே புதுப்படிப்பே யென்படிப்பு
அத்தையே தூரிருந்தாள் தமக்கைதாயார்
அவர்போலே எல்லாரு மெங்கிருந்தார். (356)

எங்கிருந்தா ரவர்களுமே தூரிருக்க
எவர்மக்கள் கிட்டிருந்தா ரெண்ணிப்பாரீர்
அங்கிருந்தா ரிங்குவந்தார் இங்கார்போனார்
அடுப்படியி லுலல்லோ வேறேயானீர்
தங்கிருந்தா லிங்கிருகார் யெமதுசுற்றம்
தாரித்திரம் போற்சுழல்வார் தாலியாலே
மங்குவார் கூடியுண்டு அடுப்புச்சாம்பல்
மரணத்துக் கோசாம்பல் மறலியன்பே. (357)

மறலியன் புள்ளவரே வாரும்வாரும்
மனதறிவிற் சத்துருவே வாரும்வாரும்
உரலிலடு உலக்கைமத்தி யுள்ளபேரே
உளம்பினவன் சொல்லறியா வுவமையோரே
விரலிலடு ரேகையது விரிந்தாப்போலே
மெய்யுளே கோழையது யறியாமாந்தர்
சரலியே யானவரே மலியேகல்லே
தானுகி உடைகல்லாய்ச் சரளியானீர். (358)

ஆனீரே நம்முயிருந் தானிருக்க
ஆக்கைதனே யேபிலக்க ஒத்திருந்தீர்
போனீரே நம்குலங்கள் நூறுக்குள்ளே
போனதினுல் யானழுதேன் புரையோன்போல
நானீரே யெல்லாருஞ் சமமாய்த்தானே
நாடிருக்க லாகாதா யென்னசெய்வேன்
ஊனீரே உங்களின்மேற் குற்றமில்லை
உதயத்தில் நான்பிறந்த வாய்த்தோசத்தே. (359)

தோசமென்ன வென்றாலோ நிலமாம்பூமி
தொக்குசடம் பெண்மானம் பூமிதன்னில்
வாசமென்ன தன்தையவ னுழுதகோசம்
மலடியே யாகாமல் விளைவாகாமல்
காசமெனப் போகாம லத்தப்பூமி
கரைபயிரே யாகாமல் விளைவேமுத்தி
சிஷனென்ன பிள்ளையென்ன மூலபூமி
சிறிதல்ல வெள்ளாண்மைக் களத்தில்வந்தே. (360)

வந்தோம்கா மைத்தக்குள் பட்டபாடு
மலடிபிள்ளை போராக மறந்துகாமல்
தந்தோம்காம் பின்வளர்த்து யேறிமீறி
தான்செய்த வெள்ளாண்மை யதுபோற்றானே
பிந்தோம்கா மென்றுசொல்லி முந்தித்தானே
பேர்பட்டங் தப்புமென்று விரைவிரைத்தோம்
அந்தோவந் தோர்முன்னே அஞ்சிகாமல்
ஆதரிக்க யெண்ணினர்போற் கெஞ்சினேமே. (361)

கெஞ்சினே மினயாட்கு மக்களுக்கும்
கிருகிருக்க வேயலக்து பாடுபட்டு
கஞ்சிகூழ் காமுண்டு வளர்க்கயெண்ணி
கவலையது விட்டொழியச் சாங்காலந்தான்
மிஞ்சினே மென்றுக்கால் துஞ்சொட்டாது
மேனியது வேவேலை காணிகானே
பஞ்சுநோய் தீப்படவே மேருபஞ்சில்
பருப்பளவு கெருப்பிட்ட கதைபோலாமே. (362)

இந்நூலின் பேர்.

ஆமிந்த வேற்றரசன் வந்தாற்போலும்
அவ்வரசன் குடியோடிப் போனாற்போலும்
ஓமிந்தச் சூரியனும் ஞானசூரியன்
ஊடுருவப் பார்த்தாக்காற் சொல்லேவிள்ளும்
காமிந்தக் கணக்கறிந்து பார்க்கவேணும்
கவிலுமொழி வெகுபதமே ஞானசூரியன்
தாமிந்தப் படியறிந்தால் ஞானசூரியன்
தான்சொல்லும் பச்சணத்தி லிச்சைவையே. (363)

இச்சைவைப்பா யிதன்பெயரோ ஞானசூரியன்
இதுகடக்க வெதுவென்றுற் றுன்பமாய்கை,
லச்சைகெட முன்னோர்கள் பெரியோர்சூரியன்
ஞானமெது போதமது கவிலுஞ்சாயற்
பச்சையென்ன காய்த்துவிடு மையக்கப்பாசம்
பந்தயங்க ளிட்டாப்போல் வெற்றிசொல்லும்
கச்சையென்ன வீருதுகட்டி நின்றுப்போலே
காயசித்தி காயசித்தி காயமத்தியாமே. (364)

காயமத்தி மூலவரை பசியாம்நித்தி
கனலெழும்பும் யிரையன்றி உயிருதானே
ஆயுமத்தி யுடலிருத்தி நீரைத்தானே
ஆகாஞ் செய்துவிடும் காய்த்ததியும்
மாயுமுத்தி யிதுவென்றுற் மாயாமுத்தி
மரணமதைக் கண்டறிவோர் மூன்றுற்தானே
ஓயுமுத்தி பேச்சடங்கி விழிபிதுங்கி
உணர்வுகொள்ளும் நாவெழாமற் கிடந்தார்கண்டே. (365)

கண்டுநாம் மனமரண்டு உடல்மிரண்டு
கலிநிலையைத் தேடாமல் தணிமறந்து
உண்டுநா மாக்கைதனைப் போக்கத்தானே
ஒத்திருந்த வாறேது மரணம்பொய்யே
விண்டுநாம் சொன்னுக்காற் சரியேசொல்வார்
மெய்யறிந்தோர் தங்களுடன் பொய்யிருந்தான்
மண்டுநாம் போலிருந்தாற் சித்தர்நோக்கி
மனிதனல்ல மானிடமே யெனச்சொல்வாரே. (366)

சொல்வாரென் றெனைப்பழிக்கார் குருவாம்வாலை
சொல்லெல்லாம் பிச்செறிவார் முனிவர்கூட்டம்
வெல்வாரே சாஸ்திரத்தை மூளித்தானே
மெய்யறியார் வாலைமேற் குற்றம்சொல்வார்
கைவாரே சித்தரெல்லா முனிகளோடு
கயக்கடிமை யாகார்கள் போவென்பார்கள்
கைவாரே பழசோடு புதிதில்லாட்டால்
கல்மனமும் புண்ணுக்கு கனிக்துநோவார். (367)

நோவார்கள் நோவதனைக் கண்டவாலே
நோக்காட்டாற் போடியென்றும் வாடியென்பார்
காவார்க ளில்லாட்டால் வாலியேது
கனமனித ரில்லாட்டாற் கோயிலேது
சாவார்க ளில்லாட்டா லேமனேது
தண்ணீர்க ளில்லாட்டாற் தாகமேது
தாவார்க ளில்லாட்டால் மோகமேது
சந்ததிக ளில்லாட்டாற் பிரமனேதே. (368)

ஏதேது வானமதில் மேகமீரை
யெய்யாட்டா லென்னவுண்டு வெளியேமிச்சம்
ஆகாது சந்திரனுஞ் சூரியன்றான்
அதகுடிக்க நீரில்லே அழகுமில்லே
ஏகாது மேகமதாற் சந்திரன்றான்
எப்போதுங் குளிர்ச்சியுண்டு சூடோயில்லே
வாகாது மேகினல் மேகந்தானே
வல்லபமே சூரியனார் வெயில்கொல்லுந்தான். (369)

கொல்லுமே வெளிதானு மேகமன்றி
கூடுவெளி நிறைந்திருக்குஞ் சூடதாலே
நில்லுமே மேகமது தெய்வமோதான்
நீள்விசும்பு யிந்திரியம் மேகமீரே
மல்லுமே வெளிமேகம் மண்வாயுத்தீ
மறைநான்கு மிதற்குள்ளே பிரமம்வேறே
சொல்லுமே யிதையன்றி வேறிருந்தால்
துயரற்ற புசுண்டரென வசிஷ்டர்கேட்டார். (370)

துயரற்ற ததனாலே முக்காலத்தை
தாண்டிவிக்கு மதனாலே நீருமானீர்
கயரற்ற மனிதர்போல் நீரேகேட்டால்
கழர்வதென்ன யானுமக்குக் கழருவோங்கேள்
மயலற்ற ததனாலே யென்னைக்கேட்டீர்
மயலுற்ற அருந்ததியால் கேட்கவானீர்
முயலுற்றேன் பிரமபதம் அனந்தங்கண்டேன்
மொய்குழலி விட்டதனுற் கூடிருந்தேன். (371)

கூடிருந்தேன் கூடுடைக்க வருகுதில்லை
கோழையற்ற தனாலே தடையுமில்லை
வீடிருந்தேன் மேருகிரிக் கூடேயாக
மேடையதில் நானிருந்தும் விட்டதில்லை
நாடிருந்தேன் மோபிருந்தேன் கிரியிருந்தேன்
நமதுமட மாச்சிரம மென்றிருந்தேன்
பாடறிந்து பட்டபலன் யென்கண்முன்னல்
பாதாளம் அண்டதிக்குங் கையிலாச்சே. (372)

ஞானம்.

ஆச்சப்பா கையிலைரே கையைப்போல்
அண்டமொடு மேற்திக்குங் கிழ்திக்குந்தான்
மூச்சப்பா மூனுநாசி வாசல்ரெண்டில்
மூக்கோடும் வாசியது கீழேபாய்ந்த
வீச்சப்பா மூக்கின்வழி வெளியேபாய்ந்து
மேலெழுந்த அங்குலந்தான் பனிரெண்டாகும்
போச்சப்பா போய்ப்போயே வாசிலாபம்
பொங்கியது நாசிவழி போயினரே. (373)

போனதே திரும்புதிற வழக்கம்பாரு
போகாதே போனுக்கால் மூக்கடைப்பு
ஆனதே யல்லாமல் யோகமாமோ
அறுத்தடைத்த வாசல்கண்டாற் திறக்கலாகும்
ஊனதே காயமதிற் தமராம்வாசல்
உச்சிவழி புருவமத்தி வாசற்பூட்டை
ஏனதே யப்பூட்டைத் திறக்குமார்க்கம்
எங்களுக்கு நீர்கண்ட தியம்புவீரே. (374)

பூட்டுத் திறக்க.

இயம்புவேன் மூக்கில்வளர்ந் தோடும்வாசி
இடதுபுரம் வலதுபுரம் நடுவாம்பாரும்
தயம்புமதை உட்கார்ந்து சம்மணமேயிட்டு
தலைகழுத்து உடல்நிமிர்ந்து புருவமத்தி
கோக்கமதில் வைத்திருந்து நிமையில்மத்தி
தண்ணறிவாற் பார்த்திருநீ அசைவுகாணும்
தாக்குவதி லுன்மனதைச் செலுத்திப்பாரு
தன்பமற அவ்விடத்தி லிருந்துபாரே. (375)

பாரப்பா அவ்விடத்தே அறிவாம்ஸ்தானம்
பார்த்திருந்து பழகிவரக் காலமாலே
சீரப்பா ஈழிகையாம் முகூர்த்தம்ஒன்றே
தினந்தினந்தான் பார்த்துவர மறந்திடாதே
ஏரப்பா உழுதாலோ கதிருகாணும்
யிம்மனதைத் திருப்பியிடு புருவமத்தி
நீரப்பா அவ்வாசல் திறக்கும்பாரு
நீலமணி வயிரமொடு வெள்ளைபச்சை. (376)

பூட்டு திறந்ததற்கு அடையாளம்.

பச்சைகோ மேதகமும் புஷ்பராகம்
படிகம்போல் மாதளம்பூ சிகப்புவர்ணம்
மச்சையே யவ்வாசல் திறந்தபோது
வாய்க்குமிந்த ஒளிவெல்லாங் காந்திமீறும்
இச்சையே கொள்ளுமிந்த மனமோடாமல்
இமைமத்தி கண்டவுடன் மேரேயேறு
கச்சையே கட்டினுப்போல் விடாதேபாரு
காலவாசி சிவனுயிர் மூச்சேறுந்தான். (377)

ஏறுமல்லோ ஈசிவழி யோடுமூச்சு
ஏறுமந்தப் புருவமத்தி வாசலேறும்
பாருமே யங்கிருந்து மேலேயேறப்
பழகினுல் மேலேறும் ஈசிவாரா
ஈறுமே வாசல்வழி தடைகளெல்லாம்
நீங்கிடுமே புருவமதற் குள்ளேயேறும்
காருமே மூக்குமூனை புருவமத்தி
கால்வாசி மேலேற யோகசித்தே. (378)

யோகமுற்ற யோகசித்தி யோகமார்க்கம்
யோகமுறை யோகவழி யோகதீச்சை
தாகமுறை ஈமுறையே கூறீரையே
தானறியச் சொல்லிடுவீர் சாந்தசாந்தி
பூகமுறை யோகமிது வாசல்பூட்டு
உட்புகுந்து மனதயிரை பூடுவாசல்
ஆகவுரை நீட்டிமூனை வாசல்கூட்டு
அய்யய்யா தீபவொளி யருட்செஞ்சோதி. (379)

சோதியே பெருஞ்சோதி சொல்லொண்ணாது
சுழிவாசல் தான்திறந்தோர் காண்பார்பூண்பார்
ஆதியோ யிவ்வாசல் நுழையக்காணார்
ஆர்காண்பார் மெஞ்ஞானம் அரிதுசத்தே
வீதியோ மேல்வாசல் கெதியாம்வாசல்
மெஞ்ஞான வீடதனிற் குள்ளேசென்றால்
நீதியோ தன்பமில்லை கண்ணும்வீட்டில்
செந்தனலைக் கண்டிடலாம் தெருவிற்தானே. (380)

தெருவென்ப தெதுவென்றுற் பத்தாம்வாசல்
சிறுவாசற் புருவநடு அறிவின்வாசல்
குருவென்று லவ்வாசற் திருவாம்வாசல்
கொடுங்கோபந் தானகற்றும் சமாதிவாசல்
கருவென்றால் நினைவிருக்கு முத்திவாசல்
கணக்கறிந்து பேறுவீரோ ஞானவீடு
இருவென்றால் வாராதே யிருந்துபார்ப்பீர்
யித்தனைக்குங் காரணமே கெத்திவாசல். (381)

கெத்தியுட மத்தியிலே மூக்குமேலே
நீள்புருவத் தடியின்கீழ் புருவமத்தி
தத்தியே வுள்மேடை யுள்ளோர்வாசல்
தான்திறவே ஊசிமூனை வாசல்தானே
சித்திதா னிருக்குமந்தச் சிவமாம்வாசல்
நிறைவாசல் செயவாசல் தெய்வவாசல்
கத்தியே பாராதே கம்மாபாரு
கதவையே திறந்துவிடு மறலிபாரே. (382)

பாருமே மாலுடனே பிரமனோடு
பகர்தெய்வம் யாவையுமே திறந்துகாட்டும்
வாருமே அவ்வாசல் வழிதீர்தானே
வந்தாக்கால் பேசிடுவோம் வாருமென்போம்
நீருமே அவ்வாசல் வராவிட்டாலே
நீரென்னைத் தேடாதீர் சும்மாதீரே
சேருமே யாவர்களும் வாழும்வாசல்
சிறுவாசல் பாழ்வாசல் செத்திவாசல். (383)

வாசலது வந்தாக்கால் சித்தரெல்லாம்
வாரும்வாரு மென்றழைத்து மகிமைசொல்வார்
பேசலது செய்யாதே வாயாடாதே
யிருந்தஇடம் தானிருந்து தூங்கிடாதே
பேசலது சொல்லறிந்து பேசிடாதே
பின்னுமுன்னும் பார்த்தேறு உச்சிபாரு
ஊசலது பார்த்தாரு மென்னைக்காண்பார்
ஓகோகோ நீயேறு சென்னிமீதே. (384)

சென்னியே தலையுச்சி கபாலத்தானே
சிக்கருக்க லாகாதோ சித்தாலே
உன்னியே பார்த்தவற்குத் தலைமேல்வாசல்
ஊஆஏஓ வென்றே யுற்றுப்பாரு
இன்னியே ஐயெனவே யிருத்திப்பார்த்தால்
எறிமூட்டி நிற்குமத்தப் புருவமத்தி
கன்னியே சடங்காணப் போலத்தானே
காலிவிடு புருவமத்தி சடங்காலே. (385)

சடங்கான பெண்திரளும் வாறேபோல
தாய்சிசுவின் யோகமுறை சடங்குதானே
மடங்காணும் பண்டாரம் அபிஷேகங்கள்
வாயாலே பூசையல்லோ உயிரைக்காணர்
இடங்காணும் நம்மனதம் உயிருந்தோணும்
யிவ்வுடலில் நோயெல்லாந் தோன்றிகாணும்
புடங்காணும் நம்மூடலே புருவவாசல்
பூட்டதனைத் திறந்தாக்கால் ஞானந்தானே. (386)

ஞானம் முத்தி

ஞானந்தான் நமையறிதல் மற்றோர்காணல்
நம்பினவர்க் குபதேசம் நவிலல்தோணல்
ஈனந்தா னக்கதவு திறவாதோரே
இயம்புவது பேரழகை தன்பக்தானே
வீணன்தன் சுகங்காணுத் தன்பஞ்சென்னன்
மெய்யறிவாய்ச் சொல்லறிவாய் மெய்ஞானத்தால்
மோனந்தா னுடலுயிரை உச்சியேற்றி
உடம்பகுதி கண்டவனே யூகவானே. (387)

யோகிக ளிருக்கவேண்டிய விபரம்.

யூகவான் சரிதையொடு கிரிகைகண்டு
உறமென்ற யோகமொடு ஞானப்பூட்டை
தேகமொடு தானிருந்து ஓவியைக்கண்டு
தெய்வசித்தியதின்மேலே ஞானசூரியன்
மோகமது விட்டொழித்து ஞானவீட்டில்
மொய்த்திருந்த கபாலஅறை சித்திவீட்டில்
பாகமொடு நீயறிந்து யிருந்துவாழ்ந்து
பார்த்தவர்க்கு மனிதனைப்போல் வாழுவாயே. (388)

வாழுவாய் தேறிவிடில் தேறுவிட்டால்
மடமங்கை யாகிடுவாய் சித்தர்க்குள்ளே
கோழுவாய் நீவாழச் சொன்னேமப்பா
குருவென்று சொல்லாதீர் தேறுமட்டும்
மாழுவோ மென்றுசொல்வீர் தெய்வஞ்சாரீர்
வாயறைந்தால் முத்தியென்ற தெய்வந்தானே
கேழுவோய் முத்தியென்ன சித்தபின்னே
இறுக்கர்சொல்வார் சித்தருபோல் சொல்லுவாரே. (389)

சொல்லுவார் சாஸ்திரத்திற் சித்தபின்னே
சோம்பேறி முத்தியென்ன சத்திற்கூடா
வில்லுவார் தெய்வபதம் முத்தியென்று
மென்மேலும் சித்தபின்னே சொர்க்கமென்பார்
தள்ளுவார் சடலத்தை காற்றமென்றே
தன்னுயிரின் சத்குருவே தோசியோர்கள்
கொள்ளுவார் உடலுள்ளே முத்திதானே
குமரிவிளை யாடுவது குருவினுலே. (390)

குருவென்ன ஞானமொழி ஞானதீட்சை
கொண்டதினல் ஞானகுரு சாயுச்யந்தான்
திருவென்ன குருமொழிக்கு ளிருக்குதப்பா
தீயொளிபோல் ஞானவொளி காணுமென்றார்
கருவென்ன பெரியோரி னுள்ளேதெய்வம்
காணலியோ சித்தபின்போ பெரியோரானர்
உருவென்ன சாதனையாற் பெரியோர்சொல்லால்
ஓர்மொழியே யமைந்திருக்கும் பெற்றார்பின்னே. (391)

பின்னேது உடலறிவும் பிறந்தபின்னே
பெற்றபலன் சடம்விட்டுச் சடமெடுத்தோ
என்னேது யிப்படியே உலகோர்கூடி
யியம்பினரே வியாசர்சொன்ன கதையேபோல
மின்னேது செத்தபின்பு ஒளிகாண்பதேது
வேடிக்கைப் பொய்ப்பகட்டே வீணுய்ந்தார்
கண்ணேது பார்ப்பதற்குக் கருத்தங்கேது
கவலியிட்ட மானிடர்சொல் முத்திகாட்டார். (392)

முத்தியென்ன தெய்வமதைக் காணல்கூடல்
மோகித்துக் கூடியுற வாடித்தானே
சித்தியென்ன பொருளிருந்த தெய்வலாபம்
தெய்வத்தின் பொருளல்லோ சித்தியப்பா
சத்தியென்ன யிவ்வாடல் பொருள்களெல்லாம்
தானீய வாங்கியவர் முனிவரானூர்
கத்தியென்ன காணூர்கள் அருளுங்காணூர்
கைப்பிடியாய்ப் பிடித்தாரே சித்தர்தானே. (393)

சித்தர்முத்தர் முனிவரொடு தவசியோர்கள்
செய்தனரே சரிதையொடு கிரிகைரெண்டும்
முத்தர்தான் பெற்றபலன் குருவேயானூர்
மொய்முனியுஞ் சினேகிதரே தேவருக்கே
சித்தர்தான் கூடிருக்கு மளவேதெய்வச்
செயலறிவார் கிட்டிருந்து பாடுவார்கள்
எத்தர்தான் தெரியாமற் செத்தபின்னே
யெமனுலகஞ் சென்றபின்பு முத்தியென்றூர். (394)

22 வகை சித்தி விபரம்.

என்றவர்கள் சொல்லெல்லா மிதற்கொவ்வாது
யித்தனையும் பார்த்தவர்கள் சொர்க்கமென்றூர்
குன்றூர்கள் சரிதையொடு கிரிகைரெண்டும்
கொட்டினரே யோகமொடு ஞானம்காலும்
நின்றூர்கள் கண்டுகொண்ட சித்திஐந்தும்
நேராகக் கண்டறிந்தோ ரிதுபோற்சொல்வார்
வென்றூர்கள் ஐந்துடனே இதியாம்சிருஷ்டி
மெய்சிலிர்க்குஞ் சம்மார மெட்டென்றூரே. (395)

எட்டென்ரு தூரதிஷ்டி செவிதான் தூரம்
யிருதயத்தின் வர்த்தமானம் மனதோடுக்கெவுனம்
விட்டென்ரூர் பனிரெண்டு சித்திதானே
மேலேதா னுடகெவுனம் சரீரக்கண்ணு
கெட்டேதான் நடந்தாலும் பதம்படாமல்
நீள்விசும்பில் நடப்பவர்போற் பதினேந்தாகும்
தட்டேதான் சாபானுக் கிரகம்ரெண்டு
தானிந்தப் பதினேழுக் தெய்வக்கூறே. (396)

கூரென்ன நரைமாறல் காயசித்தி
கோடியுக மிருப்பதென்ரூற் பிரமசித்தி
பாரென்ன பத்தோடு ஒன்பதாகும்
பகருகிறேன் பசிதீங்கில் ரெண்டுபத்து
வீரென்ன தானிருக்கும் பெலமாம்யானை
மெய்வலுவுக் தொட்டதெல்லாஞ் சித்தியென்ன
ஆரென்ன சொல்லுவோ யிருபதேமேல்
அரைத்தரெண்டுக் தெய்வபென் கண்டிடுரே. (397)

கண்டாரே யிப்பொருளைக் கொண்டுவந்தார்
காணுவது செத்தபின்போ யிருக்கபோதோ
தொண்டாரே தெய்வவாசல் காணப்பேரே
தொடைதட்டி யேறடக்கும் வஷ்துமாரே
உண்டாரைக் காணுமற் சொன்னதாரு
உளம்புவீர் உளமறியாத் தோசிரீரே
விண்டோரைப் பாராம லுரைத்ததாரே
விளக்கமா ரூறுனக்குச் சாஸ்திரந்தான். (398)

சாஸ்திரங்கள் சொன்னலே தவமேசெய்து
சாஸ்திரத்தை ஆதியந்த மூற்றுமாய்ந்து
வாஸ்திரங்கள் விட்டுவிட்டுக் குருவாசாரம்
மகிமைமெத்த உண்டாகிச் சித்தனகி
கூத்திரங்கள் தான்மறந்து மூத்தனகி
குருவென்ற பேராகி முனியுமாகி
பேத்திரமாஞ் சொல்லெல்லாஞ் சித்தியாகி
பெரும்பேற்றைப் பெற்றபின்பு உடலிருந்தே. (399)

A 28
N57

உடலிருந்து யிதுகண்டு தெய்வங்கண்டு
உள்மனதைக் கட்டினவர் முத்தியென்றூர்
சடமிறந்து கண்டவர்கள் பெற்றலாபம்
தானென்ன சொல்வதினித் தெரியாமூட்டாள்
குடமுடைந்தால் நீருண்டோ உடல்கவிழ்ந்தால்
கொண்டமுத்தி யெங்கிருக்கும் உயிர்போனக்கால்
நிடமுடனே சொல்லிவிட்டார் பெரியோராகார்
செப்பவில்லை சித்தர்முத்தர் முனிவர்தானே. (400)

முனிவர்பத மோபெரிது முத்திதன்னில்
மூமூச்சுக ளானலு முத்தர்தானே
கனிபதமே யிவர்சொல்வார் முழுதுங்கண்டார்
காலரைக்கால் பெறமாட்டார் முத்தியென்றூர்
தனிப்பதமே பெற்றுக்கால் யெல்லாஞ்சொல்லும்
தாரித்திரஞ் சிறுமுத்தி சிறிதல்லோதான்
இனியென்ன தெய்வத்தக் கிதுதான்வீட்டி
லிருப்பதுவே கண்டவர்க ளிச்சையற்றூர். (401)

இச்சையென்ன யிதுமேலே யிருப்பதுண்டோ
எங்கிருக்கு மிச்சைவந்து யெனக்குள்ளேரசிக்கல்
அச்சையென்ன யிதுரூபம் பொருள்களெல்லாம்
அமைந்திருக்கும் பூதஉட லண்டந்தானே
மிச்சமென்ன அண்டமதில் மலைமண்வாரி
மேல்வெளிக்கு ளிருந்ததுவும் மேலேவிள்ளும்
சொச்சமென்ன யிதிலடங்கு மெல்லாந்தானும்
தொன்றுதொட்டு வந்தவகை விபரந்தானே. (402)

106311

இந்நூலின் துகை.

விபரமாய்ச் சொல்லிவைத்தே னிந்தநூலில்
மேற்பாகஞ் சொல்லிவைத்தே னிரண்டாம்பாகம்
அபரமே யித்தனையும் ஞானசூரியன்
ஆகரெண் டாயிரத்தின் சொச்சமாகும்
உபரமாங் காண்டங்கள் வேணதெல்லாம்
ஒன்றுபோற் பாடினதை ஒன்றேசொன்னூர்
இபரமே யிதுதானுஞ் சொன்னதைத்தான்
யின்னூலே சொல்லாது அன்னூல்சொல்லிடுமே. (403)

அன்னூலு மின்னூலுஞ் சரியாய்ப்பாரு
அதிலில்லா தத்தனையு மின்னூல்சொல்லும்
என்னூலும் பார்த்திருந்தா லின்னூல்வள்ளும்
யாவர்களும் பார்க்கரிது ஆராய்ந்தோர்க்கு
முன்னூலும் பின்னூலும் யின்னூலோடு
முறைமுற்றும் ஆய்ந்தறிவோர் தெளிவுகாணும்
பின்னூலைப் பார்த்தறிந்தால் முன்னூல்சொன்ன
பெருவுரையைக் காண்பதற்கு யென்னூல்தானே. (404)

என்னூலி லண்டம்விள்ளுந் திக்குவிள்ளும்
இதுமேலே கருப்பண்டம் மேலேசொல்லும்
சொன்னூலே மத்திகின்ற மேகஞ்சொல்லும்
தொடர்வாய்வு மதியுடுக்கள் மலைமண்வாரி
இன்னூலே யிதன்கீழே வெளியுரைக்கும்
இதனடியிற் கண்டஅண்ட கிசைகள்யாவும்
வன்னூல்போ லேயிருக்கு மெந்தநூல்க்கும்
வசனிக்க யெட்டாது கருத்துக்கெய்தும். (405)

எய்துமோ பலநூலும் பாராதார்க்கு
ஏறுமோ நிட்சைவிதி யெல்லோருக்கும்
வைதுமோ கோது விவேகியோர்க்கு
வாபாதோ சுத்தமன மௌனியோர்க்கு
கைதுமோ தாராத மேலுள்ளோர்க்கு
ஞாதாவின் பொற்குருதாழ் கம்பவாய்க்கும்
பெய்துமோ போகாது பொரியுள்ளோர்க்கு
பேரின்ப மோர்பெரிதோ பெரியோர்தானே. (406)

பெரியோராண விபரம்.

பெரியோர்தா னிப்படியே பெலத்தார்வீரர்
பெய்தமழை குளிர்ந்தாப்போல் குளிர்ந்தார்ஞானம்
உரியோர்தான் மனக்குளிர ஒளியேவீச
ஊடுருவி மேலேறி யொளியைத்தாண்டி
சிறியோரே பதின்மேலே நீரைத்தாண்டி
சிலம்பொலியுந் தாண்டியதின் மேலேபாரு
அறியோரே அச்சாத்தைப் பார்த்தபின்னே
அதன்மேலே பாடுகவி வரிசைபாரே. (407)

பாரப்பா அருட்கவியே பெலமாம்பாசை
பாடுதலுக் தாளமொடு ஆடல்காணும்
நீரப்பா வேரிருந்து சீருபாரு
நீண்டமனம் யேகாமல் ஓடிடாமல்
காரப்பா ஓவிகண்ட யிடத்தைக்காரு
காக்கியனும் வந்திடுவான் ஞானசூரியன்
போப்பா சொல்லிடுவா னிடங்கள்சொல்வார்
பேர்பெற்ற சித்தர்களும் அடங்குவாரே. (408)

அடங்குவார் உச்சியிலே அமர்வார்வந்து
ஆவர்பட்ட பாடதனைச் சொல்லிப்போவார்
மூடங்குவார் பிரசோப துன்பம்போல
முனிகூட்டம் வந்திடுவார் உதவிசெய்ய
கடங்கள்பார் சாவனுட துன்பம்போல
காணுமடா ஓவிகண்டாற் துன்பந்தீரும்
இடங்கண்டால் யெல்லோருந் தானுகவந்து
யென்குழந்தை யென்றுசொல்லித் துணைசெய்வாரே. ()

செய்வார்கள் மூத்தர்களுக் தானேவந்து
சிறுபிள்ளை படுத்துன்ப மாற்றுவார்கள்
தெய்வார்கள் கண்டுகொண்டு சுவனத்தில்வந்து
தேறுதலே சொல்லிடுவார் சந்தோஷங்கள்
நைவார்க ளெப்படியோ அதுபோற்தானே
நமக்காகச் சித்தர்களு முன்னேநிற்பார்
கொய்வார்கள் கர்மமென்ற பாவம்போக்குங்
குருவென்று லவர்குருவே திருவேதானே. (410)

திருவென்ன குருவுதவி யிதுதானய்யா
தீண்டாது விட்டுவிட்டாற் பாவிதான்
பொருவென்று சொல்வாரே மற்றோர்தானும்
போயொழியார் வல்லவரும் வருவார்தானே
கருவென்ன வித்துவிடாக் காணல்காரும்
காமப்பால் நாமெடுத்த சனனநேரம்
உருவென்று துடலல்ல சித்தனுகும்
ஊரண்டச் சித்தர்களும் கண்டுகொள்வார். (411)

சீஷன் திறம்.

கண்டுகொள்வார் ஒளிதெரிந்த சீஷன்றன்னை
கண்ணான ஞானக்கண் கொண்டுதானே
விண்டுசொல்லார் அங்கிருந்து கெவுனம்பாய்வார்
மெய்சிலிர்த்து நின்றதொரு சீஷன்முன்னே
கண்டுகொள்ள வந்தனென்றே சொல்லிநிற்பார்
கதவடைத்து யிருட்டரையி லிருந்தாலுந்தான்
கொண்டுவந்து காதிலுறை யுபதேசங்கள்
கொண்டமட்டும் ஊட்டுவிப்பார் கோடிதானே. (412)

ஊட்டுவிப்பார் கோடியென்றுற் கோடியல்ல
உத்தமனே யானுக்காற் சரணஞ்செய்வார்
தீட்டுவிப்பா ரதிசயங்கள் மெத்தவுண்டு
செகசாலக் கூத்தெல்லா மெத்தவுண்டு
ஆட்டுவிப்பார் நடனங்களாடிடாதே
அம்மம்மா வென்றேநீ பாடிடாதே
நாட்டிவிப்பார் அசையாதே நில்லுநில்லு
கம்முடலை மறவாதே நினைவில்நில்லே. (413)

நில்லேதான் நினைவிலே நிற்கும்நிற்கும்
நீள்மதியும் வட்டமிட்டு ஆடுமாடும்
புல்லேநீ திரியாதே திறமாய்நில்லு
புத்திகளு மெத்தவுண்டு சித்தர்சொல்லு
வல்லேநீ யென்றுலும் விடமாட்டார்கள்
வாய்மதங்கள் பேசாதே வாயும்மூடும்
அல்லேபோ லிருக்காதே சோதிபோலே
ஆசைமெத்தக் காணும்டா அப்புஉப்பே. (414)

உச்சிநீரிறங்குந் தன்மை.

அப்புஉப்பு யெங்கிருந்த ருசியாம்உள்ளே
அப்படியே நீர்சியும் வாருபோல
தப்புஅப்பு நீரெல்லாந் தப்புவாய்நீ
சுகசோதி வரும்போது தூங்குவாயோ
இப்புகைப்பு பச்சைநீ நிறங்கும்மண்டை
யிருத்தநீ ரெல்லாமும் வாயாற்றானே
செப்புமொழி நாவழியே கொட்டும்நீரே
தினந்தினமா வோர்நாளிற் கொட்டுந்தானே. (415)

கொட்டுமடா பச்சைநீர் வலிக்கும்பல்லு
குமட்டுமடா வயற்வலிக்கும் மயங்கிடாதே
தட்டுமடா வாந்தியொடு உச்சிமுட்டி
தான்பிறழும் உடலிருந்த நீர்களெல்லாம்
வெட்டுமடா வெளியேற முட்டித்தானே
மேலேற மாட்டாமல் உடல்வலிக்கும்
மூட்டுமடா வாய்வழியே பிரண்டுருண்டு
மோகமங்கை கெற்பமதிற் பிள்ளைபோலே. (416)

கெற்பத்தாற் பிரசவித்த மங்கைபட்ட
கெற்பமங்கை யெல்லோரும் பட்டபாடே
அற்பத்தால் யின்னீரால் பிராணதுன்பம்
ஆதலினால் நீரொழிய ஒளியும்வீசும்
நற்பத்தால் நீரொழித்தார் சித்தர்தானும்
ரகமே நீக்கிவிட்டுச் சித்தர்கூடி
உற்பவித்தார் ஒளியுடனே தானும்வந்து
ஓங்கினதை யென்னசொல்வேன் சமயந்தானே. (417)

தோணுமே கூடிவிளை யாடலாகும்
தூங்குதற்கு நேரமில்லை துணையுமுண்டு
பேணுவது நாமல்ல தானேபேணும்
பெரும்பேரு வந்தபினற் பின்னுற்றானே
காணுவது வருத்தமல்ல ஓர்காள்தானும்
கண்டுகொண்ட நேரமது யிதுபோலப்பா
நாணுவது நமக்கென்ன அருளேவந்து
நடிக்குமல்லோ நொடிப்புகண்டு மெச்சினேமே. (418)

தேவி அருள்பெற்ற விபரம்

மெச்சினேனும் ஆண்டிரண்டு சொல்லிவந்தாள்
மேன்மையருள் வாலிபவள் வித்தைசொன்னாள்
கச்சிநோய் தானகற்றி மலத்தைப்போக்கி
கனஉடலை லேசாக்கிப் பிலத்துவாசி
உச்சிநீர் நீர்மலமும் லேசாய்த்தள்ளி
உண்டஅன்ன மலக்கசட்டைப் போக்கிவித்தாள்
மச்சிமா நங்கையவள் ரகம்போக்கி
மாவுடலை வளர்த்தெடுத்தாள் மெச்சிக்கொண்டாள். (419)

கொண்டவளுந் தன்கருத்தின் படியேசெய்தாள்
குடிகேடி கூச்சலிட்டாள் பாலுமீய்ந்தாள்
கண்டவளு மெந்தனுக்கோர் சேதிசொன்னாள்
கதவுதனைத் திறந்துவிடு வந்தேனென்றாள்
உண்டவளு மேல்வாசல் திறக்காவிட்டால்
ஊடுருவி வெளியில்வராள் எல்கைதாண்டி
நிண்டவளும் வெகுமுறடி உச்சிவீட்டில்
திருடனம்வட்டமிட்டு ஆடினாளே. (420)

ஆடினதோர் கணக்கறிந்து நானும்பாடி
அவளோடு நான்கூடிக் கெலித்துநின்றேன்
பாடினதை யறிந்தவளு மாடினாள்பார்
பக்குவமென் றென்னைக்கை தூக்கிவிட்டான்
கூடினாள் நான்சேர மாட்டேனென்றேன்
குமரிவேச மாறியவள் கிழவியாலே
ஓடினே னென்னைவிட மாட்டேனென்றாள்
உத்தமிக்கு நான்தேவை நில்லென்றாளே. (421)

என்றாளே என்தாயும் யெமதூரூபி
என்கருத்தி லிருந்தவளும் வெளியேவந்தாள்
அன்றாளே யின்றிருந்தாள் பழமாதேவி
ஆருக்கு மடங்காம லேயிருப்பாள்
குன்றாளே யென்றிருந்தும் வயதேமிஞ்சி
குமரிபோ லேயிருப்பாள் கொடுங்கோபத்தாய்
நன்றாளே யாகிடுவாள் சேர்ந்தோருக்கு
நாவினும் பாடிடுவாள் கேட்டதெல்லாமே. (422)

கேட்டதெல்லாம் பாடியவள் நாவாற்றானே
கிருபைவா மீவாளே சித்தரூபி
தேட்டதெல்லாந் தந்திடுவா விருந்ததெல்லாம்
கொணர்ந்திலே முத்தியது கைகண்டாப்போல்
ஆட்டதனி நாவாலும் நடிப்பதாலும்
அங்கைகொண்டு சொல்லாலும் விழியினாலும்
பூட்டதனைத் திறந்திடுவாள் வாசியாலும்
பூரிக்கச் செய்திடுவாள் ஆகாதண்டோ. (423)

ஆதாதா உண்டவர்கள் கண்டபேர்கள்
அடைக்கலமாய்ச் சேர்த்தவர்கள் யோகப்பேர்கள்
தாகாதா சமதண்டை சம்மள்சார்பில்
தக்கதெது கொள்வதெது தகாததேது
போகாதா நீர்வந்தா லெம்மைச்சேர்ந்தால்
புதுக்கருவி நில்லாதா பொய்போகாதா
வேகாதா மருபிறவி தீய்க்கிடாதா
வெளிபோலே ஒளியதனிற் கூடினுலே. (424)

கூடினு லெம்மைப்போல் நீருமாவீர்
குழந்தைகளே கண்டகனப் பலித்தாப்போலே
தேடினு லாகாது கிட்டாயெட்டா
தீங்கிலா தெவருக்குந் தானேயப்பா
நாடினுல் வெகுதூரம் சித்தர்சொல்லார்
காம்காடி யேபிருந்தாற் தானேவிள்வார்
ஓடியே போகாதே விட்டிடாதே
உள்ளவர்த்த மானமிதை உரைசெய்தேனே. (425)

நூலடக்க.

செய்தேனே யின்னூலைப் பதனம்பண்ணு
சித்தர்களும் வந்திருந்து கேட்பாரப்பா
வைவேனே நூல்கொடுத்தாற் தோசமாகும்
மக்களே சாபமிட்டார் சித்தர்முத்தர்
செய்வனே நான்சாபஞ் செப்பவில்லை
திருவருளே முற்றிலுமே காணுமட்டி.
கொய்யனே சாபமிட்டான் குறையுமென்றே
தண்ணறிவோர் தானஞ்சி ஒழித்திட்டாரே. (426)

ஒழித்திட்டார் ஒளிகுறையு மென்றுஅஞ்சி
உத்தமர்கள் தானுகி முழுதுங்கண்டால்
கழித்திட்டுப் பேசுவர்கள் ஒளியைவென்றூர்
கவலியதிற் சொல்லார்கள் சிவருக்கே
அழித்திட்டார் நூற்சொல்லிக் கிழித்தாற்போல
அய்யய்யோ முனிவர்களு மப்படித்தான்
விழித்திட்டு முக்கண்ணைத் திறக்தோரானுல்
மேலென்ன நூல்குறையாத் தொட்டார்யார்க்கே. (427)

ஆருக்கு மஞ்சாமற் சொல்லிவைத்தேன்
அவரிவரு மற்றோர்கள் சொன்னாலல்
பாருக்குட் சித்தர்களு முனிவராதி
பாரத்தை யிட்டிடுவான் நம்முன்னலே
சிருக்குள் வாலியவள் தன்னைக்கட்டிச்
சிலம்பொலியை வித்தண்டேன் சொன்னேன்மெய்யாய்
நீருக்குள் சலந்தாண்டி ஒளியைத்தாண்டி
நின்றவனைத் தாண்டஅவள் கணவன்கண்டே. (428)

கணவனெடு கணவியவள் அதற்குமேலே
கருவில்லா உடலில்லா வெளியைக்கண்டு
உணவில்லாத் தெய்வமதைக் கண்டதாலே
உடல்கண்ட சித்தர்களுக் கஞ்சிடேன்யான்
மணவனெடு கூடிவாழ் தெய்வமேலே
மறைசொன்ன தெய்வத்தைப் படைத்ததெய்வம்
வினையில்லா உருவாகும் வெளியாந்தெய்வம்
மேல்வெளியே நம்முடலே கலந்ததாலே. (429)

முனியானோர் கண்ட காக்ஷிகள்.

கலந்ததால் வெளிநமக்கே சொல்லும்வில்லும்
கர்த்தன்பகை யானனே சிறுவன்சித்தின்
உலர்ந்ததால் அப்புமண்ணும் நமக்குப்பேசும்
ஊடுருவி வீசியாடுங் காற்றும்பேசும்
மலர்ந்ததால் மதியுடுக்கள் சூரியோரும்
மாதவசி பேசிடிலோ கனிந்துசொல்லும்
வளர்ந்ததால் பிரமபூத மைக்குந்தானே
வல்லவர்கள் பெற்றதினல் முனியானோரே. (430)

முனியாகி முனிபதத்தின் மேலேதானே
மோகிப்பார் பிரமபதம் திதியாஞ்சிருஷ்டி
இனிவாகச் சம்மார மூன்றுங்கூடில்
இப்பதமே பிரமபதம் இதனின்மேலே
தொனியான பிரமஉடல் பஞ்சபூதம்
சொன்னஅப்பு உப்புடனே வாயுந்தீயும்
கனிவான வெளியுடனே அஞ்சுந்தானே
கலிவாசி யென்றமுனி சபித்தால்மாறும். (431)

மாறுமே யிதுபோலே! நடையில்லாமல்
மருவில்லா உடலதுவுங் கெவனம்பாயும்
சீறுமே கண்தூர திஷ்டிதானே
செவிதூரங் கேட்டிடுமே சூஷணத்திற்குள்ளே
வாறுமே அண்டபிண்ட வெளிகள்தோறும்
வாலியுட லேகிடுமே அண்டபிண்டம்
தேறுமே சராசரங்கள் லெகுவேசெல்லும்
தெருவிலே மானிடர்கள் நடந்தாப்போலே. (432)

நடந்தாப்போல் பறக்குமடா உடலின்சித்தி
நயனக்கண் சித்தியது யிதுபோற்பாயும்
குடந்தானே உருண்டதுபோல் வெளியிற்தானே
குருசித்தர் நடப்பதுவம் பாதைதானே
நிடந்தானே கூடுவிட்டுக் கூடுபாய்தல்
சென்மாந்திரங் காணலைப்போல் நினைவைக்காணல்
புடந்தானும் போட்டெடுத்த புந்தியாலே
பூமிமண்ணு மாந்தர்களின் நினைவுகாண்பார். (433)

காண்பார்கள் விலங்குமரம் மலைபறவை
கனநீருக் குள்ளுயிரும் மனிதரோடு
பூண்பார்கள் ஊர்வனவும் தோற்றமேழில்
பொருந்துநடை சீவர்களில் நினைப்பையெல்லாம்
ஊண்போர்கள் காண்பதல்ல வாலைகண்டோர்
உச்சரிக்குஞ் சொல்லறியாற் யெப்பாசைக்கும்
எண்பாஷை கண்டுவிடுஞ் சித்திபாஷை
இதுபாஷை பரிபாஷை வாலைபாஷை. (434)

பாசையென்றுந் பதினெட்டோ கனத்தபாஷை
பரைவாலை கண்டவர்கள் பாஷையென்ன
வீசையென்ன திரிகால வர்த்தமில்லா
வேதர்களே சாஸ்திரியே குருவானீரோ
பாசையென்ன திரிகால வர்த்தபாஷை
பரமபதங் கண்டவர்கள் பேசும்பாஷை
ஓசையென்ன சிருஷ்டிதிதி சம்மாரங்கள்
உற்பவித்த மந்திரங்கள் பாஷையேதே. (435)

பாசையென்ன சமஸ்கிருத வடமாம்பாஷை
பரிச்சுழியைக் காட்டிடுமோ மூத்தியீமா
ஆசையென்ன தமிழருத்தம் அதுவும்ரெண்டோ
ஆஹவும் வேறலவே வார்த்தைபேதம்
காசையென்ன கொடுத்திடுமோ காசுகேட்க
கையேந்தி நிற்கவைக்கு மந்தப்பாஷை
ஓசையென்ன நீட்டிடுவீர் ஞாவின்சத்தம்
உச்சரித்த மந்திரமும் அரியேதானே. (436)

வேதவிபரம்

அரியென்றால் அறியாமல் வார்த்தைசொன்னீர்
அச்சரத்தை வேறுவிதம் பிரித்தீர்கெட்டீர்
விரியென்ற வெளிபோலே வேதமென்றீர்
வேதமென்ற அரிச்சுவடி யுமக்குத்தானே
பிரியென்ற கயர்திரித்தாப் போலேநீளம்
பொய்யல்லோ வேதமென்றால் வார்த்தைதானே
சிரியென்ன நாங்களிடும் வார்த்தைபோல
தேர்வடத்தைப் போட்டவரே பேசக்காணீர். (437)

பூணூல்விபரம்.

காணீரே யோகபூணூல் சொல்லிவாரேன்
கலியென்ற மூக்கின்வழி சுவாசந்தானே
போனீரே மூக்கின்வழி பொத்தல்காணீர்
பொதுவிருக்கும் நம்மூக்கைப் பிடித்துக்கொள்வீர்
வீணீரே பூசிடுவீ ருட்காராமல்
விருதாவி லேயிருந்து குந்தியேதான்
மானீரே நீரிரைத்து ஓட்டுத்திண்ணை
மண்தரையில் நீரிரைத்துத் திரும்பிப்பார்ப்பீர். (438)

பூஜைவிதி.

திரும்பாமற் பிறர்சத்தங் கேளாப்பக்கம்
செவிடுமை போலிருந்து சம்மணமேயிட்டு
குரும்பாமல் உடல்கழுத்து தலையும்நேராய்
குருவாக வேணுமென்றால் மனதைப்பாரு
அரும்பாகு மூக்கின்வழி சுவாசமோடும்
அதைப்பார்க்கச் சொன்னரே நாமளுந்தான்
விரும்பாமற் செய்தீரே நூலிலத்தொட்டு
மேலானே ரெதினலே கொத்தத்தாலோ. (439)

இரந்தமென்ன அகத்தியன்சொற் பாஷைதானே
கிழக்குருவுஞ் சத்திரியர் வசிஷ்டர்தானே
பிறந்தமென ராமர்வீடு தனிலிருந்தார்
பிணஞ்சுடுஞ் சக்கிலிச்சி கர்ப்பம்பெண்ணுள்
மறந்தமென வியாசர்பாண் டவர்கள்வீட்டில்
வாய்நிறைய உண்டவருஞ் சூத்திரன்முன்
சுறந்தமென்ற கிருஷ்ணனுமே கோஞராகும்
சூத்திரரே யிவர்களீர் பூசிப்பீரே. (440)

பூசித்தார் முன்னோர்கள் நல்லோர்தானே
பொய்வேசம் போட்டுமே மறந்துபோனார்
வாசித்து யிருந்தநினல் வருவதெது
மக்களைப்போற் யாவரையும் பாவியாமல்
பேசித்தான் குருவென்ற தன்மைவிட்டு
பெருகாழி யுண்டிடுவோர் குருவாவாரோ
வசித்தா னுபாதானம் பூரியென்பார்
யிதுவென்ன பிச்சைசெம்பைத் தூக்குத்தானே. (441)

வேதம், உலக பேதம்.

தானேதா னோர்காலம் உலகபேதம்
சந்திப்பு வந்துவிடும் பிறர்க்கேவேதம்
கோனேதான் குருவோடு குருவானோரை
கொடியமது விறைச்சியுண்பார் அகுதோர்காலம்
வானேதான் வெளிமறையு மகுதோர்காலம்
வசனிப்பா ரெல்லோருந் தமிழைத்தானும்
தேனேபோல் வானமொழி தித்தித்தோரே
சிவந்திருப்பா ரெல்லாரும் ஒன்றுபோலே. (442)

ஒன்றுபோல் வேதமது வெல்லோர்க்குந்தான்
ஒருபாஷை யாகிவிடும் யாவருக்கும்
இன்றுபோல் நாளுமிரா இகுதோர்காலம்
இப்படியே கர்ப்பாந்திர மேதில்லாது
அன்றுபோ லின்றுநாளும் வேதம்நில்லா
ஆசாரம் பாஷையொடு நடைகள்தானும்
மன்றுபோல் பழக்கமெது வதுபோல்ஞாயம்
மாமனிதர் உலகநடை வாரிவ்வாரே. (443)

இவ்வாரு காலத்தே தர்மபேதம்
எத்தனையோ! அத்தனையு மெண்ணிலாதே
ஓவ்வாறு யென்செயலாங் காலபேதம்
ஒற்றுமையு மில்லாட்டாற் சரிவராது
அவ்வாறு தானிணங்கா மாந்தர்தானும்
அவதிமெத்தப் பட்டிடுவார் படுகளத்தில்
செவ்வாறு சோய்ந்து கூடிடாமல்
சிரழிந்து நின்றவர்கள் மெத்தவுண்டே. (444)

உண்டேதான் குருகுலமும் கலப்பைதொட்டே
உழவுதொழிற் செய்யுகிற கர்ப்பம்உண்டு
கண்டேகான் குருவானேர் கருமாதிக்கே
கையரிசி திதியரிசி புண்யதானம்
சென்றேதான் யாககுண்டம் யெக்யஓமம்
சிவனத்துக் காகவரார் ஓர்காலத்தே
இன்றேதா னெவர்வந்தார் சொன்னதுக்கே
இக்குறைக ளுண்டவர்கள் நிற்பார்தானே. (445)

நின்றேதான் போயிடுவார் ஓர்காலத்தில்
நீள்விசும்பு மாறிவிடும் ஓர்காலத்தில்
குன்றேதான் மாறிவிடும் ஓர்காலத்தில்
குமுறுமல் மேகமழை ஓர்காலத்தில்
என்றேநீ கேட்டதெல்லாம் எப்போதில்லை
இடுகாடு மாறிவிடுஞ் சுடுகாடில்லை
கன்றேதான் பால்குடியாக் கெர்ப்பமில்லை
கவலையுண்டு மெப்போது மாறிடாதே. (446)

மனம் சத்தி.

மாறுது மனக்கவலை மண்ணுள்ளகாலம்
மறைகான்கு மேழெட்டு மிருந்துமென்ன
கூறுது மறைவந்து உளத்தேதானே
கூர்மனதம் நில்லாது வாசிதானே
பாராது தானிருந்தால் மனமும்வேறே
பாவாசி மூச்சிருந்தால் மனம்பிராணன்
சீராதா யிருதயத்திற் பிராணன்தானே
சிந்தனது மனதென்ற அறிவுதானே. (447)

அறிவென்ற பிராணதெளி வதுவில்லார்க்கு
அசுத்தஉயிர் தாழுகும் மனமாஞ்சீவன்
தெரிவென்ற லாகாது மனதுள்ளோர்க்கு
சிக்கிரத்தி லறிவெய்தால் அசுத்தமாகும்
பிரிவென்றுற் தானெடுக்க யினிமேலாகா
பிறக்கும்போ தேஉயிரே அறிவேஆன்மா
மரியென்ற லறியாத மனதுள்ளோரே
மாமயக்க மூள்ளவரே மனமுஞ்சத்தி (448)

ஆன்மா.

சத்தியது பெலப்படுமே மனத்தின்சத்தி
சங்கரிக்க லாகாதே யாவராலும்
முத்தியென்ற லறிவிருக்கும் பிறக்கும்போதே
மூறைவாசி சிவனல்ல ஆன்மாதானே
சித்தியென்ற லான்மாவுந் தானேவந்து
சேர்ந்திடுமே ஞானமட்டும் ஞானமெட்டும்
உத்தியென்ற லாசார உயிரேஆன்மா
உருவெடுக்கும் பத்திமுத்தி சித்திதானே. (449)

தானென்ற மோச்சத்தில் வந்தபேர்க்கு
தாகமூண்டு மோகமில்லை சந்தேகங்கள்
வானென்ற உருவில்லை உள்ளமில்லை
வாயரைய நாவுண்டு பகையுமில்லை
ஏனென்ற சத்தமில்லை கேள்வியில்லை
எம்மக்க ளானலும் பழக்கமில்லை
தூணென்ற தம்பத்தில் வேலையில்லை
துணையுண்டு கலக்கமில்லா யிருப்புத்தானே. (450)

ஆன்மாயிருப்பிடம்.

இருப்புத்தான் வாசியிடம் ஆத்மபீடம்
இயங்காம லிருப்பதுவே சமாதிகூடம்
பொருப்புத்தான் அறிவினிலே கண்டார்காணர்
போனதையே நாடார்கள் வருதல்பார்ப்பார்
குறிப்புத்தான் சுகமதனிற் கண்டகாட்சி
கோணுமற் பார்ப்பாரே யெந்தநாளும்
விருப்புத்தா னில்லாரே விருப்பம்போல
மெய்யுடல முள்ளவரை விரும்பார்யோலே, (451)

விருப்பம்போற் றிரிவார்கள் விருப்பமில்லை
மேதினியில் நானிருந்தே னனேககாலம்
கருப்புத்தான் கண்டதுண்டு ஆண்டுமூன்று
கங்குலைப்போ லிருந்தார்கள் கவலையுற்றே
இருப்புத்தன் னிடமன்றி யாதுங்காணர்
யாதுமே யில்லாரே யானுர்காலம்
பொருப்புத்தா னில்லாமற் பந்தமற்று
பொய்புலக ராயினரே பொசிப்பில்லாதே. (452)

பொசிப்பில்லா தென்னசெய்தார் புசுண்டநாதா
பூரணத்தாய் கண்டவரே புசுண்டமூர்த்தி
பசிப்பில்லை மேய்த்தனர்காண் ஓரேயாண்டு
பழங்கிழங்கைத் தின்றனர்காண் மற்றோராண்டு
இசிப்புல்லே மச்சைகளைப் பிடுங்கித்தின்றார்
இதன்மேலே கிணற்றுநீ ரில்லையில்லை
புசிப்பில்லை யெவ்வகைக்கும் நீருமில்லை
போயினரே சிவர்களும் விருச்சம்வெற்றே. (453)

சிவர்களும் விருச்சமுடன் நீருமில்லை
திரைகடலும் நீரிறுகித் திரைகள்மட்டே
யாவர்களு மலையேறி யிருந்தோருந்தான்
அம்மலையுங் காய்ந்துவிட வைகாமாண்டில்
ஊவர்களு மில்லாமல் சத்தமின்றி
ஊர்வனமும் போயினவே மிருகமாதி
ஓவெனவுஞ் சத்தமிட்டு ஊணைத்தின்று
ஒளிகுறைத்து கண்மயங்கி உயிர்விட்டாரே. (454)

ஆருண்டு தாண்டியபின் அதன்மேல்தானே
ஆருண்டு யாருமில்லை ஆறேயாண்டு
பாராண்டு உள்ளிருந்தார் வெளியேவந்தார்
பசித்தவரைப் பாராம லுயிரோவிட்டார்
நீராண்ட மச்சமுண்டு கடலுமுண்டு
நீண்டமலை நெறியாமல் நின்றதண்டு
கூருண்டு மண்மலையுஞ் சமுத்திரந்தான்
கூடினது மூன்றுமன்றி நிலைக்கண்டேனே. (455)

கண்டேனே யிவ்விதமாய்ப் பனிரெண்டாண்டில்
காலமாலை யுண்டுண்டு உருமீனுண்டு
ப்ண்டோனே ஆகாசக் கருப்புண்டேசொல்
பார்விசும்பில் மேற்கருப்பு குறைவேயில்லை
சென்றேனே கருப்பதுவு மதிகமாகும்
தியொளிகள் மாறுமற் கதிர்மதிக்கு
இன்றேனே ஒளிபெருகக் கண்டேன்காலம்
இப்படியோர் கால்பார்த்துக் கூவினேனே. (456)

கூவியே நானழுதேன் முத்தரோடு
குறைகேட்க யாருமில்லை தனியேகூவி
ஆவியே தான்படறி கைத்துஅத்தோ
ஆகூகா வென்றழுதேன் பொருமிவிம்மி
தாவியே கேட்பதற்கு அடுத்தோரில்லை
சந்ததிக ளில்லாதா லிக்கேடுற்றேன்
மேவியே யெனைத்தேட யாருமில்லை
விரதம்விட்டாப் போல்நாட்டை விட்டிட்டேனே. (457)

விட்டேதா னிமையகிரி வடபாகத்தின்
மேலிருந்தேன் கூடுலிந்தேன் மெய்யுகொந்தேன்
கட்டேனே தோலெலும்பு சதையுங்கூடும்
கரைமயிரும் விலாவெலும்பும் புலாவுமில்லை
ஓட்டேனே சதையன்றி யெலும்புதானும்
ஊடுயிரும் வெளியில்வருங் காலத்தன்னில்
மட்டேனே கிழவனுயிர் கடையில்லாது
மறலிகையில் வருஞ்சமயம் உயிர்லாபந்தான். (458)

உயிர்லாபம் பெற்றெழுந்து வெளியேவந்தேன்
உயிரொழித்த முன்வருஷம் பனிரெண்டுக்குள்
கயர்போலே யொன்றுபட்டு உயிர்களெல்லாம்
காக்கியனு மென்னிடத்தே கலந்துகொண்ட
வயர்போலே நான்பெருத்தேன் உடலேகூடு
வாய்த்தனவே அன்றுமுதல் மறுபிறப்பு
துயர்போலே நானிருந்தேன் முன்னேனசொன்ன
சூழுலக சிவர்களே யெண்ணித்தானே. (459)

யெண்ணினதாற் றன்பமென்று மிதற்குப்பேரு
இதுகடக்க வுபாயமது வெதுவில்வாயா
உன்னித்தான் மருமலையே வந்ததாலே
உயிர்மலையில் நானிருந்தேன் கவலையில்லை
கன்னித்தான் பார்ப்பதில்லை தன்னுல்வந்து
நாடினதை யான்பாரேன் மூனிநோக்கேதான்
கன்னிதா னிச்சையுரு மனதேரூபம்
கவலையில்லை மனதருவ மில்லைதானே. (460)

இல்லையே யிச்சையுண்டு மனதுமுண்டு
இம்மனது இச்சைவழி ரெண்டுமொன்று
வல்லையோ முன்பாகம் பார்த்தபோதே
மாநெஞ்சக் துடிக்குமது பதைப்புயிச்சை
கொல்லையோ பயிர்முளைத்த நீரத்தாலே
குமுறுகின்ற நெஞ்சசைவு பதைப்பு ஆசை
கல்லையோ உடைத்திடலாம் நெஞ்சம்பொட்டல்
கண்டுகொள வேணுமென்றுல் நெஞ்சசைவாகா. (461)

ஆகாது நெஞ்சசைவு துடிப்புமார்க்கம்
அய்யய்யோ சுகதுக்கம் மனமதாகும்
போகாது பார்த்தளவிற் கேட்டலோடு
பொங்குதிரை யலையடித்தாப் போலேவுள்ளம்
நோகாது யிருக்கவென்றூற் நெஞ்சிற்பிராணன்
நுணுக்கமாய்த் தட்டிவிடும் பிலமேயாக்கும்
சாகாது விட்டிடுமோ சடலத்தன்னை
சந்திநிகள் செய்யாதோ லெகுவாய்த்தானே. (462)

லெகுவாய்த்தா னுடல்முளைத்து உயிரேபூத்து
நீண்டமனங் காயாகிப் பழுத்தரிந்தே
பருவாய்த்தா னறிவுமூல இளம்பிச்சூச்சம்
பாரறியும் நினவுடலப் பகுத்துகாணும்
தகுவாய்த்த சித்தியிதிற் பிரிந்துகாணும்
தன்னுடலி லுயிர்அறிவுக் குள்ளேதானே
எகுவாய்த்தே முளைத்தெழுந்த சித்துதானும்
ஈசரனு மால்பிரமன் யிடங்காணுப்போல். (463)

அணிமாசித்தி.

ஆனப்போல் அணிமாதி மூலஸ்தானம்
அரையிடுப்பு போகர்சித்தி கோஷக்தண்டில்
மானுற்போற் தூரதிஷ்டி நெற்றிக்கண்ணில்
மறைவேதங் கேட்டசெவி அண்டங்காது
கானுரென் ரேணைக்கண்ட கண்ணேசித்தம்
காசிமூக்கு கட்டினதால் கெவனம்காசி
ஊனுரிற் கண்டஒளி புருவமத்தி
உயரநின்ற அண்ணாக்கு அருளண்ணாக்கே. (464)

ஆக்கிநின்ற அதினுடனே பிடரிகண்ணு
ஆகெவனம் நிறுத்திவிடும் பிடரிதாரை
தூக்கிநின்ற மிவ்வேழும் அணிமாசித்தி
தொன்றதொட்டுச் சொன்னர்கள் பிடரிகண்டார்
நோக்கிநின்ற யெட்டுவிதம் சித்தாம்ஆனி
நுவலுகின்ற சாஸ்திரத்தி னிடத்தைப்பாரு
பாக்கிநின்ற சித்தியெல்லா மிதற்குள்தானே
பகரவென்றால் வெகுவிதமே அறுபத்துகாலே. (465)

குருபத்தியால் 65 சித்திகள்.

அறுபத்து காலிதழும் மேன்மையோர்க்கு
ஆகாதோ புத்தியுள்ளோ ராகினுக்கால்
குருபத்து வைத்திருத்தால் அறுபத்துகாலும்
கூடாதோ ஆறுபத்து காலுத்தானே
மறுபத்து வந்திடுமே அறுபத்தைத்தாய்
மாவுடலம் பெலத்திடுமே சுகமாம்விடு
திருபத்து வைகுண்டங் கயிலாசங்கள்
சேர்ந்திருக்கு மிக்கூட்டில் அள்ளலாமே. (466)

அள்ளலா மப்பொருளைக் குருவானேர்கள்
அவர்கொடுக்க வாங்காதே கமக்குமுண்டு
மொள்ளலா மவர்பக்கம் கமது அன்பால்
மோனியரு மறவார்கள் கல்லோரைத்தான்
கள்ளெல்லாங் குடித்தாலுந் தள்ளிப்போடு
கள்ளமன மிருக்குமிடங் தேடிப்பாரு
உள்ளெல்லா மொழிந்திருக்கும் உடல்களெல்லாம்
ஒன்றுமற வேண்டாம்நீ கண்டுகொள்ளே. (467)

கண்டுகொண்டாற் குருவுடனே தூரநில்லு
கண்ணெதிரே நில்லாதே விலகிநில்லு
உண்டுகொளப் பின்னேயிரு முன்னேராதே
ஓடாதே ஒழியாதே விலகிடாதே
தொண்டுபண்ண வையார்கள் யெல்லாமுண்டு
தூங்கினரைப் போலிருக்கார் பெலன்தானுண்டு
விண்டுசொல்ல மாட்டார்கள் சாஸ்திரம்போலே
மெய்முழுது மருளடைந்தார் விவேகியோரே. (468)

விவேகிபோ லேயிருப்பார் சாஸ்திரம்போலும்
மெய்போலுந் தானிருப்பார் யெல்லாம்உள்ளோர்
சுவேகிதான் கரையில்லாக் கணக்கில்லார்கள்
துன்பமறச் சொல்லிடுவார் சோதிகண்டோர்
தவேகி ஒளிகண்டால் வேதம்வாயே
சாஸ்திரங்கள் பயப்படுமோ அவரைக்கண்டால்
அவேகியரோ காணுர்கள் விவேகிகாண்பார்
ஆரிவரோ முத்திவீட்டை வைத்திருப்போர். (469)

இருப்பார்க ளிருந்திந்த விடங்களெல்லாம்
எக்குமவர் ஊராகும் வசமேயாவார்
பொருப்பார்கள் ஒன்றினிலும் பற்றில்லாதார்
பொருட்பற்று ஒன்றுண்டு அருட்பற்றேதான்
வெறுப்பார்கள் கைப்பற்று மனதில்யில்லார்
மேதினியிற் தமைத்தேடும் பற்றுள்ளோர்கள்
ஒறுப்பார்கள் மற்றதெல்லாம் அருளாற்தானே
உட்பற்று நீங்காது கல்லோருக்கே. (470)

கல்லோரிற் தமையறிந்த யிருவர்சேரில்
நாம்பேசு முறையதுபோல் சபையுங்கூடி
அல்லோரில் உரைநிறுத்திச் சும்மாகின்று
ஆருக்கு மொத்திருப்பார் பெரியார்போல
வல்லோரில் வல்லவரே பெரியோர்க்குள்ளே
வல்லபங்கள் மெத்தவுண்டு கோடிக்கொன்று
இல்லாத மனிதர்பல கோடிக்கொன்று
இப்படியே சித்தரிலுங் கோடிக்கொன்றே. (471)

கோடியிலே ஒருவனல்லோ சிவன்முத்தன்
குறைமுத்தன் அரைரிஷியே தவசிற்பாதி
வாடியிலே போகாதார் பத்தர்தானே
மனதிலே போக்காதார் பித்தனுகும்
கூடியிலே வாராதார் பள்ளத்தாரே
குளித்துக்கரை யேறுதார் அழுக்குள்ளாரே
பேடியிலே குறியிருக்க ஆணுகார்கள்
பெண்கொண்டாப் போலல்லோ தேறுமாரே. (472)

மாரென்ற விளக்கமா ராசாரங்கள்
மக்களே செருப்பென்ன உடல்காப்பென்ன
சேரென்ன குழுத்துவிடும் காயும்பேயும்
தீண்டாமற் காத்திருக்கும் வைத்திடத்தே
வீரென்ன மூதேவி கழுதைதானும்
மெய்கலிந்த யேகாலி தூன்பங்கார்க்கும்
ஆரென்ன சென்றுமுத்தி குருவுக்தொட்டு
ஆகாயம் பறப்பனபோற் ஓடுவாரே. (473)

போவார்க ளப்படியே குருவுக்தானே
போயேற மாட்டாமல் முற்றுக்தானே
வாயேறப் பறப்பார்கள் உள்ளடங்கி
வல்லபங்கள் முழுவருளுங் கிட்டுங்கிட்டும்
தாயோர மிருக்கார்கள் முழுதும்வாயா
சத்தகிக ளானுக்கால் முழுதும்வைப்போம்
போயோரம் நில்லாதே புருவமேலே
பூட்டுடைத்துங் காணுரே பொருள்காண்பீரே. (474)

பூட்டுத்தாண்டிப் போக அதிசயம்.

காணீரே புருவவாசல் பூட்டுத்தாண்டி
கணக்குடனே போவீரே மூக்குகேரே
பூண்பீரே மூக்குமூனே புருவமத்தி
புகுத்துகொள்ளும் வாசலது மணியுங்கேட்கும்
ஆண்பீரே யதிலிட்டுத் தூண்டுதூண்டு
அரகரா வெனமுழங்கும் காதிற்கேட்கும்
ஞானவீடு காட்டிவிடும் மத்தளங்கள்
கடிக்குமல்லோ பேரிகையும் டங்காசத்தம். (475)

சுத்தமொடு தம்பட்டங் கேட்டலோடு
தாளமென்ன தித்தியொடு புல்லாங்கோசை
வெத்தியென்ன செயகண்டி மேளதாளம்
மென்மேலும் உப்பரிகை மெத்தவுண்டு
கத்தியென்ன நீபாரு யாருங்காணுர்
கனலொளியும் வீசிவிடு முன்னேசோதி
முத்தியென்ன பிதுவென்ன வாசல்தாளம்
மூணவழியே கடக்கையிலே தோணுந்தானே. (476)

தோணுங்காண் மற்றதெல்லா மறைந்திருக்கும்
தும்பிக்கை யோன்முருகன் துலங்குவார்கள்
பேணுங்கா ணிதவழியே நின்றிடாதீர்
பிரபலங்கள் மெத்தவுண்டு கேட்கவேண்டாம்
மாணுங்காண் கண்டிடலா மிதுமேற்தானே
மக்களே கோடிசத்தி வருகும்பாரு
வீணுங்காண் பெண்சத்தி மாயாரூபம்
விரித்துரைக்க பெட்டாது தடுக்கும்பாரே. (477)

தடுக்குமே கோடான கோடிசத்தி
தான்வந்து போராடி மாழுமாழும்
அடுக்குமே பின்னுலே அதுவும்வந்தே
அய்பய்யோ யெத்தனையோ யெண்ணவுண்டோ
விடுக்குமே வாசல்வழி தடைகள்தானே
மேலேற வொட்டாது ஒளிவிற்சிக்கும்
கொடுக்குமோ முத்தியென்ற திரிகாலத்தைக்
கூருது தடுத்துவிடும் மேலேயேறே. (478)

யேறுவது பிச்சாமல் விலகிடாமல்
பிருத்தயிடக் தாண்டிநீ யேறுயேறு
மேறுவது லெகுவாகும் யேறுவாய்நீ
மெய்புருவம் நடுநெற்றி விரைந்துயேறு
நேறுவது அவ்வழியே வாசல்கண்டு
சிறுவாசல் வந்தவழி முத்தியாகும்
கோறுவது புருவத்தில் பூட்டைக்கண்டு
குருவாகி வந்தாக்காற் சேருவீரே. (479)

சேருவீர் சுழிமுனையார் தெருவின்வாசல்
சிக்கருத்த உச்சிவழி சிறந்தவாசல்
போருநீர் போடுவீர் புருவவாசல்
பூட்டிருக்கு மேடையது வலுவுமெத்த
காருநீ கெஞ்சிருக்கும் பிராணன்தானே
கதவையுமே திறந்துவிடும் போவிருள்ளே
நீருமே மெய்ப்புருவத் தமர்க்குள்ளேகி
நினைவையுமே யகிலிட்டுத் தூண்டுவீரே. (480)

தூண்டுவீர் தூண்டியிலே புருவத்தட்டும்
துயர்செய்யுங் காதடைக்குங் கண்ணுமூடும்
ஆண்டுபா ருடல்மயங்குங் கிருகிருக்கும்
அத்தனைக்கும் உடல்வலிக்குந் திறக்கும்போது
கூண்டுபார் நடுநடுங்கும் புலன்களெல்லாம்
கொட்டாவி விட்டாற்போற் சோரணிக்கும்
மாண்டுபா ரத்தயிடஞ் சும்மாதானே
வல்லவர்கள் காண்பார்கள் மற்றோர்தாண்டார். (481)

தாண்டுவா ரிதபெரிதோ யோகியாலே
தரண்டலாம் புருவமத்தி தரண்டலாகும்
மாண்டதினு லென்னபலன் குருவாய்வாரும்
வையகத்தோ ராகாமல் வக்குசேரும்
பாண்டதனு லேயிருக்கும் மரணந்தானே
பாரென்ன யித்தனைக்குஞ் சாம்பல்தானே
கூண்டிதனு லித்தனைக்கும் லேசுதானே
கூறினேம் நெத்திமத்தி புருவப்பூட்டே. (482)

பூட்டென்ன பொருளிருக்குந் திறந்துள்ளே
பொக்கிஷங்கள் மெத்தவுண்டு களவுபில்லை
மூட்டென்ன சொன்னரே முறைகள்சொல்லி
முனைமுக்கு மேலேதான் நேரேபாரு
நீட்டுநீ உட்புகுந்தால் வெளிச்சங்காணும்
தீபவொளி கண்டிடலாஞ் செங்கண்ணைதான்
ஆட்டுவதி லேதுழைத்து யிருந்தகொண்டால்
ஆதித்தன் கோடியொளி யமர்ந்துநில்லே. (483)

நில்லப்பா யிப்படியே உச்சிமட்டும்
நோக யேறையிலே வினைதங்காணும்
கல்லப்பா உன்மனது யெங்கேபோரு
கவலையெங்கே அலைவெங்கே துன்பமெங்கே
செல்லப்பா மானிடனே வேலையெங்கே
திருவெங்கே குருவெங்கே சிஷனெங்கே
மல்லப்பா யெதிரெங்கே மனிதர்க்குள்ளே
மாமனிதன் சிறுகுழந்தை வசனிப்பானே. (484)

மனிதர் செய்கை.

வசனிப்பான் சொல்லெல்லாந் தெய்வமார்க்கம்
வாயாலே சொல்வானே அண்ணாவாலே
விசனிப்பான் மக்களையே யெண்ணித்தானே
வேறுவித மெண்ணமில்லை கவலையில்லை
வசனிப்பான் கருமார்க்கம் விதியின்மார்க்கம்
மங்கையர்க ளேயறுத்த புலம்பம்போல
விசனிப்பான் தன்னருகி லிருந்தேதார்புத்தி
வேறுகும் நாளறிந்து நாடுவாரே. (485)

நாடுவார் மரணத்து நாளறிந்து
நம்முடலைச் சாம்பலென நினைவிலெண்ணி
கூடுவார் தாண்டுதலே தர்மமாகும்
குமரிவந்தால் மலைத்தடையே கடலேகோடே
பாடுவார் வந்தாக்காற் தாலிபோட்டு
பாடகத்தை யிட்டாப்போற் விலக்கேயிட்டு
ஆடுவார் யெப்பொழுதும் உபதேசங்கள்
ஆச்சரியஞ் சொல்லெல்லாம் புதிதுதானே. (485)

புதுப்புதிது நகைபுதிது புதிதேஆடை
பொங்குநடை யெங்கும்உடை மின்னற்தோடை
பதுப்புதிது சொற்புதிது விரிந்தகூந்தல்
பையரவம் புதிதல்லோ உடையும்ஆடை
விதுப்புதிது அரைபுதிது தளிரேமேனி
மெய்புதிது இடைபுதிது விலையும்புதிது
அதுப்புதிது இசைபுதிது ஓசையும்புதிது
அழகான அங்கமது புதிதுமாச்சே. (487)

மாசுவெகு தூள்புகை சோடியான
மாதவளும் வந்தாக்கால் தெய்வம்நீரு
ஆசுயித யில்லறத்திற் காயப்பெண்ணே
அங்கமெல்லா மாபரணம் வீசும்பெண்ணே
வீசுயித அணிதுணியும் சேலைதானே
மெய்சிலிர்க்கும் நடைமயிலே அன்னமாதே
காசுயெது பாசுயித நேசுயீது
காணுத மோசுயித கரைகண்டாரே. (488)

கரைகண்டோ மென்பார்கள் களத்தவீரர்
கரையென்ன காண்பீரோ மனதில்லாரே
விரையென்ன விரைத்தாலும் பூமியேர்க்கா
மேனியைப்போ லிப்பூமி யேற்குமோதான்
துரையென்ன காண்பீரோ மனதுசேர
துரியபதங் கண்டிடலா மிதுகாணுது
மரையென்ன சொல்லிடுமோ வேதக்காணர்
மங்கையரைக் காண்பதற்கு மனமோ ஆழம். (489)

ஆழமே மனதாழங் கருத்தினுழம்
ஆறிவார் கிட்டிருந்தங் காணமாட்டார்
பாழமே பாதாளம் பெண்கால்மத்தி
பார்ப்பதண்டோ மூற்றிலுமே விவகாரத்தை
நீழமே யிதுபெரிதே நெற்றிக்கண்ணும்
கோவரவுந் தான்சிரிதே விபகாரங்கள்
ஊழமே யிதையெடுக்கும் யித்தைபோல
ஊராது சதைதிரண்டால் ஊணையொட்டும். (490)

ஊணையொட்டு மெய்சிலிர்க்கும் நடையோடாது
உச்சரிக்கும் பல்நிறக்கும் கையுந்தாழும்
ஆணையிட்டும் குருவைவிட்டும் சாஸ்திரம்விட்டும்
ஆகாய வெளிமட்டுங் கவலையொட்டும்
ஏனைவிட்டு நீங்குவது யித்தகாளாய்
என்னுளும் நீங்காது சாகும்காளோ
வானைவிட்டு நீங்காத யிருளேபோல
வந்துவந்தும் போகாது மயக்கந்தானே. (491)

மயக்கந்தான் பெண்சுகமே மேடைகூடம்
வாய்த்தாலும் உப்பரிக்கை கூடகோபுரம்
இயக்கந்தான் போதாது வெளியேதானே
எகினு லிப்படியே வெளியுந்தோணும்
தயக்கந்தான் கேட்டதெல்லாம் வேணும்ராணி
தாதிகளுஞ் சேடிகளும் சோடிமாதும்
வயக்கமே யிவர்களுக்குப் பூஷணந்தான்
வாயாலோ ஆபரணஞ் சொல்லல்யேதா (492)

ஏதுசொல்லப் பூமியின்மேல் வினைந்தபெண்ணு
இவள்பூமி செங்கைமலி யிதனிற்தானே
வாதுசொல்ல மீடிதுவோ விண்ணுஞ்சந்திரன்
வாரியதை யிட்டாலும் நகைதாலுகும்
ஈதென்ன பெரிதோதான் குற்றஞ்சொல்வார்
இத்தனையுஞ் சுமந்திடுவாள் பாரிபாரி
போதுசொல்லக் காணுது அந்தரங்கம்
புலாஉடலில் மூலசுகம் யென்னவுண்டோ. (493)

உண்டோதான் ஆளற்பூமி சம்சாரிக்கே
உழுதழுது பலன்காணு உகமையேதோ
மிண்டரே சுகமதனில் கண்டுஞாயம்
வெள்ளாண்மை யெடுக்கவென்றூற் கொடுக்காதய்யா
விண்டவர்கள் சொன்னதெல்லாஞ் சேர்த்துப்பார்த்தால்
மெய்பெரிதோ உயிர்பெரிதோ தினைவாய்ப்பாரு
கண்டோர்க ளெத்தனைபேர் ஆயிரத்தின்மேல்
கன்னிகையை மணம்புரிந்தும் பாக்கிதானே. (494)

பாக்கியே தீர்வதென்ன உயிரேசேர்ந்து
பக்குவத்தால் மனம்ரெண்டுங் கூடிமாளும்
தாக்கியே மனம்பிரிக்க யெட்டாதய்யோ
தங்கச்சி யானலுந் தனையாம்பெண்ணு
நோக்கியே யில்லாட்டால் மனந்தான் ஆணு
நாருணும் ஓர்பெண்ணும் வேணுங்காணும்
ஆக்கியே அக்கினியே நீரேசேர்த்தால்
அமுதெனும் பாவனையே விரும்பச்சொன்தம். (495)

சொந்தமென்ற ஆண்மனதும் உயிருந்தானே
தொல்லுலகிற் பெண்மனதும் உயிருஞ்சேரும்
கந்தமென்ற உடல்கலந்தாற் பொழுதுபோக்கும்
காரிழையும் வீரனுமே ஆண்பெண்ஆன்மா
தொந்தமெனச் சோடியது பிரிக்கக்கூடா
தொல்கண்ட மவ்வளவு மிப்படித்தான்
பந்தமெனத் தானிருக்கு மனமுஞ்சீவன்
பழங்கதைகள் சொல்வதுபோ லல்லதானே. (496)

அல்லஅல்ல யெம்மூர்த்தி தனியாய்நின்றார்
ஆகாகா வாலையவள் நம்மைச்சார்ந்தாள்
சொல்லல்ல பெரியோரும் பெண்ணேயென்றால்
தூளடியிற் வீழ்ந்திடுவார் மனந்தான்சாதி
நில்லவல்ல சித்தர்களும் பெண்ணைச்சிக்கி
நேர்வழியே திரும்பிவர வெகுநாளாச்சு
இல்லவல்ல நாமென்ன தொந்தம்போக்க
எத்தனித்தா லுடலுயிரு மனமுந்தானே. (497)

உடலுயிரு மனந்தானே உடலுலகத்தும்
உயிர்லகத்து மனந்தானேயு மொன்றுய்ச்சேரும்
கடலிலுரு நீரிலுப்பு கூடினுப்போல்
காலடியிற் சேர்வதுவே சுகமேவிதி
அடல்செய்யும் ஐம்பூத நினைவேயாதி
ஆச்சரிய மல்லவிது அண்டில்போல
குடல்கண்டு பசியன்னம் விரும்பலேபோல்
கொண்டுடலும் மாய்கையால் மோகந்தானே. (498)

மோகந்தான் மறப்பதற்கு முடியாமற்தான்
முனிபதத்தைக் காணுமல் விட்டோம்விட்டோம்
தாகந்தா னிதுவிடாது யெத்தக்காலம்
சாக்காடு வந்தாலும் பின்னுற்செல்லும்
யூகந்தான் வீணுகு மறிவுள்ளோர்க்கு
உற்றதனைத் தள்ளுதற்கு லேசுதானே
பாகந்தா னிதுவன்றி வேறேபந்தம்
பையரவம் போலவுமே வேறேயுண்டோ. (499)

உண்டேதான் கோவில்குளம் மூலஸ்தானம்
ஒருபெண்ணே அல்லமெத்த உண்டுஉண்டு
மண்டேதா னறியாமற் குளத்தில்வைத்து
மறுநீரைத் தானறியத் தெரியாதேபோல்
உண்டேதான் பலகாலும் தீர்த்தயாத்திரை
ஊடாடிக் கோவில்குளம் பார்த்துங்கேட்டும்
தின்றேதா னறியீரோ கல்லோநீரே
தேவடியாள் போலிருக்கு அம்மைகொண்டே. (500)

கொண்டேதா னிருக்காரே சாமியென்பார்
குமரியில்லாக் கோவிலுண்டோ சுத்திப்பாரு
சென்றேதான் பெய்யென்றும் தள்ளுவார்கள்
சிறுபிள்ளை குழந்தையுண்டு வாசல்தானே
மொண்டேதா னிருக்கார்கள் குடும்பந்தானே
மொய்குழலார் பெண்ணுக்கே கோவில்விடு
கண்டேதான் காமிருந்து பொருள்களெல்லாம்
கதவடைத்து வைத்திருந்த தெல்லாமீர்தோம். (501

காந்தோமே கோவிலுக்கோ சாமிக்கோதான்
இவர்மனைவி அம்மையவள் பெண்ணுக்கோதான்
காந்தாமே யிந்தோமே பட்டருக்கோ
காம்வைக்க யிடமதுயில் லாததாலோ
தாந்தாமே ஒவ்வொருவ ரீந்ததாலே
தன்வயத்துக் கெட்டாதே தேவஸ்தானம்
ஆந்தமே மத்தளங்கள் கரியாம்யானை
ஆர்பொருளே யுண்ணுதது முத்தியுண்டோ. (502)

முத்தியே காம்தேடச் சாமியுண்ண
மோகித்தோம் காமறியத் தோணுதில்லை
சித்தியோ வருவதில்லை திரிகாலங்கள்
செபமில்லை திரிகாலந் தோற்றுதில்லை
தத்தியே யேகுதில்லை சாங்காலங்கள்
தானிருந்து மெய்யுடற்குத் தானுந்தோணை
உத்தியோ சேருதில்லை யுடற்கர்மந்தான்
உடலிலே தேடினது மனதுதானே (503)

பொய்க்குரு.

மனதென்ன பொய்க்குருவே யுகங்கள்தோறும்
மடங்கட்டுஞ் சாமிகளே சாமியாரே
தினதென்ன ஆச்சிரம முத்தியுண்டோ
நீர்நின்று காமிருப்ப தெந்தக்காலம்
உனதென்று நீயிருக்க நாங்கள்வந்தோம்
ஒருபலனுங் காணமினி உண்மைசொல்லும்
தனதென்று காமிருந்தோம் நீருஞ்செத்து
சாகும்நாள் கொடுப்பீரோ மனத்துப்பூட்டே. (504)

மனத்துள்ள பூட்டதனைத் திறக்கமாட்டோம்
வாய்கொண்டு சொல்லிடுவோம் வார்த்தைகேட்டு
புனத்துள்ள மாமுள்ளு யெடுக்கமாட்டோம்
பொய்புடற்கு நெய்புண்டு சடைவளர்ப்போம்
கனத்துடலே பில்லாட்டாற் சண்டைசெய்வோம்
கையிலே தர்க்கமுண்டு குறடுபோலே
வனத்துள்ளே யாம்போகோம் நீரேபோகும்
மலடிமகன் சன்யாச மெடுத்துக்கொண்டே. (505)

எடுத்துக்கொண் டேயோடி யிங்குவந்தீர்
எங்கள்மனம் நோகாம லிருப்பதற்கோ
தடுத்துக்கொண் டோடிவந்தீர் முத்திகொள்ளோ
தானடிக்குஞ் சண்டாளர் போலேயல்லோ
அடுத்தக்கண் டாருயிரை வேரைப்பற்றி
அமாவாசி யிருட்டினிலே கன்னமிட்டீர்
உடுத்திக்கொண் டிருந்தீரே கோவணத்தை
உத்தரிய மெங்கேவைத்தீர் அங்கவஸ்திரமே. (506)

வஸ்திரங்கள் மெத்தவுண்டு குல்லாமாலே
வாசலிலே திறவாளே திறந்தபின்பு
அஸ்திரங்கள் வைத்தாப்போல் அங்குவைத்தே
அலையுறேன் பொருளுண்டு தெருவிலேதான்
மெஸ்திரங்க ளெனக்கில்லை வெரும்பாழுண்டு
வேணதெல்லா மதிலுண்டு பழம்பாழுள்ளே
மூஸ்திரங்க ளெத்தனையோ பெற்றபேர்கள்
முறிந்தோடிப் போனவர்கள் அனந்தமாமே. (507)

அனந்தமுண்டு அவ்வாசல் திறக்கமாட்டார்
அதுவழியே நூல்படியே யேணியேத்தம்
அனந்தமுண்டு வாசலிலே காவற்காப்பார்
அங்கங்கே தடைசெய்வார் காவல்காப்பார்
அனந்தமுண்டு நாம்மீறிப் போனுற்றானே
அவர்களையுங் காணுதே அழிந்துபோவார்
அனந்தமுண்டு அதிசயங்கள் வேலையில்லை
அப்பாழே பாழ்பாழே பாழேவீழே. (508)

மூப்பாழ்.

வீழென்றும் பாழதனில் உச்சிப்பாழை
மெய்சிலிர்க்கும் கள்ளமூர்த்தம் அமூர்த்தக்கள்ளு
ஊழென்றும் பிறகென்ற உடலின்கர்மம்
ஊழ்பாழே மனம்பாழே உச்சிபாழே
வீழென்று சொன்னரே பாழாம்வீட்டில்
மெய்யரே வந்திடுவீர் குருவேஅய்யா
ஆழென்று சொன்னரே அப்பாழப்பாழ்
அப்பாழைக் கடப்பதற்கு மூப்பாழ்தான்டே. (509)

மூப்பாழே மூக்கண்ணை மறைத்திருக்கும்
மோகக்கண் திறந்திருக்கு முன்னேதானே
இப்பாழே தாண்டாமல் அப்பாழ்தாண்ட
எத்தனிப்பீ ருச்சிப்பாழ் தாண்டுதற்கே
தப்பாழே யாகாது ஒழிப்பாழ்கண்டு
தூங்காமற் தூங்கிவிடு ஒளிக்குள்ளேதான்
கைப்பாழே ஒளிதாண்டி வெளியிற்சென்றால்
கரையில்லா வொளிவீசும் உச்சிக்கிழே. (510)

உச்சியதின் கீழிருக்குங் கபாலவட்டம்
ஊடேதான் நீயிருந்து ஊஞ்சலாடு
கச்சியதின் கிளிமொழியாள் ஊஞ்சலாட்டக்
காலிட்ட மண்டபத்தில் தொட்டிலிட்ட
மச்சிலியின் பாலுண்டு வாமப்பாலை
பகுத்துண்டு நீயிருந்து தூங்குவாயேல்
செச்சையதின் வீடிதுவே அழகாமேடை
தீபவொளி கண்கூசுந் தூங்கிடாதே. (511)

தூங்கிடா தேயிருப்பீர் ஒளியாற்தானே
தூங்குமோ ஒளிக்கண்ணு தூங்கிடாது
வாங்கிடா தேயிருப்பீர் சுகத்தினுலே
வல்லபங்கள் மெத்தமெத்த ஒளியாற்தானே
ஏங்கிடா தேயிருந்தார் கண்டோரெல்லாம்
எங்கேயென்று கேட்டாலுக் தானேதோணும்
ஓங்கிநின்ற மறைப்பெல்லாம் தானேமாளும்
உச்சரித்தா ரெச்சரிக்கை யுன்னுட்தானே. (512)

தானேயான் கண்டதொரு ஒளியினுலும்
தமர்வாசற் திறப்பாலும் உச்சியாலும்
கோணுதே ஆன்மாவில் நின்றதாலும்
குருகாடி சாதனையா யேறலாலும்
வானுடி மேல்நோக்கிப் பார்த்ததாலும்
மணங்கண்ணும் புருவமத்தி புகுந்ததாலும்
ஊனுடி கோபுரத்திற் சென்றதாலும்
உயிர்மனமும் புருவவழி உச்சியாலே. (513)

கபால நாடி.

உச்சியா மூடலுச்சி சுழினையுச்சி
உண்ணாக்கு அண்ணாக்கு மேலேஉச்சி
இச்சியாம் இடுப்பிடையிற் பீசமத்தி
இதுகாடி நடுகாடி கோசந்தண்டு
குச்சியாங் கோசபீச தண்டைத்தொட்டு
குருகாடி நாக்குவரை கயரேபோல
நச்சியே போய்ப்பாரு நாக்கண்ணுக்கு
நடுமண்டை உச்சிவரை கபாலநாடி. (514)

நாடியே யின்னுடி நாடிப்பாரு
நம்மறியும் உடலுயிருக் தாங்கும்நாடி
ஓடியே பிராணனது ஆடும்நாடி
உத்தமனு யிருக்கின்ற நாக்குநாடி
தேடியே நவத்துவாரஞ் செய்தநாடி
சிறுநாடி உருநாடி குருவாம்நாடி
பாடியே பேசுகின்ற நித்தநாடி
பையுடலில் நடுநாடி வார்த்தைகாடே. (515)

வார்த்தையே நாடியென்ற மூலநாடி
வாய்ச்சங்கு நெஞ்சுவயர் கோஷபீஷம்
ஏர்த்தையே யின்னுடி அண்ணுவிற்தான்
இதுதுடர்ந்து உச்சிமூட்டி கோஷமூச்சி
பார்த்தையே ஆதியந்த மிக்தநாடி.
பலபேருஞ் சொல்லவில்லை நானேசொன்னேன்
நேர்த்தியே யிதுவழியே மூலப்பிராணன்
நேரேறும் நிமிர்ந்திருந்து உட்கார்ந்தாலே. (516)

உட்கார்ந்தால் உடலசையா மார்க்கத்தாலே
ஊடுருவி பேறிவிளை யாடும்பாரு
உட்கார்ந்தால் நாடியது நிமிருந்தானே
உயரவே மேல்நோக்கும் நாடிமார்க்கம்
உட்கார்ந்தால் மண்டைசுத்தும் முன்னேதானே
உன்முகத்தில் புருவமத்தி உன்னிமுட்டும்
உட்கார்ந்தால் முட்டியந்தப் புருவமத்தி
ஊடேதான் ஓடிவரும் சபாலஉச்சி. (517)

உச்சியிலே வந்தபின்பு யிறங்காமற்தான்
உருண்டுவிளை யாடுமது வட்டமிட்டு
மச்சியிலே மேலிருக்க யிடமும்உண்டு
வாலியென்று சொல்வார்கள் முத்தரெல்லாம்
அச்சியிலே சுத்தலைப்போல் வட்டமாடும்
அம்மம்மா அதனழகு யென்னசொல்வேன்
பச்சியிலே கிளிபோலே வர்ணங்காணும்
பலவிதமே சோதியொளி வாலிரூபம். (518)

ரூபந்தான் நிரண்டுருண்டு வாலியாகும்
கொடிக்குள்ளே சுத்திவரும் மனவேகந்தான்
தூபந்தான் ஒளிமிகுதி கோடிசூரியன்
தூண்டாத ஜோதியொளி வீசும்பாரு
சாபமொடு வாஞ்சொல்லும் மேன்மைசொல்லும்
தங்குதற்கு யிருப்பிடமுங் குறியுஞ்சொல்லும்
தாபந்தான் போக்கிவிடும் குருதானெங்கும்
சங்கித்தார் சிலகரைப்போல் சொல்லும்பாரே. (519)

பெயர்சொல்லும் ஊர்சொல்லும் வீடுஞ்சொல்லும்
பின்புவரும் காரியங்க ளெல்லாஞ்சொல்லும்
துயர்சொல்லுஞ் செல்லாது சுகமேயாகும்
துன்பம்வருங் காரியத்தை முன்னேசொல்லும்
அயல்சொல்லுங் கேளாது தன்னிப்போல
அண்டினரைச் சேகரிக்குந் துணையுஞ்செய்யும்
மயல்சொல்லும் வாராது செயலினுலே
மனம்வென்றுல் மனமானுள் வாலியானுள். (520)

ஆனுளே உடல்வாலி யாக்கிக்கொண்டாள்
அதுவென்ன யிதுதானே காடிக்குள்ளே
ஆனுளே உயிர்மூச்சு சிவன்ஆன்மா
அம்மனதும் அறிவுகூனே புருவத்தாண்டி
ஆனுளே நெற்றிவழி உச்சிமார்க்கம்
அத்தடைகள் நீங்கிவிடும் வாலியாகும்
ஆனுளே உச்சிவரப் பாதைதானே
அறிவித்தேன் புருவமதற் குள்ளேயேறே. (521)

ஏறப்பா ஏறையிலே வழுக்கும்பாதை
எல்லோரும் போகும்வழி யார்க்குஞ்சொந்தம்
வேறப்பா பாதையில்லை சோதிகாண
மெய்யுடலத் துச்சியிலே நீடம்பாரு
நீரப்பா உள்ளிருக்குந் தடைகள்தானே
நீங்கிவிடிற் பேரொளியே மிகுஷ்காணும்
தேரப்பா சொன்னவழி பாதைகண்டு
தெருவீதி யேவருவாய் தேர்ந்தால்தானே. (522)

தேர்ந்தால்தான் நீயொருவன் சித்தர்க்குள்ளே
செகசாலங் கண்டுகொள்வாய் முனிவர்நேர்மை
நேர்ந்தாக்கால் யானெருவ னதனுக்குள்ளே
நெடுகாளே காத்திருந்தேன் உன்னைக்காண
ஓர்ந்தாக்கால் வந்திடுவீர் ஒளியின்கூட்டம்
உள்மறையே தேடுதல்லோ மறக்கலாமோ
சார்ந்தாக்கால் யெல்லாருங் கூடலாமே
தம்பியரே அண்ணுவி தமையன்போலே. (523)

போலவே யெண்ணுகிறேம் மூன்றேருந்தான்
புகழுகின்ற பின்னேரும் பொருந்தினலே
சாலவே கூடுடையு மட்டுந்தானே
தமர்போலே வாடுவரே நல்லோரோடு
மாளவே யெத்தனிக்குந் தன்பத்தார்க்கு
வசனிக்க மாட்டாரே விசனிப்பார்கள்
தாளவே சம்மதமே யானேருக்கு
சதாசிவனு மாலாலு மாகாவாரே. (524)

ஆகாது பிரமனெடு ரிசிகளாலும்
ஆசித்த முனிவரோடு தவசியாலும்
வேகாது பக்குவங்க ளில்லாதார்க்கும்
வெரும்பொய்யே சாஸ்திரமுங் குருவும்முத்தி
போகாது பக்குவர்க்கெவ் விதத்தினலும்
புழுக்குழவி யாம்போலும் விட்டிற்தீபம்
சாகுமே அதுபோலக் குருவினலும்
சத்தகிகள் தழைத்துவிடு மெத்தாலும். (525)

எத்தாலும்பதங்க ளில்லாவீனர்
ளருவடுக்குஞ் சாம்பலுக்கோ கட்டைத்தீய்க்கோ
வெத்தறியார் பார்த்திருந்து மண்ணேதிண்ண
வெரும்மண்ணுப்போகுதற்கோ ஆற்றுரீர்க்கோ
பத்தயங்க ளிட்டாப்போல் மிருகத்திற்கோ
பாரிலுள்ள அக்கினிக்கோ யிடிமின்னற்கோ
தொத்தங்கள் வைத்தாரே குருவுஞ்சாஸ்திரம்
தொன்றுதொட்டுப் பார்த்தறியார் தள்ளினேமே. (526)

தள்ளினே மெங்கள்மேற் குற்றமில்லை
தவமில்லை அறிவில்லை சாதனங்கள்
துள்ளினே மவரைவிட்டு அப்பாற்தானே
தூரத்தேபோனேமே கண்ணிற்கெட்டோம்
தெள்ளினே மெங்கள்மனக் தெளிந்ததாலே
தெளிவில்லா மனத்தோர்கள் சேரில்லோட்டோம்
அள்ளினே மருட்கடலே மொண்டுண்டோம்
ஆகாச வெளியைப்போற் சுகமேதானே. (527)

சுகமென்ற சுகமதுவு மாருதய்யா
தூங்கிடிலு நடக்கையிலுந் தொழிற்செய்தாலும்
அகமில்லை யதனாலே மனமேசாந்தம்
ஆனதினு லறிவானேம்; அறிவேரூபம்
சகமென்ன அறிவிருந்தாற் தெய்வம்போலே
சாதிக்கும் யாவருமே மனிதரெல்லாம்
யுகமென்ன யெப்போது மிப்படித்தான்
உற்றுணர்ந்து பார்த்திருந்தேன் வசிஷ்டர்நீதர். (528)

நீதனே யென்றுரைக்க வசிஷ்டநாதர்
நேர்விசும்பும் பாதாளங் கண்டநாதர்
ஞானனே கபடமற்ற புசுண்டநாதர்
தொல்லுலகே பூதவுடல் உலகந்தன்பம்
மாதனே வேதத்தின் தாயேயான
மறையோனே புசுண்டரெனுங் காகநாதர்
வேதனே கண்டிருந்தீர் பார்த்துங்கேட்டும்
மெய்யுடலை வைத்திருந்தீர் வெகுகாள்மட்டே. (529)

மட்டில்லாக் காலமதிற் கண்டகாட்சி
வசனித்தீர் கேட்டவுடன் காலந்தோறும்
வெட்டில்லாக் காலமில்லை யென்றுசொன்னீர்
விரித்துரையும் நல்லோர்க ளெப்போதுண்டு
கட்டில்லாக் காலமில்லை லாபநஷ்டம்
காட்டிலே யெப்போதும் உண்டுஉண்டு
துட்டில்லாக் காலமில்லை சுகதுக்கங்கள்
சூழ்ந்தவெளி வட்டம்போ லுண்டுஉண்டே. (530)

உண்டேதான் கலகங்கள் ஞாயங்நியாயம்
உலகுண்டு வெளியாகு மட்டுந்தானே
கண்டேதா னிங்குவந்தேன் மலைமேல்நின்றேன்
கண்தெரிந்தேன் அறிவுள்ளோ ரிங்குயில்லை
மண்டேதா னிருந்துதல்லோ மிருகசாதி
வாயினாலே யாகுதற்கோ யிங்கேவந்தேன்
தொண்டேதான் செய்யாமற் குருவேயானேன்
தனையறியா மானிடனுங் குருவாகானே. (531)

பத்திய விபரம்.

ஆகாது பஞ்சபட்சி சிப்பிசாஸ்திரம்
அரைகின்ற மீனையடியாம் கெணிதமோடு
சோகாது கொக்கோகம் வயித்தியஞ்சோஷ்யம்
சொல்தவரு மனுநீதி குலமாந்தர்தம்
வேகாது காயசித்தி யோகமார்க்கம்
மெலிவாகும் யோகமுறை பத்தியமார்க்கம்
தாகாது மூப்பதின்மேல் அறுபதுக்குள்
சந்ததியள் வரும்போது பத்தியமேதே. (532)

பத்தியமே யில்லையடா மூப்பதின்மேல்
பாரினிலே யாருக்கும் யேனென்றுக்கால்
சத்தியமே உடல்தழரும் பிராணன்குன்றுங்
தவறுமே நாடியது நாம்புங்கூடப்
புத்தியுமே தான்மறையும் புரிப்புங்குன்றும்
புலாவெலும்பு ரோமமுதல் நிறமேமாறும்
அத்தியுமே தான்மெலியும் பிராணநாட்டம்
அசைந்தாடும் லெகுவாகும் மெலிவுதானே. (533)

மெலிவேதா னுடல்கொந்த காலந்தன்னில்
மெய்யிலே பத்தியங்க ளிடவும்வேண்டாம்
கடலிலே மழைபெய்த காலந்தன்னில்
கல்லுப்பும் வீணாது பசித்தபோது
உடலிலே பத்தியத்தால் உணவைத்தள்ளில்
உன்பெலமுங் குறைத்துவிடும் பிராணன்குன்றும்
நிடலிலே மழைபெய்யக் குடநீர்போலே
தெளிந்தநீர் வத்தாப்போல் மலத்தைத்தள்ளே. (534)

பத்தியம் மலம் போக்க.

தள்ளவே பத்தியங்கள் மலத்தைப்போக்கும்
தள்ளிவிடு மலம்போக்கச் சலனம்போகும்
மெள்ளவே பெருந்துடையும் யிடுப்பின்மேலே
மேனியெங்கும் பிடரிவரை மலந்தானிற்கும்
உள்ளவே உடல்முழுது முன்பின்னெல்லாம்
ஊடாடி நிறைந்திருக்குங் கண்வாய்மூக்கும்
கிள்ளவே மலக்கட்டுப் போக்கிலுக்கால்
கிருபைமெத்த யோகமுறை வாசிவாய்க்கும். (535)

சகுனவிபரம்.

வாய்க்குமே பட்சிகளுங் குறுக்கேபாய்த்தால்
வல்லபங்கள் மெத்தவுண்டு வலத்திற்பாய்த்தால்
ஏய்க்குமே கரிநிறமாம் பட்சியெல்லாம்
யிடமிருத்து வலம்பாயில் மறைக்கச்செய்யும்
சேய்க்குமே பிள்ளையென்றுற் பகையேயாகும்
திருவாணை குருவாணை மெய்யேசொன்னேன்
காய்க்குமே முப்போது தடுக்குமானால்
காரணனு லாகாது துன்பஞ்செய்யும். (536)

செய்யுமே பசுவரத்து யெதிரேவந்தால்
சீரியே ஒடிவர யெதிர்நின்றுக்கால்
பையுமே தன்னிலையில் மரணம்ஒன்று
பலிக்கேதா னிரையிட்ட பெண்ணுளாகும்
கையிலே ஒன்றில்லை யெமனுக்கங்கே
கால்கடையி லேறிவந்தான் விலாவினோரம்
மெய்யிலே யெமன்வரத்துச் சகுனம்போல
விதவிதமாய் வருவானே லேசாய்த்தானே. (537)

தானென்ற ஏமனவன் வருகுங்காலம்
தரைதனிலே பலவிதமே யேமரூபம்
வானென்ற வெளிதனிலே சிவர்க்கெல்லாம்
வாயன்னம் கஞ்சிடுவான் தொண்டைவிக்கி
கோனென்ற தண்டம்போற் சரூபமாவான்
குழந்தையெறி கல்லெறிபோல் அதனில்நிற்பான்
தேனென்ற உண்ணலது செமியாவாரு
செய்திடுவான் பலதொழிலு மிருளப்போலே. (538)

இருள்போல மயக்கமது பித்தம்போல
ஏகிடுவா னுள்நுழைத்து மரணகாலம்
மருள்போல வந்திடுவான் கோபரூபம்
மனிதர்களி லெமரூபக் தானுமாவான்
இருள்போல வொளிமறைப்பான் கபாலத்தின்னே
யெப்போதும் உடலுண்ணும் உயிரேயிச்சை
திருள்போலக் கள்ளனவன் மெய்யேசாய்த்து
சீரணிக்கச் செய்திடுவான் காலனுமே. (539)

காயசுத்தி விபரம்.

காலனுக்கு உயிருண்ணும் வேலைதானே
காலனுண்ட உயிரெல்லா மேவல்தானே
சூலனுக்குச் சூரனுயிருக்கவேணும்
தினையுண்டு காயசுத்தி யெமனேசாரான்
வேலனுக்கோ குற்றங்கள் யிரையேயிட்டால்
வேகாது பிராணனுமே வெற்றகாயா
பாலனுக்கோ பசிநீங்கும் கோழைபோகும்
பசியொழியுங் காமனுயிர் பறந்துபோமே. (540)

பறந்துபோம் மூலப்புளி தின்றுயானுல்
பசிக்கையிலே அன்னமுண்டு பசிதீர்ந்தாப்போல்
சிறந்துபோந் தன்னுடலே காயசுத்தி
தேறிவிடில் வென்றிடலாம் யெமனுர்கோழை
சுறந்துபோம் ஞானமிர்தம் உடலந்தன்னில்
தோன்றிடுமே ஞானவொளி சோதிதானும்
இறந்துபோ மனவிருளும் வெளிச்சங்காணும்
இல்லறத்தி லிருந்தாலு முத்திதானே. (541)

முத்தி சித்தி யடைய.

முத்திதான் கபங்கோழை யிலைபோனுல்
முத்திசித்தி வாய்க்குமடா மோகமில்லை
சித்தியே யில்லாட்டாற் தெய்வம்வேறே
சிவன்வேறே மால்வேறே பிரமன்வேறே
சத்தியே பஞ்சதொழில் தெய்வங்கூரு
தான்வேறு ரூம்வேறு முத்திவேறு
வெத்தியே வடிவேலைக் கண்டார்க்கன்றி
வேண்சித்தி வாராது மெலிகுவாயே. (542)

மெலியாமற் சொல்லுகிறேன் போகாமற்தான்
மேனியெங்குந் தேடாமற் புருவம்பாரு
மலியாமற் பார்த்தாக்கால் யெதிரேதோணும்
வாய்ப்பகட்டா லாகாது குளிர்ந்தஞானம்
சலியாமல் நீபாரு தாளகத்தான்
தந்திமுகன் சேவடியைத் தனியேபாரு
நலியாம லிருப்பதற்குச் சொன்னுர்கல்லோர்
நாம்தேடாக் காரியமேன் நாடுவீரே. (543)

நாடுவீர் சொர்தமனை விபகாரங்கள்
நாட்டிடுவீர் சத்துருவை ஒட்டிடுங்கள்
தேடுவீர் பொன்வெள்ளி பஞ்சலோகம்
சிறுமங்கை வாழுதற்கு வாலிக்கிவீர்
போடுவீர் மத்தளங்கள் புஷ்பக்கோலம்
பூவனையு மாடிமுதல் சோடிணைக்கிவீர்
கூடுவீர் சாதனங்கள் ஆடியோடி
கும்பிட்டுக் கூத்தாடிச் செத்துப்போவீர். (544)

செத்துப்போங் காலம்வந்தால் சிரிப்பார்பார்த்து
சிரியாத மனந்தானுஞ் சிரித்துயேய்க்கும்
வித்துப்போம் நாமிட்ட பயிருஞ்சாவி
வெள்ளாண்மை யாகாது மலடுமாகும்
கொத்துப்போங் கூட்டோடே குலமுஞ்சாவி
குருகுலமே யாகாது வெந்துபோகும்
இத்துப்போம் வெள்ளாண்மை நாமேசெய்த
ஏரிகரை நஞ்சைபுஞ்சை திட்டுத்தானே. (545)

திட்டுத்தான் பிறர்கைக்க மூத்தரெல்லாம்
தெண்டுபோற் தானிருக்கப் பிலமாஞ்சித்தர்
விட்டுத்தான் போயினரே மேலோரெல்லாம்
வெள்ளாட்டி தள்ளிவிட்ட குப்பைபோல
கட்டுத்தான் செய்தாரே சிவத்தால்முத்தி
காணுமென்று சொன்னரே சோயற்றரோ
பட்டுத்தான் போனரே சிவமேசெய்தார்
பரிவாசி காணுநார் மெலிபச்சொன்னர். (546)

சொன்னர்கள் மெலிந்தோர்கள் கோடாகோடி
தன்பமென்று விட்டாரே கோடாகோடி
மின்னர்கள் வேசமதாற் கோடாகோடி
மெய்காணுத்தோசத்தார்க் கோடாகோடி
என்னமற் செய்தறியாப் பாவங்கோடி
எத்தனையோ சொல்லிவைத்தார் முறைகள்கோடி
நன்னகச் சாதித்துக் காணுரெல்லாம்
நாட்டினர் மெத்தசித்தி யில்லைதானே. (547)

சித்தியில்லை ஆண்டொன்று பழக்கமில்லை
செத்தபின்பு மறுபிறவி காணலாமோ
முத்தியது கண்டோரும் பிறவிகாணார்
முழுமோசந் தானறிந்தால் மெய்யதாகும்
மத்தியென்ன நாமறிதல் குருவால்காணும்
வல்லபங்கள் மெத்தவுண்டு குருவினுலே
செத்தமென்ன முத்தியது பெங்கிருக்கும்
சிறுவர்சொன்ன அம்புலிபோற் தேறுவீரே. (548)

தேறுவீர் மூறைகொண்டு செயலைக்கண்டு
தீபவொளி காணுதற்குத் தூண்டுஞாதி
சாருவீர் மேலோரைச் சார்ந்தாற்தானே
சந்ததிபோற் சேகரிப்பாற் தானேயிவர்
கோருவார் தன்னினையைக் குமரிப்பாலை
கொட்டுவிப்பார் பாலமூர்த்தம் ஊட்டுவிப்பார்
நேருவார் குருவென்று சொல்லார்வந்த
நிமிஷத்தில் ஆளடிமை செய்குவாரே. (549)

செய்தகொள்ள யிதுபெரிதோ பெரியோராஞல்
சிறுபிள்ளை கூடாதோ தேறும்பிள்ளை
வைதுகொள்ள வையாதே குறையேதொட்டால்
வாய்கட்டிக் கேளாதே வருகுந்தானே
கைதகொண்டு போகாரே யிவர்க்கேஞானம்
காடுமே கவிலுமே குருவேஞானம்
பெய்துகொண்டு தானிருக்கும் பிறவிக்கூட்டில்
பெரியோர்போ லேயிருப்பார் பேருள்ளோரே. (550)

பேருள்ளா ரஞ்சுவரோ பெரியோர்ஞாயம்
பெருமைமெத்த வுண்டதனுற் பெலத்தவீரர்
மேருள்ளார் மலைபோலே அசையாரய்யா
மென்மேலும் வளர்ந்திடுமே மெய்யைக்காண்பார்
தாருள்ளார் கண்டாலும் ஓடிப்போவார்
சந்ததிகள் கண்டாக்கால் விடுவாரோ
சிருள்ளார் சேர்ந்திடுவார் விரதம்போல
நின்றுபசியாறுமட்டும் விரதந்தானே. (551)

விரதவகை குருகெறியே விரதம்கோன்பு
மேன்மக்க ளானுக்கால் விரதம்பூண்டு
சுரதவகை கண்டுகொண்டு துன்பமற்று
தூங்காமற் தூங்கியவர் சுகத்தைக்கொண்டு
இரதமெனத் தேடாம விரதந்தானே
யெப்போதுந் தொட்டவரும் விரதம்நீங்கார்
பரதமென ஆடாரே உலகோர்போல
பரந்தடித்த பற்தெழும்பும் பற்றுபோலே. (552)

பற்றுபோற் திரண்டுருளும் பாவனைக்கே
பாவாணர் சொல்லினைக்கும் பத்திபார்க்கும்
வற்றுபோய் சேகரித்து வளர்ப்பார்பாரு
மதியுடையோர் விதியறிவீர் மரணத்துன்பம்
இற்றுபோற் தானிருக்கு மிக்கக்கூடு
இதுவுடைய யெத்தனைகாள் யெண்ணிலாதோ
சிற்றுபோல் நீர்த்தூவி வெள்ளோயுப்பைச்
சிந்தனபார் அலைவீசித் திரையைப்போலே. (553)

திரைபோல மனமுருண்டு திரண்டுஓடும்
திருவான அறிவதனைக் கெடுத்துக்கொல்லும்
உரைபோல ஓடியது விழுங்கிக்கொள்ளும்
உவமைசொல்ல முடியாது யிருள்போலாகும்
கரையென்ன வெளியகலம் நீழம்சுத்து
கதவடைத்து மறைத்தாலும் அப்பாற்செல்லும்
தரையென்ன சுவாசல் வழியேசென்று
தொற்தோமென் றுடுமிச்சுருதிபாரே. (554)

சுருதிபா ரித்தனைக்கு மாதாரங்கள்
சொல்லயினி யென்னலே முடியாதய்யா
மிருதிபா ரிதனுலே சொன்னதெல்லாம்
வேணதண்டு சோதனை விபரமெல்லாம்
உறுதிபார் மனமறிய விபரமாகும்
உத்துப்பார் ஓடாமற் கூர்ந்துபாரு
அறுதிபார் ஒளிகண்டு கூடுமட்டும்
ஆசானைக் கூடவைத்து விட்டிடாதே. (555)

விட்டிடா தேசருகி குருவைத்தானே
விபரத்தைக் கண்டுகொண்டு மெலிந்திடாதே
சுட்டிடா தேசடத்தைப் பட்டினிபோட்டு
தூங்காமற் பாராதே தவம்நோது
குட்டிடா தேமரய்கை கோலம்பாரு
குமரிகட்கு அஞ்சாதே கிழவிப்பூணு
கெட்டிடா தேயிருந்தா லென்னசெய்வோம்
நீங்காம லேயிருந்து தூங்குவாயே. (556)

யோகியிருக்குமிடம் சாதனகாலம்

தூங்குவாய் வாசிகயர் ஊஞ்சலேறு
தொக்குடல் காயமிதற் சூச்சுத்தானே
தேங்குவாய் கண்டதனில் விட்டுப்பாரு
தெருத்திண்ணை யாகாதே அரையாமூலை
ஓங்குவா யுள்ளிருந்து பார்க்கச்சித்தி
உருமத்தி யாகாதே சாதனங்கள்
வீங்குவா யுண்டஅன்னஞ் செரிக்குமுன்னே
மேனியதில் வயர்நிறைய உண்ணென்னதே. (557)

உண்ணவேண் டாமென்று தடுக்கவில்லை
உயர்கெஞ்ச தத்தளிக்கும் கருவிமாறும்
எண்ணவேண் டாம்நினைவு செபந்தியானம்
இருந்தஇட மசையாம லிருந்துபாரு
கண்ணிரண்டும் ஓட்டிடுமே புருவமத்தி
கால்வீசி மண்ணிடுமே காலைமாலை
விண்ணிருந்த யிடமதுவே நோக்கிப்பாரு
வேணதுண்டு மூன்றுண்டில் விழலாகாதே. (558)

ஆகாதே போனக்கால் நாமென்செய்வோம்
அல்லாருஞ் சொன்னதெல்லா மறிந்துகில்லு
வேகாதே யீயனலிற் சாம்பலாக
வெந்ததா ளாகுமுன்னே விரைவாய்ப்பாரு
நீகாதல் கொண்டலைந்து வெகுகாள்சென்று
நிசக்காணத் தெரியாட்டாற் கேலியாகும்
போகாதே விட்டுவிட்டுப் புருவம்பாரு
பொல்லாத தத்தளிக்கும் புருவப்பூட்டே. (559)

புருவமே சிறுவாசற் கதவின் தாளைப்
போக்கினுற் தெரியுமடா சொர்க்கமெல்லாம்
கெருவமே னவ்வாசற் கெதியாம்வாசல்
கேட்டவரங் கொடுக்குமல்லோ கோர்மூக்குச்சி
பருவமே தொட்டுவிடில் லேசதாகும்
பகர்ந்தாரே மனமிரங்கி உத்தனுக்கு
அரூபமே காணுதற்கு என்னசொன்னார்
ஆர்சொல்வார் தாய்தந்தை சொல்லிடாரே. (560)

சொன்னார்கள் பெரியோரும் யெளியோர்பேரில்
தயர்வைத்துச் சொன்னரே பழிக்கேயஞ்சி
மின்னார்கள் சிற்றின்பத் தானேசொல்லும்
மேலின்பங் கண்டவர்க்கே யல்லாதண்டோ
பொன்னார்கள் கோவில்குளம் புழுக்கூடெங்கும்
புலாலிறச்சிக் குள்ளிருக்குஞ் சோதிமுத்தி
கன்னார்கள் கண்டதனைக் கிரியோதி
கவின்றதனைப் பாராட்டால் யென்னசெய்வோம். (561)

என்செய்வோம் பாடுபட்டார் பலனடைந்தார்
இப்பொருளைக் காணுட்டா லென்னசெய்வோம்
பின்செய்வோ மென்றுக்கால் கிழமாமூப்பு
பெருந்துணையாய் நடந்துவரும் தொடர்ந்துகூடி
முன்செய்வோ மென்றுக்கால் மூப்பதுக்குள்
முன்மறந்து பின்நினைந்த முறைமையாச்சு
கன்னெஞ்சர் நினைவிருக்கு மிருளாங்காடு
காடுவெட்டித் திருத்துவதற் கென்செய்வோமே. (562)

என்செய்வோம் புத்திசொல்லி அமுர்தம்வார்த்தும்
இணங்காத மடையருக்கு அபராதங்கள்
பொன்செய்தும் வருமைதந்தும் புழுக்கூட்டிற்கு
பொதுவனுர் வந்திடித்தும் புலிகோய்வந்தும்
மண்பசியாந் தீயிட்டும் பித்தங்கோழை
வாதமுடன் தொந்தித்து கலியச்செய்தும்
மின்செய்த கரைமூப்புச் சாக்காடேதான்
மேலிட்டுத் தோணுரியார்க் குரைப்புதேதோ. (563)

உரைப்பதெது சொல்லறியா ரிணங்குவாரோ
ஒருமொழியை நம்பாட்டாற் குருவென்செய்வார்
விரைப்பதெது தன்னையன்றிச் சொல்வதேது
மேனியுட லறியார்க்கு மெல்லியில்லம்
கரைப்பதெது அவர்மனதைக் கரைக்கலாமோ
காசினியில் வெளிமறைத்தால் மனமேமாளும்
சிரைப்பதெது அறிவன்றி மனமேமாள
தியருக்கு யெட்டாது அறிவின்சோதி. (564)

அறிவினொளி சோதிகண்டோர் சோதிகாண்பார்
அய்யாகேள் கோடிமதி கோடிசூரியன்
பிரிவினொளி கொண்டல்லோ சோதிகாணும்
பெருஞ்சோதி சிறுஒளியா மனக்கண்ணுலே
குருவினொளி காண்பதற்கு அறிவின்கண்ணுல்
கொண்டுணர வேணுமல்லோ நாமென்செய்வோம்
திருவினுரு காண்பதுவும் கண்ணேபோல
தன்னுருவைப் பார்ப்பதற்கு அறிவேசோதி. (565)

அறிவே சோதி.

சோதியென்ன பெருஞ்சோதி அறிவாற்தானுங்
கலங்குவது வேதபொருள் பொருளாம்விண்ணு
பாதியிதிற் கண்டிடலா மறிவாற்தானே
பழம்பாதி சொல்லவென்றுல் வாலிவந்தே
சேதியதிற் சொல்லிவைப்பாள் தினமுந்தானே
தினந்தினமும் வந்தாலும் ருசியேகாணும்
கோதியவள் சொருகிடுவாள் முடியாள்வாலே
கோவணத்தை யிந்தாலும் பிடுங்கிக்கொள்வாள். (566)

கொள்வதொடு மூக்காலுங் கொடுக்கேனென்பாள்
கோவணம்போ லல்லவது பெருமுந்தான்
மொழிவதென்ன யென்னம்மை லேசாய்த்தானே
மோகினியுங் காணுது பெண்ணும்போகா
தழவதென்ன கண்ணுக் கண்டகாட்சி
சாகும்வரை பார்த்திருப்பாள் முழுதும்பார்ப்பாள்
அழவதென்ன அவள்வந்து தானேயாகி
ஆக்ஞைதனைக் கைகொண்டு ஆட்டுவிப்பாள். (567)

விப்பாளே தன்பொருளை யடக்கிவைப்பாள்
மேனியதைக் காட்டிடுவாள் பொருளைக்காட்டாள்
முப்பாளே வாவென்பாள் நான்தானென்பாள்
மூறைமையது தவறாளே வெகுகாள்யோகி
அப்பாலே வந்தாக்காற் கிட்டவைப்பாள்
ஆர்சொல்லுங் கேளாளே அதன்மேலப்பா
எப்பாலே யேதுமில்லை மடிமேல்வைத்து
எத்தனுக்கு நாயகனே எனச்சொல்வாளே. (568)

சொல்வாளே அதில் மயங்கிச் சிக்கவேண்டாம்
தோகையல்லோ அருளுருவே கவனமாய்நில்
வெல்வாளே சித்தர்களைப் பழையநீலி
வேதத்தை உடையாக உடுத்திக்கொண்டு
மல்வாளே நானிருக்கே னென்றுசொல்லி
வயற்றெரிச்சல் பட்டிடுவாள் ஓடிப்போவாள்
கைப்பாளே யாகாது கட்டிப்பாரு
கதவடைத்து வாசிகட்டக் கெஞ்சுவாளே. (569)

கெஞ்சுவாள் மெய்மெலிந்து கொக்குகைத்து
கிருகிரென்று தான்சுழன்று பதறிச்சுற்றி
அஞ்சுவாள் பேய்ப்பறைச்சி பிழைப்பில்லாமல்
ஆருக்கு மெட்டாளே விட்டுத்தொட்டு
மிஞ்சுவாள் நகைத்தாக்கால் மூண்டியாகி
வேணதெல்லாந் தாரேனென்று ஓடிப்போவாள்
மஞ்சுபோற் தானிருண்ட இருளைப்போல
மாபறைச்சி கனவனத்தி ரூபமாறி. (570)

மாறியே பெண்ரூபம் ஆணேயாகி
மௌனியா யலியாகி வாயைமூடி
கூறியே கைகாட்டி வாயைப்பொத்தி
குடுகுடென்று ஓடிடுவாள் திரும்பிப்பார்ப்பார்
தேறியே தான்வருவாள் மோகமென்பாள்
சிங்காரத் தோடிருந்து நடித்தரூபி
கூறியத்தச் சொல்லாலே வெகுகாட்சென்று
குருகைகாட்டிடுவாள் வெட்கமாவாள். (571)

வெட்கியவள் போலிருப்பாள் ரூபங்காணுள்
மேதகைய் உடல்தொடவும் எட்டாள்கிட்டாள்
துட்கியவள் சொல்லடங்காள் மதன்போலுள்ளாள்
தூங்கவிட ஓட்டாளே விழித்திடாளே
மட்கியே போலிருப்பாள் வசனியாளே
வாய்வார்த்தை கேட்பதற்குத் தவமேவேணும்
சொக்கியே போகாதே அவளேவந்தால்
தூன்பம்வந்து நேர்ந்துவிடும் நினைவாய்நில்லே. (572)

நினைவென்ன அவள்தானே உள்ளிருந்து
நேரிலே வெளியேறிக் குதித்துநிற்பாள்
தூணையென்ன பேசிடுவாள் சுழித்துப்பார்த்தால்
தூரத்தி லேகிடுவாள் கண்ணுக்கெட்டாள்
இணையென்ன காமிருந்தா ளவனுந்தானே
ஏரிட்டுப் பாராளே சம்பிரதாயம்
மனையென்ன உட்காரச் சொன்னலந்த
வாயென்ன மூடுமுன்னே மறைகுவாளே. (573)

மறைகுவாள் வந்திடுவாள் உல்லாசிப்பாள்
வந்ததையும் போனதையும் மறைத்துநிற்பாள்
நிறையென்ன உடல்நிறமும் உருவுமாறி
சிறுகன்னி பெருங்குமரி கிழவியாவாள்
நிறையென்ன ஓர்நிலையில் நிற்காலத்த
தூணைவள்ளி யெவ்விதமும் விடுகாள்நம்மை
பறையென்ன இவள்தானே நமக்குமுன்னே
பரியாசஞ் செய்தாற்போற் சாலஞ்செய்வாள். (574)

சாலங்கள் வினையாட்டு அனேகஞ்செய்வாள்
தாயவளும் குட்டிமுன்னே தாலியில்லாள்
கோலங்கள் பலரூபம் யெடுத்தேயாடி
கோடியென்ன பலகோடி தொழிலுமாடி
ஆலங்க ளிட்டிடுவாள் அழகில்லாளே
அடித்தாலும் வையாதாள் வந்தாற்பேசாள்
நூலமகி லிப்படியே யிவள்சொரூபம்
சொல்லுமே சொல்லாளே வாய்திறந்தே. (575)

வாய்திறந்து சொன்னுக்கால் முத்திசித்தி
வல்லபங்கள் பேசிடலாஞ் சித்திதானே
தாய்கொண்டு பேசரியார் சித்தாகார்
சமுசாரி போலாகும் வாலைகண்டால்
நோய்கொண்டு யிருப்பார்கள் பேச்சில்லாட்டாள்
துண்ணறிவு யிருத்தாக்கால் பேசுவானாம்
பாய்கொண்டு போவார்கள் யெக்கேகாண்பார்
பத்தினியைக் கண்டாக்காற் பேசுவீரே. (576)

பேசவே நான்காணேன் வெகுநாட்சென்று
பேர்பெரிய சோதித்தாய் ரூபத்தாலே
கூசவே யெனைக்கண்டு கூசவேண்டாம்
சூமரியல்ல நான்கிழவி சேரவேண்டாம்
காசுமே லிச்சையுண்டு யெனக்குங்கூட
கன்னிசட மெடுத்தாக்கால் ஆசைபொங்கும்
தூசுபோ லிடம்பொருளைச் சேகரித்து
துன்பமற்று யென்னுடனே வாழென்றுளே. (577)

என்றுளே வாணிசொல்ல யானுங்கேட்டு
இடம்பொருளைச் சேகரிக்க யெத்தனித்தேன்
குன்றுளே யவள்தானுந் திரும்பிவந்து
குடிகெடுக்கும் பிண்டுவாய் நானேனென்றுள்
அன்றுளே யின்றுவரை கிழவிதானே
ஆருக்கு மாகாளே நல்லோர்க்குத்தான்
இன்றுளே நான்கண்டு தெண்டம்பண்ணி
எத்தனித்தேன் உச்சரிக்க ஓடினாளே. (578)

ஓடினாள் பேசுவாயா வென்றுகேட்டேன்
ஒருபொழுது சிறுகையாற் தர்த்தங்காட்டி
மாடிமே லேறினாள் யானுஞ்சென்றேன்
மருமனைவி நீபோபோ யென்றுசொன்னாள்
கூடினா ளெனைக்கூடி முத்தமிட்டாள்
சூமரியெந்தன் கன்னத்தி லிச்சையுள்ளாள்
பேடிநீ யென்றுசொன்னாள் போடியென்றேன்
பேச்சறித்து பேசாமல் இருக்காளுளே. (579)

ஆனதினுல் மயிர்பிடித்து அறைந்தகையை
அடிவயத்திற் கட்டென்று விரல்நானிட்டு
வீணதனுல் தன்பமிட்ட பதியேபெண்ணே
மெல்லழகி நீநில்லு யெனக்கேனென்றேன்
தூணதனில் முதுவிரடுத் தம்பத்தோரம்
தூணையிருக்கே னுடலோரம் யிடங்கொடென்றுள்
பேணதனே நீயிருக்க வேணுமென்றுல்
பிலாவெலுப்பி லூடதனைப் பிலவென்றேனே. (580)

பிலக்கச்செய் யெத்தனுட காயந்தன்னை
பிலக்கவே நீயிருந்து தாங்குயென்றேன்
வலுக்கச்செய் யென்றசொல் லவளுங்கேட்டு
வாயில்மண்ணைப் போட்டாயே யென்றுள்கூவி
பலுக்கச்செய் காயசித்தி நிற்பேனுல்
பரிவாசி நிலைத்துவிடும் நிற்பர்ய்கல்லாய்
மெலுக்கச்செய் யெத்தனுக்குத் தூணையுந்தானே
வெள்ளாட்டி தோழிப்பெண் சகியென்றுளே. (581)

என்றுளே பாவிபழி காரகீலி
இத்தனைக்கும் பெண்ரூபி தனமிருந்தும்
மன்றுளே வாய்கடை அழகுள்ளாலும்
மருவிகமைத் தேடியவள் தூணையுங்கேட்டாள்
தின்றுளே கருவிகளைச் செமித்தபாவி
சித்திரத்தைப் போலிருந்தும் தூணைவாவென்றுள்
மின்றுளே வெட்கமில்லை குறியிடத்தில்
வேண்புண்ணை வைத்திருந்தாள் கண்டுகொள்ளே. (582)

கண்டுகொண்டு அதினுலே தள்ளிவைத்தேன்
காயப்பெண் நீயல்ல சூத்திரச்சி
மொண்டுகொண்டே னுன்னருளு மெனக்குவேண்டாம்
மோகத்துக் கெதிராகு முனிசியென்றேன்
பண்டுகொண்டாள் பலரிடத்தும் படுக்கைப்பாவி
பார்த்தவர்கள் விட்டிடல்போல் யானும்விட்டேன்
தொண்டுகொண்டாள் வெகுகாளே பாவிகீலி
தூணையெனக்கு இல்லையென்றுள் வெட்கமாச்சே. (583)

சத்தி பூநீர் செயநீர்.

ஆச்சப்பா யான்கேட்ட வரத்திற்கஞ்சி
ஆகுவென் றேயழுதாள் ஏழைபோலி
வச்சப்பா மூன்புத்தி பின்னும்புத்தி
எப்புத்தி கற்றோர்க்கு மேழையாவாள்
நீச்சப்பா நாமில்லாக் காலந்தன்னில்
நிகழ்கால மெங்கிருக்கு மிவளுஞ்சாவாள்
போச்சப்பா தந்திரங்கள் விழலாய்ப்போகும்
பொக்கிஷங்கள் திறக்துவிடி லேசுதானே. (584)

பொக்கிஷக் கோற்திறவு வள்ளேதானே
புதுக்குடுசு ஒன்றுண்டு புத்திதானே
கக்கிஷக் கோலுண்டு நீரவேணும்
கணவனையே பிரிவாளே கட்டுகட்டு
திக்கிஷச் சோருண்டு பூநீருண்டு
தினந்தினமு அழுர்தப்பால் கொடுப்பாருண்டு
செக்கிஷச் சொக்கியவள் சொக்கினாளே
நீராது மாயவலை தன்னிற்பாரே. (585)

பாரப்பா யிவ்விதமே சித்தரெல்லாம்
பரியாசங் காணுமல் மயங்கினார்கள்
தேரப்பா யிவள்தானும் பெண்ணுமல்ல
சித்திரத்தைப் போலுடையாள் ரூபமல்ல
ஏரப்பா சென்னிமலை உச்சிமேலே
இவளிருக்கு மிடந்தாண்டு குடிசையில்லை
கோரப்பா சொல்லவில்லை சித்தரெல்லாம்
கோணிமிர்ந்து பார்த்தாலும் விடேனென்றாளே. (586)

என்றவளைப் பிடித்திழுத்துத் தாலிகட்டி
ஏகாந்த வனமிருந்த முத்தர்காணார்
அன்றவளை விட்டார்கள் ஓடிப்போனாள்
அறுத்தடைத்த வாசல்கண்டார் தானும்விட்டார்
குன்றவளை யசையாமற் செய்தோர்க்கல்லால்
கோபிப்பாள் கண்டவரைத் திருட்டுமூலி
சென்றவளைக் கண்டாலும் செயநீர்கண்டும்
திரும்பிமுகம் பாராமல் திருத்துவாயே. (587)

சாயாதேவி.

திருத்துவையே யானுக்கா லெல்லாமாகும்
செயரீரைக் கொட்டிவிட்டா லேசேயாகும்
பொருத்துவையே யானுக்கால் பொல்லாப்பேகும்
புடைசூழுங் காணங்கள் தொண்டுபண்ணும்
இருத்துவையே யானுக்காற் பனிரெண்டாண்டு
ஏகாமல் நின்றிடுவாள் சொரூபப்பெண்ணாய்
குருத்துவையே பத்தாண்டிற் கண்டுகொண்டோர்
கோடிவித்தை கண்டுகொண்டார் தொண்டானாளே. (588)

ஆனாளே தொண்டுசெய்தும் அடுமையாகாள்
ஆச்சரியம் அரூபியவள் கைக்கெட்டாது
வானாளே வீடுடையாள் பிறங்கிவாராள்
வையகத்திற் படிநடக்க மண்மேல்வாராள்
கோனாளே கேட்டதெல்லா மிந்தாவென்பாள்
குமரியுரு மாறிடுவாள் வாணிதானும்
தானாளே செய்வதுண்டு கேட்டலோடு
சம்மதித்து வருவதுண்டு அகப்படாளே. (589)

அகப்படாள் கெஞ்சியும்வாய் பொத்தினாலும்
ஆருக்கு மெட்டாளே கைக்கெட்டாளே
வகப்படாள் சேலைகொண்டு அணியும்பூண்டு
வாசனைகள் சேகரமாய் வாளேபாவி
துகப்படாள் வந்தாற்போல் வாணிதானே
சொல்லியுமே தாராளே நிருவாணித்தாய்
கசப்படாள் வெட்கியவள் வந்தாற்போல
கைரெண்டும் பொத்தியரை கவிழுவாளே. (590)

கவிழுவாள் வாழுவத்தாள் வாழாக்கற்பு
கருத்துடையாள் நெறியுடையாள் கவலைரூபி
தவிழுவா லெல்லோர்க்கும் தானேதானே
தரைதனிலே முனிரிஷிகள் சித்தர்க்கெல்லாம்
அவிழுவாள் விரிசீலை யுடுத்திக்கொள்வாள்
அங்கங்கே ஆபரணம் விரித்துக்காட்டி
உவிழுவாள் உள்ளபல்ல வின்பல்காவி
உத்தரியச் சேலைதனை யுதறிநீட்டி. (591)

நீட்டியே உத்தரிய மடியாஞ்சீலை
நேர்முகமாய்க் கவிழ்த்திருத்து நிமிர்த்தகொங்கை
ஆட்டியே அசையாமல் சிமிக்கைப்போல
ஆபரண மேலேற்றிக் கொசுவமிட்டாள்
ஊட்டியே தாம்பூலம் படுக்கையாடை
உண்டபின்பு பித்தனைக்கும் சமர்க்களத்தி
நீட்டியே பேசாமற் சகியோமென்று
நெடுந்தூரம் நடப்பவர்போல் பின்னிட்டாளே. (592)

பின்னிட்ட மெல்லழகி முன்னுற்றூரம்
பெரியஅடி வையாமல் சின்னப்பாதம்
மூன்னிட்டுப் போகாமற் தனியேநின்று
மோகமிட்டுப் பாராதே எமனுனென்றுள்
கன்னிட்டுத் தான்திரும்பி வெளியேவந்தேன்.
கால்கடையாய்ப் போனாளே அவளைக்காணேன்
என்னிட்டு என்னிடமே பின்னல்வந்தாள்
ஏமகிரி ராட்சதன்போல் வாலிதானே. (593)

வாலியின் தன்மை.

வாலியோ பிவள்தானே நம்பக்கூடா
மயங்காமல் நின்றுக்காற் சித்தியாகும்
பாலியே சொரிவதுபோல் நமனுர்தானே
பரதேசி யென்றவளைச் சினேகிப்பாரோ
கோலியே ஊனுளே கிழவிதானும்
கொடியஅனல் நினைத்தாலுங் கெட்டுப்போவார்
சீலியே நினையாதீர் குடும்பம்வேண்டாம்
சிச்சீசி தேவடியாள் வாலிதானே. (594)

நான்கு காலம் சாதனை.

வாலிதான் பெண்ணைகு மரணம்வேண்டாம்
மனவேண்டாம் தனவேண்டாம் நினைவுவேண்டாம்
சீலிதான் ரெண்டாகும் பட்டுவேண்டாம்
சினம்வேண்டாங் குருவேண்டாந் தீர்த்தம்வேண்டாம்
பாலியே வேண்டாமே மேடைவேண்டாம்
பரமபதம் வேணுமென்று லறிவேபோதும்
காலியே அந்திசந்தி உச்சிராத்திரி
காரிருளைப் போக்குதற்குப் போதுமறிவே. (595)

போதமே அறிவோடு குருவாஞ்சாஸ்திரம்
புதைத்தபொரு ளெடுப்பதற்குச் சாதனங்கள்
யேதுவே யீதாகும் வனமேவேண்டாம்
இல்லறத்தி லோர்மூலை யெங்குமுண்டு
சாதுவோ யிவ்விடத்தே கண்டுகொண்டார்
தனித்திருந்து பார்த்தறினற் பலன்பெற்றோர்கள்
கோதுவே தாராதே குற்றமில்லை
குமரியிட மிருந்தாலும் பத்தியங்களிலையே. (596)

30 வயதுக்குமேல் பத்தியமில்லை.

இல்லையே முப்பதின்மேற் பத்தியங்கள்
இடம்வேணும் பொருள்வேணு மேவல்வேணும்
வல்லையே முப்பதுக்குள் வந்ததானல்
வலுக்குமே பத்தியங்கள் வேணும்வேணும்
தொல்லையே பத்தியங்க ளதனற்தானே
சுகமில்லை சாதனங்கள் விட்டுப்போட்டார்
கல்லையே யெறிந்தாப்போ லெதிர்முன்னலே
காரணங்கள் பத்தியம்போல் சொல்லிவைத்தார். (597)

வைத்தாரே சொல்லியவர் தேறுவாரோ
வயதேறிற் பத்தியங்கள் விடவேவேணும்
பைத்தாறை விட்டாலே வருஷம்ஆறு
பையனதில் விழுவானே பனிரெண்டாண்டு
கொய்தாரைக் கண்டானே யதனலப்பா
நுண்ணறிவோர்க் கித்தனையு மல்லஅல்ல
கைதாரைப் போலவுமே அறிவுள்ளோரும்.
நடுகோடி கண்டறிந்தார் பெரியோர்தானே. (598)

30 வயதுக்குள் பத்திய விபரம்.

பெரியோர்க்கு முரியோர்க்குஞ் சிறியோருக்கும்
பேசுகின்ற அறுசுவைகள் முப்பதுக்குள்
கரியோர்க்கும் புளியுப்பு நுசியாம்பாகம்
கண்டமதில் கெஞ்சடைப்பு கோழையீளை
அரியோர்க்கு அதுவகலப் பத்தியங்கள்
ஆக்கினர் முப்பதின்மேற் சாதனங்கள்
பரியோர்க்குச் சாதனங்கள் முப்பதுக்குள்
பலிக்காது பலிப்பதற்கு சுவையைத்தள்ளே. (599)

தள்ளவே வேணுமடா தவசியானால்
தவம்பூணுங் குருவேணுஞ் சாஸ்திரம்வேணும்
மெள்ளவே குடிசையது வேணுங்காணும்
வெட்டவெளி தனிற்தவசு சித்தியாது
கொள்ளையே திரிவார்கள் மடமேவேண்டாம்
கொடுங்குமரி வருமுன்னே தொடவேவேணும்
இல்லையே பத்தியங்க ளறிவுள்ளோர்க்கு
இல்லறத்தி லிருந்தாலும் வனஞ்சென்றலே. (600)

சென்றலே மலைவனங்கள் ஊர்கள்தோறும்
சிறுவர்கவி பாடுகின்ற வினையாட்டேபோல்
நின்றலே மணற்சோற்றை ஆக்குவார்போல்
நெடுநாளே திரிந்தாலும் பலனேயில்லை
குன்றர்க்கு வீடிருந்தும் தவமேசித்தி
குடிசையென்ன செய்யுமடா அறிவுள்ளோரே
மன்றடி யிப்படியே திரிந்துகெட்டார்
மனுவழுது வுண்டஅன்னம் தின்னத்தானே. (601)

பொய்த்தவசி.

தானென்ற மனங்கொண்டு ஊர்ச்சோறுண்டு
தவசியெனத் தானிருந்து குறடுபூண்டு
ஊனென்ற உடல்வளர்த்துச் சடைதானிட்டு
உத்தமர்போ லேதாடி உவமைபூண்டு
தேனென்ற மொழிபேசிக் காவியிட்டுத்
தெருவெங்கும் பாடிடுவார் திவசச்சோற்கு
மானென்ற அபிமானங் காசேகொண்டு
வாய்மதங்கள் பேசுவார் தண்ணீக்காணர். (602)

காணர்கள் கண்டபலன் இரைதான்அன்னம்
கையோடே வைத்திருப்பார் பாத்திரமென்பார்
ஊணோடே கையோடே மனமும்ஒடே
உதறுகால் கடையோடே ஊருநாடே
வீணர்கள் குடும்பமதை யழித்தீதவேறு
வேறுமனை கெடுப்பதற்கோ வேசம்பூண்டார்
சாணர்கள் குடல்வலியே பசியேசோரே
தாரித்திரம் பிச்சைக்கஞ்சி ஆண்டிதானே. (603)

ஆண்டியே பண்டாரச் சாதியோரே
அறிவுதனை விட்டவரே ஈசமாரே
தோண்டிவேசம் போட்டவரே தவங்கெட்டோரே
தொல்லுலகில் வந்தவரிற் சுகங்கெட்டாரே
வேண்டியென்ன அறுசுவைக்கு யலைந்தீர்நீரே
மெய்மறந்தீர் பொய்யறிந்தீர் விதவையானீர்
பாண்டியெனப் பேர்கொண்டும் ஆண்டியானீர்
பரதேசி யானதென்ன பிச்சைச்சோற்கே (604)

சோறுக்கோ அறுசுவைக்கோ தணிக்கித்தானே
சுகம்வேண்டி யிவ்வளவுங் கையையேந்தி
நீருக்கோ ஓடேந்தி வாசல்நின்று
நிமிர்த்தாக்கால் நீரிடார் தலைகளிழ்த்தே
பாருக்கோ பாதமதைப் பார்த்தேநின்று
பரிவாசி காணுமற் கூசிநின்று
மோருக்கோ நின்றிருப்பீர் வாசல்தோறும்
மொய்குழலா ரிட்டஅன்னம் வீடுதானே. (605)

வீடுதான் சோறுதருங் காடுதாரு
மேன்மக்கள் மலையேறில் புசிப்பிணங்கா
கூடுதான் தவமிணங்கா மண்நீர்சேரு
குருவிருந்த யிடந்தனிலே யெல்லாமுண்டு
பாடுதான் வேண்டாமே குருவேபோதும்
பசித்திருக்க வையாதே சித்தியாலே
மாடுதான் போற்றியும் யெருதாங்கோவில்
மாடுபோ லேதிரியு மெங்குந்தானே (606)

எங்கெங்குஞ் செல்லுமடா அண்டகோளம்
ஏகவெளி ஐம்பூத மெங்குந்தானே
அங்கங்கே அருளிருக்குந் தீணையுஞ்செய்யும்
ஆர்வேண்டு மவர்களுக்கு மக்களுக்கும்
இங்கங்கு எவ்விடமுஞ் சென்றுர்ச்செல்லும்
இச்சைவைத்தோர் சென்றிடங்கள் ஏலல்செய்யும்
வங்கங்கள் மனம்உருகும் உடலினுலே
மாவறிவு கொண்டுமண்மேல் திரிகின்றுமே. (607)

இன்றுமே காளமுத லெத்தாளும்
எங்கள்முறை குலதர்ம சாதிமார்க்கம்
நன்றுமே நாம்நினைக்க வத்துசேரும்
நாட்டுள்ளோர் நமைநினைக்க வத்துசேர்வோம்
சென்றுமே யாம்போகோம் நினைத்தாற்போவோம்
தேசத்தி லிப்படியே சேதியோதே
அன்றுமே யெங்களுக்கு யிந்தவேலை
ஆதித்தன் போலவுமே தினமுந்தானே. (608)

தினந்தானே நாள்வரவு யெண்ணித்தானே
தினந்தினமுஞ் சதுர்யுகமும் யுகமாமந்தம்
மனந்தானே யாமல்ல அறிவேமேலாய்
வாய்த்தறிவு போறிவு அறிவுமுற்றும்
தினந்தானே சாபமெனக் கையிற்கொண்டு
தெருவெக்குந் திரியோமே கையிலுண்டு
முனந்தானே யெம்மறிவு கண்டுகொள்ளு
மூர்க்கருக்கு அஞ்சாதே மேலோர்க்கஞ்சே. (609)

அஞ்சுமே நல்லோர்க்கும் ஞாயத்தோர்க்கும்
அகடிதங்கள் பேசாமே வரமேயீவோம்
கெஞ்சுவோம் வரங்கொடுக்கத் தானேநத்தி
கிளறுவோம் உள்ளிருந்த ஒளிப்பையெல்லாம்
மஞ்சுபோற் குளிர்ந்திடுவோம் வாய்கையாலே
மருபிறவி யில்லார்க்குக் கண்டுதானே
பஞ்சுபோல் நாமிருப்போ மேருவாவோம்
பார்த்தவர்க்குச் சிறுபிள்ளை கைலாசத்தானே. (610)

கயிலாசம்

கயிலாசமென்னவென்றால் திதியுஞ் சிருஷ்டி
களறுகிறேரும் சம்மார மூன்றுத்தானே
பயிலாக நம்மிடத்தில் ஞானக்கண்ணில்
பாரிக்க மூன்றுசித்தி நம்முள்ளுண்டு
ஓயிலாக வைத்திருக்கோம் பொருளேத்தானே
ஒருபோதும் நம்மைவிட்டுப் போகாயேகா
வெயிலாக நாமிட்ட கோபத்தானே
வெந்ததல்லோ மேகமது சாபத்தானே. (611)

சாபம்போல் வரமுண்டு கேட்டாலீவோம்
தாரித்திரம் நம்மிடத்தே யில்லையில்லை
கோபம்போற் சொல்லிவிட்டோம் குழந்தைகளம்மை
குருவென்று யெண்ணுதாற் தாசனித்தோம்
கூபம்போல் நீரிருந்தீர் அன்னீரன்றி
குழந்தைகளே யுங்களுக்கு மேகமன்றி
தேகத்தா னுண்டோசொல் லின்பமுண்டோ
சிறுகன்னி சந்தோஷந் தானுமுண்டோ. (612)

உண்டோதான் மாடமொடு கூடகோபுரம்
உப்பரிக்கை தாளமேள வாத்தியங்கள்
மண்டேதா னுங்களுக்கு நீரேயன்றி
வையகத்தில் நீரன்றி மனுக்களுண்டோ
கண்டேதா னெனவிட்டீர் நானுமீயேன்
கர்மமுள்ள மானிடரே மேகமீயேன்
விண்டுகான் சொன்னேனே யெனக்கேமேகம்
மெய்மண்ணு உங்களுக்கு மேகமெத்தனுக்கே. (613)

மேகத்தை நான்விற்பேன் கிறையம்செய்வேன்
மெல்லியற்கு அஞ்சியல்லோ கொஞ்சமீய்க்தேன்
தாகத்தான் கேட்டாலும் நான்கொடுக்கேன்
சத்தகிட் கஞ்சியல்லோ தூரச்செய்தேன்
சோகத்தான் நாமடைக்தோம் நீரோகேஷமம்
தரியபதம் பெற்றவரை அனுகியென்நீர்
காமத்தான் நீரல்லால் உங்கள்க்ஷேமம்
கதவடைப்பேன் மேகமிட்டுக் கெட்டிப்பூட்டே. (614)

பூட்டுடைக்க வல்லவரே நீரும்வாரும்
புத்தியில்லா மானிடற்குப் பெரியவீடோ
சாட்டையில்லா நாக்கயற்ரு லடிப்பேன்சாபம்
சத்தகிகள் லோனலும் பெற்றுக்கொள்வேன்
கோட்டைவிட்டு நீர்வருவீ ரெனப்போல்தானே
கொடுமேக மில்லாட்டால் இல்லம்ஆண்டி
தாட்டிகமா யாண்டியென்ரல் அழிப்பேன்மேகம்
அல்லோரும் ஆண்டியா யிருப்போம்நாமே. (615)

நாமளுமே கோபத்தாற் சொன்னேமப்பா
நண்குணர்வீ ரெனைக்கண்டு கேட்டுக்கொள்ளும்
தாமளுமே எனிலேசாய் மதிப்பீரானால்
சந்ததிகள் வேண்டாமே யெனக்குத்தானே
நீமளுமே வாழுதற்கு யெனதுரித்தி
நேர்தவத்தை ஈடுவைக்க லேசாய்ச்சொன்னீர்
கோமளமே கருணிறமே மேகசூதம்
குமரிகன்னி யெண்மனினி கெற்பமீயேன். (616)

சய்வோனே மும்மூர்த்தி உலகளாயம்
எப்படியென் றெண்ணுகிறீர் பொதுவுமாகும்
சாய்வனே மண்மலியுங் கடலுத்தானே
சந்ததிகள் தங்களுக்குப் பொதுவதாகும்
ஓய்வனே வெளிவாய்வு மேகமோடு
உடுகதிருஞ் சந்திரனும் பொதவதாகும்
காய்வனே வெளிதானே பொதுவில்லின்ற
கங்குலைப்போ லேகருத்த மேகம்மின்றே. (617)

நின்றுதே மேகமொடு வெளியுத்தானே
நிலைதவறி நிற்கவில்லை ஞாயமுண்டு
அன்றிதே யின்றுமுதல் வெகுகாள்தொட்டு
ஆகாயம் நின்றதைப்போல் காலுபூதம்
மன்றிதே நிற்கவில்லை ஞாயமில்லை
மறையில்லை மறையிருந்தால் மாறுமோதான்
கன்றதுவும் பால்குடிக்கத் தாயேகோண
கர்த்தனுமே படைத்தானே பஞ்சபூதே. (618)

பூதென்ற பிரம்பூதம் அஞ்சினுள்ளே
பொரியில்லாப் பூதமொன்று வெளியிற்தானே
ஓதென்று சொல்லாதே ஒன்றுங்கேளா
உவமையில்லாத் தெய்வமது வெளியேசோதி
காதென்ற பெண்ணைப்போற் கவலிசெய்யும்
கனமண்ணும் வாய்வுதீ மேகமோடு
சூதென்று செய்துவிடும் நான்குபூதம்
தெரியபதஞ் கண்டவர்க்கும் தெரியோர்க்கேதே. (619)

ஏதென்றுஞ் செய்யாத பூதமோடு
இருந்தினை லிப்பூகஞ் செய்புத்தானே
ஊதென்று உட்காத்துக் கண்டதாலே
ஊடுருவி யான்கண்ட சேமத்தாலே
சூதென்று கண்டேனே நான்குபூதம்
தொல்லுலகில் யாவருக்கும் பொதுவில்லாதே
ஏதென்று கேட்டேனே முனியில்லாதால்
எங்கள்லிலை தவறினமே யெனச்சொன்னாரே. (620)

சொன்னதனைக் கொண்டுமே விசாரித்தேன்யான்
தூரியபத வொளிகண்ணும் ஞானக்கண்ணில்
இன்னதனில் விபகாரம் மண்ணும்அப்பும்
இடுகாற்று தன்னுடனே தேய்வுநாலும்
என்னதனில் ஞாயமில்லாப் பக்கஞ்சாய
ஏதென்று கேட்பதற்குக் கூப்பிட்டேன்யான்
முன்னதனில் வந்திருந்தார் நாலுபேரும்
முறைதவறும் நால்வரையுந் தட்டினேனே. (621)

தட்டினே னினிமேலே வெளியேபோலத்
தங்குதா பரமுடனே புற்பூண்டாதி
எட்டினே னென்னோடு சிவரெல்லாம்
இதிற்கண்ட யாவருக்கும் பொதுவுமண்ணை
தொட்டினேன் நீவஞ்சம் போயொழித்தாய்
சிறுபிள்ளை மணற்சோற்றுக் கிச்சையேபோல்
மட்டிநாய் நீபோபோ மண்ணேமண்ணே
மருமண்ணே யாக்கிடுவேன் சமமாய்நில்லே. (622)

நில்லென்றால் நிற்காயோ நிற்பாயோநீ
நீள்பிராணன் நானெடுக்கில் யென்னிதென்று
கல்லென்றால் மண்ணது மென்சொல்நாவால்
கவலையை யொழித்தனனே ஒளியுமானேன்
சொல்லென்றுற் சொல்லிடுவேன் பகலோராவாய்
சொல்பெரிதோ பகல்பெரிதோ தணிந்துசொல்வேன்
வில்லென்றுற் சதைபிழைக்கா தென்சொல்லாலே
விரகிதரும் கதிர்உதிரு மேனியென்னே. (623)

சூரியசாப விபரம்.

ஏன்னுலே எனக்காக வைத்திருக்கேன்
என்றுலு மொருசாபஞ் சொல்லிவாரேன்
மூன்னுலே யிதுவொன்று முடிந்திருக்கு
முழுகதிருக் குறைவதற்குச் சொல்லிவாரேன்
தன்னுலே யிராகுதிது கலியாம்ஆண்டில்
தானடக்கும் அய்யாயிர ரெண்டுபத்து
மண்ணுலே நீர்வறளும் மாரிநீர்போல்
வருஷமூன்று சேரஅதி சயங்கேட்பாயே. (624)

கேளப்பா அய்யாயிரம் ரெண்டுபத்து
கெடிமூன்று சேரஅதில் மாதஞ்சித்திரை
பாழப்பா ளள்தேதி மூன்றுதொட்டு
பகருகிறேன் மூன்றுநாள் கதிரேயில்லை
ஊழப்பா சூரியர்க்கு விதிதான்வந்த
உச்சரித்த காலவிதி பூஜைபாக்கி
சூளப்பா ஆகாமற் சொரூபம்நின்ற
சொக்கிநின்ற பிராணனைப்போல் வருவார்பின்பே. (625)

பின்புபார் மற்றோரா மாண்டுதன்னில்
பேசரிய காரணங்கள் வானிற்தோணும்
மூன்புதான் கதிர்ஞாயம் வெளிச்சம்போல
முன்தோன்றிப் பின்மறையும் வெளிச்சங்காணும்
னன்புபோல் வரிப்பிளப்பு மதிலேகாணும்
எல்லார்க்குந் தோன்றுமது மூன்றுகத்தான்
அன்புபோல் ஒட்டிருக்கும் ரெண்டுகித்து
ஆருக்குந் தோற்றுது யெமனுக்தானே. (626)

தானென்ற அறுநூற்றி யிருபத்தாண்டில்
தாய்மண்ணே அப்புடனே வாய்வுக்தியும்
ஏனென்று கேட்டேனே நீங்கள்கால்வர்
எப்பொழுதும் வெளிமறையா தைத்தேசேர்த்து
ஊனென்ற உடம்பெடுத்த நீங்களேவர்
உம்மிலே வெளிபொதுவே தியுக்தானே
கோனென்ற வொளிதானே பொதுவதாகும்
குருவாசி மாருதமே பொதுவாங்காற்றே. (627)

காற்றோடு மேகமழை பொதுவுதானே
கண்டவைத்து பூதமதில் பொதுவாம்பூதம்
ஊற்றோடு ஆற்றுநீர் பொருந்தினப்போல்
உறைநீரும் வெளியுடனே தீயுமேகம்
மாற்றோடு மாற்றொட்டல் போலத்தானே
மறைவேதந் தெய்வம்போல் உயிர்வாக்கேபோல்
காற்றோடு வெளிசேரல் மின்னல்மேகம்
கண்டுபா ரித்தறியும் பொதுவதாமே. (628)

மாயாசத்தி பூமியின் தன்மை.

பொதுவேநீ யிதுபோல மற்றேர்பூதம்
பொய்மாய்கை நின்றிருக்கு மண்ணும்பூமி
எதுவோநீ யாருக்கும் பொதுவல்லாமல்
எக்காலப்போ லானோர்க்கு மில்லாமற்தான்
அதுவோநீ தெய்வமல்ல மாய்கைபூமி
ஆறிலொரு கடமையது கோனுக்கீந்தாய்
மதுவோநீ பிருளானுய் பூமிமண்ணை
வையகத்தி லேபாதி ஏழையாமே. (629)

ஏழையே மண்பூமி யில்லாதாலே
எளியோரு மானோர்கள் ஆண்டியானோர்
பாழையோ மனுப்பதரே தரோகபூமி
பாரினிலே மண்பூமி பெருத்தாற்சீமான்
காலையே யிப்படியே தரோகபூமி
கரைமுதற் கிண்ணுமல்லோ தரோகபூமி
வேலையோ மன்மதன்போற் தரோகபூமி
மேவிட ஒட்டாது எளியோரைத்தானே. (630)

எளியோர்தன் யேக்கமெல்லாம் பூமிகொள்ளும்
எப்பொழுது மிப்பூமி ராசாவாதும்
எளியோரை அடுமையெனச் செய்துவைக்கும்
இப்பூமி பெருந்தொல்லே பிறர்க்குத்தானும்
எளியோரைப் போக்கடிக்கும் வலுத்தோர்தம்மை
எக்கிருத்தும் வரவழைத்துக் கொள்ளுஞ்சாரும்
எளியோரை எளியோரா யாக்கிவிட்டு
இருத்தவிட மசையாமல் நிற்குந்தானே. (631)

நின்றிருக்கு மிப்பூமி யித்தப்பூதம்
நேர்விசும்பில் நீர்மேகம் வாய்வுத்தியும்
ஒன்றிருக்கும் வெளியதுவே அசையாதப்பா
உண்டாகும் நீர்மேகம் வாய்வுத்தியும்
கன்றிருக்கும் கதிர்மதியும் உடுக்கள்தீயே
ஈருக்கு மேபொதுவே புற்பூண்டுக்கும்
சென்றிருக்கு மேகமது வாயுவுத்தான்
திரைசீவர் புல்பூண்டு தங்களுக்கே. (632)

தங்களுக்கு மேபொதுவே வாய்வுமேகம்
சஞ்சரித்து வீலையாடும் எல்லோருக்கும்
உங்களுக்கு மெங்களுக்கு மல்லோருக்கும்
ஒத்துவரும் பொதுசமனுய் நாலுபூதம்
எங்களுக்கு மூங்களுக்கும் அல்லோருக்கும்
ஏறிவிடு மிறக்கிவிடும் தாளும்நீளும்
அங்களுக்கும் போக்காது யித்தப்பூமி
அசைந்தாடு மண்மலையுங் கடலுமாய்கை. (633)

மாய்கையே யிதுவப்பா மூன்றுத்தானே
வல்லபங்கள் மெத்தவுண்டு நிலைநில்லாது
மாய்கையே யோரிடத்தில் நிற்காதையா
மற்றத்த நால்பூதஞ் சமனுய்நிற்கும்
மாய்கையே பூமியொரு மாயாசத்தி
மாகடலின் பள்ளம்போற் பள்ளஞ்செய்யும்
மாய்கையே மலையைப்போ லுயரச்செய்யும்
மாமண்ணும் மீண்டாப்போல் நீளுத்தானே. (634)

நீளுமே மண்மலையுங் கடலுமப்பா
நெடுநாளே ஒத்திருந்தாற் கோனேயாகும்
பாழுமே யிதுதானே ஓரிடத்தில்
பதுங்கினதால் நாம்வழை அடிமையாலும்
கோழுமே பொய்ப்பூமி சாபமீவேன்
குருமுனியே யானுக்காற் சமமாய்நில்லு
வாழுமோ உன்னுடலுக் குரோகத்தாலே
மானிடற்குக் குஷ்டம்போல் கல்லீவேனே. (635)

ஈவேனே சத்திரிய வசிஷ்டாகேளு
இயம்புமே காகரிசி புசுண்டர்சொல்லும்
மாயுமே கல்லுமுள்ளு மண்மேல்வந்தால்
மானிடர்க ளெங்கிருப்பார் சொல்லுமய்யா
ஓயுமோ ஓயாது மானிடங்கள்
உத்தமர்கள் தானிருப்பார் உலகத்துள்ளே
காயுமோ பழங்கனியு முதிர்ந்திடாது
கனிந்தபின்பு காயோடு வற்றிமாளுமதே. (636)

கலியுகம் நூசுசி க்குள் ஞானம் தங்கும்.

மாழுமே சதுர்யுகமோ அறுபதாச்சு
மறையாச்சு சூரியனுர் கோவிலாச்சு
பாழுமே போக்குதற்குத் தீர்த்தமாச்சு
பலபேத முண்டாச்சு அறுபதாச்சு
கேளுமே யிதுகடைசி கலியுகத்தில்
கிளறுகிறே னேயாயிர காற்பதுக்குள்
வாழுமோ யிப்பூமி மண்மேடாகும்
மறைநிலைக்குங் கதிர்நிலைக்கும் ஞானந்தங்கும். (637)

தங்குமே யோசனைதான் ரெண்டுமேலே
தார்பூமி யொன்றிருக்கும் ஊரேயொன்று
மங்குமோ மரியாதை பொங்கும்பொங்கும்
மானிடர்கள் தவறுர்க ளய்யாஅய்யா
எங்குமே ஊராறைக் கலகம்வீணே
இக்கதிர்க்கு முன்னுலே கதிராங்காலம்
அங்குமே முன்சொன்னேன் முன்னும்பாகம்
ஆதியந்தம் நடுமத்தி ஆய்ந்துபாரே. (638)

சாதன விஷயங்கள்.

ஆய்ந்துபார் பத்தியங்கள் முறைகள்பாகம்
அமைத்திருக்கே னின்நூலி லெவ்விடத்தும்
ஓய்ந்துபார் தனித்திருந்து உற்றுப்பாரு
ஊர்சுற்றுங் கண்ணோடு மனக்கண்சாரு
மாய்ந்துபார் விடியுமுன்னே காலாஞ்சாமம்
மக்களே யானுக்கா லெழுந்திரித்து
தேய்ந்துபார் புலன்கருவி மனமொன்றுகி
னினிதின்னப் பல்லசையும் வாருபோலே. (639)

போலவே குற்றாதீர் சம்மணங்கள்
பொழுதுபுறப் படுமுன்னே பிறர்காணுமல்
சாலவே பிறர்சத்தங் கேழாப்பக்கம்
தனித்திருந்து பார்க்கையிலே சாய்ந்திடாதே
ஊலவே சத்தமிட்டுத் தூங்கிடாதே
உண்மையென்ன அச்சரத்தைக் கத்திடாதே
ஏலவே கால்கரங்கள் நீட்டிடாதே
இடுப்பதனைக் கோணாதே தலைசோர்கில்லே (640)

நில்லப்பா கண்ணதனை மூடிடாதே
நிமையதனை மேல்நோக்கு களிழ்ந்திடாதே
வில்லப்பா கையிரண்டுங் கட்டிடாதே
விரித்துநீ யேற்காதே சவமாய்நில்லு
சொல்லப்பா கேளாதே தடுப்பாய்காதை
தன்பமென்று யெண்ணுதே ஆண்டுமூன்று
கல்லப்பா நிற்பனபோற் சரீரம்பாரு
கதவடைக்கத் திறப்பனபோற் புருவஞ்சட்டும். (641)

மூலப்புளி வைத்தியம்.

தட்டுமே ஒருமுகூர்த்த மிருத்துபாரு
சாதிப்பா யாண்டொன்று ஆண்டுரெண்டு
கொட்டுமே தேளுருப்போல் விட்டிடாதே
குமரியாசை கொண்டவன்போற் கோருவாய்நீ
வெட்டுமே மனமசையும் அசைந்தால்மாளும்
வேறுதுரை யேராதே வாராயோநீ
மூட்டுமே பசிக்கொடுமை யாலேதீதான்
மூலப்புளி தேடாதே வயித்தியந்தான் (642)

வயித்தியமே யாகாது யோகத்தோர்க்கு
வல்லபங்கள் ரெம்பவுண்டு வாய்ந்சேட்டை
பயித்தியங்கள் போலிருக்கும் பித்தமாளப்
பாழ்மனது மாள்வதற்கு மூலங்கட்டும்
உயித்தியங்கள் செய்தாப்போல் உடலேதுன்பம்
உயிர்கொந்து உடல்வலிக்கும் கபாலங்குத்தும்
வயித்தியங்க ளாகாது அபானவாயுவால்
வயர்கொந்து குடல்பிரண்டு உறுமும்வாயுவால். (643)

வாலென்ன தோலுரித்தாப் போலேகாணும்
வாயிலே போட்டாக்கால் கசப்பேகாணும்
காலென்ன மொழிக்குமொழி திருகிக்காணும்
கால்பிரளுங் கண்ணுருளுங் கண்டம்நோகும்
சேலென்ன நீர்குதிக்கு மேகம்போலே
சிலுநீரும் வலக்கட்டுக் திரண்டுஆடும்
ஆலென்னப் போய்விரியும் அபானவாய்வு
அடைத்தாப்போல் நின்றுவிடும் வாசிமூச்சே. (644)

மூச்சோடா முனைகாசி மூட்டிப்பாயும்
முன்னின்றுங் காணுது விழிமேல்நோக்கும்
பாச்சென்றும் வேண்டாமே தானேபாயும்
பரிவாசி செயவாசி பரமதேசி
கூச்சென்று மூக்குணமும் புருவம்நாடும்
குருகெறியே வாத்தியார் கொண்டகோலம்
எச்சென்று பாராதே யிந்தநூலை
என்மக்க ளானுக்காற் கள்ளிடாரே. (645)

கபம் வழலைசுத்தி.

கள்ளாரே கள்ளுவரே யானுற்தானும்
தாரணியி லெண்மனுக்கள் கள்ளுவாரோ
கொள்ளுவா ராஞக்கால் முத்திஞாயம்
கூறுமே ஆதியந்த மத்திபாரு
மொள்ளுவார் ஞானநீ ரமுர்தன்னை
முகூர்த்தமதிற் சேகரித்து உண்ணுவார்கள்
கள்ளுநீர் போலிருக்கும் ருசியுற்தேனும்
கால்கடையின் நெய்யாகுங் கருப்பஞ்சாரே. (646)

மூள்ளுபோற் தடித்திருக்கும் பக்கத்தானே
முழிபிதுங்கு மச்சணமே மயங்கிடாதே
வள்ளுவே போற்குலக்குஞ் சாற்நிபண்ணு
மக்களே மருமகளைத் தள்ளிவைப்பீர்
கொள்ளுவீர் மருமக்கள் தானேகானே
குமரியே யானுக்காற் தள்ளிடாதே
துள்ளுமே மனதடங்கச் சாதித்தேரு
தன்பமற்று மிருந்திடலாம் ஞானக்கண்ணே. (647)

ஞானக்கண் நெற்றிக்கண் உச்சிக்கண் ணு
நயனக்கண் மேலேதான் யோகக்கண் ணு
ஊனக்கண் சதைக்கண் ணு விழியின்கண் ணு
உளமறியாத் தோசியற்கு பேச்சுமூச்சோ
வானக்கண் கண்டாக்கால் பேச்சேயாகும்
வசனித்தாற் சொல்லெல்லாம் பலிதமாகும்
ஈனக்கண் பெற்றுக்கால் வார்த்தைதானே
இவ்வார்த்தை மனவார்த்தை கலகவார்த்தை. (648)

வார்த்தையே சொற்கலகம் மனமூன்றானே
வையாழி போடுமல்லோ கலகநெஞ்சு
போர்த்தையே பிச்செறிந்து நெஞ்சைவெட்டி
பிழைதிருத்தி வனமாக்கி மரத்தைவெட்டி
கோர்த்தையே ஊசிமணிச் சறடேபோல
குருமணியை ஊசிவழி உச்சிநூலில்
ஏர்த்தையே யிக்கண்ணும் சதைக்கண்ணேல
என்குருவின் சாஸ்திரத்தை நம்பிப்பார்த்தே. (649)

ஒளிகண்டால் மோட்சம்

பார்த்தாலும் நினப்பழக்கம் விட்டிடாதே
பக்குவமாய் சொன்னவைகள் மறந்திடாதே
வேர்த்தாலுங் குளித்தாக்காற் சொரியவேணும்
மெல்லியர்கள் ரோஞ்சலும் மந்தம்வேணும்
சீர்த்தாக்காற் சகிப்பதற்கு மந்தர்தானே
தினமிருந்து பார்த்தவர நாட்டந்தானே
ஏர்த்தாக்கா லொளிகாணு முடிவுதானே
எப்போதும் ஒளிகண்டால் மோச்சந்தானே. (650)

மோச்சந்தான் ஒளிகாணச் சித்திக்கும்பார்
மோனஒளி காணுமட்டுஞ் சாதனங்கள்
கூச்சந்தான் ஞானகுரு ஒளிகாணமட்டும்
கூசாதே சாஸ்திரங்கள் ஒளிகாணுமட்டும்
பேச்சுத்தான் மனமென்ற மூடத்தாலே
பேசாதே ஒருகாளும் அறிவேமாங்கை
ஆச்சுதா னென்றுலு மனதாலாகா
அவ்வறிவு பேரறிவு அதனுலாமே. (651)

ஆகுமே அறிவைவிட்டார் சலனத்தாள்வார்
அவ்வாசி யோகம்விட்டாற் சித்திகிட்டா
போகுமே யெனைவிட்டார் சாஸ்திரங்கெட்டார்
பொய்கெட்டார் மெய்யாவார் புழுக்கையாகார்
ஏகுமே உயிர்விட்டார் மயானந்தொட்டார்
எல்லாருந் தொட்டாரே அச்சமில்லார்
ஓகுமே கண்ணீரே வடிதல்சொந்தம்
ஊழ்வினையென் றிடிப்பாரே துடிப்பினுலே. (652)

துடிப்பென்ன உறநெஞ்சு மத்திதன்னில்
தூளளவும் புகையளவும் புதைந்தபூதம்
கடிப்பென்ன கண்டிருந்தும் பாராமல்தான்
நாயகனைக் கண்டவள்போல் கவிழுவிர்கள்
கொடிப்பென்ன அடிக்கடியே மார்புபள்ளம்
கொடித்தவலு வடித்தவுயிர் சுருண்டுசுற்றி
அடித்தவுயிர் யிருதயத்தின் பள்ளந்தன்னில்
அடிக்கடியே சுற்றித்தான் சுழலும்வாயுவே. (653)

வாய்வென்ன அச்சுழியிற் சுழல்வதாலே
மனதென்றும் நினைவென்றுங் குறிப்பதென்றும்
ஆய்வென்றும் விபகாரத் தொந்தமென்றும்
ஆகாய அறிவென்றும் மறப்பதென்றும்
காய்வென்றும் ஞானமொழி குளிர்ச்சியென்றும்
கங்குல்பக லற்றவிடங் கருத்தேயென்றும்
நோயென்று மனமாய்கை சலனமென்றும்
நவலுவார் பொய்யிருக்கு மிடமென்பாரே. (654)

மனதின் பெருமை.

இடமென்பார் தலமென்பார் தீர்த்தமென்பார்
எல்லோரு நாமிருக்கு மிவடமென்பார்
கடமென்பார் புத்திநடு சித்தமென்பார்
கடத்தறிவு பெருயூகம் தெளிவாமென்பார்
குடமென்பார் குருவுடலே மனமாமென்பார்
கோடான கோடிசித்து மனதினுலே
அடமென்பார் வயிராக்கியஞ் சமமாமென்பார்
ஆர்கண்டு சொல்வார்கள் மனதின்பேற்றை. (655)

மனப்பேற்றைச் சங்கர்ப்பத் தெளிவென்பார்கள்
மருகால மறிந்துணரும் வருத்தமென்பார்
இனப்பேற்றைச் சொல்லுதற்கு இதுதான்ஞாயம்
இதுபாயம் அதுபாயம் யெண்ணிச்சொல்லு
தனப்பேற்றை நீனைப்பதென்றும் மிச்சையென்றும்
சகலருக்குஞ் சம்பந்த பந்தமென்றும்
குணப்பேற்றைக் கண்டறியக் கள்ளமென்றும்
கும்பிடுதல் கோவில்குளம் குருசன்யாசம். (656)

சன்யாச மனமென்றுங் குடும்பமென்றும்
தவமென்றும் பலமென்றுஞ் சாயலென்றும்
சன்யாச மதனுலே கண்டுகொள்ளச்
சாரூப முதலாகச் சரிதையாக
சன்யாசச் சரிதையொடு கிரிகையோகக்
தான்கண்ட பலனுலே ஞானமென்று
சன்யாச சாலோக சாமீபத்தே
சாரூப சாயுச்ய மிதன்பேராலே. (657)

பேராலே ஊராலே பொருளினுலே
பின்னுமுன்னு கால்புரமுந் துணையினுலே
கோராலே சீராலே பத்தியாலே
கொடும்பாவக் தானகற்றும் புத்தியாலே
ஏருலே உழவாலே மண்ணினுலே
எங்களுக்கு ஆள்த்துணையு மதுபோற்தானே
நூருலே படுகளத்தே சாம்பல்வீடு
நோக்குநாள் வருமட்டு மெண்ணுபேரே. (658)

பேரென்ன மனதேபோம் நினவேபோல
பேர்நினைவை யெண்ணல்போல் மனதின்பேரு
ஊரென்ன யிப்படியே சிவர்பேரு
உலகமதிற் புற்பூண்டு விருட்சப்பேரு
தாரென்ன மனப்பேரு மிப்படித்தான்
தங்குகடல் வாரிமலே பெயரனந்தம்
வீரென்ன காற்றதனின் பெயரனந்தம்
விசுதழி மேகப்பே ரனந்தந்தானே. (659)

அனந்தமே இரவிமதி யுடுக்கள்பேரு
அதின்மேலே கருப்புடலே ஆகாயத்தே
அனந்தமே வெளியகலம் அண்டகோலம்
அந்தமண் திடல்மேடே இந்தமண்ணே
அனந்தமூண்டு பிதற்குள்ளே வெளிக்குள்ளேதான்
ஆச்சரியம் பெண்ணில்லை மனதின்பேதம்
அனந்தமூண்டு நினைப்பதெல்லா மனதின்பேரு
அய்யய்யா வென்றுலு மருள்பெற்றுலே. (660)

அருள்பெற்றுல் மனவுடலுந் தூணையாய்நிற்கும்
ஆகுமது வென்றுலும் சும்மாலாகர்
இருள்பற்றி வந்தாலு மெடுத்துப்போடும்
ஏமன்வரு நாளறியுங் கோலாய்நிற்கும்
பொருள்பற்று வந்தாலும் தானேகிட்டும்
புலாவெலும்பு கைந்தாலுந் தானேகட்டும்
மறுபற்று வாராது யெந்தகாலும்
மனமுண்டு உயிருண்டு உடலுமுண்டே. (661)

உடலுண்டு உயிருண்டு அதிலேதான்
ஊடாடு மனமுண்டு அதிலேதானே
கடலுண்டு குதிரைபோல் யெண்ணில்லாத
கார்மேகம் போற்கிளம்பு மனமுந்தானே
திடலுண்டு கட்டுமெட்டு மனமும்உண்டு
திங்கில்லா மனமுண்டு தினம்போற்றானே
மடலுண்டு பிடுங்கறியா யிடத்தைக்கண்டு
மாமனத்தோ ரானுர்கள் யிடங்கண்டோரே. (662)

கண்டோர்கள் மனங்கண்டு கர்மந்தாண்டு
காமமறும் யோகமுறும் ஞானம்காடும்
தொண்டர்கள் பண்டுபொருள் களவுசெய்தார்
தூங்காமற் தூரியநிலை பெரியோரானுர்
அண்டர்கள் மனமறியார் சிறியோரானுர்
அடிப்பவரைக் காத்திருந்து உண்ணலானுர்
மிண்டோர்கள் யெக்காலம் பூமியுண்டு
மேலோர்க்கு யெக்காலக் தாழ்வுமுண்டோர். (663)

உண்டோதான் குறைநிறைவு காலந்தோணுர்
உட்புகுந்து பார்த்ததனைக் கேட்பாராளுல்
பண்டோர்கள் சொற்பலிதம் குறைவுதோணும்
பாரிதனை நன்முக நிறைவுகாண
தண்டார்கள் பூமியிலே கோடாகோடி.
தான்பிறந்து ஆதியந்தம் கணக்கில்லாதே
இன்றேதான் படர்மூள்ளுச் செடியேபோல
எத்தனையோ ஈயெறும்பு போலத்தானே. (664)

போலத்தான் மாந்தரெல்லாங் கொசுவேபோல
பொங்கினுர் தங்கினுர் பொருமினுர்கள்
சாலத்தான் வினைந்தவர்கள் மயானக்காட்டை
தானடைந்தார் மேலடையச் சமத்தில்லாதார்
மீழத்தான் தெரியாதார் பூமிப்பாரம்
மேலிட்டுத் தாங்காமல் வினைவோகொஞ்சம்
வாழத்தான் காணுமற் போரேயிட்டு
வயாலே அக்கினியே கோபமாமே. (665)

கோபமே தீப்பற்றி உச்சிவாய்வு
கொடுங்கனலா லிந்திரியஞ் சாம்பலாச்ச
தாபமே மேலிட்டு நிறமேமாறி
சந்ததிகள் பழமுறைமை தப்பினுர்கள்
கூபமே மண்டிருந்தழித்தின்மண்டு
கூக்குரலைத் தானெடுக்கி அடங்கினுப்போல்
ஞாபகமே தானெழிந்து மயக்கமாகி
நானிலத்தில் மானிடரும் தூங்கினுரே. (666)

தூங்கினுர் தெய்வபயங் கோணின்அச்சம்
துடர்பிரம சாபபயம் தொக்கிநோயால்
ஏங்கினுற் குடற்பசியால் தாரித்திரத்தால்
எல்லாரும்மாண்டார்கள் துன்பம்மிஞ்சி
வாங்கினுர் சொற்பிலத்தை மனப்பிலத்தை
வாயாட ஒட்டாமல் செமித்தாப்போலே
தூங்கினுர் விழிந்திருந்து நமனைக்கண்டார்
தன்பமற்று வாழ்வதென்னுள் சொல்லுவீரே (667)

சொல்லுவீர் ஒளிதாண்டி உலகந்தாண்டி
சொற்பிழைகள் தாண்டினபேர் சுகமுற்றோர்கள்
கெல்லுவேன் வெகுகாளாய் நினைத்திருக்கேன்
கேடிதனைத் தப்புவிக்க நீரேவந்தீர்
நில்லும்நீ ரிப்பிழைகள் நீங்குமட்டும்
நீங்காதோ நீரிருந்தால் நீங்கும்நீங்கும்
மல்லுநீர் யுத்தக்களஞ் சாம்பலாகும்
வகையுடனே நாமிருப்போம் போக்கிடரே. (668)

போக்கினுற் கைலாசம் பொதுவுமாகும்
புனர்சென்மம் நீங்கிவிடும் பொதுவேயாகும்
வாக்கினுற் சொன்னுக்காற் புகைபோலாகும்
வாசல்வழி திரும்புவரோ மறைத்துபோவார்
நோக்கினுற் போதாதா காடேயாகும்
நீராண்டி லக்கண்டம் கடலதாகும்
போக்கினு லக்கண்டம் புழுதிச்சாம்பல்
புற்பூண்டு நீயெரிய யிறைச்சிதெய்வம். (669)

தெய்வமே யானுக்கா லிறைச்சிதின்னுர்
தேவடியா ளங்குண்டு வீடுதோறும்
கைவமே கர்ப்பிருக்கும் காங்கள்தானே
நமனுக்கு மஞ்சோமே யிறைச்சிக்கஞ்சி
பெய்வமோ மழைபேயோம் கல்லேபேய்வோம்
பெருந்தூர மலையாவோம் முள்ளுமாவோம்
கொய்வமோ ஆளிருக்கச் சுரமேவந்து
கொண்டுபோம் காளில்லை காலைதானே. (670)

காளேதா னேதய்யா புகண்டமூர்த்தி
நாயகமே யென்னுளும் போற்றிசெய்தேன்
தாளேனே யென்மனது உம்மையன்றி
சகியேனே ஓர்பொழுதுந் தவறிலேனே
மாளேனே உமைநினைந்த வசனத்தாலே
வருவேனே நீரிருக்கு மிடத்துக்கேதான்
கேளேனே பிறர்சத்தங் கேள்வியோடு
கேட்டதையே தான்கொடேன் காணீரேனே. (671)

ஈவேனே நீர்கொடுத்த வரத்தையானும்
ஈபவனு தருபவனு யெமனேவெல்ல
ஓய்வேனு ஞான்மறந்து தூங்குவேனு
உள்மனதைக் காணுமல் வெளிபோவேனு
காய்வேனு நீரிருந்தும் காணுதார்கள்
கஞ்சிகஞ்சி யென்றலிவார் மாறுவேனு
தாயேனே தந்தைகொண்ட மாதிருக்க
தமரேனே யெனைமறந்தால் சமாதிதானே. (672)

சமாதிநிலை.

சமாதியே சொல்லுகிறேன் வசிஷ்டகாதா
சந்ததிகளத்தனைக்கும் தெளிவதாக
சமாதியே நீயானுய் வெகுகாள்யோகி
சாகும்காள் தெரிந்தவரே சமாதிதன்னில்
சமாதியே மண்மூடல் அரையாங்கல்லில்
தான்வைத்து மூடலல்ல ஓளியுமல்ல
சமாதியே பிறர்காணு மறைவுமல்ல
தானிறந்து உயிர்விடலு மல்லதானே. (673)

அல்லவென்றால் சமாதிநிலை உயிராய்மூக்கில்
அசைந்தாடுஞ் சிவனுயிர் பிராணமூச்சு
சொல்லவென்றால் நூல்தோறுஞ் சொல்லிவைத்தார்
சுகமுடனே தானிருந்து ஏங்கிடாமல்
நில்லவல்ல பேர்களுமே மூக்கோடாமல்
நிறுத்திடவுந் தடுத்திடவும் உள்ளேதானே
செல்லவல்ல பேர்களுமே சிவன்மால்போல
தென்தனமென் றுடலுமே உயிரின்சித்தே. (674)

சித்தியா மிதுதானே சமாதியாகும்
சிவஞானே மாலாணே சித்திதானும்
முத்தியே யிதுதானே சிவன்முத்தி
முனிமுத்தி காயசித்தி யோகசித்தி
வெத்தியே யிதுதானே சரகத்தன்னே
விட்டுவதுந் தரத்துவதும் உயிரைவைத்து
புத்தியே யிதுதானே மற்றதெல்லாம்
புலவுடம்பைக் காப்பதற்கே மத்திதானே. (675)

மத்திதான் புத்தியெல்லாம் பொருளேத்தேடும்
மனிதர்புத்தி சிவனுபிர் பிறிதல்காணும்
சத்திதான் பிரிந்தாலேயென்னவாகும்
தவஞ்செய்த உடலல்லோ எமனுக்கஞ்சா
சித்தியே யுடல்வேண்டு மரணத்தாலே
சிவனுயிர் பிரிவதற்கு உடல்நடுங்கும்
நத்தியே தானிருக்கும் அறிவேமத்தி
நாயகரின் பாரிமத்தி சிசுவைப்போலே. (676)

சிசுவில்லாத் தாய்தந்தை சினேகம்போல
சிவனுடல் அறிவன்றித் துன்பமாகும்
பசுவில்லாச் சாணத்தா லிட்டாப்போல
பல்லிடுக்கி லீரம்வர ஊத்தைபோலும்
நேசமில்லார் ஆடைகட்டித் திரிந்தாப்போல
நீள்மனமும் ஊடாடுஞ் சலித்தத்தள்ளும்
கொசவில்லா உயிர்மூட்டை யில்லாவீட்டில்
கொண்டவர்தன் நித்திரைபோற் குரும்பர்தானே. (677)

குரும்பரே சாஸ்திரங்கள் லேசாய்ச்சொன்னர்
குமரிமுகில் கல்லாகும் வாரேயென்ன
அரும்பரே நூல்சொல்லக் குருவானாரோ
ஆருக்கு மஞ்சாமல் மூத்திவிட்டு
வெரும்பரே துன்பத்தைச் சொன்னர்பாழாய்
வேரறுக்கச் சொல்லாமல் அழுகைசொன்னர்
திரும்பரே சொன்னக்காற் திருவைச்சொல்லு
செத்தபின்பு அழுகைவருந் தானேதானே. (678)

தானேதான் அழுகைவரும் சுகமுந்தானே
தன்னுலே வருகாது சிவன்முத்தி
கோனேதான் நாடன்றி வருகாதாலே
குபரிசுகம் ஆணையன்றி வருவதுண்டோ
வீனேதான் சொன்னரே குருவல்லாமல்
வெரும்பிலுக்காய்ச் சாடிட்டார் எலும்புக்காக
தோணேதான் பார்த்தறிந்தாற் தானேகாணும்
சொலத்தெரிந்தால் நான்தெரியுஞ் சுகவாழ்வாமே. (679)

வாழ்வீரே தீனயதியுஞ் சாஸ்திரங்கள்
வாய்கொண்டு பாடாதே மனதால்பாரு
சேய்கொண்டு தானுண்ணல் போலத்தானே
தெருவீதி பார்ப்பீரே உம்மைப்பார்ப்பீர்
நோய்கொண்டு போவீரே யென்சொல்பாரு
நோக்கியே பாராட்டால் பிதென்செய்யும்
பேய்கொண்டு போவீரே நீரேதானும்
பின்னுமூன்னு மறக்கதினுற் தாரைதானே. (680)

தாரைதான் வார்த்தாப்போல் உடலேதாரை
தமர்தாரை நீர்வார்த்தீர் யெமனுர்ஞாயம்
ஊரேதா னிப்படியே வெளித்திக்கெல்லாம்
ஊடாடுஞ் சீவர்களும் மயானகாடே
பேரேதா னிட்டீரே பெருமான்பேரை
பிள்ளேதிண்ணுங் கர்த்தனே யெமனுர்தானும்
வேராதா னறுத்தானே யெமனுர்தானும்
மேல்பெருமான் கூடிருந்து தூக்கினரோ. (681)

தூக்கினர் சிவனரோ பெருமாள்பிரமன்
துணைசெய்ய பிந்திரனே குலத்தினரோ
பாக்கினர் நிரகங்கள் சுவமிதானே
பாரிக்கக் குலதெய்வப் பூசைதானே
சேக்கினை றுபத்திமூலர்தானே
திருமைந்திருவருமோ கிழவிதானே
நோக்கினே ரென்வரவே தெய்வமெங்கே
நுவலுவீர் யெமன்வந்தால் தெய்வமேதே. (682)

தெய்வமே யெமன்தானே தெய்வகாமல்
தேசத்தி லவன்சிறிது தள்ளல்வேண்டும்
கைவமே மார்க்கண்டன் தீனயேயெண்ணி
நடுக்காட்டி லிருந்தவரும் புலிவாய்முன்போல்
செய்வமே காம்தவமும் தவத்தைவிட்டு
சிறுபுலிக்கு அஞ்சுவர்கள் புவியிற்தொட்டே
தொய்வமே பெரும்புலியும் யிரையேசெய்யும்
தயர்கொண்ட தெய்வமது கம்மைத்தின்னும். (683)

திண்ணமல் வைத்திருக்கோ தெய்வமெல்லாம்
செத்தபின்பு பூசைக்குத் தேடுத்தானே
உண்ணுமற் தானிருக்கோ தெய்வமெல்லாம்
ஊடாடு மக்கள்வழி பிதிரேயென்கும்
எண்ணுமல் முன்செத்த பேரைத்தானே
என்மகனே யென்றுசொல்லிப் பூசைவாங்கும்
கண்ணும லிப்படியே தெய்வகூட்டம்
காம்சாகத் தெய்வங்கள் சாகாதுண்டோ. (684)

எமன் கோழை.

சாகாத தெய்வங்கள் செத்தபேரை
தான்சொல்லி மக்களிடம் பலியேகேட்கும்
வேகாத மனிதர்களைப் பார்த்ததில்லை
வெந்தணலைத் தாண்டினபேர் காரதாதி
போகாத மனிதர்களும் யெமனூர்முன்பு
யோய்வருகார் திரும்புவரோ தெய்வந்தானே
நோகாது வைத்திருக்குஞ் சடலத்தாரை
நுட்பமாய்ச் சுட்டுவிடும் எமனுந்தியே. (685)

தியென்ரு லொதுங்கிடலாம் மண்ணுதானே
தீனிதின்ன நினைத்தாக்க லென்னசெய்வோம்
வானேதா னடிகம்மைத் தின்னவென்ரல்
வாயாலு மென்செய்வோ மெண்ணலுண்டோ
தாயென்று நாம்நினைக்க நீரேகொல்லத்
தாரணியிற் தப்புவது லேசோவாச்சு
நோயென்ரல் மாளென்று நூறுக்குள்ளே
நுரைநுரையாய்ப் பொங்கிவரும் கோடிகோழை. (686)

கோடிபோற் குற்றங்கள் யெண்ணிப்பார்த்தால்
கோழையே பலகோடி அய்யா அய்யா
நாடியே குற்றங்கள் சமனுய்நில்லா
நடுநாடி யென்செய்யும் யெமனூர்தான
போடியோ நம்மறிவு தூரதிஷ்டி
பேர்பெற்ற திரிகால வர்த்தப்பூமி
வாடியே போனதுவோ போனலெங்கே
மாவுடலை நீக்குதற்கோ மறைத்திட்டாரே. (687)

மறைந்துமே போகாம லவரைக்கண்டு
மண்திண்ணக் காரணமே தென்றுகேளு
கரைந்துமே போகுமுடல் கரையாவண்ணம்
காயசித்தி யெங்கிருக்கு தென்றுகேளு
உரைந்துமே நாமிருக்கு மிடத்தைக்கேளு
ஊண்விடவும் ஞாயமுண்டோ வென்றுகேளு
திரைந்துமே போனக்கால் மரணந்தானே
தினந்தினமு மெமன்வருநா ளில்லைதானே. (688)

அறிவே குரு.

இல்லையே யெற்தெரித்த நாளுமுண்டு
எம்பிரான் நாமுண்டு தன்னைக்கண்டால்
தொல்லையே வாராது சுகமதாகும்
தக்கமில்லை நாமுண்டு தூங்கலாகும்
வல்லையே நாமறியக் கண்ணேகாண
மனமுருக அறிவான குருவேகாண
கெல்லையே பொரித்தீரே வித்தேயாமா
நீள்குருவே காயசித்தி கெடுநாள்தானே. (689)

கெடுநாளே வாழ்விருக்கும் யோகஞானம்
நீள்விசும்பும் ஒத்திருக்கும் சித்தியோகம்
வடுநாளே மூன்தெரியா பின்னுற்தோற்ரு
வசனித்தால் நாவிருந்து மொழிகுவாளாம்
விடுநாளே நடுநாளுந் தனக்குத்தோற்றும்
மெய்நாளே தோற்றுது பொல்லாநாளே
கெடுநாளே ஒவ்வொருநாள் கிலேசமாம்நால்
கேட்டவரங் கொடுக்காது தன்னுற்தானே. (690)

தன்னுலே தானீயும் பிறரேகேட்டால்
தாரித்திரம் முன்சொல்லும் பின்னேதானே
மண்ணுலே பெண்ணுலே பொன்னினுலே
மாமனது பிச்சையெல்லாம் தானேசொல்லும்
என்னுலே யாகாது கொடுக்கவென்றுல்
இடம்வேணும் பொருள்வேணும் யேவல்வேணும்
நின்னுலே யென்னுலே புத்தியாலே
நீள்விசும்பின் சம்மதங்கள் வேணும்பாரே. (691)

வேணுமே குலதர்ம ஆசாரங்கள்
மென்மேலும் நல்வேஷ பொருந்தவேண்டும்
காணுமே யில்லறத்திற் பெரியோருண்டு
கவலையற்ற யிடத்தனிலே யிருப்பதுண்டு
தோணுமே யவர்களுக்குப் பாதிதானே
தொந்தமுண்டு அவர்களுக்குப் பிச்சைதானே
நாணுமே யவர்களுக்குக் கர்மந்தானே
நாயகனும் நாயகிபோல் வாழுவாரே. (692)

யோகம் 12 ஞ சேய்ய

வாழுவா ரில்லறத்திற் பெரியோர்தானும்
வாய்கொண்டு சொல்லிடுவார் மழையின்ஞாயம்
கோளுபார் மழைஞாயஞ் சொல்லாவிட்டால்
குமரிமுகில் பத்தபோற் கல்லுதானே
தேளுபார் விஷமிருந்தும் யில்லமில்லை
தெருவீதி தானிருந்தும் பலனேயில்லை
காளுபார் பனிரெண்டு வருஷமாமா
நாயகனே நாம்கூடிக் கலப்பதற்கே. (693)

கலப்பதற்கு வெகுநாளே கண்டாலப்போ
கவலைவிட்டு யிருந்தாக்காற் சணத்திற்சித்தி
பலப்பதே மனமில்லை துன்பமில்லை
பரிவாசி வேண்டாமே யோகம்வேண்டார்ம்
தலப்பதே கண்டுகொண்டால் தானேவந்து
சம்சாரி யென்சிசுவே யென்றுசொல்லார்
மலைப்பதே யாகாது அவரேதானே
வருவாரே தன்காரியம் வந்தாற்காரே. (694)

காரப்பா அவர்காக்க நீயுந்தேறு
கங்குகரை யில்லாத அன்பேசேரும்
பேரப்பா சொல்லாதே குருநோதே
பிழையென்று நில்லாதே தெளிவாய்நில்லு
ஊரப்பா நானிருக்கேன் வெளியில்நீரே
ஊர்ச்சோற்றே உண்டீரே யெனக்குவேண்டாம்
காரப்பா கள்குடிய னெனக்குவேண்டாம்
நம்பினவன் தன்மனதே வேணும்பாரே. (695)

வேணுமே அவன்கல்ல பிள்ளையில்லை
மேன்மகனே யெத்தனுக்குத் தொல்லையில்லை
ஆணுமே அவள்தானே பெண்ணும்தானே
ஆண்டிமை கொண்டிடலா மில்லத்தன்னில்
வீணுமே யாகாது மக்கள்வேண்டாம்
மெய்வேணும் பொய்மக்கள் வேண்டாமப்பா
காணுமே பொருளொடுக்கம் பிள்ளைவந்து
கண்டுகொள்ளுந் தம்பலத்தை மென்றிடாதே. (696)

தம்பலமும் பல்லிடுக்கில் சாறல்போக்கும்
தாரித்திரம் வேண்டாமே குழந்தைஞானம்
உன்பிலமு மென்பிலமு மிருந்தாற்போ தும்
உறுபிலமே தானிருக்கேன் நீயேபோதும்
தன்பிலமே பிலமல்லால் பிலமாம்வேறே
சமயத்துக் காகாது சமர்க்களத்தில்
என்பிலமே கொண்டிருந்தும் மயங்கிடாதே
என்மக்க ளானுக்காற் சீஷன்வேண்டாம் (697)

சீஷனு மென்றுசொன்னுற் சிரிப்பாள்வாலை
சிறுபிள்ளை யுந்தனுக்குச் சீஷனுண்டோ
பாசனு மென்னிடத்திற் சோரத்தோசி
பரிவாசி முற்றிலுமே காணுமாசி
மாசனு முந்தனுக்குக் குடும்பந்தானே
மல்லாந்து பெற்றபிள்ளை சீஷன்றானே
வேசனும் பெற்றபிள்ளை கொள்ளிவைக்கும்
வெருங்கையை மூடாதே குருவேபோடா. (698)

குருபோடா அருள்தாடா நாதீதானே
கோனனைப் கோன்தானே கோனும்நீயே
திருமாட மீதிருந்தா யிங்கேவந்தாய்
செத்தசவ மானயே தெருவில்நீயே
இருமாட மீதிருந்தாய் நீகானென்றே
யெப்போதுஞ் சரியில்லை யிப்போதானே
பொருள்மாட மெங்குவைத்தாய் பயந்துதானே
பொல்லாப்பு வைத்தாயே தந்தபின்னே. (699)

பின்னேது முன்னேது அருளொன்றேதான்
பேசினே னருள்கொண்டு பாதிபெற்றேன்
நின்னேது யென்னேது யெனக்குனக்கும்
நெடுநாளே காத்திருந்தேன் ஒன்றுதானே
மண்ணேது மனமேது திருவருட்கு
மாதங்கை வந்தாக்காற் பெருசங்கேது
தன்னேது பின்னேது சரியோபத்து
தான்வந்து பிலத்தாக்கால் வயதுஒன்றே. (700)

வயதொன்று வாலியவள் வந்தாற்தானே
வாரிகடல் மலைமுதலாய் தெரிவாள்கண்டு
தயையென்று மில்லாளே கிழவிதானே
தன்னிடத்தில் லைத்திருந்தாள் பொருளேத்தானே
கயையென்று நீட்டிடுவாள் காலாற்தானே
கண்டவரைக் குரைத்திடுவாள் காலினாலே
அயையன்று மில்லாளே பொட்டல்ரூபி
ஆருக்குஞ் சொல்லாளே சொரூபிதானே. (701)

சொரூபபதம் பெற்றாலே சோதிபோலே
சொல்லெல்லாம் வேறாகும் தினமும்வேறே
அருபபதம் வந்துவிடும் தினநாள்காலே
ஆருக்குஞ் சொல்லாதே தானேநாளே
உருபபதம் வந்துவிடில் பெய்யேமெய்யே
ஊணுகின்ற உச்சரிப்பு தர்மத்தானே
கெருவபத மில்லாது வந்ததாலல்
கேலிபோ லேயிருக்கும் சிரிப்பாய்த்தானே. (702)

சிரிப்பென்ன திரிபுரமுஞ் சேமத்தாலே
செகசால சித்தருக்குத் திதியாம்திஷ்டி
மரிப்பென்ன சம்மாரம் நினைத்தாற்போதும்
மக்களே தந்தையவள் பிள்ளைபோல
தரிப்பென்ன வெங்கவளும் நில்லாள்சொல்லாள்
தாபரத்தி லேயிருக்காள் வாணிவில்லாள்
குறிப்பென்ன கண்டுகொண்டால் நம்முக்குள்ளே
கொடுந்தனலைப் பொருக்காமல் கூடுவாளே. (703)

கூடுவாள் குலக்கொழுந்தி விழித்துப்பாரு
கொங்கையில்லாள் மார்பில்லாள் கொழுந்தில்லாள்
தேடுவாள் நம்மையுமே யோடிப்பாரு
தெருத்திண்ணை யாகாது மூலைசேரு
பாடுவா ளனுராகம் மோடிதோடி
பச்சிலைகள் தளிர்போலே பலவாம்ரூபி
நாடுவாள் விட்டாக்கால் நம்முட்டானே
நாயகனே நீபோவென் றழுகுவாளே. (704)

ஒழிப்பாள்காண் நம்முடலைச் சீரணித்து
உண்டிடுவாள் நம்மனவி உலகம்போல
விழிப்பாளே காமழிய விடமில்லாதே
மெய்சோர்ந்து தினமறந்த தாலுஞ்சாவாள்
குளிப்பாளோ புருஷன்றிப் பெண்ணேயானால்
குமரிமயில் கோதைகுயில் குளிருங்கன்னி
அளிப்பாளோ கற்புடையை வேறேகண்ணி
ஆரையுமே யெண்ணாளே நமைநினைந்தே. (705)

நினைந்தேதான் வேருடலைத் தேடிப்பார்ப்பாள்
நீதியல்ல வென்றாளே நிசமேயானால்
அணைந்தேதான் சேர்ந்திடுவாள் நல்லோரானால்
ஆரையுமே யெதிர்பாராள் குறையைப்பார்ப்பாள்
புணைந்தேதான் சூடிடுவாள் ஒருவன்றிப்
பொல்லாப்பே சுள்ளாப்பு பூட்டுபூட்டு
இணைந்தேதான் மூக்குநெற்றி புருவமத்தி
இருந்தவிடம் பூட்டொன்று யென்சொல்வேனே. (706)

பூட்டு விபரம்.

சொல்வேனே பூட்டதனைச் சொல்லலாமோ
சொல்லிலுற் பெருஞ்சோதி நெற்றிக்கண்ணு
சொல்வேனே தீயொளியை நெருப்புக்கண்ணைத்
தூண்டாத சோதியினைச் சுழினைவாழ்க்கை
சொல்வேனே பெருஞ்சோதி நிமையின்சோதி
சுடரில்லாச் சோதியது தமரின்சோதி
சொல்வேனே காலவர்த்த மானசோதி
சுடர்கோடி யென்றாரே சூர்யனாரே. (707)

சூரியனுர் உடலில்லாக் கண்ணேயானுர்
தூண்டினும் கோடிகண்ணு சுழினேதன்னில்
வரியனுர் யெம்மிடத்தே வருவாரானுல்
எக்காலும் நம்மிடத்தே பேசுவார்கள்
கோரியனுர் கண்டுகொள்ளும் சுடலேதானே
குருவாமா அறிவாமா பொருளேபூமா
ஓரியனுர் கண்தூரம் காதுதூரம்
உள்ளமது வெகுதூரம் உடல்தூரமாமே. (708)

உடல்நாராம் உளம்நாராம் சென்னிகாராம்
உத்தகட மத்தனேயும் நாரதாகும்
படல்நாரா மூல்திரையே அண்ணப்பூட்டு
பார்திறக்கப் பாருவையே உண்ணமூட்டு
கடல்நாராம் உச்சிமுட்டத் திரையேதிட்டு
கால்நாராம் மொளிமுட்டு:பாதப்பூட்டு
ஓடல்நார மிப்படியே விலாவின்பூட்டு
ஊடுதுடை மலப்பூட்டு மூலப்பூட்டே. (709)

மூலமதே மலப்பூட்டு கெஞ்சின்பூட்டு
மோகனமே உண்ணவே காளேபூட்டு
கோலமதே அண்ணவி லோரக்தானே
கொடுநாவே உண்ணவு செல்லுமப்பா
பாலமதே யவ்வாசல் மேலேவாசல்
பளிரெனுஞ் சோதியொளி நின்றவாசல்
ஞாலமதே யிவ்வாசல் மோனவாசல்
நாதனுர் வாழ்ந்திருக்கும் வீடுதானே. (710)

வீடுதா னவ்வீடு முனிமேல்வீடு
மேதக்க முத்தர்களுங் காணவீடு
கூடுதான் காத்திருக்கும் அருளின்வீடு
கும்மென்று தானிருக்கும் அருளின்சோதி
பாடுதான் பட்டதனுற் நிறக்கபூட்டை
பாலகளத் திப்பிவிட்டு மேலேநோக்கி
ஓடுதான் கண்டதன்மேற் கோனைத்தள்ளி
அப்பாலே நானேறி ஊஞ்சல்தொட்டே. (711)

ஊஞ்சல்தொட்டு உயரேறிப் படுக்கைதள்ளி
உன்னதமாஞ் சங்கிலியை ஒட்டியேறி
பாஞ்சதனில் மேலேறி மேடைகண்டே
பையரவம் படுத்திருக்கு மதனைத்தள்ளி
மாஞ்சதனிற் போகாமல் கால்வையாமல்
வலக்காலைப் பின்வைத்து யிடக்கால்தீட்டி
ஓஞ்சதனில் நில்லாமல் ஒட்டி மூட்டி
ஊஞ்சலதின் மெத்தையின்மே லுட்கார்ந்தேனே. (712)

உட்கார்ந்தே னுச்சிமண்டை கபாலஓட்டில்
உறசினே னென்னுயிரை உடையாமற்தான்
சட்கார்ந்தே சம்மனமே மூலம்உச்சி
தானேடி நின்றிடவும் யோகம்விட்டேன்
மட்கார்ந்தே நான்படுக்க வில்லைநேரே
வாயாலே சொன்னதெல்லாம் வாலைவாழ்வு
திட்கார்ந்தே துஷ்டர்களு மடங்கிப்போவூர்
திடியடங்கி நானிருந்தேன் திடியாய்த்தானே. (713)

திடியென்ன உச்சிமூலம் வாய்வுதானும்
தூண்நின்ற தம்பம்போற் தூரேயூணி
அடியென்ற நாக்கினடி மூலபீஷம்
அவ்விடத்தி லேயிருந்து யெழும்பிமேலே
இடியென்ற கொடிபோலே உச்சிமட்டும்
ஏறநின்று விளையாண்டு கபாலஓட்டில்
மடியென்ற விரிபரத்திக் கபாலமெல்லாம்
வாயாக உச்சரித்தாள் யான்கேட்டேனே. (714)

கேட்டேனே உச்சியெனுங் கபாலத்தானே
கிருகிரென வட்டமிட்டாள் அமர்ந்துபோனாள்
மாட்டேனே யென்றாலும் பிடித்துச்சொன்னாள்
வலியஅவ ளென்மனவி துடுக்குக்காரி
விட்டேனே நானுக வைத்துக்கொண்டாள்
வெள்ளாட்டி வெள்ளாட்டி யென்துணைக்கே
ஆட்டாமைக் கண்டுகொண்டு பிழைத்தேன்கூவி
அய்யய்யோ வென்றவளும் அருகினாளே. (715)

அருகிலே நானுக அவளும்நானே
ஆகாகா சொல்லெல்லா மதிசயந்தான்
உருகினு ளெனைக்கண்டு நீயாரென்றுள்
உத்தமியே யானென்று கெஞ்சுநானே
தெரியாதாள் போலிருந்தாள் தனியேநின்றேன்
தினந்தினமு மெந்தனியே மறவாதென்றுள்
அருகிலா தேயிருந்தா லென்னசெய்வோம்
அம்மையே யென்னைவிடு குமரியென்றே. (716)

என்றெனையே யான்கண்டே னவளும்வந்தாள்
யெக்காலங் குடியிருக்க வேண்டுமென்றேன்
மன்றெனைத் தடுக்காமல் தனியேநின்றுள்
வாய்கொண்டு பொத்திநின்று விருகையாலே
அன்றென்னை வாவென்றுள் வலக்கையாலே
ஆரிழுத்துப் போகாமல் வந்திடென்றுள்
குன்றென்னை தடுத்தாளே நில்நீயென்று
குமரிவாப் பார்த்திருந்தேன் கும்பிட்டாளே. (717)

கும்பிட்டா ளெழுந்திருந்து வெட்கப்பட்டு
குமரிகடு முதுயிடுப்பு உரமேகல்லே
வெம்பிட்டாள் தனியிருக்கே னென்றுசொன்னுள்
மேல்வினைந்த காரணத்தை யெண்ணினுளாம்
கம்பிட்டாள் மூழுநிலுமே கம்பாழாத்தாள்
நாரதனே யானுக்காற் கெஞ்சுவாள்பார்
அம்பிட்டா ளெந்தனுக்குக் கோழையோரம்
அகப்பட்டாள் வெகுதூலையில் தூலப்பட்டாளே. (718)

தூலப்பட்டாள் தூகில்பட்டாள் மஞ்சளிட்டாள்
தூகிலதனே மேல்விசிறி முக்காடிட்டாள்
வலைப்பட்டாள் எட்டாரைக் கொட்டக்காணுள்
வாயினுற் சம்பிரதாயம் நம்மாலேதான்
இலைப்பட்டா ளெப்போதுந் தாலிக்காரி
யென்னிடத்தி லிச்சையில்லாள் தூத்தூசீச்சீ
கலைப்பட்டாள் கம்பளத்தி வடுகச்சாதி
காப்பிலிச்சி வேப்பிலைச்சி சலிப்புக்காரி. (719)

காரியென்ன சக்கிலிச்சி பறைச்சிவழி
கருமாதிச் சோறண்ணும் மயானக்காரி
காரியென்ன இவள்பேயே வம்புக்காரி
காட்டிலே சக்களத்தி குறச்சிவாரி
பாரியெனச் சொன்னக்காற் பாவம்பாவம்
பழிகாரி கொலைகாரி யிரக்கமில்லாள்
வாரியவள் மூதேவி கழுதைகாயே
வாயில்மண்ணைப் போடாதே வாடாமாடே. (720)

வாடாநீ போடியடி வலுவாய்நில்லு
மண்டையுடை பெண்ணரசி தூமையோனே
காடாநீ மலையோதான் வாரியுப்போ
கமனைநீ குடுமியுள்ளாய் காயோகொண்டை
போடாநீ யென்புழுக்கை புழுக்கைபோடி
பொல்லாத தூரோகியடா யெலும்புருக்கி
மாடாநீ மாட்டிறைச்சிக் கோலேபோடா
மாகெல்லு கவதான்ய அண்டேபோடி (721)

அண்டுபோல் நீயிருந்து எண்ணைச்சேர்ந்து
ஆடினுய் கூத்தாடி மக்களீன்றும்
மண்டுபோல் நாமிருந்து கூட்டங்கூடி
மருமகளைச் சோமற் தனியேகாடி
குண்டுபோ லேயிருப்பாய் கொழுந்தா யாவாய்
குமருமே யாகாமல் யெனக்குவாய்த்தாய்
கிண்டுபோ லேயிருந்து தெருவில்வாராய்
செகசாலம் விட்டொழிந்து மேல்வந்தாயே. (722)

வந்தாய்நீ யென்மகனே மகளேநீயே
வாதாடி னேமினிமேல் மருவிக்கூடி
பிந்தோம்நா முந்தோமே யொன்றேயாகி
பெருந்துறவு ரெண்டுமொன்று கூடினேமே
சிந்தோமே யெண்ணுளுந் தெருவில்வந்து
சித்தருக்கும் நாமிருவர் செயலாய்நிற்போம்
தந்தோமே யிப்படியே யெந்தாளும்
சமத்தநிக முண்டானே மினிமேற்தானே. (723)

இனிமேலே நாதர்க்கும் புசுண்டருக்கும்
இதையத்தி லூரினதை இருவருக்கும்
கனிமேலோர் சேர்த்தாலே கூடுவார்கள்
காசினியிற் பெரியோருங் கனிந்துதானே
இனிமேலோ முன்னுலோ யிதுபோற்தானே
என்னுளும் பெரியோர்கள் செய்கையாகும்
கனிபோலே பழவகையிற் தேனேவார்க்கும்
கந்தமென்ற வாசனையுங் கொடுக்குங்கூடே. (724)

கூடுமே யிம்மூன்று பழவர்க்கங்கள்
கூடினுற் பழமேதான் ருசியேபோல
நாடுமே யிதுபோலே பழவர்க்கங்கள்
நாட்டிலுள்ள பழவகைகள் ருசிசேர்த்தாப்போல்
பாடுமே மனருசியே செவியோகாதோ
பாரிலுந்தன் மனப்பழமே கனிந்துதானுல்
தேடுமே முக்கண்ணின் ருசியைத்தானே
சேர்த்தவர்க்குத் தித்திக்கும் பழம்வர்க்கந்தான். (725)

வர்க்கமே திரிகாலம் பழமாமுத்தி
வசனித்த சொல்லெல்லாம் வித்தேசித்தி
வர்க்கமே பொழியுமல்லோ வேதமாகும்
வசனித்த சொல்லாலே சொரூபசோசியம்
வர்க்கமே யதுவொழிய வயித்தியந்தான்
வாய்வழித்த பல்லிரையிற் சொல்லுத்தானே
வர்க்கமே யழிவார்தம் நூல்களெல்லாம்
வாய்கொண்டு சொன்னவரும் போனர்மாண்டே. (726)

போனுக்கா லவர்வாக்கும் பொய்த்தப்போகும்
புதிதானில்லாட்டால் புதிதுதானே
ஆனுக்கா லவர்வந்தார் நடுவினுள்ளே
ஆவியுயிர் விட்டமனுப் பிறவிபோலே
வீணுகப் போகாமல் சம்மைச்சார்ந்தார்
வீணிலே திரிந்தவுயிர் தானேகண்டு
கோனுக வாழ்ந்தவர்கள் பெரியோரென்றே
கொண்டுவந்தே னென்தலையில் வைத்துக்கொண்டே. (727)

வைப்போனே நாரதனே நம்மையன்றி
வைப்பவரார் பார்ப்பவரார் வெகுநாள்முத்தர்
தைப்பேனே உயிர்விட்டு வெளியேநின்ற
தவமுனியே நம்மைப்போ லொற்றூர்தங்கள்
கைப்பேலே அவருயிரே வெளியிருந்தார்
காற்றோடு சேராமல் நானேசேர்ப்பேன்
வைப்பேனே யென்னுச்சி பிரமரந்திரம்
வாரியண்ட மீதானு மிருந்தபீடம். (728)

பீடமே யென்னுச்சி பிரமமூலம்
பேருச்சி வானுச்சி கோணினுச்சி
கூடமே கோபுரங்கள் மேளதாளம்
கொண்டிருக்கு மாடமதின் பூஜையுய்த்தே
ஓடுமே வெளியதனி லோடுங்கப்பல்
உளமதனைக் கண்டவர்க ளுச்சிவாரி
மாடமே வைத்திருப்பே நானுழ்மட்டும்
மாதவசி நாரதனே நமக்கார்சொல்லே. (729)

சொல்வீரென் றெனைக்கேட்ட புசண்டயோகி
சொல்வதென்ன பிரமமன்றிப் பிரமமுண்டோ
கெல்வீரே யெனைப்பழிக்கச் சொன்னீர்நீரும்
கேட்டதற்கு உத்தாரஞ் சொல்வதாரு
சொல்வீரே சொல்லுக்குப் பதிலுமுண்டோ
தூணையுண்டோ யீடுமக்குச் சோடியுண்டோ
கெல்வீரே யானுக்கால் கேட்போம்நாங்கள்
கெதியென்ன நீரிருந்தீர் நான்நின்றேனே. (730)

நின்றேனே நான்நெடுநாள் உம்மைக்கண்டேன்
நீர்தவசி யானதையுங் காணேன்பின்னுன்
சென்றேனே வெகுதூரம் உமைப்போலொற்றூர்
தேசத்தும் பாதாள மாகாயத்தும்
நின்றேனே கானறிந்த பட்டுந்தானே
நீள்வயதைக் கண்டறியே னும்மைப்போல
அன்றேனே யின்றிருந்தீர் வெகுநாள்மத்தி
ஆகும்நாள் அநுணன்நாள் சொல்லுவீரே. (731)

சொல்லுகிறேன் சதுர்யுகமே அறுபதாச்சு
சோதியுள்ள சூரியர்க்கு யுகமும்நாலு
கெல்லுவே னதுகடந்தாற் சுக்கிரவெள்ளி
கிளறுமே சூரியன்போல் வட்டமாகும்
நில்லுவேன் சொன்னதனிற் சொன்னவெள்ளி
நீள்விசும்பில் வருமார்க்கம் விள்ளவேணும்
அல்லுமே ஒளிதீங்கும் வகையேபோல
அருளாவிர் சிறுவெள்ளி ஞாயந்தானே. (732)

இந்நூலின் பெயர்

ஞாயமே சிறியவெள்ளி பெரியஞாயம்
ஞாயரெனும் ஞாயமதை யிதனில்மூன்னே
காயமெனு மின்னூலே ஞானசூரியன்
காட்டுமே ஆதியந்தம் உற்றுப்பார்த்தால்
தோயுமோ சந்திரனுக் கதிரும்வெள்ளி
துலங்குமே யின்னூலே ஞானசூரியன்
மாயுமோ சூரியனு ருதிப்புதோறும்
மங்கையர்கள் கெர்ப்பமுள்ள மட்டுந்தானே. (733)

தானென்ற யிடிமின்னல் சோதியோடு
தங்குதா பாமுடனே அசைவினோடு
வானென்ற வெளிதனிலே உலாவலோடு
மண்மேலே சுழல்காற்று வாய்வுதெய்வ
ஏனென்ற மேகநீர்க் கருவினோடு
இத்தனையும் ஆதியந்தம் உற்றுப்பாரு
கோனென்ற குருவறியும் அருளுங்காணும்
கூப்பிட்டாற் தெரியாதே குருவென்றாலே. (734)

ஆனாலே குருவெறியும் ஆசனங்கள்
அடுத்தடுத்த நோம்புகளு மாசாரங்கள்
மானாலே சேர்முறைகள் குருவின்வர்க்கம்
வகையாக யின்னூலில் சுருக்கமார்க்கம்
ஈனாலே யெட்டுடனே மாவைச்சேர்த்து
எக்கள்மன முங்களுக்குப் பனிரெண்டாக
வானாகும் ஆவ்வும் பனிரெண்டாகும்
உட்கருத்த அத்தனையு மிதனிற்தானே. (735)

இதனிற்தா னித்தனையு மின்னமுண்டு
. என்யோகம் கின்யோகம் வசிஷ்டர்யோகம்
இதனிற்தா னிக்கோடு விசுவாமித்திரர்
இம்மலையில் வியாசரிஷி சுகரின்யோகம்
இதனிற்தான் காக்கியரும் நாதர்காசி
என்னோடு காசிபரும் கும்பமுனிதர்
இதனிற்தான் தெஷணத்தார் யோகமோடு
இல்லறத்தி லிருந்தார்கள் பாகத்தோடே. (736)

பாகமொடு தவசிரிஷி மனுமாந்தாதி
பார்சித்தர் மூனிகளொடு அதற்குமேலே
தாகமொடு சென்றவர்கள் தவசில்வல்லோர்
சாதுசடம் சிஷ்டி திதி சம்மாரத்தான்
ஏகமொடு யித்தனையு மிதனுக்குள்ளே
ஏர்விட்டு உழுதுபரம் படித்தார்ப்போல
ஆகமொடு அந்தரங்கத் தூணியிட்டு
அனலிட்டு வெளியதனில் ஒளியைத்தொட்டே. (737)

கோட்டாவி விடாமல்

தொட்டதக் கொட்டாவி உயிர்யோகங்கள்
தொந்தங்கள் மனஅறிவு கருத்தயூகம்
எட்டதத் தெளிவுடனே தந்திரங்கள்
இதையபுத்தி யெல்லாமே யிதனுக்குள்ளே
கட்டாவி கொட்டாவி யில்லாமார்க்கம்
காலரைக்கால் வீசமெனப் போய்விடாமல்
தொட்டாவி மூட்டுமுன்னே யிதனிற்தானே
சொக்காமற் பார்ப்பதற்கு மிச்சமின்னாலே. (738)

மிச்சமே தானிருக்கு வெகுநூல்மிச்சம்
வேளாண்மை செய்தமண்ணில் மிச்சம்போல
சொச்சமே மலைமண்ணில் மிச்சம்போல
தொந்திரையுங் கடலதனிற் திடலேபோல
அச்சமே தான்கொடுக்கு மிச்சம்சொல்ல
ஆருக்கு மெட்டாது வெளியேசொல்லும்
சொச்சமே யில்லாது வெளியேசொல்லில்
தொடர்ந்தெழுத யெட்டாது யிதனைப்பாரே. (739)

இந்நூலின் பேர்

பாருமே யித்தோடு பாதாளங்கள்
பார்விசும்பு மேலுள்ள கீழுங்காணும்
கூருமே யின்னூலே ஞானசூரியன்
கொட்டுமே அண்டச்சி லாப்பாத்தானும்
தேருமே பார்த்திடவுந் தெளிவுதானும்
சித்தைமனம் உயிர்அறிவு மொன்றேயாகும்
ஆருமே தேறிடலா மறிவுள்ளோரே
ஆரிந்தக் காயத்துக் கனுகூலத்தார் (740)

அனுகூலத் தாலல்லோ குறையாம்விட்ட
ஆச்சரியந் தொன்றுதொட்டு அப்பியாசிக்கும்
மனுகுலத்தி னுலக்த வித்தைவந்த
மாமுனியுந் தெய்வபதம் தெய்வம்தானும்
எனுகூல மிப்படியே யாதுங்காண
என்னையே பாரீரே யென்னுல்பாரீர்
தனுகூலம் வாசிவலு பெலத்தவீரர்
சந்ததிகள் தானுகச் செய்குவாரே. (741)

ஒளிவெளி விபரம்

கொள்வார்க ளெப்படியென் றெண்ணிடாதே
குருவாகும் நாள்வக்தா லிதனைப்பாரு
தள்வார்கள் சேராதார் தோசமில்லை
சந்ததிக ளானுக்தால் தோசமுண்டு
கைவாயா லுண்பவர்போல் தினமுக்தானே
காக்கியனும் புசண்டனுமே வசிஷ்டனானே
மெய்வாயே தமர்நிறக்கப் புருவப்பூட்டு
வில்லங்க மதுகடக்தால் ஒளியுஞ்சொல்லும். (742)

ஒளிசொல்லும் வெளியதனில் நின்றரூபம்
உற்றுப்பார் மேல்நோக்கிப் புருவமத்தி
அழிவெல்லுங் காகனுமே மறைத்தகோட்டை
அதில்நுழைந்தாற் திரும்புவதோ நமனுங்காணுன்
பழிகொள்ளும் நமனுர்க்குப் பழியாம்வாசல்
பதியான பிரமபதி கெற்றிக்கண்ணு
வழிசொல்லு மூன்பின்னும் பிரார்த்தகர்மம்
மாயையோ மறைத்துவிடும் ஒளிமுன்னுலே. (743)

முன்னுலே செல்லாது பின்னுல்தேற்கும்
முறைபிசகா நல்லோரைக் கண்டாலஞ்சும்
தன்னுலே சாகாதுஞ்ளியாற்சாகும்
தான்பிறந்த காளதுவும் ஒளியினுளும்
அன்னுளே இவ்விரண்டும் ஓர்காள்த்தானே
ஆகையினு லவ்வொளிக்கு யிருளுமஞ்சும்
இன்னுளே ஒளிகண்டு யிருளைப்போக்கி
எக்கால மிப்படியே ஒளியில்நில்லே. (744)

நில்லப்பா சஞ்சார காலத்துள்ளும்
நேர்விசும்பிற் சென்றுலு மறந்திடாதே
கல்லப்பா நாடிகளே பிராணசீவன்
காலனெனச் சொல்வார்கள் சித்தமேனி
வில்லப்பா பெய்தாப்போல் நாணேறிட்டு
விறைத்தவலு கயர்நிமிரா தடியேநின்ற
அல்லப்பா யிருளலகச் சோதிகாண
அடிவயற்றை நிமிர்த்திருத்து வில்நாணேற்றே. (745)

நடனங்காண

ஏற்றவே மேலெழும்பி மூக்குதொட்டு
இடதுபுரம் வலதுபுரம் ஓடாமற்றான்
போற்றவே நடுநாடி மூக்கின்தண்டு
பொத்துபுகும் பெருச்சாளி போனற்போல
ஏற்றவே மூக்குநடு நாசியுச்சி
இப்படியே நடுநாடி யிசைப்பாயப்பா
போற்றவே காண்பீரே மூன்யாம்வாசி
பொதுவிருந்து நடனமிடும் பொற்றிற்பாரே. (746)

பாரப்பா கண்ணிரண்டுஞ் சிவந்துபோகும்
பாதமொடு ஆசனங்கள் கடுப்புக்காணும்
தூரப்பா நாள்தினமும் லேசாய்ப்பாரு
நுண்ணறிவிற் காணுமல்லோ செந்திக்காலே
வேரப்பா காணுகிற தூரகிறல்
மேனியதி லிருபிளப்பு இடுப்புகாலே
சீரப்பா நடுவான இடுப்பில்நின்று
தீபவொளி காணுமட்டும் நீட்டுநீட்டே. (747)

தீட்டுங்கள் வெற்றயேம கடுகோடுள்ளி
சேர்வகைக ளத்தனையும் சேர்ந்துசாரு
கூட்டுங்க ளத்தனையுங் கொட்டஅன்னம்
கொடியருசி தேனமூர்த்தம் பால்நெய்மோரும்
காட்டுங்கள் பழவகைகள் கற்கண்டோடு
நற்பாகு பித்தனையும் ருசிபாகாது
வாட்டுங்கள் செய்தநன்றி வர்த்தமானம்
வகையென்ன தீபவொளி வார்த்தைதானே; (748)

வார்த்தைதா னேதென்றுற் றிரிகாலத்தான்
மாயோக வல்லபத்தால் ஒளியாப்ஞானம்
வார்த்தைதான் காட்டுமல்லால் மவுனங்காட்டா
மாவொளியிற் தான்பிறந்த வர்த்தங்காட்டும்
வார்த்தைதா னேதென்றுற் றிரிகாலத்தே
வல்லபத்தைக் கண்டிடலாம் வாக்கிற்சித்தி
வார்த்தைதான் லேசாமோ பலிதஞ்சொல்ல
வாய்ப்பலித மென்னவென்றுல் முத்திதானே. (749)

மூத்திதான் காட்டுவது முகத்திற்காட்டும்
முறைகாட்டும் உரைகாட்டுங் கடமேகாட்டும்
சித்திதா னுடல்காட்டும் செங்கைகாட்டும்
தீபவொளி காணுமட்டும் உடலேகாட்டும்
சுத்தியே பார்த்தாக்கால் வெளிச்சங்காட்டும்
நரைமூப்புச் சாக்காடு முன்னேகாட்டும்
உத்தியே யுகங்காட்டும் ஆதியந்தம்
ஊடருவிப் பார்திரையே புருவப்பூட்டே. (750(

புருவமத்தி திறவுகோல்.

பூட்டுடைக்க வல்லவரே புருவம்வாரும்
புகுந்துகொள்ளும் புருவமத்தி திறவுகோலே
மீட்டுடலே நிமிர்ந்திருந்து சம்மணமேயிட்டு
கோரகத் தலைகழுத்து உடலுட்கார்ந்து
பூட்டுடலே வாசிவர மூச்சைக்கண்டு
புகுந்திருவே பொக்திருக்கும் புலியேபோல
வீட்டிலிருக் தேகுகையாய்க் கதவடைத்து
வெரும்வாயை யுண்ணமல் மந்திரமுண்ணுதே. (751)

உண்ணுமல் மறவாமல் அசைந்திடாமல்
உற்றமுகம் கண்விழியுஞ் சொருகிடாமல்
கண்ணுமற் பிறர்சத்தங் கேளாக்காதாய்
நயனத்தை மூடாமல் கடுங்கிடாமல்
உண்ணுவில் உயிர்வாசி யொழிந்திடாமல்
உறவிருந்தோர் கிட்டவந்து பேசிடாமல்
அண்ணுவிற் தேனமுர்தம் உண்ணத்தானே
அருளொளியா மவ்விடத்தே வாசிமூட்டே. (752)

மூட்டய்யா காலிமாலி மூக்குவாசி
மூனைமூக்கு ஆடிடவே யிரண்டுதாழை
காட்டவே மேல்நோக்கிப் பார்த்தாயானால்
நயனத்தி நோமத்தி புருவமத்தி
கூட்டய்யா வாசியுயிர் புருவத்தட்டும்
குருவென்ன சொல்லிடுவார் யிவிடந்தானே
ஓட்டந்தா னேகிடுமே கருவிக்கூட்டம்
உற்றமனந் தான்றிறக்கும் ஒளியாம்வீடே. (753)

வீட்டிலே புருவமத்தி நாமமத்தி
வெள்ளாட்டி அய்யனுட பொட்டுமத்தி
காட்டிலே யவ்விடத்தே குருவின்பத்தி
கடுநாமப் பாதைவழி மூச்சுஓடும்
ஏட்டிலே எழுதலியோ புருவப்பூட்டே
இப்பூட்டைத் திறப்பதற்குக் குருவேஆசான்
மாட்டிலே காலிசெய்தார் மனுவாமாந்தர்
மாடிதுவே வாசியுயிர் வாசிதானே. (754)

வாசி திறவுகோல்.

வாசிதான் கோலாகுஞ் திறவுகோலு
வசனித்த சொல்லெல்லா மந்திரந்தான்
நேசியே குருமுறையே ஆசாரங்கள்
நேசித்தார் வல்லவர்கள் சித்தராஞர்
தோசியே போயலக்கீர் தன்னைப்பாரீர்
சுடுகாடு போக்குதற்கு நம்மாலாகும்
பேசியே தானிருக்கீர் கபமாங்கோழை
பெருஞ்சித்தா லாகாது தன்னலாகும். (755)

ஆகுமோ சாஸ்திரத்தாற் குருவாலாகா
ஆச்சரிய மந்திரத்தாற் செபத்தாலாகா
பாகமோ உப்பன்றி செயரோகா
பார்த்தவர்கள் கண்டுகொள்ளும் பருவந்தன்னில்
ஆகுமோ பருவமன்றிக் காலமன்றி
ஆஹவும் ஏஜயும் ஆசனங்கள்
ஓகுமோ ஈயுடனே ஔவுக்தானே
உத்தமர்கள் அரிஹமோத்து சிக்தந்தானே. (756)

அரிஹமோத்து சிக்தமென்றும் அரியோமென்றும்
அரிச்சுவடிச் சுழியென்றுங் காப்பதாகும்
மரியோம்ஹா மென்பதற்குத் தூணேயேகாப்பு
மால்சுழியோ திருசுழியோ யெதுதான்மூக்திக்
கரியோஹாம் தூதித்தசுழிக் கொம்புகாப்போ
காமமதன் ஹாமாசைக் கொம்புகாப்போ
உரியோஹாம் தயிரெடுக்க உற்சாகத்தால்
உளமறிந்து உட்கண்ணே ஊன்றித்தூண்டே. (757)

தூண்டியே சுழிமூனையாம் சுவடிகொம்பே
சுழித்தசுழி அரிச்சுவடி ஆதிகாப்பு
ஆண்டியே ஆகாமல் சுழினைபாரு
அரிச்சுவடி ஆதியிலே சுற்றைப்பாரு
தோண்டியே பார்ப்பதற்கு உடலுள்ளேதான்
சுழிமூனையின் கொம்பதனைச் சுழித்தவாய்வை
எண்டியே யென்றுசொல்லி வாலிகோரி
என்தாயைச் சுழிக்காற்றுற் கட்டுவாயே. (758)

கட்டுவா யஞ்சோடு மூன்றுஹாலுங்
கயர்திரித்துப் போடுவையே பனிரெண்டாலே
எட்டுவாய் பனிரெண்டு ஒருச்சாண்ஹீமம்
ஏகுமே மூக்கின்வழி உயிர்தான்மூச்சு
கொட்டுவாய் தினந்தினமு மூக்காம்காசி
குருசொல்லத் தட்டிடுமே மூச்சேயோடி
எட்டுமே மூச்சோடி போகுந்தானே
என்மக்க ளானுக்காற் மூச்சைப்பாரே. (759)

குருவாக வேணுமென்றால் மூக்கின்சீவன்
குலக்கொழுந்தே மூக்கேற்று நெற்றிமேலே
திருவாக யிப்படியே பார்த்தாயானால்
தினமென்ற நாள்செல்ல யோகியாவாய்
மருவாக மாட்டாயே உயிரைப்பாரு
மாதவசி யாகிடலா மேலேநோக்கு
உருவாக வாசிவலு உயிர்தான்மெத்த
உயரேறப் பிலத்துவிடும் யோகந்தானே. (760)

யோகம் காண சரநூல்.

யோகமே காண்பதற்குச் சரநூல்சொன்னார்
உளமறிந்தோர் சடமறிய உடற்கூறேதான்
தாகமே கொண்டாக்கால் உடற்கூர்பாரு
சாதித்தால் யோகமென்றும் பெலத்தால்ஞானம்
நாகமே தீண்டவுயிர் வேறுனப்போல்
நாதனே யாகிடலாம் மாய்கைபோகும்
ஆகமே சொல்லாகும் வேதமாகும்
அய்யய்யோ நம்முள்ளே அரையாம்வீடே. (761)

வீட்டிலே கூட்டினுள்ளே மூத்தியுண்டு
மெய்யிலே சோதியுண்டு திரிகாலங்கள்
பாட்டிலே யில்லையிது நாட்டிலுண்டு
பரிவாசி கண்டவர்க்குக் காட்சியுண்டு
ஏட்டிலே எழுதிவைத்தார் மூன்றெல்லாம்
எங்களுக்குஞ் சந்ததிகள் வேணுமென்று
பூட்டிலே கண்டெடுக்கத் திறவுகோலை
பொக்கிஷத்தில் வைத்தாரே சாஸ்திரநூலே. (762)

நூலென்ன உங்களுக்குப் புத்திக்காக
நுண்ணறிவைக் காட்டிவைத்தார் சாஸ்திரத்தாலே
பாலென்ன நெய்யிருக்க மூடினுப்போல்
பரைவாலே காண்பதற்கு நூலாதாரம்
வேலென்ன சத்துருமே லேவினுப்போல்
மெய்யதனி லொளிகாணச் சாஸ்திரந்தான்
நூலென்ன உடலறியத் தெய்வங்காண
நாட்பமாய்ச் சொல்லிவைத்தார் பெரியோர்தானே. (763)

பெரியோரும் நம்மைப்போற் சிறியோராகி
பேசியே குழந்தையது வளர்த்தாப்போல
அரியோர்க ளறியாம லறிந்தார்பின்னே
ஆனதினு லறிந்ததுவுந் தெரிந்துசொன்னுர்
கரியோர்கள் நினைவழிந்து மனதைவென்று
கவலையற்று நின்றதினுற் பெரியோரானுர்
விரியோர்கள் மனதடங்கித் தன்னைக்கண்டு
மெய்க்குள்ளே தத்துவங்கள் தன்னைவென்றே. (764)

வென்றதினுற் கவலைமனம் விட்டொழித்து
மெய்க்கருவி யெல்லாமே சுத்தமாச்சு
இன்றதனை நீர்காண நீரும்வாரும்
எத்தனித்தா லாகாதா நீரேவிள்ளும்
குன்றதனி லேறிமலை யுச்சிநின்றே
குடல்நடுங்கக் குதித்தாப்போல் பிழைத்தோர்யோகி
மன்றதனில் நின்றவரிற் கோடிக்கொன்று
மறையோகி திருவாகி குருவாய்நின்றே. (765)

குருவானுற் திருவாகும் கோணுகாணு
கோன்போல வாழ்ந்திடலாம் சித்தர்க்குள்ளே
பொருவானுற் திருத்திவிடிற் பொல்லாப்பேகும்
போனசென்மந் தான்தெரியும் புதல்வரைப்போல்
மருவானு ளெடுப்பதற்கு ஞாயந்தோற்றும்
மலடிபிள்ளை பேர்பெற்ற வாருபோல
உருவானு லாகாம லென்செய்தீர்கள்
உத்தமரைக் காணும லொழிந்திட்டீரே. (766)

முத்திகாண இருக்க விதி.

ஒழிந்திடா தேயிருந் வெளியேறுதே
ஊணுறக்க மின்பதுன்பம் பொதுவாய்நில்லு
அழிவில்லா தேயிருக்க முத்திகாண
அம்பட்ட னிதனுற் சிரைத்திடாதே
உழியில்லா தேயிருத்து மலையேகல்லாய்
ஒட்டொட்டாய் சொருக்கிவிட்ட உகமைபோல
தெழிவில்லா தேயிருத்தா லென்னசெய்வோம்
சினங்கள் செய்வதற்குத் தியங்கினீரே. (767)

தியங்கினர் தன்னைவிட்டு அறிவைவிட்டு
தேசத்திற் பொருளறியாத் தோசிமாடு
ம்யங்கியே மானிடர்கள் லேசையானர்
மாண்டதினு லென்னபலன் மரணந்தோணு
கசங்கினு நிப்படியே கலகெஞ்சால்
கலிவாசி மனமறியார் அறிவுங்காணர்
வயங்கினு ரென்னுளுங் காலன்கண்ட
மாந்தரையே நாடாமல் மறந்திட்டாரே. (768)

மறந்திட்டார் தன்மாணுஞ் சரீரசிட்சை
மறந்திட்டார் நோய்வலுப்பு பித்தமூடம்
துறந்திட்டார் அறிவேறுந் திரிகாலத்தார்
தூண்டாத சோதியுட வெளிச்சங்கண்டார்
கறந்திட்டார் மானிடர்போற் காயகற்பம்
கண்டவர்கள் அழுதுண்டு காயசித்தி
சுறந்திட்டார் காயசுத்தி பிராணசுத்தி
சூட்சமதைக் கண்டவர்கள் சுருக்கந்தானே. (769)

சுருக்கந்தான் விட்டகுறை பிறந்தமார்க்கம்
தூண்டியே சொல்லுகிறேன் பிறந்தார்பின்னே
இருக்குந்தான் தாய்தந்தை குலவாசாரம்
என்ன இந்த மக்களுக்குத் தலவிசேடம்
பொருக்குந்தான் கோவில்குளம் தீர்த்தஞ்சால
பொய்க்குருவை விட்டகலு மெய்யேசால
வெருக்குந்தான் பொய்புகல் அய்யாஅய்யா
மேன்மக்க ளாகார்க்கு முத்திவீணே. (770)

வீண்முத்தி யாகாது மெய்யேதொட்டு
மெய்க்குருவால் பொய்க்குருவை வீணென்றெண்ணி
சாணென்று தானறிந்து வயரேசோம்பர்
தன்வயிற்றை நிறப்புதற்கு அறிவில்லாதார்
மான்மழுவைத் தரித்தவரைக் காணமாட்டார்
மக்களுக்குச் சொல்லுதற்குக் குருவாணுரே
தேன்மொழியுங் குருமொழியு மிதற்குவேறே
தேறுவான் வேறுவிதம் மாறுவானே. (771)

மாறுவான் பொய்க்குருவை வாயாற்தட்டி
மரணத்து நாளறிவான் தூரதிஷ்டி
கூறுவான் நானுரு நீதானுரு
குருவென்றுற் சொல்லிடுமே உம்மைக்கொண்டு
சாறுவான் திரிகால வர்த்தமோடு
சமத்தகில மூள்ளானே மெய்யுளானே
கோறுவான் யெட்டுரெண்டும் பத்தேயென்பான்
குருவானுற் சொல்லுமென்று கூறுவானே. (772)

அகஸ்தியர் சோன்னவிபரம்.

கூறுமே யாம்நினைத்த சங்கற்பத்தைக்
குருவானுற் சொல்லிடுமே அடியராவோம்
யாருமே யெட்டுரெண்டும் பத்தென்றார்கள்
யார்சொன்ன ரகஸ்தியரே விரித்துச்சொன்னார்
தர்ருமே மாந்தர்களு மயங்கினார்கள்
தயர்சித்த ரானுக்காற் சொல்லுவார்கள்
கோருமே நீர்கேட்கச் சொல்லிவாரேன்
குருவாகு மந்திரங்க ளீதுதானே. (773)

மந்திரங்கள் பிறந்தவிடம் வேதமோடு
வாய்ச்சொல்லு வல்லபங்கள் உயிரினோடு
தந்திரங்கள் பிறந்தவிடம் பூசையோடு
தானன யிடம்பிறந்த அறிவினோடு
யந்திரங்கள் பிறந்தவிடம் மணிகாவோடு
அறுத்தடைத்த வாசலொடு காசியூடு
உன்திறங்க ளென்திறங்கள் பொதுவினோடு
ஊடாடி உயிர்விளங்குஞ் செபத்தினோடே. (774)

செபத்திலே தவம்வினையு மிடத்தினோடு
செல்காலம் வருங்கால மத்தியோடு
அபத்திலே போகாம லுச்சியோடு
ஆச்சரியம் அண்ணாக்கு மணுபோற்தொங்கும்
இகத்திலே யாவருக்கு மிதுதானில்லார்
இக்கூடு ஊமையென்றும் அடைப்பதென்றும்
யுகத்திலே ஒளிபிறந்த காலத்தோடு
உற்றுணர்ந்தார் கிட்டவில்லை பிடந்தானே. (775)

பீடமே மேல்வாசல் உச்சிவீடு
பிரமரந்ர உச்சிக்கண் கபாலஓடு
கூடமே மேல்வாசல் கொடியண்ணாக்கு
கொடியொன்று தொங்குதடா அண்ணாக்கேபார்
மாடமே யொன்றிருக்குங் கபாலங்கீழே
மக்களே அண்ணாக்கு மேலேதானே
ஓடமே கப்பலுண்டு நீரேயேற
உச்சிக்கொடி யண்ணாக்கு வாசல்பின்னே. (776)

வாசலே தொங்குநாக்கு பின்புறத்தே
வாசலொன்று கோழையது வருகும்வாசல்
ஏசலே கபாலநீ ரிறங்கும்வாசல்
இவ்வாசல் நீர்களெல்லா மிறங்கிற்றுலல்
பேசலே வாசியிந்த வுயிருதானே
பெரியமண்டை யேகிடுமே குளிகையாகும்
பூசலே யாகிவிடுங் குளிகைசித்தி
பொய்க்கண்ணும் மெய்க்கண்ணும் நெற்றிக்கண்ணே. (777)

நெற்றிக்கண்.

நெற்றிக்கண் திரிகால வர்த்தஞ்சொல்லும்
கீண்டசித்தி கண்டவுடன் நிதியுஞ்சித்தி
முத்திக்கண் விளைவிதுவே பொருளேசித்தி
மொய்க்குமல்லோ சம்மாரம் தன்னைச்சுத்தி
வத்திக்கண் ணுகாது யெக்காலும்
வருமையது யேகிடுமே கண்ணுக்கெட்டா
வெற்றிக்கண் ணிப்படியே செவியாற்தூரம்
மேல்விளைவ தறிக்துவரும் கேட்டும்பார்த்தே. (778)

பார்த்தகண் செவிதானே அண்டஞ்சென்று
பறக்துவரும் திரிகால வர்த்தம்போல
ஊர்த்துவரும் கண்குளிர்ச்சி செவிதானெட்டும்
உலகயெல்லை சூரியர்க்கு மப்பாற்தானே
நீர்த்துவரும் அண்டச்சுவர் வெளிக்கப்பாலே
தென்வடக்கு கிழமேலும் சுத்திஆயும்
நேர்த்துவரும் காரியம்போ லாநியர்த்தம்
நிமிஷத்தி லுள்ளதெல்லாம் சொல்லுந்தானே. (779)

உள்ளதெல்லா மித்தோடு உயரமேலே
ஊடுருவிச் செல்லுமல்லோ வர்த்தத்தாலே
மொள்ளவல்ல வல்லவர்க்குங் கதிராமேலே
மூடுவெள்ளி பரப்பிருக்கு மதியின்மேலே
தெள்ளவல்ல வல்லவர்க்கு மேகம்மேலே
திரண்டுவிடுஞ் சுழற்காற்று வாய்வுமேலே
கொள்ளவல்ல வாசிஉயிர் குளிகையாலே
கொட்டிவைத்த வதன்மேலே கருப்பைத்தோட்டே. ()

தொட்டடுத்த ஆகாய அண்டவட்டம்
சுற்றிவந்து ஊடுருவி வெளியைப்பார்க்கும்
கொட்டுமந்தத் தேள்கொடுக்கு நோக்கல்போலக்
கூத்தாடு மெதிர்நோக்கும் தொட்டாற்போகும்
விட்டடுத்த யோகமுனி நினைப்பாலுலல்
மீளாது பாக்கியதை மூழுதும்நோக்கும்
சுட்டடுத்தத் தன்னறிவால் விளைத்தபோதம்
தூங்காமற் தூங்கியது கிமைகூடாதே. (781)

நெற்றிக்கண் திறந்தோர்கள்.

கூடாதா நெற்றிக்கண் திறந்ததாலுல்
குருமுனியே யாகலியா நாரதாதி
வாடாதா மனந்தானுந் தாழ்ந்திடாதா
வசிஷ்டரென்ன அகஸ்தியரும் விஸ்வாமித்திரன்
நாடாத கொங்கணவன் போகநாதன்
ஞாயிறுபோ லேவிசுங் காசிநாதன்
போடாத திரிகால புசுண்டநாதன்
பெரம்மையொட்டிக் கண்டதிரு மூலநாதர். (782)

நாதனெனப் பெற்றுனே தகிசிநாதன்
நாரம்புபோ லேயிருந்த கூர்மனெதி
யோதனே யானனே கிருஷ்ணக்கோனே
புளுக்கச்சி வியாசனுமே கூடிநானே
ஆதனே அத்திரியும் புலத்தியோனும்
ஆகையினுற் சிஷ்டிதிதி சம்மாரங்கள்
வாதனே கெவுனமதி லேகினுனே
வல்லபஞ்செய் வள்ளுவ நாதன்றுனே. (783)

காதனே இடைக்காடன் மதியேதேய
காள்சொல்லும் காளறிந்தான் கணிதவித்தை
பூதனே ராகுவரும் காளேசொன்னுன்
பொய்சொன்னுப் போலேயல்ல மழையேசொன்னுன்
வேதனே கலிக்கோட்டான் வந்தாற்தானே
மேகமெல்லாந் திரண்டுவரும் யேவல்செய்யும்
சூதனே யின்னமொன்று சத்திரியர்க்குள்
சூடாலே காலமதில் களாகினிக்கே. (784)

வருத்தினூர் சூரியரும் வந்தார்பின்னே
வல்லபங்க ளிதுவல்ல மாணமாகா
தருத்தினூல் வெளிப்படவே யாகாஆகா
தொண்டுதொட்டு முனிகளுமே ரிஷிசித்தாதி
பருத்தினூல் தள்ளுதல்போ லுயிரைவிட்டார்
பரமபதங் கண்டவரோ பறைச்சிமக்கள்
இருத்தினூ லிருக்கிவிட்ட புசுண்டநாதன்
யெப்படியோ நின்றுனே யெண்ணிலாதோ. (785)

எண்ணிலாக் காலமது கண்டகோளன்
எவர்களுக்கும் வல்லவரே பதினெண்சித்தர்
கண்ணிலார் காணமுற்று யிவருக்கஞ்சி
கரைமூப்புச் சாக்காட்டைக் கேட்டிட்டாரே
வெண்ணிலா மதிகுறைந்த காலங்கண்டோர்
மெய்வலுவில் சூரியனு நிதிப்புமுன்னேன்
கண்ணிவிலாத் தோளெலும்பு வலுத்தகூடன்
கரைமூப்புச் சாக்காட்டைத் துறத்திவென்றுனே. (786)

வென்றுனே தன்மரணம் யெமனுர்கூட்டை
வேரென்றைப் படைத்தானே திஷ்டியாலே
நின்றுனே சதுர்யுகமோ கோடியப்பா
நீள்விசும்புக் கெட்டாதான் உருவிலுள்ளான்
குன்றுனே உடல்நீளான் குறுகான்தட்டை
குருபோலத் தானிருகான் கிழவனுகான்
மன்றுனே மண்மலைகள் கடலாங்காலம்
வாய்த்திடுமே எத்தனுக்கு ஆய்சென்றுனே. (787)

ஆயிசோ யென்னயிது அதிசயத்தான்
ஆதித்தின் பலஉருக்கள் கண்டமெய்யன்
வாய்ச மென்றபேர் கொண்டசித்தன்
வாய்மூக்கு நீண்டதினல் காகனுதன்
ஆய்ச மொன்றுமில்லான் கரைமூப்பாலே
அனேகனுமே சொல்லிவைத்தார் முனிநாதராதி
போய்சை கண்டுகொண்டார் பிடித்துக்கொண்டார்
புரிதிரிக்கும் கயர்போலே பிராணன்தானே. (788)

பிராணனேயே கயர்திரித்தார் புரிமூன்றுகப்
பெருமூக்கி லோடுமுயிர் மூச்சாடாமல்
பிராணனேயே மூக்குநுனி யாடிடாமல்
பெருவாசல் ரெண்டடைத்து நுனியடைத்து
பெருவாச லேற்றிவிட்டார் உச்சிவாசல்
பெருமண்டை நின்றுவிட்ட குளிகையாச்சு
பெருமண்டை உச்சியேறி ஒளியாய்த்தேறிப்
பெருந்தூரம் தூக்கிடுமே கெவுனம்பாய்த்தே. (789)

கெவுனமே யிப்படித்தான் பிலமேமூச்சு
கெதியென்ன முத்தியுட பொருளிதாகும்
மவுனமே யிப்படித்தான் செய்யும்பொய்யோ
வாய்க்குமல்லோ காயத்திரி வலுவேசெய்யும்
கெவுனமே மேல்கிளப்புந் தொழிலேதானே
கேசரத்தி லேற்றிவைக்கும் சித்திதானும்
மவுனமே யென்றுசொன்னர் முன்னேரெல்லாம்
வந்தவர்கள் கண்டுகொண்ட வகையிதாமே. (790)

வகையிது தொகையிதுவே கணக்கோமெத்த
வல்லவர்கள் மெத்தவுண்டு தொழிலுமுண்டு
பகையிது காயத்து வேறுமுண்டோ
பைங்கூழைக் கடப்பதற்கு வேறேயுண்டோ
தொகையிது கண்டவர்கள் வெகுபேருண்டு
சொல்சொல்லாய்ச் சொல்லிவைத்தார் மென்மேலாக
சுகையிதே உடலுக்குத் திரியாமந்திரம்
சுகர்கண்ட சந்தோஷம் வேறேயேதே. (791)

ஏதென்று வேறேவகை தொகைகள்தானே
ஏண்ணியெண்ணிச் சொன்னரே யெண்ணிலாதார்
வானிலுள்ள நட்சேத்திரம் மீன்தல்போல
வசனித்த வாக்குகளே மறைநூலாச்சு
கோனென்று வந்தாலே சொல்லலாகும்
குருவாக வேணுமென்றால் முழுதுங்காணு
தானென்று வந்தவர்கள் யேறவில்லை
சம்பிரதா யங்களென்ன சலனந்தானே. (792)

சலனந்தான் நெஞ்சதனிற் பள்ளந்தன்னில்
தானுடும் நெஞ்சிலுயிர் பிராணன்சுற்றும்
சலனந்தான் நெஞ்சுபள்ளம் சுற்றுத்தானே
தானேறில் தொண்டைசுத்திப் பேசுமப்பா
சலனந்தான் சங்குதொட்டு மேலேயேறி
தானந்தப் புருவமத்தி நிற்குமாகில்
சலனந்தான் கும்பிடுமே யோகஞ்செய்யும்
தானேறி நெற்றிவழி யுச்சிமுட்டே. (793

உச்சிமுட்டி வாசியுயிர் சீவன்தானும்
உயிரிருந்து வட்டமிட்டு ஓடிச்சுற்றும்
நச்சியதைப் பார்த்தாக்கால் ஞானமாகும்
நான்சொன்ன வாசியுயிர் பிடறிவந்தால்
கச்சியிந்த வாதபித்த சிலேத்மநீரை
கால்வாசி வாங்காது பித்தம்ஓங்கும்
மெச்சியிந்தப் பித்தமொடு பிராணன்ரெண்டும்
மேன்மக்கள் கூடினப்போல் சேருந்தானே. (794)

சேருமே சேர்ந்ததுவுங் கீழிறங்கில்
திரிமூர்த்தி யானாலு மரணமாவார்
வாருமே உச்சியிலே நிற்கவேணும்
வாய்கொண்டு பேசினப்போ லுச்சிசொல்லும்
கோறுமே கடுநாமப் பாதைமார்க்கம்
கூர்ந்துபார் புருவமத்தி மூக்குநேரே
தேறுமே யவ்விடத்தி லொளியோகாணும்
தேர்வதற்குப் பொட்டுநாம மிட்டார்தானே. (795)

தானேதா னிட்டாரே காலைமாலை
தானறிந்து பிறர்சத்தங் கேளாமுன்னே
வானேதான் மனமாகி ஆசனங்கள்
மனம்உடலு மிணங்கியதே ஆசனங்கள்
நானேதான் கண்டுணர்ந்தேன் வெகுநாள்சென்று
நாட்டிலே தானிருந்தேன் மலையேசெல்வேன்
கோனேதா னுவதற்குந் தேறுதற்கும்
குருவாக நான்தெளியத் தேறினேனே. (796)

சாதனம் 22-ம் வது தெய்வங்கண்டது.

தேறினே னிரண்டுபத்து ரெண்டுஆண்டு
தெய்வத்தை நான்சேரக் கார்த்திருந்தேன்
ஆறினே னென்மனதைச் சாந்திபண்ணி
அங்குஷ்ட அகத்தியரை நோக்கினின்றேன்
கூறினார் குன்மவலி தெசுஷ்ணையன்
குடுகுடு கஞ்சாவின் சத்தம்போல
மீறினு ரென்காதிற் சத்தங்கேட்க
வெள்ளாள மேனிகொண்டு வந்தார்முன்னே. (797)

இருவென்றே னதுகேட்டு இருந்தார்முன்னே
இறைஉடலில் விட்டவரின் உயிரைத்தானே
பொருளென்ற அருந்தவசன் முடிமேல்நின்று
பூரித்துப் பொங்கியதோர் குடமேபோல
மருவொன்று மில்லாத அருளேஆன்மா
வாசிவலு சித்திவலு வெண்ணேச்சேர்த்த
பொருளொன்றும் நானறியாக் காலந்தன்னிற்
பொய்யுடலு மெய்யாகப் புதுமையாச்சே. (798)

புதுமையே தென்றுக்கால் கலகமில்லை
பொரிபுலனு மனஅறிவும் பொங்கிவெம்பி
புதுமையெனத் தேய்த்தலுத்துச் சுகமேபெற்றேன்
புலாஉடலில் மெய்யொளியே பொருந்துகின்றேன்
புதுமையென்ற ஆச்சரியங் கண்டுகொண்டேன்
புராமூன்றை யெரித்தவரைக் கண்டதாலே
புதுமையென நானிருந்தேன் மெத்திக்கண்ணுல்
போனது வந்தது வராதுங்கண்டேனே. (799)

கண்டேனே வசிஷ்டருமிப் படியேதானே
கண்ணெதிரே நின்றாரே உடலிலேடு
தண்டேனே அருந்ததியுங் கூடநின்றாள்
சரஸ்பதியும் வந்தாளே பிரமலோடு
மொண்டேனே அவர்கொடுக்க வாங்கியுண்டேன்
மோனரகை யுள்ளவரே யிருவருந்தான்
அண்டேனே வந்துகண்டு நானுங்கண்டு
அவர்சோடி பார்த்திருந்தே னருமையாச்சே. (800)

ஆச்சப்பா அருந்ததியும் பிள்ளைபெற்றாள்
அச்சோடி சரஸ்பதியுந் தனியேநின்றாள்
மூச்சப்பா தானறிந்தே னிவரைக்கண்டேன்
முன்னிருந்தும் பேசார்கள் கண்டுகொண்டேன்
கூச்சப்பா யில்லாதான் குலக்கொழுந்து
குருவாகி நின்றவளே பெண்ணுமாளை
ஏச்சப்பா வென்றுசொல்லிக் கழித்திடாதே
என்னம்மை பேர்சொன்னேன் பதனம்பண்ணே. (801)

என்னம்மை பேர்சொன்னேன் ஊரேசொன்னேன்
இருக்குமிடம் ஆச்சிரமம் வசிஷ்டர்க்காசி
உன்னம்மை யென்னம்மை ஒன்றேயாஞல்
ஒளியம்மை கம்மம்மை உடலின்சோதி
என்னம்மை யிக்கூடு காயமட்டே
எழுந்தோடிப் போகும்காள் ஓடிப்போகும்
உன்றன்மை வாய்த்தாலே ஒளியிருக்கும்
உடல்தம்மைக் கண்டாக்கால் காயசித்தே. (802)

காயசித்தி அருள்.

காயசித்திக் கற்பஉட லழியாமார்க்கம்
காட்டுகிறேன் மூனறையாங் கோடிகண்ணுல்
தூயசித்தி கண்டார்கள் லேசாய்த்தானே
சொல்லாமல் விட்டுவிட்டார் துணிவில்லாமல்
போய்சத்தி நின்றார்கள் பொரியினாலே
பொங்குசத்தி வல்லபத்தால் மூழ்கினார்கள்
நீய்சத்தி கண்டுகொண்டாற் காணலாகும்
நேர்நில்லு மணங்குவிந்து நேரேபாரே. (803)

பாரப்பா கண்கூசும் பதைக்கும்நெஞ்சம்
பளீரென்று மின்னலொளி பார்மீதுன்னே
ஆரப்பா சொல்வார்கள் ஒளிதான்சொல்லும்
ஆச்சரியங் காயசித்தி யருளுந்தானே
பேரப்பா சொல்லாதோ யெதிரேசொல்லும்
பின்னுமே முறையோடே பெருமையெல்லாம்
ஊரப்பா உளமிருந்து வெளியேசொல்லும்
உற்றுப்பார் கண்டதெல்லாம் பெருமைதானே. (804)

பெருமையே யெதிர்நின்று வெளியேசொல்லும்
பிசகாது நின்றிடலாம் பேரோடுபேரு
வருமையே தாராது யோகம்யோகம்
வாய்த்தாலே போகாது வருமையென்ன
குருவையே நேசித்தால் வருமையேது
குருசொல்லை நினைந்தாலே பெருமையாகும்
திருவையே நோக்கியவர் உளமேகட்டி
தியொளியைக் காணுர்கள் செபமில்லாரே. (805)

இல்லாரே வாழ்வித்த யோகம்விட்டார்
இல்லறத்தி லிருந்தாரே இதனைப்பார்ப்பார்
வல்லாரே யவர்களுக்குக் குருவேகிட்டும்
வசனித்த சாஸ்திரமும் பொருளேகிட்டும்
கெல்லாரே நிறப்பனபோல் துறந்திறந்தார்
நீடித்து வாழ்ந்தாலும் அருளேதூரம்
சொல்லாரே வாய்ப்பகட்டிற் துறவுமாகார்
ஞாண்டினதோர் விரல்சொற்க மானுற்போலே. (806)

போலவே பொய்க்குருவு மதுபோற்பிள்ளை
புளுக்கச்சி யாளுக்குப் புளுக்கைபோல
சாலவே வேடகுரு மனதைக்காணுர்
தன்னிலையைக் காண்பதற்கு குருவோசிஷர்
எலவே இவ்விருவர் மனதைக்காணுர்
எர்போலே தானிழுத்துப் பரம்படிப்பார்
வாலவே மன்மதனு லிருவர்நேசம்
வாய்கொண்டு மனமில்லார் அறிவில்லாரே. (807)

அறிவில்லார் கூட்டமிதக் குருநாம்கூடி
அறிவழித்து மனமறிந்து பெற்றலாபம்
சொரிவில்லாச் சுரணையற்ற மாடுபோல
சுரணையுள்ள மாடுடனே சோடிபோல
நெறியில்லாக் குருசீஷன் சோடிசேர்ந்து
நீண்டதரை யேறுகின்ற யேத்தம்போல
கரியில்லாத் தோளெலும்பு இறைச்சிகண்டு
கண்மூடித் தின்னுகின்ற சுணங்கன்போலே. (808)

சுணங்கனவன் வேசரிபோல் உறுமிக்கத்தித்
தூரியது பூனைகண்டு தொங்கலேபோல்
பிணங்கனவன் யானைகண்ட சிரம்போல
பெருஞ்சீரல் நாவெடுத்துப் பெருமையோடி
மணங்கொள்பூ வண்டடுத்த வாறுபோல
மானிடர்கள் தங்களிடம் மயங்குவார்கள்
குணங்கொள்ள வேணுமென்று குருவைத்தேடிக்
குருசீஷன் தேடினது வாதயேனு. (809)

ஏனென்ரு லிரட்டித்த மனமிரண்டு
இருவருடல் ரெண்டாச்சு ஆகாது
ஊனென்ரு லும்பூதம் யிரைந்தோடு
உற்றகரு விக்குலங்கள் யெண்ணிப்பார்த்தால்
ஆனென்ரு லிருவாகம் உடலிலோடு
ஆமிதக் கருவிகளும் ஒன்றுசேர
நானென்றல் வந்துவிடும் லேசாய்த்தோஷம்
நாம்கூடக் கருவிகளும் கூடாப்பேதத்தே. (810)

பேதமே யெத்தனேயோ யெண்ணிலக்கம்
பெருந்துகையோ கோடியிலே பெரியலாபம்
பாதமே தேடினவர் பேதங்கோடி
பக்குவர்கள் கண்டதனைப் பரிசோதித்து
நாதமே கேட்பதற்கு ஒளியைவேண்டி
நாதனே யானகுரு வொளியைக்கண்டு
க்காதமே போகாமல் நிலையிற்கண்டு
காலங்கி கண்டுகொள்வான் தன்னுட்தானே. (811)

தன்னுள்ளே காணுதான் குருவைக்கேட்பான்
தன்னையே மறந்தலனே குருவாமென்பான்
மண்ணிலே மாந்தரிலே குருவாமென்பான்
மறைவேதம் நாமென்பான் பொருளேதென்பான்
என்னுளே தானிருக்கு வாங்குமென்பான்
என்னையே விட்டுவிடில் காணீரென்பான்
நின்னுளே காட்டுகிறே னென்றுசொல்வான்
நிசங்காண மாட்டாதான் நிசங்காணனே. (812)

காணுத கத்தபத்தின் குரலைக்கேட்டு
கன்தெரியாச் சீஷனுமே கருத்தில்லானும்
நானனே சோடியவன் கூடக்கூடி
நாமிரண்டு பேரும்ஒன்றே யென்றுஓடி
காணனே வெகுதூரம் சென்றுநாடி
கல்மனதைக் கொண்டல்லோ கவலைகூடி
ஒணுனே மேலிருந்து தலையசைக்க
உயரேறிப் பதுங்கிவிடும் உவமையாமே. (813)

உவமையென்ன ஓர்பித்தன் பொருளைநாடி
ஊர்விட்டு வனம்புகுந்து ஒணுன்கண்டான்
அவமையொடு நின்றிருந்த மரத்தின்மேலே
அசைகொம்பி லோர்தூனியிற் படுத்திருந்த
இலகையது இவன்சத்தங் கேட்டபோது
இருந்தகொம்பிற் படுத்திருந்து யெழுந்துட்கார்ந்த
தகமையதைக் கண்டறிந்த பொருளில்லானும்
தாவந்தக் தீர்வதற்குக் கேட்கிறனே. (814

கேள்ப்பானே நீயிக்தக் காட்டிற்தானே
கிளைகொம்பி லேயிருந்த கினைகத்தோனே
வாழ்பவனே யின்றெனக்குக் கெதிரீதானே
வாழ்விக்க வந்தவன்போ லெதிரேநின்றாய்
தாள்ப்பானைப் பூட்டிருக்கும் பொருளைத்தேடித்
தானிக்கு யான்வக்தே நீயேசொல்லு
கோட்பானைக் கண்ணெதிரிற் கண்டகொம்பில்
குடியிருக்கும் ஒணுனுக் தலையசைத்தே. (815)

அசைத்ததனைக் கண்டிந்தப் பித்தன்ஒணன்
அவ்விருவர் சமவாதம் சொல்விசைக்க
இசைத்தபதி லொன்றுக்கொண் டிவனசைக்க
இப்படியே யதுவசைக்க ஏய்திரேரும்
பசைத்தமண் நீர்போல ஒன்றுக்கொன்று
பாரிந்த நீர்ஒட்டும் பாண்மையானர்
விசைத்தபடி தலையசைக்க ஒணனிட்ட
மெய்குலுக்கு அறிந்தவன்போல் விரட்டினானே. (816)

விரட்டினன் பின்தொடர்ந்து ஒணன்நின்ற
விடமதிலே குறியிடத்தே தோண்டிப்பார்த்தான்
அரட்டினு னென்றுயர்ந்த ஒணன்ஓட
அவ்விடத்தில் நீயிருவென் றருகேசென்றான்
உருட்டினன் கல்லுருளக் கல்லெறிந்து
உருண்டகல் நிற்குமுன்னே தடுத்துவிட்டான்
மருட்டினன் கண்டவர்த்த விடத்திற்தானே
வாயாலே இணறுவெட்டும் வாறுபோலே. (817)

போலவே யவ்விடத்திற் தோண்டித்தானே
பொய்யிதுவென் றெண்ணுதான் புரையோணனே
சாலவே பெரிதென்று வாழ்ந்தாப்போலே
தந்தைகுரு சங்கர்ப்பம் சிஷன்பெற்று
ஏலவே யான்கண்ட கெதிதானென்று
ஏண்ணியெண்ணி ஒருத்துமனம் அறிவிழந்தே
காலமே சூரியனுக் கெதிரேநின்ற
கங்குல்போ லானரே கதியிழந்தே. (818)

இழந்தார்கள் குருவோடு சிஷன்தானும்
இவரிருவர் பெற்றபல னிதவேதானே
பழந்தானே பாலிருக்க நரகில்வீழ்ந்த
பாதைவழி தப்பினவர் பள்ளம்வீழ்ந்த
கிழந்தானே வாலிபத்தை யிழந்தாப்போல
கிளிபூனை கைமாரு கிட்டலேபோல்
உளந்தானே கபடுவில் யிருகிமூடி
உன்மத்தர் பிசாசர்குணம் கிருக்கானவரே; (819)

திருக்காணர் கதியினருட் சுகமேகாணர்
கேள்மக்கா ளருள்பெற்றால் உயிர்க்குராசா
உருக்காணு ருடலுயிரும் வளருந்தேயா
ஓகோகோ வாய்ச்சொல்லு மூர்த்திபாசை
திருக்காணர் திருவாணர் ஒளியினுள்ளார்
சென்மாந் திரபவத்தின் வினையைவென்றார்
கருக்காணர் மனங்கண்டு உடலேகொண்டார்
காடிகரம் பத்தினையுஞ் சித்திதானே. (820)

சித்தியே காடிகரம் பொன்றலொன்று
சேர்விக்கு முத்திசித்தி சேரவைக்கும்
முத்தியே கோடிவிதம் ரசம்புபோல
முதுகுதண்டு முள்ளெலும்பு கோணல்போல
அத்தியே ஆள்ரீழ அகலம்போல
அங்கத்தின் குறிபோல அமைந்தகாடி
வெத்தியே தானடையச் சிக்கறுத்து
மேல்வலத்தைக் கழித்தாக்கால் உடல்மோச்சமாமே. ()

மோச்சமே நரகமலப் பாண்டத்தன்னில்
மோட்சமென்ற தணையறுத்து மலத்தைநீக்கு
மோச்சமே வலம்நீங்கச் சித்திதோணும்
முன்னுசி பாயாது வாசிமூச்சு
மோச்சமே மூச்சாகு மூலத்தண்டில்
மூலமதி லேயிருந்து மூன்கால்பாயும்
மோச்சமே மொழிபறடு விரல்நிகக்கண்
முட்டிநின்று உள்ளங்கால் சுற்றிஆடும். (822)

ஆடுமே வாசிமூச் சாடல்தானே
அந்தரங்கம் பின்னேறி உச்சியேறும்
ஓடுமே யிப்படியே உருண்டுருண்டு
உள்ளங்கால் உச்சிமுதல் சுத்திபண்ணும்
பாடுமே உள்ளிதயம் நடனஞ்செய்யும்
பாம்புபோற் சுருண்டுவிஷ யாடுமூலம்
கூடுமே பெருமொழியாம் முழங்கால்மீது
கூத்தாடு மிருபுறமும் எலும்பினுள்ளே. (823)

எலும்பினுள்ளே ஓடிஉள்ளங் காலைத்தொட்டு
எத்தசையும் பூணும்உயி ரெல்லாஞ்சாரும்
எலும்பினுள்ளே ஓடியந்தப் பாதைகூடி
எவ்விடமுந் தானேறி உறைந்துபோகும்
எலும்பினுள்ளே உயிரமைந்து தசையைச்சேர்த்து
ஏகாமல் நின்றுவிடும் ஏகில்ஏகும்
எலும்புடல் பசைசுரம்பு மிறுகிப்போகும்
ஏகவே தானேக்கு மிதையங்காணே. (824)

காணுமே கண்ணெதிரில் மறைந்தரூபம்
காயசித்தி யுடல்காணும் கெவுனந்தோணும்
காணுமே உள்ளிருளும் ஏமனும்ஓடும்
காணுங்காண் வஞ்சனையும் பில்லிசூதும்
தோணுமே கண்ணெதிர்பட் டாலேமாளும்
சயபுத்தி சந்தேகம் விட்டாப்போலே
ஈணுமே வெளியதனி லிருந்ததெல்லாம்
என்னிடத்தே தோன்றிவிடு மறைந்தால்மாழே. (825)

மாழுமே பின்திரும்பிப் பிறந்திறக்கா
வையகத்தின் வெளியெல்லாம் வாங்கிவைக்கும்
கோழுமே வருஞான மூதையமானால்
குருவாகும் பரவெளியில் ஞானிசேரில்
தாழுமே யோகமலம் யோகமாழும்
சந்தேகள் சோது தானேகிற்கும்
ஆழுமே பொய்பிறட்டு அதற்குமேலே
ஆகாய வெளிகடந்த அறிவுள்ளோரே. (826)

அறிவுள்ளோர் பொய்யாதி யந்தங்காண்பார்
ஆச்சரிய மெய்பிருளில் ஆதியந்தம்
தெரிவில்லார் செகசால மனந்தமுண்டு
சீவனத்தில் மெய்த்தொழில்க ளனந்தமுண்டு
தெறியுள்ளா ரதனுலே தெளிவதானுர்
கிமிஷத்திற் கோடிவிஸ் யாடல்சித்து
பொரியுள்ளா ரதினுலே அதுவானுர்கள்
பொய்வாக்கு மெய்யாகப் போகுந்தானே. (827)

தானென்ற யிப்பதத்திற் சொல்வார்வாக்கு
தலைதெரித்துப் போகாதே சண்டிமாடே
நானென்ற பேய்பிடித்துத் திரிந்திடாதே
நமன்கோழை போக்காத நாரிமார்டே
ஊனென்ற உடம்பினுக்கு யிரையைத்தானே
ஒருகோடி தனமிருந்து முட்காராமல்
ஆனென்ற மனமெடுத்து அலைச்சலுற்று
ஆதியந்தங் காணஓடு வார்கள்போலே. (828)

ஓடுவார் போற்திரியும் உள்ளத்தோரே
உரைத்தபடி நிற்பீரோ பிசகுவீரேர்
நாடுவார் தங்களையும் விரட்டுவீரோ
நமன்நானென் றெண்ணியே சொல்லுவீரேர்
பாடுவார் சொற்போல்ப் பேசுவீரோ
பரிவாசி கண்டவரைக் காணுவீரேர்
வாடுவார் போற்திரியு மனதுள்ளோரே
வாய்பாரச்சொன் னற்பலிக்க வேணும்பாரே. (829)

வேணுமே சொற்பித்தங் கொண்டமாரே
விளக்கமா ரோஉனக்குப் பேரும்வேறே
தோணுமே சொல்லறிவு சொல்லின்சேதி
துகையென்றுற் காணுமோ கெவுனிப்பாகும்
வீணுமோ நான்சொல்ல காளையில்லை
விதியில்லை யெங்களுக்கு முங்களுக்கும்
பேணுமோ சொற்சோர மறியாத்தோசி
பிரபலங்கள் பண்ணுமல் பில்மாய்கில்லே. (830)

நில்லிந்தப் பூஞான் வொளியைக்கண்டு
நேர்நில்லு கெத்திமத்தி நீழ்க்கூத்து
புல்லிந்தப் புஷ்பவொளி பூரிக்கத்தான்
பூணுமல் விட்டுவிட்டால் குருவென்செய்வார்
கெல்லிந்தப் பூமியுள் வதனிற்செய்யார்
நீள்கதிரை பறுப்பதுண்டோ நீரேபாரும்
மல்லிந்த மல்லனுஞ் செட்டிவேசம்
வாய்த்ததாற் தந்திரசில்பம் வேணுக்தானே. (831)

வேணுங்காண் சிலம்பமது மூச்சாற்தானே
மெய்யென்ன தந்திரமே மூச்சுவர்லி
பூணுங்காண் மூச்சுவிடில் யேதுகாணும்
பொல்லாப்பு ஆகாது புளுக்கைகூது
தோணுங்கா ணடிக்கடியே விடாதுநீர்
தன்பமது செய்துவிடுஞ் சூதாடல்போல்
வீணுங்கா னுங்களுக்குச் சொன்னுர்கேட்டார்
மெய்வலுவைத் தேடாத விருதாக்கூடே. (832)

கூடமே கோபுரத்தி லெழுதிவைத்து
கொடுஉச்சி மூளியென மறைத்திருக்கும்
மாடமே ஆறிருக்கும் கதிநெய்யாரு
மக்களுக்கு வேண்டியல்லோ பொருளாக்கூடம்
ஆடவே அவ்வரையில் ஒளிதான்சோதி
அடைத்துவைத்த வெளிப்பூட்டைத் திறக்தால்தீரும்
ஓடமே யேறிக்கரை வந்தாற்போல்
உண்மையாய் வந்திடுவீர் எற்றிவைப்பேனே. (833)

எற்றிவைத்தா ரெத்தனேபேர் மயங்கும்போது
எக்குமுண்டு இங்குமுண்டு கெங்குமுண்டு
ஆற்றிவித்தா ரத்தனையுங் தெரிந்துவந்து
அப்பொழுதே தூண்டிவிட்டார் தெரிகின்றோர்க்கு
போற்றிவித்தா ரவர்பிரிந்து மக்கள்தேடி
போனவரை மீண்டவர்கள் நினைத்தாற்காண்பார்
எற்றிவித்த ஒத்தாசை பதிலொத்தாசை
எல்லாருஞ் செய்ததென்ன செருப்புமாறே. (834)

மாருபார் செருப்புடையுங் தூத்தகாலி
மக்களுக்கே செய்ததென்ன விருதாவோசி
சாருபார் நீயிருந்து குடித்தால்யானும்
தம்பிபோற் படுத்திருந்து உண்டலாபம்
வேருபோற் தானிருக்க உலகஞாயம்
வேளாண்மைத் தொழிலாளி வினையமில்லார்
சாருபோ லேயிவர்க்கு யெரிச்சல்நீக்கி
தன்னுடைய அன்னமதைப் பகுத்தீய்ந்தாரே. (835)

ஈய்ந்தார்க ளதிலுலே தன்பமற்று
இல்லறத்தி லிருந்தவர்போற் தவமேசெய்தார்
ஓய்ந்தார்கள் மனக்கவலே யுடலின்தன்பம்
ஓட்டிவிடச் செய்தாரே தவமேயின்பம்
ஆய்ந்தாரே மோனமா யிருந்துகொண்டு
ஆகாய மிருப்பதுபோல் மனமேயானர்
ஆய்ந்தாரே வாசிதனே யிழுத்தக்கொண்டு
உச்சரியா தேயிருந்து நினேவோய்ந்தாரே. (836)

ஓய்ந்தார்கள் தன்னுடலின் நினேவின்தன்பம்
உள்ளமது வெட்டவெளி நினேவாகாயம்
பாய்ந்தார்கள் மனவெளியில் ஆகாயத்தில்
பரிவாசி பூர்தெழுந்த பலனேதென்றல்
ஆய்ந்தார்கள் கண்டுகொண்ட அதிசயங்கள்
ஆரென்னிக் கணக்கிடுவா ரந்தஞாயம்
வீய்ந்தார்கள் தாங்கண்ட பொருள்களெல்லாம்
மெய்யிலே உள்ளமதில் வெளியேசொல்லே. (837)

சொல்லுகிற சொல்லதுவே நூலேசாஸ்திரம்
தகையெண்ணிக் காணுரே செய்புள்வேதம்
வெல்லவே சொன்னுரே வேதபாதம்
விரித்தெழுத வைத்தாரே விரைவாய்மோனம்
மெல்லவே அங்கிருந்து யெழுந்தஞானம்
மேலெழுதப் பாடினதே யோகமாயம்
செல்லவே சொல்வதென்ன பாதைதானே
திருவருளுங் காணுத யோகத்தீயே. (838)

தீத்தீதீ யென்றுசொன்னுற் சுடாதுதீயே
தீயாகுஞ் சொல்பிறந்தால் யோகமென்றல்
தீத்தீதீ யோகத்தீ மூலத்தீயே
செந்தியோ வென்றுலே பஞ்சதீயே
தீத்தீதீ உள்ளத்தீ மூலத்தியும்
சேர்த்துவிட ஆருகும் யோகத்தீயே
தீத்தீதீ சுட்டுவிடும் உடலாங்காட்டை
திருவருளே லெகுவாகும் யோகத்தாட்டே. (839)

யோகத்தாட் டெப்படியென் றெண்ணிப்பாரீர்
ஊடுருவப் பிளக்துவிடும் உடலும்ஆகி
யோகத்தாட் டுடலுயிரைப் பகுக்துகூராய்
ஊனுரக்க மின்பதன்பம் பேரூர்மாற்றும்
யோகத்தாட் டநினுலே பித்தமீறும்
உன்னுடலம் வெகுபதனம் நினையாய்நில்லு
யோகத்தாட் டிற்பித்த வாதங்கோழை
உரமுடனே கக்கிவிடும் யோகச்சார்பே. (840)

யோக முடிவு ஸ்ரீ 12.

யோகச்சார் பெத்தனையே முடிவிற்தானே
யோகதடை நீர்சழியும்,கபாலங்காணும்
யோகமோ ராண்டுபனி ரெண்டுக்குள்ளே
ஒருமூன்று அய்ந்தெட்டு பத்துரெண்டில்
யோகமே சித்தியிது புண்யலாபம்
ஒவ்வொருவர் புண்யத்துக் கொற்றவாறு
யோகமே யிப்படியே லேசேயாகும்
ஊடுபயில் சிற்பரத்தைக் காண்போருக்கே. (841)

காண்போர்க்கு யோகமது மூடிக்தார்சாட்சி
கண்புருவத் திடைமத்தி உயிரோடும்
பூண்போர்க்கு யிதன்மேலே ஞானநோக்கு
புருவமே நெறித்துவிட்டு நிமையைநோக்கு
சாண்பாரே உச்சிமே லேறத்தானே
தலையுச்சி கபாலமத்தி அண்ணுக்கின்நேர்
தூண்பாரே மூலதண்டு காக்குநேரே
சொல்காவை விட்டுண்ணு அண்ணுக்குச்சியே. (842)

உச்சியே நடுவாசல் பத்தாம்வாசல்
ஊடுருவ மூலதண்டு காக்கின்மார்க்கம்
பச்சியே வாசிபரி தேசிகாசி
பரைமூச்சு ஆடிடுமே பரத்தின்சூது
கச்சியே காலான்று மூலமார்க்கம்
நடுநாடி உயிர்நாடி பிராணநாடி
மெச்சியே தான்கடனக் கிருக்கூத்தாடும்
விளம்பென்ரு லாருரைப்பார் தானுய்க்காணே. (843)

காணிந்த மூலபீஷ கோசநாடி.
கண்வாய்மூக் காதோடு நவத்துவாரம்
தோணிந்த மூலதலம் ரெண்டேவேறு
சொல்லிவைத்த மேலேழுங் கண்டப்பூட்டு
ஆணிந்த வல்லவர்கள் தம்மைக்கண்டு
அண்ணுடி உடல்கண்டு உயிரேகண்டு
ஷீணிந்தக் காயதொழில் வெளியேதொண்டு
மேலென்ன உளத்தொண்டு பண்ணுவாயே. (844)

உடற்கூறறிய.

வாயென்ன வல்லபங்கள் உயிரைப்பார்ப்பீர்
மக்களே யாளுக்காற் உயிரைக்கார்ப்பீர்
தாயென்ன யிவ்வுடற்கு உயிருதானே
தந்தையென்ன இவ்வுடற்கு மனதுதானே
சேயென்ன இவ்வுடற்கு காமுங்காலே
திருவென்ன யிவ்வுடற்கு அறிவுமாகும்
நோயென்ன இவ்வுடற்கு வாதபித்தம்
நோய்கோலழ யிவ்வுடற்கு யேமன்தானே. (845)

ஏமனே சங்குதொண்டை கரங்காலெல்லாம்
இடதுபுர முன்புரமும் விலாவைச்சுற்றி
காமனே கண்ணெளியி லிதுவேநின்று
காயவுடல் காக்கின்மேல் உச்சிமட்டும்
தூமனே யிதுவொழிந்து வுருவாய்நின்று
சூட்சவுடல் மனவுருவே காரணங்கள்
நாமனே மேலறிவே யிதனிற்கூடில்
நாயகமே நாதகரு நாயகத்தே. (846)

தேவனென்ன தெய்வமென்ன குருவுமென்ன
திகழ்வடிவம் வேதமென்ன வாக்குமந்திரம்
சாவமென நின்றேரு மவரைக்கண்டால்
தான்மறைய யேமனுரு கலங்கிமாறும்
தீபமென வொளியடுக்க யிருளேபோமால்
செங்கனலாற் தூண்டிவிட்ட நெற்றிக்கண்ணுல்
கோபமெனப் பார்த்துவிடும் பிரமக்கண்ணுல்
குருகண்டு குருநாடி உயிரேகாலே. (847)

காலனென்ன யெமகாலன் காலகாலன்
கதவடைத்தும் உள்நுளைவான் பூட்டுபூட்டு
ப்பாலனெனப் பாரானே கல்லோர்காணுன்
பரமபதம் பெற்றுலுர் தொடவேபார்ப்பான்
ஏலவே அண்ணாக்கு உச்சிவாசல்
ஏர்வாசல் நுளையறிந்து யேறுட்கார்ந்து
காலவேல் உச்சியது யேறித்தள்ளி
காலகண்று வேல்கொண்டு காலன்பாரே. (848)

பாரப்பா சென்னியில்நீர் காலனுகும்
பார்த்தறுத்தார் சென்னியில்நீர் பித்தர்தானே
வீரப்பா வலநீரே யிடுப்பில்வாதம்
மெய்யதனில் நெஞ்சுதொண்டை விலாவின்பக்கம்
தூரப்பா மூலதண்டு காக்குமட்டும்
சொல்மொழியுஞ் சேத்துமந்தான் சமமாய்நின்றால்
காரப்பா காசிவழி பிராணன்பாரு
கால்வாசி நேர்கடக்க காக்குமூக்கே. (849)

மூக்காலே ஒடுகலே காசிவாசி
முன்னுக்கு வழிவந்து பேசும்மூச்சு
காக்காலே சங்குதொண்டை வழியேவந்து
நடுமார்பு இருபக்கம் விலாவில்நின்று
நோக்காலே தானிழுத்துச் சுமன்றவாய்வு
கொடிக்குகொடி மூக்குவழி பாய்ந்தசிட்டு
ஊக்காலே போயந்த வாசிரூபம்
உள்முகமாய்த் திரும்பும்வகை யோகந்தானே. (850)

யோகம்பெற்று ஞானம்.

யோகந்தா னிதுபெற்ற பின்னேஞானம்
உற்றுவருஞ் சொல்ச்சொல்லாய் ஒளிகண்டேதான்
யேகந்தான் சொல்லிவரும் ஒளிதான்சுத்தி
இதுபெற்ற பேரிதுவே ஞானமுத்தி
சோகந்தான் வாராது தானேநிற்கும்
சுகம்பெற்ற வாரல்லாற் துன்பமில்லை
காகந்தான் தீண்டிவிட காகம்மாழா
நம்மறிவு தீண்டிவிட மாழாதமனமே. (851)

மாழாது உச்சியில்நின் றிருக்கும்பிராணன்
மனமாழா அறிவிழக்கா துடல்தான்னையா
தாழாது உடற்கருவி மெலிவுதோணு
சங்கற்பஞ் செய்யாது செய்தார்சித்தி
வாழாது மாகருவி யடங்கிநிற்கும்
மனமாண்டாற் பொருளுளதோ உடல்தான்மாழும்
ஆழாது தேறிவிடக் கரையேயேற
ஆகிருஷ்ணஞ் செய்யாதே அசைவைப்பாரே. (852)

அசைவையே உடலதனில் ஈவத்துவாரம்
ஆடுகின்ற புத்தீசல் போலத்தானே
இசைவையே மனஉடலும் அதுபோலப்பா
இப்படியே ஆக்கையுள்ள புழுப்போல்வாசி
பிசைவையே மலக்குடலிற் புழுக்கள்பூர்க்கும்
பெருஞ்சித்தி கெடுத்துவிடும் மலமும்பூச்சி
தசைவையே புழுக்குடலைச் சுத்திபண்ணித்
தன்னுடலு முயிர்மனமு மறிவைக்காணே. (853)

காணப்பா யிதுகாலுங் கண்டோன்முத்தன்
கால்வாசி மொழிமொழியாய்க் கண்டோன்சித்தன்
நாணப்பா உடலுயிரும் பிரிந்தாற்தோஷம்
நமனேது உடலுயிரும் வாதம்வந்தால்
வீணப்பா உடலுயிரும் பாதிதானே
மேலறிவு யென்னசெய்யும் பிரிந்தால்மாழும்
ஆணப்பா பெண்ணில்லா அரண்மனைக்கோ
ஆச்சரியம் யேதுண்டு அழகேறுதே. (854)

வருது வாசிவலு வில்லாக்காயம்
என்னசெய்யு மண்பாண்டம் யேதுக்காகும்
தேருது உடல்வலுத்துப் பிராணன்குன்றில்
தெய்வஒளி காணரிது தேசத்தோர்க்கு
வாராது உடலுயிர்க்கு அறிவுதானே
மனமாண்டா லுடலுயிரு மறிவென்செய்யும்
கோருது முத்திகெறி குருவென்செய்யும்
குருசொன்ன சாஸ்திரமு தெரியும்வீணே. (855)

வீணல்லாற் கத்தினது பெரியோர்மார்க்கம்
வேதாந்தஞ் சித்தாந்தம் நாதாந்தங்கள்
ஊணல்லாற் பசியிரைக்கே போதாந்தங்கள்
உரைத்தாரே வேதமென்று பரியாசங்கள்
ஆணல்லாற் பெண்களுக்கே புருஷமுத்தி
அகப்படுமே கைவசமே நினைந்தபோதே
பேணல்ல கைப்பொருளாற் சோதிகிட்டும்
பேய்பித்தர் சுவாமியெனத் தேடுவாரே. (856)

தேடுவார் கண்டதென்ன லெகுவிற்கிட்டா
தெருவிலே காசுக்கு வாங்கல்போலே
ஓடுவார் குருவிடத்தில் வாங்கலியலோ
உள்ளமதம் உள்ளமனம் உள்ளிற்காலோ
நாடுவார் பாதமதைக் கட்டிக்கொள்வார்
நம்குருவே நீசாக மாட்டாயென்பார்
வீடுபோர் நீர்கண்ட தெமக்குக்காட்ட
மெய்க்குருவே நீர்கொடுமே தாவென்பாரே. (857)

தாவென்பார் யிருவென்பார் தூசிற்பார்
தூண்டுதற்குத் தன்னுலே கருவைக்காணர்
பரமென்பார் தன்னுடலே நரகமென்பார்
பரிபாஷை காணுத பாவிமார்கள்
காவென்பா ரென்னுடனே யிருவென்பார்கள்
கால்கொள்ளக் காலறியார் முக்கால்மொள்ள
நிரமென்பார் அசடகுரு சந்தேகிப்பார்
தெளிந்தகுரு காணறியார் தேவாரம்போலே. (858)

தேவார மென்னகுரு மோனமாகும்
தெளிந்தகுரு சொல்லதுவே தேவாரங்கள்
நாவாரத் தான்மொழிந்த பாஷைதானும்
நன்குணர்ந்தா ரெல்லோரும் பத்தியாகும்
தாவார மில்லாதார் கோட்டைபோல
தாரித்திரம் லெட்சுமியுஞ் சோடிபோல
ஊவார நானெடுத்த யிந்தக்கூட்டில்
உதகநீர் வார்க்காமற் தாரைகேட்பாரே. (859)

கேட்பார்கள் தனம்பொருளைக் கட்டிக்கொண்டு
கெஞ்சுதல்போற் கேளார்கள் கொடுத்தார்போல
தாழ்வார்கள் சொல்மொழிக ளிதுதான்பாரு
சம்மதம்பொய் யொப்பந்தம் தாரீயென்பார்
வாழ்வார்க ளவர்கொடுக்க வாங்கிக்கொள்வார்
வயற்பசியைத் தீர்த்தவருக் தொண்டுசெய்வார்
ஆழ்வார்க ளவர்களுக்குப் புத்திசொல்வார்
அய்யய்யோ அவர்பிழைக்கச் சொல்வோம்நாமே. (860)

நாமேதா னுன்னோடு சேர்ந்தோரெல்லாம்
நாயகனைச் சேர்ந்தாப்போல் நாதன்கண்டு
ஆமேதா னவர்கேட்கப் பதிலுஞ்சொல்லி
ஆச்சரித்து அவர்வரத்தைக் கலந்துகொண்டு
ஊமேதான் போலிருந்து அயிக்கியஞ்செய்து
உச்சரிக்கு மந்திரமும் உயிருங்கண்டு
ஈமென்னும் உயிர்ச்சொல்லின் சீவன்கண்டு
எப்பொழுது மேயிருக்கும் பொருளைக்கண்டே. (861)

கண்டவர்க ளுடன்கூடிக் கலந்துகொண்டு
கதைகாவிய புராணமெல்லாந் தெளிந்துகொண்டு
விண்டவர்க ளுடன்கூடா மெய்யினுலே
விவேகமதைப் போற்றிஅனு சரித்துவரவே
கொண்டவர்கள் தன்னிடத்துக் குருவாய்தேடி
குருபத்திக் குறைவில்லாக் குருவைநாடி
தெண்டவர்கள் கைக்கொண்டு லேசாய்ப்பாடி
சிறுகரியும் புலிமுன்னே சிறினுப்போல். (862

சிறினுப் போலல்லோ சினந்தாருண்டு
சிறுபுலியும் பெருங்கொம்பு மாட்டுக்கஞ்சா
ஊறினு லட்டையது முழுத்தானேறில்
உச்சாகங் கொண்டிடுமே காலிக்கண்டு
மாறினுற் நிரும்பிவரத் திசையைக்காணு
லயரெல்லாங் கால்மூளைத்த தண்டின்பூச்சி
ஏறினுற் கீழ்த்தெரியும் மேலேகாணு
இவ்வட்டை நடந்தாலுற் தூரந்தானே. (863)

தூரமே யாகிவிடுஞ் சமீபத்தூரம்
தூய்யமனு நீதிநெறி யறியாதார்க்குப்
பாரமே யாகிவிடும் வேதநூல்கள்
பக்குவமே யானக்கால் மூன்னூல்விள்ளும்
சாரமே பொருந்திவிடும் மூத்திபாகம்
தனித்திருந்து பார்ப்பதற்குத் தானுய்காணும்
வீரமே தானெடுக்குங் குருவைக்காணும்
மெய்வேதத் துட்பொருளே விரைவாயாயும். (864)

ஆயுமே தானுக அறிவால்விள்ளும்
அறிந்தோரைக் கேட்கவுமே அடங்கிஞானி
ஓயுமே கருவிகளும் உலாவல்விட்டு
உற்சாகந் தானிவிட்டு உள்ளேதொட்டு
காயுமே மூலகனல் கருவியாலே
காதடைக்கும் வாயடைக்கும் நாசியோடா
பாயுமே கண்ணொளியும் உள்ளேநோக்கும்
பார்வலமுங் கட்டிவிடும் நீர்மேல்நோக்கே. (865)

நோக்கியே பார்ப்பவர்க்கு நோய்கள்வந்தால்
நூறானி வயித்தியத்தா லாகாவாகா
ஆக்கியே சமைத்திருக்க உண்ணுர்போல
அப்பனே சாதனையிற் சுகங்காணுமல்
நீக்கியே விட்டிடவே விடாதுகாணும்
நீங்காமற் தானிழுக்கும் நிருத்தக்கூடா
போக்கியே விட்டவர்கள் நோயேசார்வார்
பொய்யோக மாகிவிடும் நிசங்காணுதே. (866)

காணுது கண்டிடவுங் கடினமெத்த
கற்பமிது அற்பமல்ல கடினவாழ்வு
தோணுது நோய்பிலக்கிக் கவலைபோக்கித்
தன்பமணு வில்லாமல் நிற்பதற்கு
நாணுது ஓர்நிலையில் நிற்போர்க்கல்லால்
நாடிநில நில்லாது நயனம்நில்லா
வாணுனைத் தானெடுக்கி மனதைக்கட்டி
மண்ணுடலை அறிவுருத்த வருத்தந்தானே. (867)

வருத்தமென்ன வெகுகடினம் யோகத்தன்பம்
வாயாலே சொல்வதற்கோ நினைவிலாகா
பொருத்தமென்ன யோகவுடல் செனிக்கவேணும்
பூவுலகிற் புண்ணியனுய்ப் பிறக்கவேணும்
அருத்தமென்ன யிதையறிந்தாற் தன்னுட்தானே
ஆகாதோ விட்டகுறை யமைந்தால்தானே
நிருத்தமென்ன ஆடிடுமே வேண்டாதாடும்
நீர்சொல்ல யான்கேட்டே னினிச்சொல்வீரே. (868)

சரிதைமுதல் சாதனவிபரம்.

சொல்லுவேன் யோகதன்பங் கடந்தப்பாலே
சூட்சமே ஞானபதஞ் சொல்லவொண்ணு
வெல்லுமே சரிகையொடு கிரிகையோகம்
மெய்வேர்க்கும் நிறங்கருக்கும் விழுங்கில்விக்கும்
அல்லுமே ராப்பகலும் வேலைவேலை
அசரீரி யெட்டாது யிந்தமூன்றும்
நில்லுமே யென்றுசொல்லித் தடுத்தாப்போல
நிசந்தெரியக் காணுமட்டு மூன்றுந்தன்பம். (869)

மூன்றுபதந் தனைக்கடந்து நாலாம்பாகம்
மூன்சென்மக் கூறறியும் மோட்சஞானம்
தோன்றுபதந் தனைமறக்கும் பித்தர்போல
சுழலிலகப் பட்டதோர் துரும்புபோல
ஈன்றமகள் தனையறியாப் பித்தன்போல
இச்சமைய மாட்டிவைக்கும் நாலாம்பாகம்
ஊன்றுபதந் தனில்நின்று பித்தம்போக்கி
உச்சரியே யெச்சரிக்கை ஆண்டுஒன்பே. (870)

ஆண்டொன்று கிருகிருப்பு மயங்கிவீழும்
அய்யய்யோ கடினமது தன்பம்மெத்த
கூண்டொன்று போட்டுவிடக் கூட்டுக்குள்ளே
கூத்தாடு மண்டைவலி குமுரியாடும்
ஆண்டொன்று யிப்படியே வினையாட்டய்யா
அல்லோருங் குளிகையென்று அதனைச்சொன்னர்
வேண்டென்று சொன்னரே யோகமேலோர்
மெய்க்கூடு கபாலகுகை வினையாட்டையா. (871)

விளையாட்டுப் போலிருக்கும் ஞானமார்க்கம்
மெய்வாத பித்தச்சளி மாறுமட்டும்
சுழியாட்டு மெத்தவுண்டு யெங்கள்வேலை
தாரித்திர மேமிகுத்தால் சலமேபோல
கழியாட்டுக் காண்பதற்கு கடினங்கண்டோம்
கைகாலும் வாசிவர ஞானதேகம்
விழியாட்டு மெத்தவுண்டு மேலோர்ஞாயம்
விளம்பரிது கேட்பதென்ன விளக்குங்கண்டால். (872)

கண்டாலே சொல்வதெல்லாம் கதிக்குள்தோணும்
கதிரவனுர் கோடியொளி காணுங்காணும்
அண்டார்கள் சொல்லறியார் நூலேபாரார்
ஆனாலும் ஓர்கால மடுப்பார்வந்து
கொண்டார்கள் சொன்னநூல் சுகமேகொஞ்சம்
கோடியென்று சொல்லிடலாம் தடைகள்தன்னை
விண்டார்கள் பாடுபட்ட தன்பத்தானே
வேதாந்த சித்தாந்த சாதாந்தான். (873)

அந்தங்கள் போதாந்தங் கீதார்த்தத்தை
அலறியே சொல்லிடுமே அருளேவாக்கியம்
மந்தங்கள் தானகற்றி முறைகள்சொல்லி
மருவுமே தன்னுடலும் அருளேவுள்ளில்
சொந்தங்கள் போலிருந்து உடலிற்சீராய்த்
தன்பங்கள் தானகற்று லெகுவாய்மேலாய்
பந்தங்கள் தானிருத்திப் பதையாகெஞ்சம்
பதைக்குமெனி லருள்பதைப்பு சித்திதானே. (874)

சித்தி முத்தி.

சித்திதான் பெருமளவும் அருள்காணமட்டும்
தேகவினை யையாது சகிக்கொணாது
முத்திதா னிவ்வளவே பதமேமுற்றே
முழுமுத்தி சொல்லுகிறே னதுக்குமேலே
சித்திதான் மேற்பொழியு மதனுற்தானே
செம்படவன் மீன்பிடித்த லெகுவேபோல
வெத்திதான் மனவாக்குக் காயம்ஆன்மா
விரைந்தொன்று சேர்ந்தவர்க்கு சித்திமுத்தே. (875)

சித்திமுத்தி நாடிநரம் பிருத்தானே
தேகமுயிர் மலக்கசடும் நீங்கியப்பா
சத்தினா னுடலிருந்து ஆடிப்பாடும்
தன்மனதும் உடலுயிரும் ஒன்றுகூடும்
கத்தியே யாடாது சுழிவாய்ச்சொல்லும்
கதிர்பெருகு மிருள்மறையும் கணக்கதாகும்
நத்தியே தானிருக்கிற் பந்தம்வந்து
நரைமூப்பு மொப்பாக வர்த்தம்ஓடே. (876(

ஓடுமே திரிகால வர்த்தமானம்
ஊடுருவ நாடாது ஒளிபந்தத்தால்
காடுமே போயொழியும் யீனர்போல
கண்ணெதிரே நில்லாது திரிகாலங்கள்
பாடுமே பட்டுஅதைக் கண்டுகொண்டு
பையிருக்க நூல்நழுவப் பையில்லாதே
வாடுமே திரிகால ஞானமார்க்கம்
வாயிருக்க நாவில்லா வாறுபோலே. (877)

நாவில்லா ஊமைமொழி பேசல்போல
நன்குணர்ந்தார் பித்தமது சேர்ந்தாப்போல
பூவில்லா நார்முடிந்த வாறுபோலே
பூவையரின் கெற்பமில்லா வீடுபோல
பாவில்லா நூல்விளங்கும் நெசவுபோல
பரியேறிச் சேணமில்லா உவமைபோல
காவில்லா ஊரிருந்த சுகமேபோல
கண்டதிரி காலமது பந்தத்தாலே. (878)

பந்தத்தா லேமறையுந் திரிகாலந்தான்
பதைப்புற்ற நெஞ்சத்தால் மறைத்துக்கொள்ளும்
நொந்தத்தால் நொந்தநெஞ்சம் மனமேயாகும்
நோகாத மனமல்லோ பதைப்பில்லாதே
அந்தத்தா லேஅருளும் திரிகாலத்தை
ஆர்சொல்வார் குருவருளால் அருளைத்தானே
கந்தத்தால் மலபந்த வாசற்கூடு
கண்ணினிமை நார்ப்பனபோற் பந்தக்கார்க்கும். (879)

கார்க்குமே உடலுயிரும் நினைப்பேபந்தம்
கதவடைக்கக் கட்டுண்ட கள்ளனைப்போல்
சேர்க்குமே மல்லுயுத்தம் பந்தம்ப்பா
சிறுவர்தெரு வினையாடுஞ் சேர்க்கைபோல
தார்க்குமே ஆதியந்தக் திசையெல்லாந்தான்
தானிழுத்துக் கொள்ளுமது நினைவால்முடி
வார்க்குமே முன்பின்னும் வினைவால்நாடி
வாலிபன்போ லுள்ளிருந்து மாருவேறே. (880)

மாரென்றும் நெஞ்சென்றுஞ் சித்தமென்றும்
மனமென்றும் உளமென்றும் மாய்கைவீடு
தூரென்று கூட்டிவைத்தால் திரிகாலங்கள்
சொல்லிவைக்குக் திரிகால வர்த்தமானம்
காரென்று நீர்பிசகா நெஞ்சங்காரு
கண்மூடித் திறந்தாலே நெஞ்சமாகுங்
பாரென்று மிப்படியே யிரண்டுமுண்டு
பாலித்த சித்தியென்றும் மாய்கைமூடும். (881)

மூடுமே நெஞ்சமதை மூடிடாதே
முன்மூக்கில் நின்றுப்போல் மனதில்நில்லு
ஓடுமே கூடுவிட்டுக் காடுபாயும்
உட்பொருளே நீயறிவாய் உளமேசேரு
கூடுமே தானிருக்கக் கூடுவிட்டுக்
கூத்தாடி யேறினுப்போ லோடுதேபார்
நாடுமே தோணுதற்குச் சாஸ்திரமேனே
நம்குருவைச் சேர்ந்தாக்கால் நீரும்வீணே. (882)

யோக ஞானுப்பியாசம்.

வீணல்ல யோகமொடு ஞானுப்பியாசம்
வேராதி யத்தமொடு கடக்கவேணும்
ஊணல்ல நித்திரையுக் தள்ளவேணும்
உண்டுடுத்தல் சையோகக் தள்ளவேணும்
பூணல்ல போக்குவதை யறியவேணும்
புலாவெலும்பு தோலிறைச்சி புரைகள்நீங்க
தோணல்ல நீங்கிடவே யிதுகள்மாய
துன்பமற்றுச் சாதனைகள் தொந்தமாக்கே. (883)

ஆகுமே மலவிருத்தி கசடுநீங்கும்
அய்யய்யா மனவெளியும் அரூபமாகும்
ஏகவே சொற்சொல்லாய்த் தனியேசொல்லும்
இன்பமுற யெங்கிருக்கும் நெஞ்சகத்தே
போகவே பொய்யிருளும் வொளியேபாயும்
பொல்லாப்பு நீங்கிவிடும் உலகஞாயம்
வேகவே கூடிருந்த மண்ணுள்மாழ
விட்டகுறை வந்துதென்றல் சனனக்கண்டே. (884)

சித்தர் கேட்குதல்.

கண்டீரே சனனமது பிறந்தாற்பின்னே
காலனுக்கு ஆளாக மாட்டாமார்க்கம்
கொண்டீரே வடகயிலே பொன்மேருள்ளோய்
குமரனுக்கு முன்பிறந்த குழந்தைகாகா
விண்டீரே யெங்களுக்கு விளக்காஞாயம்
விளங்கயெடுத் தறைத்தவரே விமலர்ஞாயம்
கண்டீரே உம்மைப்போ லாதியந்தம்
கருக்குருவைச் சொல்லவில்லை யெங்களுக்கே. (885)

இந்நூலின் பேர்.

எங்களுக்கே யோகமொடு ஞானம்வந்தால்
எங்கள்மனந் திரிகால வர்த்தமாகும்
உங்களுக்கு யோகமொடு ஞானசித்தி
ஊடுருவச் சொல்லிவைத்தேன் திரிகாலத்தை
தங்களுக்கு மெங்களுக்கும் உங்களுக்கும்
சாஸ்திரப்பேர் ஆதியந்தம் ஞானசூரியன்
உங்கள்மனந் திரிகால நெறியீதாகும்
உரைத்துவிட்டேன் சரிகைகிரி யோகஞானம். (886)

மனம்சித்தி உயிர்முத்தி

ஞானமா மதின்மேலே சித்திதானும்
நாடிநரம் பிருகிவிடும் கெவுனம்ஆழும்
வானமோ பாதகடை பூமியாகும்
வல்லபங்கள் மெத்தவுண்டு மனதற்சாகம்
பானமோ கேட்டதெல்லாந் தானேசாரும்
பறைவாலே முன்னின்று தொண்டுசெய்வாள்
ஈனமோ யிவ்வுடலு முயிருக்தானே
எங்கள்மனஞ் சித்தியுயிர் முத்திதானே. (887)

முத்திதான் பெற்றதிந்தக் காயக்கூட்டில்
முன்னின்று வினையாடுஞ் சித்தியேவல்
சத்தியே யெங்களுக்கே தொண்டுபண்ணு
நானென்று சொன்னுக்கா லடங்கிநிற்கும்
வெத்தியே யென்பொருளு மிதுதான்கையில்
வெகுநாளிற் கண்டெடுத்தேன் பாடுபட்டு
சித்தியே கண்டெடுக்க வெடுத்தபின்னே
செனப்பொழுது யான்தாங்க மாட்டாமற்தான். (888)

ஞானவழி ஆண்டு 2

அத்தானு மச்சானுங் கூடிக்கூடி
அடிக்கடியே பரியாச மாகுமாபோல்
சித்தானும் யான்கூடிச் சேருமார்க்கம்
சிறுபிள்ளை நானறியாத் தோஷத்தாலே
மூத்தானே யென்வசமே யாகுமட்டும்
மூழுமோசம் போயினனே அறியாநானும்
பெத்தானைக் காணுதான் உத்தான்கண்டு
பேசுமொழி ஞானவழி ஆண்டுரெண்டே. (889)

ரெண்டிலே யோகமது பனிரெண்டுண்டேன்
நேர்வழியே ஞானவழி ஆண்டுரெண்டு
ஒண்டிலே நான்திரித்து ஊரைச்சுற்றி
ஊமைமொழி பேசியெனை யாடினனே
மண்டிலே நானிருக்க யென்னைத்தூக்கி
வாரிவலஞ் சுற்றினதே மண்டையோடே
விண்டிலே நானிருந்து சகியாவாலே
விட்டகுறை வந்துதென்று தள்ளினளே. (890)

தள்ளினுள் யான்பயந்து சுருங்கிநின்றேன்
தமரோடு வாழுகின்ற தன்மைபோல
அள்ளினு ளென்குணத்தை வாரியுண்டாள்
அப்பொருளிற் தன்குணத்தை யதனில்வைத்தாள்
கிள்ளினுள் நெஞ்சகத்தை யடக்கிக்கொண்டாள்
கிழவியுருக் கொண்டனளே கிழவனுக்கி
தள்ளினு ளெந்தனக்கை விட்டிடாமல்
சமுசாரி போலிருப்பா யென்றிட்டாளே. (891)

என்றவுடன் நான்வணங்கி நின்றபின்பு
என்மேலே பிரியமுற்று எடுத்தணைத்து
நன்றுகச் சொல்லுகிறேன் கவனமாக
நானிலத்தில் நீயிருப்பா யென்றுநீயும்
குன்றுத யோகமது செய்வாயானால்
கூடுமே பிராணய முடிந்துபோகும்
அன்றுடம் நீயெழுந்து காலைமாலை
அப்பனே யோகமதை முடிப்பாய்தானே. (892)

பிரமரந்திர உற்பத்தி.

தானென்ற ஞானமே ப்ரமரந்திரம்
தானிருந்து பிறந்ததுவும் திரிகாலவர்த்தம்
வானென்ற திரிகாலம் ஆன்மாஉச்சி
மண்டையதின் மேலேற உச்சிக்கண்ணில்
ஆனென்ற கண்ணதுவும் யோகத்தாலே
அவயோகம் வாசிதா ரணையினாலே
ஏனென்ற தாரணைதான் வாசிமூச்சாம்
இவ்வாசி யுண்டஅன்னம் செரிக்கும்போதே. (893)

செரித்துவந்த மலம்உருண்ட காற்றுத்தானே
தீப்புகைபோல் புகைகிளம்பி மூலமேறும்
மரித்ததுவும் வந்தகலை வாசியாகி
மாறுது கலைபிரிந்து மாறிக்கொள்ளும்
வெரித்துவந்த முனைமூக்குத் தண்டுஉச்சி
விரைந்தமதில் பாயுவதும் ஆன்மாவாகும்
மூரித்துவதி லாடுகின்ற ஆன்மாதானும்
முன்பிறந்த உடலுபிரும் யெலும்பிற்றானே. (894)

எலும்பென்ற மூதுருத்தண்டு எலும்பினூடே
இளோயசி செலுத்துமது வாசல்போல
எலும்பினில் துவாரமது ஓடுமார்க்கம்
இருக்கின்ற பாதைவழி பிராணனோடும்
எலும்பினுள்ளே ஓடுகின்ற வாசியான்மா
எரியது ஓடுவது முனைமூக்குத்தான்
எலும்பிலே வாய்வான ஆன்மாவுக்தால்
இப்படியே புருவமத்தி யேறும்பாரே. (895)

ஏறியே ஆதாரத் திடையிற்சென் றே
இடைநடுவே ரோட்டுவழி பாதையுச்சி
ஏறியே மண்டைநடு உச்சிரோமாய்
ஏறியத்தப் பாதைவழி ஓட்டின்மேலே
ஏறியந்த ஓட்டின்மேல் உச்சித்தோலில்
ஏறிகின் றே மண்டையெல்லாம் ரோமமாச்சு
ஏறியே யிறங்கினதால் மேல்காலெல்லாம்
இயல்ரோமம் அங்கங்கே முளைத்துச்சேர்ந்தே. (896)

சேரவே காயசித்தி ரோமந்தானும்
சிரசிருந்த மயிர்வெள்ளை கருத்துப்போகும்
மாரவே சரீரங்கள் வெகுகாலந்தான்
மயிர்கருத்து உடல்பிலத்து உயிர்கட்டுண்டு
சேரவே யிவ்வான்மா உச்சிரோமம்
சேர்ந்தேறி மயிர்மார்க்கந் தடர்ந்துபற்றி
மீறவே அங்குலந்தான் பன்னிரண்டு
மிகநடக்கும் காயகப்பிர வேசந்தானே. (897)

பிரகாயப் பிரவேசம்.

நடக்குமது பிரகாயகப் பிரவேசந்தான்
காட்டைவிட்டு வெளிதனிலே யேறச்செய்யும்
துடக்காக யேறியது சந்திரசூரியர்
சுயவுடுக்கள் உயர்லோகம் ஆகாயத்தில்
படக்கவே பன்னிரண்டு மயிலின்மேலே
பார்விசும்பின் பதினெட்டு மயில்வரைக்கும்
இடக்கவே பானுசந்திர வுடுக்கள்தானும்
இயங்கியே உயரவே தூக்கும்பாரே. (898)

தூக்குமே அதற்குமேல் உயரச்செல்ல
தூய்யசங்கு நிறமேகம் கருப்புமேகம்
ஆக்குமே பொன்மேகம் பச்சைமேகம்
அரிநீல மேகமென்ற கருவியெல்லாம்
தாக்குமே யனேகவகை மேகந்தானும்
சலத்தில்வரு திரைபோலும் மேலுமேலும்
நோக்குமே ஆகாய மேகரோட்டில்
நொடியாதே வருமார்க்கந் தன்னில்தானே. (899)

மார்க்கத்தில் பிராயம் கெவுனமார்க்கம்
வழியோடே கெவுனத்தின் வழியேசெல்லும்
மார்க்கத்தில் செல்லாது செல்லுந்தன்மை
வருவிப்பேன் கண்மூடித் திறப்பதற்குள்
மார்க்கத்தில் யோசனைதூ ரங்கள்போகும்
வருவித்துச் சொல்லுதற்கு காலாயில்லை
மார்க்கத்தில் செல்லுகின்ற விபரந்தானும்
வருவித்துச் சொல்வதென்றால் அனேகமுண்டே. (900)

உண்டேதான் மேகத்தின் போக்கில்தானும்
ஊர்ந்துவரும் வழிவிலகி யொன்றேடொன்று
சண்டைதா னிட்டதுபோ லண்டத்திற்றான்
தாக்கியது யிடியிடித்துப் போடுஞ்சத்தம்
அண்டந்தான் வாய்விட்டு அலரிஞ்போல்
அப்போது பிரண்டுருண்ட கலமேகந்தான்
சண்டன்போல் மேகமது முட்டித்தாக்க
சல்தியினி லொளிவீசும் யிடியுமாச்சே. (901)

ஆச்சப்பா யிடிச்சத்தம் ஒளியின்காந்தி
அச்சணமே பூலோகந் தன்னிலேதான்
வீச்சப்பா பூமியதில் ரூபந்தன்னில்
வீழ்ந்தவிடம் அடையாளந் தெரிந்ததுண்டு
பேச்சப்பா காலிநிலந் தனில்வீழ்ந்தால்
பேச்சென்ன பூமியிற்போய் தெரியாதப்பா
காச்சப்பா மூவேழு லோகத்துள்ளும்
கடக்குமது சென்றவிடம் அழிந்துபோமே. (902)

அழிந்துபோ யிருந்ததுவு மூன்றுலோகம்
அதிலொன்று மேலோக மப்பாபாரு
வழிந்தந்தக் கீலோக மொன்றேயாகும்
மகிமையுள்ள பூலோக மிதவேயாகும்
இழிந்ததுவும் போனதுவும் போகமூன்று
இருப்பதிலே இரண்டுக்குச் சுவரோயில்லை
பொழிந்தந்த மூன்றினிலே சிவனுண்டு
புகழ்சிவ பேதமுண்டு சற்றிப்பாரே. (903)

சுற்றிவந்து அண்டச்சுவர் முடிவின்மட்டும்
சூட்சமாய் அங்கங்கே பார்த்தவக்தேன்
பற்றுதலில் லாமலே வெவ்வேறாக
பரவியே நிற்கிறது அனுப்போற்றேனும்
மற்றவர்கள் கண்ணுக்கோ தோணதப்பா
வாகாகத் தெரியவென்றுல் சித்தன்பார்ப்பான்
கொற்றவனு னுமதைக் காணமாட்டான்
குறிப்பறிந்து யான்பார்த்தே னன்னுள்தானே. (904)

அன்னுளி லேயான்போய்ப் பார்க்கவென்று
அடிதொடங்கிப் பார்ப்பதற்கு எத்தனித்தேன்
என்னுலே சொல்லவொண்ணு அதிசயங்கள்
எத்தனையோ தான்பார்த்தேன் தனிமையாக
முன்னுலே தெருவுகளும் வீடுபோலும்
மூதண்ட மானசிவ கணங்கள்போலும்
பின்னுலே மகாவிஷ்ணு கணங்கள்போலும்
பேரின்பம் பெருகினதை விள்ளுவேனே. (905)

விள்ளுவேன் சிவனுடல் பிரியுமார்க்கம்
மேலான உயிர்நாடி உயிர்பிறிக்தே
தள்ளுவதும் மார்நாடி தம்பநாடி
தனியான மூதகுதண்டு நடுவாம்நாடி
துள்ளியே வழிவிலகி உயிராம்ஜீவன்
துடிநாடி தனைவிட்டு உயிர்விலகி
தெள்ளியே வழிவிலகிப் பாதைதப்பி
சிவனிருப் பிடம்விட்டுப் போயினரே. (906)

போயினு டல்விட்டுப் போகுமார்க்கம்
புகழான பிராணனுட னுயிருமாகும்
வாயினுல் சொல்லவென்றுல் தலைவெடிக்கும்
வகையோடே சுருக்கியே சொல்லக்கேளு
ஆயிசொன்ன படிதானும் உடலைவிட்டு
ஐவகையாய்த் தான்பிரியும் பிராணன்றானும்
காயிருந்து பழம்பழுத்த வாறுபோல
கனிந்துகிர்ந்த பழம்போலே மூலம்போமே. (907)

போமேதான் மதிகதிரு மேவலுத்து
புருவநடு மூக்குத்தண்டு உச்சியேறி
வாமேதா னிளைத்துவிடில் உச்சிமூக்கு
மரணவாய் மூடிவதென்ன வகைமோசந்தான்
ஆமேதான் இடதுகைப் புரமேசாய்த்தால்
அப்பனே வலப்புரமப் படியேசாய்த்தால்
தேமேதா னிப்படியே பிராணவாயு
திரும்பிவழி விலகிப்போம் அபானன்றானே. (908)

போமேதான் மண்டைஉச்சி மூளைதன்னில்
புகுந்தவிடம் பிராணனது மூளைசிக்கித்
தாமேதான் கீழிறங்க விடமாட்டாது
தவறியது விடுமாகில் மோசமெய்தும்
காமேதான் பிராணரந்திரங் கெட்டியாகில்
கனிவாக வேபிடிக்கும் பிராணன்போகா
ஆமேதான் பிராணமென்ற பிராணன்சொக்கும்
அப்படியே உள்ளுடலில் அமர்ந்துபோமே. (909)

அமர்ந்துபோம் நரம்பின்வழி பிராணவாய்வு
மணியணியாய் அலியென்னும் அலையைப்போலே
அமர்ந்துபோம் அலைத்தலைத்து உடலுள்ளேதான்
அங்கமெல்லாம் பரவிநிற்கும் பிராணன்றானும்
அமர்ந்துமே பின்னிழம்பி தோளின்மேலே
அலமோதி உயிரேறி அக்கேகின்று
அமர்ந்துமே நின்றுவிடும் பிடறியேறும்
அப்போது கிழ்விழுந்து சொக்கிப்போமே. (910)

போமேதா னிப்படியே மரணச்சாவு
பொக்கிஷத்தில் வைத்தபொருள் போலேயாகும்
போமேதான் பின்னமுண்டு மரணமார்க்கம்
புகழ்மிகுத்த நோய்பிணிக ளானதெல்லாம்
போமேதான் நரம்பெலும்புத் தசைபசைதோல்
பூரணமாய் வியாதிகளின் மெலிவுநாளும்
போமேதான் வாதபித்த சேத்துமத்தின்
புலன்நாடி குறைந்துவிட்டால் நாடிபோமே. (911)

நாடியே உள்மூலஞ் சொல்லுவேன்கேள்
நாபியடி பீஷமூலம் கோஷபீஷம்
பாடியே தொப்புள்வழி வட்டஞ்சுத்தி
பார்த்தாக்கா லிருதயமாம் பள்ளந்தன்னில்
ஆடியே மேலெழும்பித் தொண்டைவந்து
அத்தரங்கச் சுத்தியதாம் வாயண்ணுக்கு
ஓடியே மேலெழும்பி மூக்கில்வந்தே
உற்றயிரு கலையாகித் தேயும்பாரே. (912)

பாரேநீ யிப்படியே மூன்றுநாடி
பரிவான பொம்மைபோல் வாசிவீசி
நேரேதான் மதியுடனே கதிருமாகி
நேர்மையுடன் மேலாகச் சுழினையாகி
சிரேதா னிருகலையும் போயிப்போயி
சிறப்பான மூக்கின்வழித் தண்டின்வாசல்
தானேதான் வந்துவந்து போகும்போது
தமர்வாசல் வழிநாடி ஏங்குந்தானே. (913)

ஏங்குமே யிச்சீவன் நோயுமில்லை
இயல்பாக யிதறிந்தோர் சாகமாட்டார்
சாங்காலந் தான்தோற்றும் மரணமாகார்
தானறிவார் உயிரறிவார் சரீரந்தோற்றும்
போங்காலம் வந்தாக்கால் முன்னேகண்டு
புலனிருக்கு மிடங்கண்டு ஓடுங்கிக்கொள்வார்
ஆங்கால மறிந்தவர்கள் அடங்கிநிற்பார்
அதுவறிந்து கண்டோர்கள் சுடார்கள்பாரே: (914)

கண்டோர்கள் உடலுயிரும் பிரித்தக்கொள்வர்
கருத்தூடனே யிரண்டையுமே ஒன்றுய்ச்சேர்ப்பர்
விண்டோமே நாமறிந்து கொண்டமார்க்கம்
விபரமதை இதன்முன்னே சொல்லிவைத்தோம்
அண்டோமே நாமறிந்து கண்டுகொள்ள
ஹரிஓம் நமாவென்று யிருத்தியூத
பண்டோமே சித்தர்முனி ரிஷிகள்தானும்
பகுத்தெழுதி ஆதியிலே வைத்தார்பாரே. (915)

மூவாண்டு மாற்கம்.

ஆதியாம் சரநூலோ உடலின்சாரம்
அதுவறிந்து உடலறியும் விளக்கந்தன்னை
பேதியா தேயறிந்து கொண்டோன்சித்தன்
பேரின்ப மதையறிந்து நடத்தவேணும்
சாதியாம் மூவாண்டு முன்சொல்மார்க்கம்
தனையறிந்து நீயிருந்து கார்த்திருந்தே
வாதியா தேயிருந்து சொல்லிக்கேட்டு
வாங்கியே தீர்க்கமாய்ச் செய்குவாயே. (916)

தீர்க்கமாய்ச் செய்வதற்குப் புத்திவேணும்
சிவசிவா உயிரொடுங்குங் காலந்தோணா
மார்க்கந்தான் யார்சொல்வார் உடலிக்கார்ப்போர்
வாயாலே சொல்லார்கள் நூல்தான்சொல்லும்
யார்க்குந்தா னிதுபோல வெளியாய்த்தானே
அன்விஷ்ணு பிர்மாதி யாருஞ்சொல்லார்
பார்க்குள்ளே வெளியாகச் சொல்லினாலும்
பண்பாக இடிவீழும் தலையிற்றானே. (917)

தானென்ற உயிரோங்குங் காலந்தானும்
தவஞ்செய்த ரிஷிகளுக்குத் தானேதோணும்
வானென்ற மண்டைதனில் வாசிமூக்கு
வலமிடமாய் வருகிறதை மேலேதாக்கி
வனென்று கேட்கிறதோர் வாசிமூச்சு
இதுசுத்தி வட்டம்உச்சி யேறிஊஞ்சல்
தானென்று ஆடையிலே நூறுதாண்டும்
தாண்டியது இலேத்ததனல் சமாதியாமே. (918)

ஆமேதான் சமாதியது உச்சிவட்டம்
அசைந்ததுவும் மேற்சுற்றி யாடித்தேய்ந்து
போமேதான் பிராணன்வலுக் குறைந்துநிற்கும்
புகழ்நாடி ரம்பிலுக்கும் வலுத்தப்போகும்
தாமேதான் வலுக்குறைந்த பிராணன்றானும்
சமாதியா டங்கியது உறைந்துநிற்கும்
வேமேதா னிப்படியே பிராணன்நிற்க
விதமறிந்த சித்தர்களுங் குகைசென்றாரே. (919)

சென்றுரே சித்தர்களுங் குவடுக்குள்ளே
தீரமுடன் தானிருந்தார் கோடிகாலம்
கின்றதொரு சித்தர்களும் கற்பங்கொண்டு
நீடித்து கெவனமது சென்றரப்போ
அன்றுவந்த சித்தர்களு மிதனைக்கண்டு
அதிசயங்கள் தான்பேசி யிருக்கும்போது
என்றுமே அழியாது தேகமென்று
இனிமையுடன் அறிவுள்ளோர் விளக்கந்தானே. (920)

அறிவுள்ளோர் அறிவினுட ஆதியந்தம்
அடிநடுவும் முடிவுபெறக் கருதவார்கள்
அறிவுள்ளோர் கருத்துடனே யூஞ்செய்து
ஆதியந்தந் தான்தெரிந்து நடந்துகொள்வார்
அறிவுள்ளோர் கற்பத்தால் சித்திபெற்று
அவன்பரம பதத்தினிலே யிருக்கலாகும்
அறிவுள்ளோ ரிதற்குமேல் புளிகளுண்டு
அவர்தேகஞ் சித்திபெற்று முனியாவாரே. (921)

முனிபாவார் பிரமரிஷி பதத்தைக்காண்பார்
மூவுலக முந்தெரிவார் கெவுனஞ்செல்வார்
தனிவானோர் ஓரிடத்தி லிருக்கமாட்டார்
தாரணியில் ராஜரிஷி யாவார்பாரு
பணிவாக ஒருவரோ டிணங்கமாட்டார்
பத்திமுத்தி தன்னையுமே காட்டுவார்கள்
துணிவாகச் சகலருக்கும் அஞ்சமாட்டார்
சூட்சாதி சூட்சமெல்லாம் பேசுவாரே. (922)

சிவனிடஞ் சொல்லுதல்.

பேச்சப்பா வேலவரும் தொக்கித்தக்கி
பிரணயங்கள் முடிந்தவுட னிவடப்வந்தார்
மூச்சப்பா யென்னவென்று வினவிக்கேட்டேன்
மூதறிவி னோடெனக்கு முறையைச்சொன்னர்
வாச்சப்பா யிருவென்று யுகங்கள்தோறும்
மறைத்தான் வெளியேறும் வகையுஞ்சொன்னேன்
காச்சப்பா யிருவென்று யிருத்தியென்னே
கருதிவந்த விபரமெல்லாங் கேட்டிட்டாரே. (923)

கேட்டவுடன் பிரமரந் திரமுஞ்சொன்னேன்
இருபையுடன் யுகமுடிவு முறையுஞ்சொன்னேன்
நாட்டமுடன் மனுக்களுண்டாம் வகையுஞ்சொன்னேன்
நன்மையுட னதுமடியும் விபரஞ்சொன்னேன்
தேட்டமுட னெப்போது மிருப்பதற்குத்
தெவியுட பூரணத்தைத் தெரியச்சொன்னேன்
வாட்டமிலா தேகேட்டுக் குமரனுந்தான்
மலைமேலே சென்றுவிட்டான் மார்க்கத்தோடே. (924)

கற்பம்.

மார்க்கமென்ன மலைகளிலே திரிந்தானப்பா
வகையோடே வுந்தனுக்குச் சொல்லிவிட்டேன்
ஏர்க்கையுட னெல்லாமுங் கேட்டுக்கொண்டாய்
இனியென்ன கேட்கனுமோ கேளுகேளு
சேர்க்கையுள்ள வசிட்டருமப் போதெழுந்து
சிறப்பாகப் புசண்டரிடம் கற்பந்தன்னை
பார்க்கவே சொலவேணு மென்றுகேட்கப்
பண்பாக மனதுகந்து சொல்லுவாரே. (925)

சொல்லுவேன் கற்பமது இரண்டதாகும்
சுகசரீரந் தவறாது இருப்பதற்கு
நல்லதொரு கற்பமொன்று வாலிபூசை
நலமான ஞானகற்ப மொன்றதாகும்
எல்லவற்குங் கிட்டாது இரண்டுந்தானும்
இயல்புடைய முனிரிஷிக்குக் கிட்டுங்கிட்டும்
வல்லவர்கள் கற்பமது கொள்ளுவார்கள்
மற்றவர்க ளொன்றுமே அறியார்பாரே. (926)

பாரப்பா அகாரந்தான் முதலாங்கற்பம்
பரிவாக உகாரந்தா னிரண்டாங்கற்பம்
கூரப்பா மகாரந்தான் மூன்றுங்கற்பம்
கூசமா யிருந்துசெய்வாய் சிகாரகற்பம்
சீரப்பா இக்கான்கு கற்பந்தானும்
தீர்க்கமுட னுண்டவனே சித்தன்சித்தன்
வீரப்பா பன்னிரண்டு வருடஞ்செல்லும்
மூப்பமுள்ள கற்பமது முடியுந்தானே. (927)

கற்பமென்று அண்டத்தைச் சுற்றவேண்டாம்
கனிவாக உன்னிடத்தி லிருக்குதப்பா
அற்பமல்ல அண்டபிண்ட மதுதானுகும்
அடைவாகப் பார்த்தாக்கால் தோணுதப்பா
உற்பனமாய் உன்னுக்குள் முடிந்திருக்கும்
உகாரகற்பம் உன்னுக்கு ளிருக்கும்போது
யிற்பனமாய் வேறுகற்பந் தேடவேண்டாம்
மேலான கற்பமது அகாரந்தானே. (928)

அகாரமாங் கற்பமது தெரியவென்றுல்
அன்போடு சொல்லுகிறேன் கன்றுய்க்கேளு
ஈகாரமென்ற வாலையைப்பூ சிக்கவேணும்
நலமாக அறிந்துகொள்ளப் புத்திவேணும்
உகாரகற்பம் சத்தியைப் பூசிக்கவேணும்
உண்மையுள்ள மனேன்மணியைப் பூசைசெய்வாய்
மகாரகற்ப மடைவதற்கு யோகம்வேணும்
வாய்த்தபின்பு சிகாரகற்ப முடியுந்தானே. (929)

முடியுவது யெப்படியென் றெனனைக்கேட்டாய்
முக்யமுள்ள கற்பமதின் முறையைச்சொன்னேன்
அடிகடு முடியென்று மூன்றுபாகம்
அதிலேதான் கடுவாகும் கற்பநேர்மை
திடியாக வேதிறத்து சொல்லக்கூடா
சொல்லினுல் தலைவெடிக்கு மென்றுசித்தர்
படியாகச் சாபமது கொடுத்ததாலே
பரிவாகச் சித்தர்களுஞ் சொல்லமாட்டார். (930)

மாட்டார்கள் சொல்லதனு லறிந்துகொள்வாய்
மாராட்ட மாகவேதான் பெயர்வைத்தார்கள்
காட்டார்கள் நீயறிந்து கொள்வாயப்பா
கருத்தாகப் பார்த்தாக்கால் தோணுந்தோணும்
பாட்டாகப் பாடிவிட்டார் கருச்சொல்லாமல்
பண்பான கருவதுவுஞ் சொல்லக்கேளு
நாட்டார்க ளறியார்கள் கம்பமாகும்
நலமான நந்திருப் பிடமாம்பாரே. (931)

கற்பங் கொள்ளும் விபரம்.

ஈந்திகொலுக் கண்டவனே ஞானியாகும்
ஈடுவணையைப் பார்த்தவனே சித்தனாகும்
அந்திசந்தி கொண்டவனே கற்பதேகி
ஆத்தாளைப் பூசித்தோன் முனிதானாகும்
மூன்றிவர்த்த தைவிடுத்து ஈடுவேநின்று
மூக்காலும் வாயில்மந் திரஞ்செபித்து
சிந்தித்துக் காலையிலும் மாலைநேரம்
சிறப்புடனே கொண்டாக்கால் சித்தியாமே. (932)

சித்தியென்ன அகாரகம்ப மின்னதென்று
தெரிந்துகொண்டால் வாலையவள் கிருபைசெய்வாள்
முத்திபெற ஈந்திகொலுக் கண்டுகொண்டால்
முடிவான ஈடுவணையைக் காணவேணும்
மத்திபமா யிருக்குகின்ற குண்டலியின்
வலிமைகண்டு பிர்மரந் திரமறிந்து
புத்தியுடன் நாதவிந்து வாங்கிக்கொண்டு
புகழாகக் கற்பமது கொள்வாய்நீயே. (933)

கற்பமது காலையிலும் மாலைநேரம்
கருதியே சாப்பிட்டுக் கொண்டுவந்து
விற்பனமாய் மாதம்பன்னி ரெண்டுஞ்செல்ல
விரும்பியே கற்பம்நீ கொண்டுவந்து
அற்புதமாய்க் கற்பமது கொண்டதாலே
அதில்வருங் குற்றங்கள் நீக்கிக்கொண்டு
சற்பணியில் லாவருடம் பன்னிரண்டு
தான்கொள்ளச் சித்தனு யாவான்பாரே. (934)

சித்தமுடன் மாதமொன்று கொண்டாயானால்
சிறப்புடனே மேல்கால்கள் வலியெடுக்கும்
பத்தமுடன் மாதம்ரெண்டில் கூடுண்டாகும்
பதமாக மலங்கழியும் பேதியுண்டாம்
மத்தபடி மாதமூன் றுகிற்றனும்
வாய்வேகும் அபானம்வரை கூடுண்டாகும்
அத்தனரு ளாலேதான் மாதம்நான்கில்
அசதிவருங் கால்கைகள் நோகுந்தானே. (935)

தானென்ற ஐந்துதிங்க ளாகுமாகில்
தன்வயிறு புண்ணுதம் ஆசனமும்வேகும்
கானென்ற பெண்மாய்கை யதிகமாகும்
கவலைவிடும் சிறுநீரு கடுத்துவீழும்
வேனென்ற விந்துவிழும் நினைவுமாறும்
முக்யமுள்ள இடங்களெல்லாம் வெந்துபோகும்
கோனென்ற ஐந்துதிங்கள் வெகுபாடாகும்
குவலையத்திற் வெயிற்படா திருந்துபாரே. (936)

பாரேதா னுறுதிங்கள் முடிந்துதானால்
பண்பாக வயிறுதான் பசியுண்டாகும்
நேரேதான் பசிவந்து அமர்ந்துபோகும்
கோர்த்தியாய்ப் புளியேப்ப மிகவுண்டாகும்
சீரேதான் உடல்நோகும் கடைகளோயும்
சிறப்பாக வேயிதற்குக் காரசாரம்
காரேதான் சேர்த்துவர வேணுங்கண்டாய்
கருவான புளிகளையுங் கருதிக்கொள்ளே. (937)

கருதியதோர் புளிதனையும் கொண்டாயானால்
கனல்யோகம் ஏழுதிங்கள் கொண்டாயானால்
பெருகிய திமிரேரும் அசதிகொள்ளும்
போனஉடம் பெல்லாம் வெளுத்துக்காணும்
அருதியாய்ப் புளியேப்ப மிகவுண்டாகும்
அன்பாகப் பெண்கள்மே லாசைகொள்ளும்
சிறுவாச லடிவயறு மிகவும்நோகும்
சிற்பரையைப் பூசிக்கத் திருந்தானே. (938)

தீருமது பெட்டான திங்களானால்
சிறப்பான தேகமதி லொளிவுண்டாகும்
பாருமீ எலும்பிலுள்ள மூளைபோகும்
பசுமையுள்ள எலும்பின்வழி சுவாசம்போகும்
சீருடனே புளிதனையே கொள்ளவேணும்
தேறுதற்கு மேலெல்லாந் துவாலையோடு
கேருடைய வாசமதை யெண்ணவேண்டாம்
கேர்மையுடன் குணமாகு மின்னுங்கேளே. (939)

இன்னும்நான் சொல்லுகிறேன் பரையின்பூசை
இயல்பாக இருவேளை கடத்தவேணும்
மன்னவனும் நீயாவாய் குய்யம்வேகும்
மயங்காதே தடைகளெல்லாம் விருவிருக்கும்
கன்னயமாய்ச் சோதிவொளி காணும்பின்பு
கலமான தூரவெளிக் கம்பக்தோணும்
என்னவென்று சொல்லுவேனுன் சித்துக்காணும்
இனிமையுடன் ஒன்பதாக் திங்கள்கேளே. (940)

திங்களா மொன்பதினில் வயிறுநோகும்
திறமையுள்ள குண்டலியின் முறப்பதாகும்
மங்களமாய்த் தேகமது மினுமினுக்கும்
மயக்கமுடன் நியக்கமா மசதிகாணும்
தங்கம்போல் தேகமது யிருக்கும்பாரு
சரியாகப் பசும்பாலைச் சேர்த்துக்கொள்ளு
கங்கைதனை மறவாமல் பூசைசெய்து
காயத்திரி செபஞ்செய்து இருந்துபாரே. (941)

இருந்துபார் பத்தான திங்கள்வந்தால்
எப்பொழுதும் ஆகாரம் வேண்டாதாகும்
அருந்துவது பாலாகும் பேதியாகும்
அன்பான பொருமலுண்டும் அசதிகாணும்
வருந்தாமல் நீயிருந்து வருவாயானால்
மனம்புத்தி அகங்கார மொடுங்கிப்போகும்
திருந்தவே அதிகமதாய்ச் சூடுண்டாகும்
தேகமதில் நெய்போல வருகுந்தானே. (942)

வருகுமே பன்னென்றுத் திங்கள்தன்னில்
பதபாக மாகமண்டை யிடிக்கும்பாரு
குருவாகப் புளிதனையும் கொண்டாயானால்
கூத்தனுமே உன்னிடத்தி லணுகமாட்டான்
திருவாகத் தனஞ்செயனு மெழுந்திருப்பான்
சிறப்பாகப் பசுபூசை விடாமற்செய்வாய்
அருவான வேதமந்திர மிதுதானுரும்
ஆச்சரியம் பன்னிரண்டு மாதங்கேளே. (943)

மாதமப்பா பன்னிரண்டு வந்ததானால்
மகத்தான சந்துவலி வருகும்பின்பு
சேதம்வரா தொருகாலும் சீதம்வீழும்
செழுமையுள்ள கைகா லசதிகாணும்
வேதமெனும் பூரணத்தைக் கைக்கொண்டாக்கால்
வெகுசுழிவாய்ப் பறக்கும்பார் வியாதிதானும்
ஆதவன்போல் தேகமது மிருக்கும்பின்பு
ஆச்சரிய மெத்தவுண்டு வருடமாச்சே. (944)

வருடமது முடிந்தவுடன் புளிதானுண்ண
வாய்க்குமது வேறென்றில் மனதுகாடா
குருவருளால் காயகற்ப முண்டுவந்தால்
கொடிதான எமனுமே ஒடிப்போவான்
திருவருளா லெல்லாமுஞ் சித்தியாகும்
செய்பாகங் கைபாகந் தெரிந்துகொள்வாய்
அருணன்போ லென்னுளு மிருக்கலாகும்
அம்புவியில் சித்தரென்று சொல்லுவாரே. (945)

சொல்லுவார் இருவருட முடிந்ததானால்
சூட்சாதி சூட்சமெல்லாந் தெரிந்துகொள்வான்
வெல்லுவான் எமனையுந்தான் ஞானியாவான்
மெஞ்ஞானி யிவனென்ற பேர்பெற்றுய்வான்
கல்லுப்போற் றேகமது இறுகிப்போகும்
கனத்ததொரு எலும்புகளில் வாசியேறும்
புல்லுப்போல் ரசம்பெல்லாம் வலுத்தப்போகும்
புதுமையுள்ள வாலையவள் பேசுவாளே. (946)

பேசிடுவாள் மூன்றுவரு டங்களானால்
பிரபல்ய மாயிருப்பான் சவம்போல்வாழ்வான்
தூசில்லா தேயிருப்பான் ஒருவரோடும்
தூஷணமா யொருகாலும் பேசமாட்டான்
ஆசில்லாக் காரியத்தை நினைக்கமாட்டான்
அருமையொடு வாய்திறந்து சொல்லமாட்டான்
காசினுனி வட்டமதில் நோக்கங்கொள்வான்
காலுவரு டங்களதின் முறையைக்கேளே. (947)

செய்கையென்ன காலுவரு டங்களாகில்
தினந்தினமும் யோகத்தின் மேலிருப்பான்
அய்யமது நீங்கிவிடும் உடம்புநோகும்
ஆத்தாளைப் பூசிக்க அதுவும்போகும்
வெய்யலிலே ஒருகாலுந் திரியமாட்டான்
வேதாந்தத் தாய்பதத்தைப் பூசித்துய்வான்
உய்யும்வகை யாவருக்குங் காட்டமாட்டான்
உற்றஐந்தாம் வருடமதி லுண்மைபாரே. (948)

உண்மையுடன் யாவருக்கும் நடந்துகொள்வான்
உயர்வான காரியத்தைச் செய்துபார்ப்பான்
தன்மையுடன் வகாரமூத லெல்லாஞ்செய்வான்
தனித்திருப்பான் நரைதிரையு மற்றுப்போகும்
நன்மையுடன் மலிவாச விருப்பங்கொள்வான்
ஞானிலத்தோர் கண்ணுக்குத் தோணமாட்டான்
பன்மையுடன் வெறியன்போல் திரிவான்பின்பு
பற்றுதலாய் ஆறுவரு டங்கள்கேளே. (949)

கேளப்பா ஆறுவரு டங்களாகில்
கெடியாக மலசலங்க ளும்பேதிக்கும்
வாளப்பா கெவுனத்துக் குறுதியாகும்
வருகுமே அமுதமது பெருகிக்காணும்
காளப்பா அமுதமது கொள்ளவேணும்
நன்மையுடன் பூரணத்தைப் பணியவேணும்
ஆளப்பா தேசமெல்லா முன்னதாகும்
அவனிதனில் பேர்பெற்ற சித்தன்றானே. (950)

சித்தனென்ற ஏழுவரு டங்களானால்
சிறுபிள்ளை தானாகும் மதியாகும்
அத்தனுட பாதமதைப் பூசைசெய்யும்
அம்பிகையாம் வாலைதனைப் போற்றிவாழும்
பித்தனென்றுஞ் சொல்வார்கள் பித்தனல்ல
பெரும்பேற்றை யடைந்ததொரு சித்தனாகும்
முத்தனென்று பேருபெற வெகுகாள்செல்லும்
முடிவாக யெட்டுவரு டங்கள்தானே. (951)

தானேகேள் எட்டுவரு டங்களாகில்
தனியான குகைதனிலே யிருக்கச்செய்யும்
மானுர்க ளாசையெல்லாம் வெறுத்துக்காணும்
மானிலத்துப் பொருள்களெல்லா மசகமாகும்
கோனுக வேயிருந்து பூசித்துய்வான்
குறிப்பாக அமுதமுடன் பாலும்விட்டு
தேனுக வேஅருந்தித் திரிவான்பின்பு
சிவனுக்குச் சிவனு யிருந்துய்வானே. (952)

உய்வானே ஒன்பதுதான் வருடஞ்சென்றால்
ஒருவரையுஞ் சட்டைசெய்யான் ஓடுங்கிப்போவான்
செய்காரி யங்களையுந் தேடமாட்டான்
தேவிபதம் பூசிக்க மறக்கமாட்டான்
மெய்வாய்மை தவறியே நடக்கமாட்டான்
விரும்பியொரு காரியத்தைச் செய்யமாட்டான்
எய்யாமல் காதவழி நடப்பான்பின்னும்
இயல்பாக வாசிவச மாகுந்தானே. (953)

ஆகுமே யிரைந்து வருடமாகில்
அவனமுரி லோகத்திற் பழுக்குமப்பா
எகுமே தேகசட்டை யொன்றுவாங்கும்
இனிமையுள்ள தேகமது பொன்போலாகும்
பாகமுடன் தேகவுப்பு மாறிப்போகும்
பதபாக மாகவே யிருக்கலாகும்
யோகமது பூரணந்தா னறியவேணும்
உயிர்பதினென் முண்டினுட பாகங்கேளே. (954)

வரிசையது யேதென்றால் சித்தனுவான்
வாயினற் சொன்னசொல்லு பலிக்கவேணும்
உரிசையுட னறுவகைகள் வேண்டாதாகும்
உயர்ஞான கேசரங்கள் தெரிவான்பின்னும்
சரிசமமாய் யாவரையும் நினைப்பான்யோக
சாதனமே கைக்கொள்வான் பெற்றோரோடு
உரியதொரு சனங்களுட வாஞ்சைதள்ளி
உம்பர்களோ டிணங்கியே வாழ்வான்பாரே. (955)

இணக்கமுடன் பன்னிரண்டு வருடமானால்
எப்பொழுதும் அழியாத தேகமாகும்
சணப்பொழுது வெளியேறித் திரியமாட்டான்
சவ்வாது மணக்குமவன் தேகமெல்லாம்
குணமாக நரைமயிருங் கருத்துப்போகும்
குழந்தைபோல் பதினாறு வயதுமாகும்
மணமுடிக்கு மாப்பிளைபோ லழகுண்டாகும்
மகிழ்வாகக் குகைகளிலே வாழ்வான்பாரே. (956)

காயசித்தியின் பெருமை.

பாரப்பா பன்னிரண்டு முடிந்ததானால்
பாலகன்போ லொருவயது தானுமாச்சு
நேரப்பா யிருபத்தி நான்குசென்றால்
நேர்மையுள்ள வயதுமீ ரண்டதாகும்
சிரப்பா மூப்பத்தி யாறுமானால்
சிறப்பாக மூன்றுவய தாச்சுதப்போ
தாரப்பா பன்னிரண்டுக் கோர்வயதாய்த்
தான்பெருக்கி வயததுவை எண்ணிக்கொள்ளே. (957)

எண்ணியே பார்த்துக்கோ வயதுநூறில்
இவன்றனுங் கூடுவிட்டுக் கூடுபாய்வான்
உண்ணியே மூன்றுலகம் போய்வருவான்
உற்றதொரு இடங்களிலே இருந்துவாழ்வான்
திண்ணியனாய் அஷ்டகர்மத் தொழில்கள்யாவும்
செய்வானே அறுபத்து நான்குசித்தும்
புண்ணியனு மிவன்றனே யென்போலாவான்
புகழான பேருபெற்று வாழ்வான்பாரே. (958)

கற்ப முண்ணுங்கால் பத்தியம்.

பாரேதான் கற்புமுண்ணுங் காலத்தன்னில்
பத்தியங்கள் தான்கேளு பசுவின்பாலும்
சிரேதான் பாசிப்பயர் சோறுஞ்சேரு
சிற்றணவு மாமிசமு மச்சமாகா
நேரேதான் கடுகுநல் லெண்ணெய்யாகா
நேர்மையுடன் முழுகுதற்குத் தேங்காய்சேரு
வேறேதா னொன்றையுமே சேர்க்கவேண்டாம்
வெகுசருக்காய்ப் பத்தியத்தைக் கார்ப்பாய்நீயே. (959)

பத்தியமா யிருப்பதற்குச் சொல்லிவிட்டேன்
பரிவாக ஆணுவங்கள் மிகவுண்டாகும்
சித்தியமு மாதர்களே நினைக்கவேண்டாம்
நேராக வருடமொன்று மட்டும்பாவி
சித்திபெற்று வருடமொன்று முடிந்துதானால்
சீரான தாயாக நினைத்துக்கொள்ளு
முத்திபெற வேண்டுதற்கு அவள்தான்வேண்டும்
முடிவான காரியத்தைப் பின்சொன்னேனே. (960)

சொன்னேன்பார் கற்பமுண்ண வயதுகேளு
சுகமாக யிருபதுக்கு மேலேதானும்
நன்னயமாய்க் கற்பமுண்டால் நல்லதாகும்
நலமாக முப்பதுக்குள் மிகவும்நன்று
கன்னலுடன் நாற்பதுக்குள் கற்பங்கொண்டால்
கருத்துமிக வுண்டாகும் பலிதமாகும்
சின்னலவு வாராது அன்பதுக்குள்
தேகசித்தி யாகுமது தடையில்லாதே. (961)

இல்லாதே அறுபதுக்குள் கற்பங்கொண்டால்
இனிமையுள்ள தேகமது பொன்னதாகும்
அல்லாது யெழுபதுக்குள் கற்பங்கொண்டால்
அவனிதனில் நூறுவய திருப்பானப்பா
எல்லார்க்குங் கிட்டாது கற்பந்தானும்
எழுபதுக்கு மேலானுல் பலனிராது
நல்லாகச் சொல்லிவிட்டேன் கற்பநேர்மை
நானிலத்தோர் தங்களுக்குத் தெரியொண்ணாதே. (962)

தெரியவே சொல்லினேன் கற்பம்வேறு
சீராக முப்பூவும் வேறேயென்று
அரியவே கற்பமது கொள்ளாவிட்டால்
அவனிதனில் வாதமுப்பு முடியாதப்பா
உரியதொரு கற்பமுப்பு முடிந்துதானால்
உலோகங்க ளெல்லாந்தான் பழுத்துப்போகும்
கரியமா லுந்தியிலே பூத்தோன்றன்னைக்
கைக்கொண்டால் வாதமுப்பு முடியும்பாரே. (963)

வாதமுப்பு மூடிந்தவுடன் ஞானகற்பம்
வகையுடனே கண்டறிந்து செய்துவந்தால்
சேதமது வாராது கெவுனம்போவான்
சிறப்பான கூடுவிட்டுக் கூடும்பாய்வான்
வேதமது வறிந்தோனே ரிஷியுமாவான்
வியப்பான பாஷாண மெல்லாம்தீரும்
சூதமது கட்டிவிடுங் குளிகையாகும்
சுண்ணபற்ப செந்தூர மாகும்பாரே. (964)

ஆகுமென்ற ஞானகற்ப முடிந்துதானால்
அவனிதனில் பேர்பெற்ற ரிஷியேயாவான்
ஏகுமென்ற வயித்தியமுப்பு முடிவதற்கு
இயல்பான பூரீரும் அண்டக்கல்லும்
பாகமுடன் சுத்தகங்கை யாலேதீட்சை
பண்ணினால் வயித்தியமுப்பு முடிந்துபோகும்
தாகமுடன் மூன்றுமுப்பும் முடியவேணும்
சாகாத்தி லுப்பெடுத்து தனியாய்ப்பாரே. (965)

தனியாக வேயிருந்து அமுரிவாங்கித்
தக்கபடி அதைக்குறுக்கி கல்லுப்பாக்கு
கனிவாக உப்பெடுக்கும் வகையேதென்றால்
கரும்பின்ரசம் கற்கண்டு கட்டியாச்சு
இனிதான உப்புமிப் படியேசெய்தால்
இயல்பான கற்கட்டி உப்புமாகும்
பனிபோகக் கல்லுப்பு இதுதானாகும்
பார்தனிலே கொம்பானைக் கல்லென்பாரே. (966)

கல்லான உப்பெடுத்துப் பொன்னதாக்கிக்
கருமலீபோ லுண்டாக்கி விட்டாரப்பா
எல்லார்க்கு மாகாது மகரிஷிக்கு
எய்துமல்லால் மற்றோர்க்கு எய்யாதப்பா
கல்லபிள்ளை யாகவே சித்தர்க்கெல்லாம்
நானிருந்த வகைவிபரஞ் சொல்லுவேன்கேள்
வல்லவனுய்க் கூடுவிட்டுக் கூடுபாய்வேன்
மகாகோடி யுகம்வரைக்கு மிருந்திட்டேனே. (967)

இருந்திட்ட வகைவிபர மேதென்றுக்கால்
இயல்பான கிரேதாயுகந் திரேதாயுகந்தான்
திருந்தவே துவாபரமும் கலியுகந்தான்
சிறப்பான யுகம்காலு மனுடரூபம்
பொருந்தவே காலுயுக முடிந்துபின்னல்
புகழாகக் காக்கையுருக் கொண்டெழுந்து
குருந்தநிழல் விருட்சத்தின் மேலிருந்தேன்
கொடிதான பிரளயமு முடிந்தபின்பே. (968)

பின்பாக சிவனயனு மாலும்வந்தார்
பிரபலமாய் மூவரையும் வாங்களென்று
தென்பாக மூவர்களே தங்களைத்தான்
தெரிசித்தேன் கோடியுக மாகத்தானும்
அன்பாக இவ்விருட்சத் திருந்துகொண்டு
அடைவாக முடிவுயுகந் தோறும்பார்த்தேன்
முன்பாக இப்படியே சொன்னதற்கு
மூவர்களுங் குருஞ்சிரிப்புக் கொண்டார்பாரே. (969)

குருஞ்சிரிப்புக் கொண்டதென்ன வென்றுகேட்க
குணமாக மூவருந்தான் சொல்லுவார்கள்
வஞ்சகங்க ளில்லாமல் சொல்லுகின்றோம்
மதத்தான மூவருந்தான் யுகமுடிவில்
பஞ்சுபோல் பிரளயகா லத்திலேதான்
பதுங்கியே மறைந்திருந்து வெளியேவந்தோம்
துஞ்சுத லில்லாமல்நீர் பிரளயத்தில்
தடுக்காயிம் மரத்திருந்த தருமைதானே. (970)

அருமையென்று சொல்லிவிட்டு மூவர்போனர்
அவர்களைத் தேடிதரமோ மறைந்துவந்தார்
வெருமையுடன் சொல்லவில்லை யவர்கள்பேச்சை
விட்டுவிடு கோடியுகம் பார்த்தேனப்பா
பெருமையுடன் சொன்னதல்ல பிரளயத்தின்
பின்புவந்து கண்டவர்க்கே தெரியுமப்பா
உரிமையுடன் வசிஷ்டரே யுனக்குத்தோண
உரைத்தேனே யல்லாது பின்சொல்லேனே. (971)

காரசாரக்குரு மூப்பு.

சொல்லவே காரசா ரத்தின்மூப்பு
சுருக்கமாய்ச் சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
மெல்லவே அண்டக்கல் வெள்ளைக்கல்லு
வெகுசுருக்காய்க் கொண்டுவந்து உரலிலிட்டு
கல்லவே மாவாக்கி இடித்துக்கொண்டு
கரியில்லாச் சட்டியிலே தானும்போட்டு
கல்லதொரு அழுரிதனை முங்கவிட்டு
நலமாக நாளொன்று ஊறவைத்தே. (972)

ஊறவைத்து மூத்துப்போற் தெளிவிருத்து
ஊத்திவிட்டு வேறழுரி தானும்விட்டு
தேறவே யிதுபோல பத்துநாளுஞ்
செய்தெடுத்து ரவியில்வைக்கப் பொருமிரீரும்
ஆரவே தானெடுத்துக் கன்னிச்சாற்றில்
அடைவாக முங்கவிட்டு ரவியிலேதான்
கோரவே காற்றுகளும் படாமல்வைக்க
நேர்த்தியுடன் நூன்பார்க்க உப்பேயாகும். (973)

உப்பானதை யெடுத்துப் பிங்கானிட்டு
உரிமையுடன் பழச்சாற்றைச் சரியாய்விட்டு
தப்பாம லடுப்பேத்தித் தீபமாகத்
தானெரிக்க எண்ணெய்க்கிச் சுண்ணமாகும்
இப்பாரி லுள்ளோர்க்குத் தெரியாமற்றான்
எடுத்துவைப்பாய் சாடிதனில் குருவுமாச்சு
செப்பாதே யொருவருக்கும் வாதமூப்பு
தீரமுடன் புகைச்சரக்கு நீரும்பாரே. (974)

புகைச்சரக்காம் பாஷாண மெல்லாத்துக்கும்
புகழான வுப்பெடுத்து வாய்தீர்விட்டு
நகையாமற் சுத்திசெய்த பாஷாணத்தில்
நலமாக வேதடவிக் காயவைத்து
தகையிலா தேயெடுத்து வழக்கம்போல
தக்கயெரு வதனிலிட்டுப் புடமும்போட்டால்
பகையாதே சரக்கெல்லாம் நீறிப்போகும்
பக்குவமாய்த் தானெடுத்து வைத்துக்கொள்ளே. (975)

வைத்தொரு குருவதனைச் சிறிதெடுத்து
வாய்நீரி லேகுழைத்து வைத்துக்கொண்டு
சித்தமுடன் லேகியங்கள் கசாயத்திற்கும்
சிறப்பான சுண்ணசெந் தூரத்திற்கும்
பத்தமுடன் ரூன்கொடுக்க வியாதியாவும்
பறந்துவிடும் ஒருவருக்கும் வெளிவிடாதே
அத்தனுட அருளாலே இவைகள்செய்வாய்
அண்டக்கல் தெரிவதுதா னருமைபாரே. (976)

அருமையுட னுக்தனுக்குத் தெரியச்சொல்வேன்
அன்பாக வூரண்டி யிருந்துகொண்டால்
பெருமையுடன் பிர்மக்கல் தெரியுமப்பா
பேருலகில் கிடையாத தொன்றுமில்லை
உருமையுடன் பிர்மனுமே ஆதிகாளில்
உகந்தெழுதி வைத்தபடி கற்கள்தானும்
ஒருமையுடன் ருத்திரனர் பூமிதன்னில்
உள்ளூக்குள் கல்லதுவு மிருக்குந்தானே. (977)

இருக்குகின்ற கல்லதுதான் அண்டக்கல்லு
இதைவிட்டு உவற்காட்டுக் கல்லுவேண்டாம்
பெருக்குகின்ற உவற்காட்டி லிருக்குங்கற்கள்
பெருமையுள்ள கற்குண்டு கல்லதாகும்
உருக்கமுட னதையெடுத்து நீத்திக்கொண்டு
உற்றதொரு பூநீரைக் கூடவிட்டால்
வருக்கமுடன் பூநீரு உப்பதாகும்
வயித்தியத்துக் காகுமிந்த உப்புத்தானே. (978)

பிரமகற்பம்.

உப்பதுவும் கண்டுகொண்டால் கற்பம்வேணும்
உரிமையுடன் பிர்மகற்பஞ் சொல்லக்கேளு
இப்பொழுதென் தாயிடத்தில் கொடிபடர்ந்த
இனிமையுள்ள பசளையது தானும்வாங்கி
அப்பல்லோ அதன்கோரை தானும்போக்கி
அன்பாக வேநறுக்கி உரலிலிட்டு
செப்பமுட னிருப்புலக்கை தன்னுற்சாடி
சிறப்பாக வேயிடிக்க உண்டையாமே. (979)

உண்டைதனைச் சட்டியிலே தானும்போட்டு
உருப்படவே அரைப்பாகம் சூடன்போட்டு
அண்டையிலே தானிருந்து அமுரிதானும்
அளவாக காலுபடி தானும்விட்டு
எண்டிசையு மறியாமல் அடுப்பிலேற்றி
இனிமையுடன் சாம்பிராணித் தூபங்காட்டி
வண்டருக்குத் தெரியாமல் தீயெறித்து
வடுப்படாத் தடுப்பதனுல் கிண்டிக்கொள்ளே. (980)

தடுப்பதனுல் கிண்டிவந்து பதத்தைக்கேளு
சுழிவாக அடிபிடிக்கா திருக்கவேணும்
எடுப்பதற்குள் கும்பிவிட்டால் பாகம்போச்சு
இயல்பாக இரண்டையுமே பார்க்கவேணும்
அடுப்பதனில் சிறுதீயா யெரிக்கவேணும்
அன்பாகக் கொதிகளம்பி வருகும்போது
சடுக்கென்றே நெய்வேறு புஷ்டிவேறு
தான்பிரியும் நெய்மிதக்கு மதனைப்பாரே. (981)

பாரப்பா நெய்வேறு கடுகுவேறு
பக்குவமாய்த் தானெடுத்து வடித்துக்கொண்டு
கோரப்பா கடுகதுவும் உருகிடாமல்
நினைவாகப் பார்த்தெடுத்து வேறேவைத்து
சிரப்பா பராபரைக்குப் பூசைபோடு
சிறப்பாக ரேசகபூ ரகந்தான்செய்து
காரப்பா கடுகுடனே தயிலந்தன்னைக்
கருத்தாக உண்பதற்கு வகைசொல்வேனே. (982)

சொல்லுவேன் கற்பமது உண்பதற்கு
சுகமாகத் தயிலத்தைக் காண்டிவீதம்
அல்லப்பா காலையிலே உண்டுவாரீ
அன்பாக மாலையிலே கடுகுதன்னை
வெல்லப்பர யெலுமிச்சங் காயளவு
விதமாக வுண்டுவரத் தேகசித்தி
நல்லதொரு மலசலங்கள் பேதிக்கும்பார்
காட்டிலே யிதைவெளியிற் பேசிடாதே. (983)

பேசிடா திருந்தாக்கால் லாபமுண்டு
பேராகத் தொட்டதெல்லாம் வாதமாகும்
கூசிடா தேகெவுன முயரத்துக்கும்
கேசரிமார்க் கங்கள்போய் வரவுமாகும்
ஆசையுடன் சித்தர்களும் வந்துபோவார்
ஆச்சரிய மிகவுண்டாம் கீர்த்தியுண்டாம்
பாசைபதி னெட்டுமே தெரிந்துகொள்வான்
பத்தியமா யிருந்திடவும் வேணும்பாரே. (984)

மூலிகைக்கற்பம்.

இருந்திடமூ லிகைகற்பஞ் சொல்லக்கேளு
இயல்பான சிவன்வேம்பு வேங்கைப்பட்டை
அருந்திடவே ஆவரையின் பட்டைமூன் றும்
அன்பாக நாதவித்தும் நிறையொன்றுக்கி
திருந்திடவே பாண்டத்தி லிட்டுமூடிச்
சிறப்பான குளித்தயில மிறக்கிக்கொண்டு
பொருந்திடவே சண்முகர்க்குப் பூசைசெய்து
புகழாகக் கொள்வதற்கு வகையைக்கேளே. (985)

வகையென்ன தட்டிடைதான் காலைமாலை
வழியோடே சாப்பிட்டு வந்தாயானால்
நிகையிலாத் தேகமது வலுத்துப்போகும்
நிறமான நரைதிரையு மற்றுப்போகும்
பகையிலா ரம்பெல்லாம் வலுத்துப்போனால்
பாழான வியாதியெல்லா மோடிப்போகும்
நகைபோலத் தேகமது பொன்போலாகும்
நானிலத்திற் சித்தனென்று பேருய்வானே. (986)

வாதமூப்பு.

பேருபெற வாதமூப்பு சொல்லக்கேளு
பெரிதான சவ்வீரக் கட்டிவாங்கி
நேருடனே பிர்மகற்பத் தயிலத்தன்னில்
கேர்த்தியுடன் முன்றேய்த்து ரவியிற்காய்த்து
பாருநீ பிர்மகற்பக் கடுகுதன்னை
பண்பாய்வீ ரத்தனக்குக் கவசஞ்செய்து
சேருநீ அதற்குமேல் சேலைசெய்து
சிறப்புடனே ரவிதனிலே வைப்பாய்பாரே. (987)

பாரப்பா காய்ந்தபின்பு விளக்கில்வாட்ட
பதிவான மெழுகாகும் வைத்துக்கொண்டு
நேரப்பா குந்தனத்தங் கத்தைவாங்கி
நிலையான படியாகத் தூள்கள்செய்து
சீரப்பா முன்கடுகு தன்னிலேதான்
சிறப்பாகத் தானெடுத்துப் பத்துக்கொன்று
தேரப்பா தங்கத்தூள் அதிலேசேர்த்து
திறமாக மெழுகுக்குக் கவசஞ்செய்யே. (988)

செய்யப்பா மெழுகெடுத்து ரவியில்வைக்கச்
சிறப்பான தங்கத்தை வீரந்தின்னும்
உய்யப்பா யிம்மெழுகை நவலோகத்தில்
உரிமையுடன் கொஞ்சமது தானெடுத்து
மெய்யப்பா தான்கொடுக்கப் பழுத்துப்போகும்
மேலான வயதுபதி னாறுமாகும்
ஐயப்பா யிந்தவகை கண்டோன்சித்தன்
அவனிதனில் பேர்பெற்ற ரிஷியாவானே. (989)

பேருபெற்ற ரிஷியாவான் யோகியாவான்
பிரபலமா யொருவருக்குங் காட்டமாட்டான்
நேருடனே யாரோடும் பேசமாட்டான்
நேர்மையுட னேரிடத்தி லிருக்கமாட்டான்
ஊரூராய்ப் போய்வருவான் குளிகைசெய்வான்
உண்மைதனை யொருவருக்குங் காட்டமாட்டான்
மாருதலாய் வார்த்தைகளைச் சொல்வான்ஞான
வழிதெரிந்து மலைகுகையி லிருப்பான்பாரே. (990)

இருப்பதற்கு ஆறுவரைக் கப்பாற்சென்று
இயல்பான சமுத்திரத்தைத் தெரியவேணும்
பொருப்பான துபஸ்தம்பந் தெரியவேணும்
புகழான வாலையைப்பூ சிக்கவேணும்
திருப்பான குலைக்கனியைக் காணவேணும்
தீவினைகள் வாராம லருத்தவேணும்
மருப்பான கூற்றுவனை விரட்டவேணும்
மாருத யோகத்தை யறிவாய்ச்செய்யே. (991)

செய்யப்பா யோகஅப்பி யாசத்தன்னைச்
சீராகச் செய்துவந்தா லெல்லாஞ்சித்தி
மெய்யப்பா வாலியுங்கை வசமேயாவாள்
மேலான அமுதரசம் பொங்கிவீழும்
அய்யப்பா யிதைவிட்டா லெல்லாம்போச்சு
அவனிதனில் நாதவிந்தை யறியாவிட்டால்
உய்யப்பா வழியொன்று மில்லையில்லை
உன்தனக்குச் சொல்லிவிட்டே னுண்மைபாரே. (992)

உண்மையென்று செய்வோர்க்கு எல்லாமாகும்
ஒன்றுமில்லை யென்போர்க்கு எதுதானுகும்
நண்மையுடன் சாஸ்திரத்தை யறியவேணும்
நுணுக்கமுடன் பரிபாஷை தெரியவேணும்
தண்மையுடன் விட்டாக்கா லெல்லாம்போச்சு
தவறியே நடந்தபின்பு ஒன்றுமாகா
எண்மையென்று நினைப்போர்க்கு எதுவுமாகா
எப்பொருளும் பாடுபட்டால் கிடைக்கும்பாரே. (993)

கிடைப்பதுவோ இத்தனூ லாயிரத்தில்
கிருபையுடன் யோகமுதல் கற்பஞ்சொன்னேன்
மடைதிறந்த வெள்ளம்போல் வயித்தியத்தான்
வகையோடே ஆயிரமுஞ் சொல்லிவைத்தேன்
சடையாமல் சூத்திரமெண் பதுவுஞ்சொன்னேன்
சங்கையற ஞானமுப் பதுவுஞ்சொன்னேன்
விடையமுடன் உபனிடதம் சுருக்கிச்சொன்னேன்
வேணுமென்று மூப்பூசூத் திரஞ்சொன்னேனே. (994)

சூத்திரத்தைப் பார்த்தவர்க்கு எல்லாந்தோணும்
தொல்லையென்று விட்டவற்கு ஒன்றுந்தோணு
சாத்திரத்தைப் பிரியமுடன் கையில்வாங்கித்
தனித்திருந்து பார்த்தாக்கா லெல்லாந்தோணும்
ஆத்திரத்தோ டேபார்த்து எறிந்திட்டோர்க்கு
அணுவளவுந் தெரிந்துகொள்ளப் போவதில்லை
நேத்திரம்போற் சாஸ்திரத்தைப் பார்த்திட்டோர்க்கு
நெறிமுறையும் வகைவிபரந் தெரிவான்பாரே. (995)

தெரியுதற்குச் சாஸ்திரங்கள் கோடாகோடி
செய்துவைத்தார் கருக்குருவுஞ் சொல்லாமற்றான்
அரியுதற்கு மனம்புத்தி சித்தம்வேணும்
அறிந்துகொள்ள மூடியாட்டால் குருவும்வேணும்
பெரிதான குருவிடத்திற் றொண்டுசெய்து
பேரின்ப நிஷ்டைகளுந் தெரியவேணும்
உரிமையுடன் தெரிந்துகொண்டோன் சித்தனுவான்
உலகோர்க்கா இந்நூலை உறைத்திட்டேனே. (996)

காகபுசண்டர்

பெருநூல் காவியம் 1000

முற்றிற்று.

ARCHIVES LIBRARY
No. 166311
MADRAS

அறிவிப்பு.

(—)

என்னிடமுள்ள காகபுசண்டர் பெருநூல் காவியம் **1000** என்ற பிரதியில் 996 பாட்டுகள் இருந்ததை அச்சிட்டு வெளியாக்கியிருக்கிறேன் மீதம் நாலுபாட்டுகள் வைத்திருப்பவர்கள் எழுதியனுப்பினால் இத்துடன் சேர்த்து அச்சிடலாகும்.

இப்படிக்கு,

குரு. இராமசாமிக் கோன்

புத்தகசாலை, புதுமண்டபம், மதுரை.

உ

பரமபிதாவே.

பதினெண் சித்தர்களில் ஒருவராகிய

திருவள்ளுவர் கற்பம் 300

இதில் ஞானாந்தசாரம் 100, கற்பக்குருநூல் 50, மூப்பு சூஸ்திரம் 30, வாத சூஸ்திரம் 16, மூப்புக்குரு 11, வைத்திய சூஸ்திரம் 100, ஆக 7 சாஸ்திரங்கள் அடங்கியது திருவள்ளுவர் பாடிய ஞான வெட்டி 1500க்கு சூஸ்திரமாகப் பாடியுள்ள சாஸ்திரம் இதுவே யாகும். இதில் குருமுடிக்கும் பாகங்களும், செயநீர் முடிக்கும் பாகங்களும் பூநீர் விபரங்களும், அமுர்த தாரணையின் நுட்பமும், மூப்பு இன்னதென்ற விபரமும், வழலை மார்க்கமும் மிகத் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது. புத்தகம் 1-க்கு விலை ரூ. 2—8—0.

மகா மகத்துவம் பொருந்திய இராமதேவரென்ற

யாகோபு வைத்திய

வாதக் கோர்வை.

சித்தர் கூட்டங்களில் பதினெண் பேர்களில் ஒருவராய் இராம தேவராகப் பேர்பெற்றிருந்து பின்பு மக்காவுக்கு சென்று நபிமார்களுடன் பேசி அவர்கள் இவர் திறமையும் சாஸ்திர ஆராய்ச்சியும், தெரிந்து யாகோபு என்று பெயர் கொடுத்தார்கள். பின்பு யூனானி முறைகளும், தமிழ் முறைகளும் இணங்க அநேக வைத்திய பாகம் வாதம், யோகம் ஞானம், நாடி சரக்கு சுத்தி முறைகளை, 17 சாஸ்திரங்களாகப் பாடி இருக்கிறார். இந்தச் சாஸ்திரத்தை அநேகர் வாங்கி பார்த்து ரெம்ப அனுபவ முறையாகக் கையாண்டு வருகிறார்கள். 17 சாஸ்திரங்களும் சேர்ந்த ஒரே கோர்வை விலை ரூ. 15—0—0.

இந்த 17 சாஸ்திரங்களும் 12 புஸ்தகங்களாக பிரித்து பயிண்டு செய்திருக்கிறது. இவை தனித்தனிப் பிரதியாகவும் கிடைக்கும். வேண்டுவோர் எழுதினால் அனுப்பக்கூடும்.

எமது கேட்லாக் பார்த்தால் விபரம் தெரிந்து கொள்ளலாம்.

ஓலைச்சுவடி யிலிருந்து புதிதாய் அச்சிட்டிருக்கும்

அகத்தியர் சாஸ்திரங்கள்

1.	அகத்தியர் பரிபூரணம் 1200 (அச்சில்)	ரூ
2.	ஷை மணக்கோலம் 200	
3.	கனகமணி 100	
4.	வயித்தியக் கோவை 125	
5.	வயித்தியத் திரட்டு 81	
6.	இறுக்கு சாஸ்திர மென்னும் இரிகைநூல் 64ஆ 5 சாஸ்திரங்கள் சேர்ந்தது	1 8
7	ஷை கௌமதி நூல் 400	1 8
8.	ஷை தற்க சாஸ்திரம் 300	1 4
9.	ஷை கற்ப முப்புக் குருநூல் 100	
10.	மனோன்மணி தீட்சை 100	
11.	சாற்பத்து முக்கோணபூசை 41ம் சேர்ந்தது	1.0
12.	ஷை பூரண சூஸ்திரம் 216	1 0
13.	ஷை பூரணம் 205	
14.	ஷை சூத்திரம் 21ம் சேர்ந்தது	1 0
15.	ஷை பரிபாஷை 300	1 0
16.	அகத்தியர் பன்னீராயிரத்துக்குச் சூஸ்திரமான பன்னிரு காண்டம் 200	1 0 0
17.	ஷை பூஜா விதி 200ம்	
18.	ஞானசைதன்யம் 51 சேர்ந்தது	1 0 0
19.	ஷை வகார சூஸ்திரம் 200	
20.	ஷை சுருக்கம் 100 சேர்ந்தது	1 4
21.	ஷை தத்துவம் 300	1 4

மேல் கண்ட 12 புஸ்தகமும் 21 சாஸ்திரமும் சேர்த்து கலிக்கோ பயிண்டு செய்த அகத்தியர் கோர்வை.

இன்னுமனேக சித்த வைத்திய சாஸ்திரங்களு மிருக்கிறது. வேண்டியவர்கள் நேரிலும் தபால் மூல மாயும் பெற்றுக் கொள்ளலாம்.

ஜி. இராமசாமிக்கோன்.

இ. ராம. குருசாமிக் கோனர் சன்,

புத்தகசாலை புதுமண்டபம், மதுரை.